Ramya Rajan

Vazhiyoram Vizhi Vaikiren

வழியோரம் விழி வைக்கிறேன்

பகுதி – 1

எதிர்பாராமல் பெய்த மழையால்... குளிர்ந்த காற்றும், லேசானா சாரலுமாகப் பைக்கில் செல்வதே சுகமாக இருந்தது அஷ்வினுக்கு. ஹெட் போன்னில் இளையராஜா ஹிட்ஸ் கேட்டுக்கொண்டு வண்டி ஓட்டியவனுக்கு உடலும் உள்ளமும் உற்சாகமாக இருந்தது.

என்னைத் தாலாட்ட வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ.

தத்தளிக்கும் மணமே தத்தை வருவாளா
முத்து இதழ் முத்தம் ஒன்று தருவாளா
கொஞ்சம் பொறு கொலுசொலி கேட்கிறதே
என்னைத் தாலாட்ட வருவாளோ
நெஞ்சில் பூ மஞ்சம் தருவாளோ
தங்க தேராட்டம் வருவாளோ
இல்லை ஏமாற்றம் தருவாளோ.

பூவிழி பார்வையில் மின்னல் காட்டினாள்
ஆயிரம் ஆசைகள் என்னில் ஊட்டினாள்
ஏனோ ஏனோ நெஞ்சை பூட்டினாள்
இரவு பகலும் என்னை வாட்டினாள்
இதயம் அவள் பெயரில் மாற்றினாள்
காதல் தீயை வந்து மூட்டினாள்
நான் கேட்கும் பதில் இன்று வாராதா
நான் தூங்க மடி ஒன்று தாராதா
தாகங்கள் தாபங்கள் தீராதா
தாளங்கள் ராகங்கள் சேராதா
வழியோரம் விழி வைக்கிறேன்

என்ற பாடலைக் கேட்டபடி... சென்னை OMR சாலையில் ஒரு வளைவில் திரும்பியவன், சாலையில் தேங்கி இருந்த மழை நீரைக் கவனிக்காததால் வேகத்தைக் குறைக்காமல்

செல்ல....
வெள்ளை நிற சல்வாரில் சேறு பட்டுவிடக் கூடாது என்று ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் எடுத்துவைத்த வினோதாவின் மீது வேகமாக வந்த அஷ்வினின் வண்டி நீரை வாரி தெளிக்க...

திடிரென்று ஒரு பக்கம் முழுவதும் நீர் பட்டவுடன் ஒரு நொடி திகைத்தவள், மறுநொடி நிமிர்ந்து பார்க்க... அஷ்வினின் முதுகுதான் தெரிந்தது.

வினோதவிற்கு வந்த கோபத்திற்கு என்ன செய்கிறோம் என்று உணராமல்... சாப்பிட்டுக் கொண்டிருந்த மாங்காயை தூக்கி அவன் மேல் எறிந்தாள்.

குறித் தப்பாமல் அது சென்று நச்சென்று அஷ்வினின் முதுகில் அடிக்க.... வலியால் முகம் சுளித்தவன், வண்டியை நிறுத்திவிட்டுத் திரும்பி பார்க்க... முதலில் அவன் கண்ணில் பட்டது கீழே கிடந்த மாங்காய்தான்.

எவன்டா அவன் மாங்காயில நம்மளை அடிச்சது என்று நிமிர்ந்து பார்க்க.... அங்கே இடுப்பில் கைவைத்து அவனை முறைத்தபடி வினோதா நின்றிருந்தாள்.

அடிச்சதும் அடிச்சிட்டு கெத்தா நிற்கிற திமிர பார்த்தியா.... இருடி வரேன் ! இன்னைக்கு உன் மண்டையை உடைக்காமல் விடுறது இல்லை... என்று நினைத்தபடி அஷ்வின் வண்டியை நிறுத்திவிட்டு... இறங்கி அவளை நோக்கி செல்ல....

சிறிதும் அச்சபடாமல் நிமிர்ந்த பார்வையுடன் அவனை வினோதா எதிர்கொண்டாள். அவள் அருகில் செல்லச் செல்லதான் அஷ்வினுக்கு அவள் உடை மீது இருந்த சேறு கண்ணில்பட்டது.

ஐயையோ... தப்பு நம்ம மேலதான். அசராம நிற்கிறதை பார்த்தா இன்னைக்கு நம்மைத் துவைச்சுத் தொங்க விடுவா போலிருக்கே.... என்று உள்ளுக்குள் அச்சப்பட்டவன், வெளியே திமிராக இருந்தான்.

“என்னை எதுக்கு அடிச்ச?” அஸ்வின் காரணம் தெரிந்தே தெரியாதது போல் கேட்க.... கைகளைக் கட்டியபடி சிறிது நேரம் அஷ்வினையே பார்த்த வினோதா... “பாத்தா தெரியலையா...” என்றாள்.

“என்னது?....” அஷ்வின் புரியாதவன் போல் பார்க்க... அவன் வேண்டுமென்றே நடிக்கிறான் என்று புரிந்து கொண்டவள், இவனோட பேசுறது எல்லாம் வீண் என்று எதுவும் பேசாமல்... அவனைத் தாண்டி செல்ல...
அவள் சண்டையிடுவாள் பதிலுக்கு நாமும் சண்டைப் போடுவோம் என்று நினைத்திருந்த அஸ்வினுக்கு, அவள் பேசாமல் சென்றது குற்ற குறுகுறுப்பாக இருக்க....

“சாரி... வேணுமுன்னே பண்ணலை....” என்றான் தணிவாகவே.... வினோதா நின்று அவனைத் திரும்பி பார்த்தவள் “பரவாயில்லை... நானும் அப்படி அடிச்சிருக்கக் கூடாது... சாரி.” என்றாள்.

வீண் அலட்டலோ.... அலட்சியமோ இல்லாமல் இயல்பாகப் பேசியவளை அஷ்வின் வியந்து நோக்க... அப்போது ஒரு லாரி வேகமாக வந்தது. சாலையோரம் நீர் தேங்கி இருந்ததால் இருவராலும் ஒதுங்க முடியாமல் போக.... வேறுவழியில்லாமல் இருவரும் அப்படியே நின்றனர்.

தன் உடையைக் கவலையாகப் பார்த்த வினோதா கண்களை மூடிக்கொள்ள.... அவளின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த அஷ்வின் வேகமாக நகர்ந்து அவளை மறைத்தபடி நிற்க.... கடந்து சென்ற லாரி வாரி இறைத்த நீர் முழுவதும் அஷ்வினின் மீதே பட்டது.

ஏன் இன்னும் தண்ணி நம்ம மேல படலை என்று நினைத்தபடி கண்களைத் திறந்த வினோதா... அஷ்வின் அவளுக்கு வெகு அருகில் நிற்பதைப் பார்த்து இரண்டு எட்டுப் பின்னால் சென்றவள், அப்போதுதான் அவன் ஆடையில் இருந்த சேற்றைக் கவனித்தாள்.

“அச்சச்சோ.... டிரஸ் எல்லாம் சேர் ஆகிடுச்சே...” வினோதா கவலைப்பட...
“பரவாயில்லை...” என்றபடி அஷ்வின் தன் ஆடையில் இருந்த சேற்றைத் தட்டிவிட.... சரி என்பதாகத் தலை அசைத்த வினோதா திரும்பி பேருந்து நிறுத்தத்தை நோக்கி நடக்க... அஷ்வினும் தன் வண்டியை நோக்கி சென்றான்.

இருவரும் இரண்டு எட்டுதான் வைத்திருப்பார்கள் அதற்குள் ஜோ... என்று மழை கொட்ட... இருவரும் பேருந்து நிறுத்தத்தை நோக்கி கிட்டத்தட்ட ஓடினார்கள்.

பேருந்து நிறுத்தத்தைச் சென்று சேர்வதற்குள் இருவரும் முழுவதும் நனைந்து இருந்தனர். ஆடைகளில் இருந்த சேற்றுக் கறை காணாமல் போய் இருக்க... தங்கள் உடையைக் குனிந்து பார்த்த இருவருக்கும் மகிழ்ச்சி... அதே நிலையோடு இருவரும் திரும்பி ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர்.

மழையில் நனைந்ததால் உடலோடு சுடிதார் ஒட்டிக்கொள்ள... வினோதா துப்பட்டாவை விரித்துப் போட்டுக்கொண்டாள். அஷ்வின் அவளையே பார்த்துக்கொண்டு இருந்தான்.

சராசரி உயரத்தை விட உயரம் சற்றுக் குறைவுதான். ஆனால் நல்ல நிறமாக உயரத்திற்கு ஏற்ற உடல் எடையுடன் இருந்தாள். கன்னம் இரண்டும் கும்மென்று இருக்க... வட்ட முகத்தில் பெரிய விழிகளுடன்... இன்னும் குழந்தைத் தனம் மாறாத முகம்.

கல்லூரி முதலாம் ஆண்டு அல்லது இரண்டாம் ஆண்டுதான் படித்துக்கொண்டிருப்பாள் என்று நினைத்தான். மழை நிற்கவில்லை ஆனால் வினோதா ஏற வேண்டிய பேருந்து வந்துவிட்டதால்... அவள் சென்று அதில் ஏற... செல்லும் அவளையே அஷ்வின் பார்த்திருந்தான்.

பேருந்தில் இருந்த கூட்டத்தைப் பார்த்ததும், இதில் ஒழுங்காய் வீடு போய்ச் சேர்வோமா என்ற

கவலையில் வினோதா அஷ்வினை மறந்துவிட்டாள். பஸ் நகர்ந்ததும்தான் அஷ்வினின் நினைவு வந்து அவனைத் திரும்பிப் பார்த்தாள். ஆனால் பேருந்து அதற்குள் அந்தச் சாலையைக் கடந்து இருந்தது.

ஹப்பா... என்ன உயரமா இருக்கான்? அவங்க வீட்ல அப்படி என்னத்தைப் போட்டு வளக்குறாங்களோ தெரியலை..... அவனைத் திரும்பப் பார்த்தா கேட்கணும் என்று யோசித்தவள், ச்ச... நாம ஏன் இப்படி லூசு மாதிரி நினைக்கிறோம். இது என்ன சின்ன ஊரா... இந்தச் சென்னையில அவனை எங்க திரும்பப் பார்க்கிறது என்று தனக்குள்ளே பேசிக்கொண்டாள்.

வினோதா அவள் வீட்டிற்குச் சென்று சேர்ந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. அவளது தந்தையும், தமயனுமே அலுவலகத்தில் இருந்து வந்திருந்தனர்.

“என்ன வினோதா இவ்வளவு நேரம் கழிச்சு வர்ற... போன வேலை என்ன ஆச்சு? வேலை கிடைச்சுதா...” அவளின் சகோதரன் விமல் ஆர்வமாகக் கேட்க...

“கிடைச்சுதுண்ணா... ஆனா டைரக்ட் எம்ப்ளாய் இல்லை... காண்ட்ராக்ட்தான்.”

“பதினஞ்சு ஆயிரம் சம்பளம்.... பெரிசா அல்லோவன்ஸ் எல்லாம் எதுவும் இல்லை... போக வர கேப் இருக்கு.” வினோதா தனக்கு வேலை கிடைத்ததைச் சாதாரணமாகச் சொல்ல...

“போதுமே... நீ ஒன்னும் இன்ஜினியரிங் படிக்கலையே... வெறும B.sc., கம்ப்யூட்டர் தான.... இதுக்கு இந்தச் சம்பளம் அதிகம்தான்.” அண்ணி மாலாவின் குரலில் பொறாமை இருந்தது.... அதை எப்போதும் போல் யாரும் கண்டுக்கொள்ளவில்லை... ஆனால் வினோதவிற்குக் கோபம் வந்துவிட்டது.

“நானா இன்ஜினியரிங் படிக்க மாட்டேன்னு சொன்னேன். என்னோட கம்மியா மார்க் எடுத்தவங்க எல்லாம் இன்ஜினியரிங் சேர்ந்த போது... இந்த வீட்லதான் என்னை யாரும் சேர விடலை...” அவள் தன் மனக்குமுறலை பட்டென்று

கொட்டிவிட... வீட்டில் ஒரு நிமிடம் கனத்த அமைதி நிலவியது.

“வினோ நீ உள்ள வா... காபி தரேன்.” சமையல் அறையில் இருந்த தாயின் குரல் கேட்டதும், ஆமா இவங்களுக்கு என்னைத்தான் அடக்கத் தெரியும். வினோதா மனதிற்குள் தன் தாயைத் திட்டினாள்.

வினோதா நன்றாகப் படிப்பாள். அவளுக்கு இன்ஜினியரிங் படிக்க வேண்டும் என்று ஆசை... அவள் அப்பா சம்பளத்திற்குப் பீஸ் கட்ட கட்டுபடி ஆகாது என்று சொல்லிவிட... விமல் கொடுக்கத் தயாராக இருந்தும் மாலா விடவில்லை....

“படிப்புக்கே இவ்வளவு செலவு பண்ணா... அப்புறம் கல்யாண செலவு வேற இருக்கே.... சும்மா டிகிரியே படிக்கட்டும்.” என்று முடித்துவிட்டாள்.
தான் நினைத்த படிப்பு படிக்க முடியவில்லை என்று வினோதா அழுத போது.... “சின்ன விஷயத்தைப் பெரிசு பண்ணாத வினோ. உங்க அண்ணி உங்க அண்ணனை தூண்டி விட்டுத் தனிக் குடித்தனம் போயிட்டா.... நம்ம பாடுதான் திண்டாட்டம்.”

“இன்னும் ரெண்டு வருஷத்தில உங்க அப்பா வேற ரிட்டையர் ஆகிடுவார். சொந்த வீடும் உங்க அப்பாவுக்கு வர்ற பென்ஷன் பணமும் வச்சு மட்டும் நம்மால குடும்பத்தை நடத்த முடியாது. இதுல உன் கல்யாணம் வேற இருக்கு.” குடும்ப நிலையை எடுத்து சொன்ன தாய் மஞ்சுவை முறைக்க மட்டுமே வினோதாவால் முடிந்தது.

“அடுத்த மாசத்தில இருந்து வினோதா சம்பளத்தை அப்படியே சேர்த்து வச்சிட்டு வரலாம். அவ கல்யாணத்துக்கு நகை நட்டு வாங்க ஆகும்.” மாலதி சாமர்தியமாகப் பேச....

“அது தான பார்த்தேன். இவளாவது இவ புருஷனை செலவு பண்ண விடுறதாவது. படிப்பு செலவுக்குக் கல்யாணத்தைக் காட்டி கொடுக்க விடலை... இப்போ என்னோட கல்யாணத்துக்கும் நானே சம்பாதிக்கனும்னு ஜாடையா சொல்லியாச்சு...”

வினோதோ மனதிற்குள் பொருமியபடி வெறுப்புடன் மாலதியை பார்க்க...

மாலதி அதற்கெல்லாம் அசருபவள் இல்லை. “தேஜு கண்ணா அத்தை வந்தாச்சு பாரு...” என்றவள், தன் மகளை வினோதாவிடம் அனுப்பிவிட்டு தன் கணவனை அழைத்துக்கொண்டு மாடிக்கு சென்றுவிட்டாள்.

வினோதாவின் தந்தை பார்தீபனுக்கு அரசு அலுவலகத்தில் வேலை என்றாலும் அவரது பெரிய குடும்பமும் கூட... அக்கா தங்கைகளுக்கு அவர்தான் திருமணம் செய்துவைத்தார். அதனால் பெரிதாக ஒன்றும் சேமிக்க முடியவில்லை.

தன்னுடைய காலத்தில் சிக்கனமாகச் சேர்த்து...தாம்பரம் தாண்டி ஒரு இடத்தில் மனை வாங்கிச் சிறிய அளவில் இரண்டு படுக்கை அறைகள் கொண்ட வீட்டை கட்டி இருந்தார்.”

“அதற்கே நிறையச் செலவு ஆனதால்... மனைவியின் நகைகளையும் விற்றுதான் வீட்டை கட்டி முடித்தார். விமல் இன்ஜினியரிங் முடித்து ஒரு தனியார் கம்பெனியில் கை நிறையச் சம்பாதிக்கிறான். அவனுக்கு வினோதினி எட்டு வயது இளையவள். அதனால் முதலில் விமலுக்குக் கல்யாணம் ஆகிவிட்டது. மாலதி ரெயில்வேயில் வேலை பார்க்கிறாள். அவர்களுக்கு இரண்டு வயதில் பெண்குழந்தை இருக்கிறது.”

மாலதி சாமர்தியசாலி... தனிக் குடித்தனம் சென்றால்... அலுவலகத்திற்கும் சென்றுவிட்டு வந்து வீட்டு வேலையும் பார்க்க வேண்டியது வரும் என்பதால்... அவள் தனிகுடித்தனத்தைப் பற்றி நினைத்தே பார்க்கவில்லை...

மாடியிலேயே அவர்களுக்கென்று ஒரு ஹாலும் படுக்கை அறையும் கட்டிக்கொண்டாள். அங்கே அவர்களுக்கென்று தனி டீவி, ஏசி எல்லாம் உண்டு. கீழே வீட்டில் பழைய சாமான்கள்தான். வீட்டு வேலைப் பார்க்க மாமியார் மஞ்சு இருக்கிறார். தேஜுவை அவரும் வினோதாவும்

பார்த்துக்கொள்வார்கள். அதனால் கவலையில்லாமல் வேலைக்குச் சென்று வருபவள், வேலைக்குச் செல்லும் சாக்கில் வீட்டில் ஒருவேலை கூடச் செய்வது இல்லை...

தன் அம்மாவை வேலைக்காரி போல் நடத்துகிறாள் என்று வினோதாவிற்குதான் கோபமாக வரும்.

“ஏன்மா இந்த அண்ணி இப்படி இருக்காங்க? வேலைக்குப் போறவங்க எல்லோரும் இப்படியா வீட்ல வேலை பார்காம இருக்காங்க. அங்க ஆபீஸ்ளையும் ஒன்னும் வெட்டி முறிக்கிற வேலை இல்லை... வீட்ல கொஞ்சம் வேலை பார்த்தாதான் என்னவாம். எல்லாம் நீங்க கொடுக்கிற இடம்.”

“உங்க அப்பா கடைக்குப் போய்ச் சாமான் எல்லாம் வாங்கிட்டு வந்து தந்திடுறார். அதோட காய்கறியும் அவரே நறுக்கி வச்சிடுவார். அதனால எனக்கு வேலை செய்ய ஒன்னும் சிரமம் இல்லை...”

“எல்லாத்துக்கும் குத்தம் கண்டு பிடிச்சிட்டே இருந்தா... சொந்தகள்ளோட சேர்ந்து இருக்க முடியாது. இந்தத் தங்கத்தை என்கிட்டேதானே விட்டிருக்கா.... வயசான காலத்தில பேரன் பேத்தியோட இருக்கிறது தான சந்தோஷம்.” மடியில் இருந்த தேஜுவை கட்டிக்கொண்டு வாஞ்சையாகச் சொல்லும் மஞ்சுவை பார்க்கும் வினோதா... தன் தாயே விரும்பி செய்யும் போது தான் அவரைக் குழப்பக்கூடாது என்று அமைதியாக இருந்து விடுவாள்.

வீடுதான் மஞ்சுவின் உலகம். அவருக்கு வெளியுலகை பற்றி அவ்வளவாகத் தெரியாது. தெரிந்துகொள்ளவும் ஆர்வம் இல்லை. பொழுதுக்கும் வேலை பார்த்தாலும் மகன் மருமகளோடு சேர்ந்து இருப்பதையே விரும்புவார்.

வினோதாவும் அந்த மாத தொடக்கத்தில் வேலைக்குச் சேர்ந்து விட்டாள். தினமும் அலுவலகம் ஏற்பாடு செய்திருக்கும் காரிலேயே சென்றுவிட்டு வருவாள். காலை சீக்கிரமே கிளம்பிவிடுபவள்

மாலையும் ஐந்து மணிக்குள் வீட்டிற்கு வந்துவிடுவாள்.

தினமும் OMR சாலையைக் கடக்கும் போது... அவளுக்கு அஷ்வினின் நினைவு வரும். அவன் பெயர் கூட அவளுக்குத் தெரியாது. அவன் தன் மேல் சேறு அடிக்காமல் பார்த்துக்கொண்டதை இப்போது நினைத்தாலும் அவள் முகத்தில் புன்னகை பூக்கும். யாரென்றே தெரியாத தன் மேல் அவன் காட்டிய அக்கறை பிடித்திருந்தது.

அவனைச் சந்தித்த இடத்தைக் கடக்கும் போது... அவன் எங்காவது தெரிகிறானா என்று பார்ப்பாள். ஆனால் மூன்று மாதம் சென்ற பின்னும் அவளால் அவனைச் சந்திக்க முடியவில்லை...

ஒருநாள் மஞ்சுவிற்கு உடம்புக்கு முடியவில்லை என்று வீட்டில் இருந்து வினோதா உணவு கொண்டு வரவில்லை... அவள் அலுவலகம் இருக்கும் இடத்தில் இன்னும் வேறு சில மென்பொருள் நிறுவனங்களின் அலுவலகங்களும் இருக்கிறது. அதனால் உணவகங்கள் எல்லா நிறுவனங்களுக்கும் சேர்த்து ஒரே இடத்தில்தான்.

வினோதா அவளுடன் வேலை பார்க்கும் விஜியுடன் உணவகத்திற்கு வந்தவள், உணவு வகைகள் வாங்கிக்கொண்டு... ஓரமாக இருந்த டேபிளில் சென்று சாப்பிட அமர்ந்தனர்.

ஒவ்வொரு தளத்திலும் உணவு அருந்த என்று தனியாக இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே உணவை சுட வைத்துக்கொள்ள மைக்ரோவேவ்... இடைவேளையில் அருந்த காபி, டீ, க்ரீன் டீ கூட இருக்கும். வினோதா தினமும் அங்கேயே உட்கார்ந்து சாப்பிடுவாள்.

இன்றுதான் முதல் முறை உணவகத்திற்கு வந்ததால்... பேச்சும் சிரிப்புமாக அங்கிருந்த சூழ்நிலையை வேடிக்கை பார்த்தபடி சாப்பிட்டுக்கொண்டிருந்தவள், திடிரென்று ஒருவனின் குரல் மட்டும் சத்தமாகக் கேட்கவும்,

அந்தப் பக்கம் பார்க்க... அங்கே அவளுக்கு ஆனந்த அதிர்ச்சி காத்திருந்தது.

அஷ்வின் அவன் நண்பர்களோடு கலாட்டாவாகப் பேசி சிரித்தபடி சாப்பிட்டுக்கொண்டிருந்தான். வினோதா அவன் தன்னைப் பார்ப்பானா என்று பார்த்துக்கொண்டிருந்தாள். ஒரே ஒருமுறை ரோட்டில் சந்தித்தவனிடம் எப்படித் தானாகச் சென்று பேசுவது என்பதுபோல் யோசித்துக்கொண்டிருந்தாள்.

விஜி சாப்பிட்டதும் போகலாமா என்றதும் வினோதாவும் எழுந்து கொண்டாள். அவர்கள் சாப்பிட்ட தட்டை கொண்டு போய் வைக்கும் போது வினோதா அஷ்வினையே பார்த்துக்கொண்டு சென்றாள். நண்பர்களுடன் பேசியபடி அஷ்வினும் அவளைப் பார்த்தான். ஆனால் சட்டென்று அவனுக்கு நினைவு வரவில்லை...

தட்டை வைத்துவிட்டுத் திரும்பச் செல்லும்போதும் வினோதா அஷ்வினையே பார்க்க... ஏன் இந்தக் குள்ள வாத்து நம்மையே முறைச்சி பார்குது என்று யோசிக்கும் போதுதான், அவனுக்கு மூளையில் பல்பு எரிய... ஹே மாங்கா தான அவ... என்று கண்டுபிடித்தவன், நண்பர்களிடம் இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு வினோதா சென்ற பக்கம் போய்ப் பார்க்க... அங்கே அவள் இல்லை...

அப்போது அஷ்வினின் அருகில் வந்த அவனின் நண்பன் விக்னேஷ் “டேய் அஷ்வின்... அப்படி யாரடா பார்க்கிற...” என்றதும்,

“அன்னைக்குச் சொன்னேன் இல்லடா வண்டியில போகும் போது ஒரு பொண்ணு மேல சேறு அடிச்சிட்டேன்னு...”

அஷ்வின் சொன்னதைக் கேட்டு வாய்விட்டு சிரித்த விக்னேஷ் “ஹாஹா... என்னது நீ சேறு அடிச்சியா... அவ உன்னை அடிச்சாலே அதைச் சொல்லு மச்சி.” என்றான்.

“இதெல்லாம் உனக்கு மறக்காதே...” என்று பல்லைக் கடித்த அஷ்வின் “அவ இங்கதான் எதோ ஒரு கம்பெனியில வேலை பார்கிறா போலிருக்கு... அதுதான் அவகிட்ட பேசலாம்ன்னு வந்தேன். அதுக்குள்ள காணோம் போயிட்டா... சரி வா இதே பில்டிங் தான பார்த்துக்கலாம்.” அஸ்வின் சுலபமாகச் சொல்ல... ஆனால் அவன் நினைத்தது போல் வினோதாவை அவனால் அவ்வளவு எளிதில் மீண்டும் சந்திக்க முடியவில்லை...

அஷ்வினுக்குத் தன்னை நியாபகம் இல்லை என்பது வினோதாவிற்கு ஏமாற்றமாக இருந்தது. இவனைப் போய் லூசு மாதிரி நினைச்சிட்டு இருந்தோமே... அவனுக்கு நம்மை யாருன்னே தெரியலை...

ஒரு தடவை ரோட்ல பார்ததுக்கு அவன் உன்னை நியாபகம் வச்சுக்கணுமா... நீதான் ஓவரா எதிர்பார்க்கிற... இப்படிப் பலவாறாக யோசித்து அவளையே குழப்பிக்கொண்டவள், இனி அஷ்வினை நேரில் பார்த்தால் கூடத் தெரிந்தது போல் காட்டிக்கொள்ளக்கூடாது என்று முடிவெடுத்தாள்.

பகுதி – 2

மறுநாள் மதியம் சாப்பிட வந்த அஷ்வினின் விழிகள் வினோதாவை தேட மறக்கவில்லை..... அவள்தான் இன்று வீட்டில் இருந்து உணவு கொண்டு வந்துவிட்டாளே அதனால் வரவில்லை. சாப்பிட்ட பிறகும் வினோதா ஒருவேளை தாமதமாக வரலாம் என்ற எண்ணத்தில் அஷ்வின் சிறிதுநேரம் காத்திருந்துவிட்டே சென்றான்.

இப்படியே இருபது நாட்கள் கடந்த பிறகும்... அவனால் வினோதாவை பார்க்க முடியவில்லை.... அலுவலகம் வரும் போதும்... போகும் போதும் வினோதா எங்காவது தென்படுகிறாளா என்று கவனிப்பான். இருவருக்கும் அலுவலக நேரம் வேறு வேறு என்பதால்.... சந்திக்க முடியவில்லை.

அஷ்வின் வினோதாவை பார்க்க முடியாததில் கடுப்பாகி இருந்தான். இரண்டே முறை பார்த்த ஒருத்தியை நாம என் இவ்வளவு தேடுறோம். டைம் வேஸ்ட்... இனி அவளை நினைக்கவே கூடாது. அஷ்வின் கூல்.... தனக்கு தானே சொல்லிக்கொண்டவன், அன்று அலுவலகத்தில் இருந்து சீக்கிரமே கிளம்பினான்.

அஷ்வின் பைக்கை எடுத்துக்கொண்டு வெளிவாயில் அருகே வரும்போது வினோதா அலுவலக காரில் ஏறிக்கொண்டிருந்தாள். இன்னைக்குதான் இனி இவளை பத்தி நினைக்கவே கூடாதுன்னு நினைச்சோம்.... ஆனா தானாவே வந்து கண்ணுல படுறாளே...

ஓ மேடம் வேற டைமிங் அதுதான் பார்க்க முடியலை.... சரி நாளைக்கு நேர்ல பார்த்து பேசலாம் என்று நினைத்தபடி அஷ்வின் சென்றான்.

மறுநாள் மாலை நான்கு மணிப்போல்... தன் இருக்கையில் இருந்து எழுந்த அஷ்வின் “வாடா... டீ சாப்டிட்டு வரலாம்...” என்று விக்னேஷை அழைக்க...

“டீயை எப்படிடா சாப்பிடறது? குடிக்க தான முடியும்.” விக்னேஷ் கடிக்க...

“வா டீ எப்படி சாப்பிடறதுன்னு காட்றேன்.” என்றபடி அஷ்வின் அவனின் தோளில் கைப்போட்டு அழைத்து சென்றான்.

டீ அவர்கள் தளத்திலேயே கிடைக்கும். அங்கே செல்லாமல் இவன் எங்கு செல்கிறான் என்பது போல் விக்னேஷ் பார்க்க.... அவனை அழைத்துக்கொண்டு கீழ் தளத்திற்கு சென்றான்.

ஓ... ஹோட்டலுக்கு கூடிட்டு போய் நல்ல டீ வாங்கித்தருவான் போலிருக்கு... விக்னேஷ் நினைக்க... அஷ்வின் கம்பெனியின் நுழைவாயில் அருகே செல்ல... விக்னேஷ் ஒன்றும் புரியாமல் அவனுடன் சென்றான்.

அஷ்வின் சிறிது நேரம் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தவன் தூரத்தில் வினோதா வருவதை பார்த்தும், அவளை நோக்கி செல்ல....

அலுவலகம் முடிந்து வந்த வினோதாவும் தூரத்திலேயே அஷ்வினை பார்த்து விட்டாள்.

அஷ்வினை பார்த்ததும் அவள் மனம் துள்ளியது. ஆனால் அன்றுபோல் அஷ்வினுக்கு தன்னை தெரியவில்லை என்றால்... அதனால் அடக்கி வசிப்பது என்று முடிவெடுத்தாள்.

அஷ்வின் வினோதாவின் பார்த்து புன்னகைக்க... வினோதா அவனை அறிமுகம் அற்ற பார்வை பார்த்து வைத்தாள்.

“ஹாய்.... நீங்களும் இங்கதான் வொர்க் பண்றீங்களா?” அஷ்வினின் ஆர்வமான கேள்விக்கு....

“ஆமாம்... ஆனா நீங்க யாரு?” என்று வினோதாவின் பதில் கேள்வியில்...

இவளைத்தான் அன்னைக்கு பார்த்தோமா... இல்லை வேற யாராவதா.... அஷ்வினே ஒரு நொடி குழம்பிவிட்டான்.

“என்னைத் தெரியலை...” அஷ்வின் வினோதாவை சந்தேகமாக பார்க்க...

“கண்ணுக்கு முன்னாடி இருக்கீங்க தெரியாம எப்படி சார் இருக்கும். உங்களைத் தெரியுது... ஆனா நீங்க யாருன்னுதான் தெரியலை...ஒருவேளை நீங்க எங்களுக்கு தூரத்து சொந்தமா....” வினோதா அஷ்வினை தெரியாதது போல் பேச...

இவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷுக்கு வினோதா யார் என்று புரிந்துவிட்டது.

“என்னங்க அன்னைக்கு தேங்காயில அடிச்சிட்டு இப்ப தெரியலைன்னு சொல்றீங்க.....” நண்பனுக்காக விக்னேஷ் பேச.....

தேங்காயா என்று அஷ்வின் வினோதா இருவருமே அதிர்ந்துவிட்டனர். “டேய் அது தேங்காய் இல்லடா மாங்காய் டா....” அஷ்வின் பதற....

“இப்ப அது ரொம்ப முக்கியம். பாப்பாவுக்கு உன்னை யாருன்னே தெரியலை...அதை கவனிடா” என்ற விக்னேஷை முறைத்த வினோதா “என்னைப் ஏன் பாப்பான்னு சொல்றீங்க?” என்று கோபப்பட....அவள் முகம் கோபத்தில் சிவக்க... அதை பார்த்த அஷ்வின் அவளை மேலும் வெறுப்பேற்ற எண்ணி “டேய்... ஏன்டா பாப்பான்னு சொல்ற குட்டி பாப்பான்னு சொல்லணும் இல்லைங்க....” என்றதும்,

“என்ன கொழுப்பா?...” வினோதா பொங்கிவிட....

“கூல்... கூல் பாப்பா உயரம் தான இருக்கீங்க. அதுதான் அப்படி சொன்னோம். எப்படிங்க? ஸ்கூல் முடிச்சதும் நேரா வேலைக்கு வந்துடீங்களா.... செம அறிவாளி போலிருக்கு.... கிரேட் இல்லடா....” அஷ்வின் வினோதாவை பாராட்டுவது போல் கேலிப் பேசியவன் கடைசியில் அவன் நண்பனையும் கூட்டு சேர்க்க....

அவர்கள் இருவரும் தன் உயரத்தை பார்த்து கிண்டல் செய்கிறார்கள் என்றதும், வினோதாவிற்கு ரோஷம் பொத்துக்கொண்டு வர “ஹலோ நீங்க ரெண்டு பேரும் பனைமரம் மாதிரி வளர்ந்திட்டு என்னை கிண்டல் பண்றீங்களா.... நான் ஒன்னும் குள்ளம் இல்லை 5.1 இருக்கேன். தேவையில்லாம பேசிட்டு வழிவிடுங்க நான் போகணும்.” என்றாள்.

“போங்க யாரு வேண்டாம்ன்னு சொன்னா? ஆனா இவனை தெரியுதா இல்லையா சொல்லிட்டு போங்க...அன்னைக்கு ரோட்ல ஒரு அப்பாவிய போட்டு அடிசீங்களே.... அவன் தாங்க இவன். நல்லாப்பாருங்க....” விக்னேஷ் அஷ்வினை காட்டி சொல்ல....

அப்போது வினோதாவின் செல் அழைத்தது. அவள் செல்ல வேண்டிய வாகன ஓட்டுனர்தான் அழைத்தார். அவரிடம் இதோ வரேன் என்றவள் “நான் யாரையும் அடிக்கலை... எனக்கு இவரை தெரியாது.” என்றாள் பிடிவாதமாக.... விக்னேஷ் மேலும் எதோ சொல்லவர...

“டேய் விடுடா போகட்டும்.” என்ற அஷ்வின் வினோதாவை பார்த்து “நீங்க போங்க...” என்றான். வினோதா விட்டாள் போதும் என்று விடிவிடுவென்று நடந்தாள்.

“என்ன டா அதுக்குள்ள விட்டுட்ட... ஒருவேளை இது அந்த பொண்ணு இல்லையா....” விக்னேஷ் கேட்க...

“அவளேதாண்டா... ஆனா ஏன் தெரியலைன்னு சொல்றான்னுதான் புரியலை....” என்றான்.

“டேய் வேற பொண்ணா இருக்க போகுதுடா... இல்லைனா அன்னைக்கு நடந்ததை மறந்திடுசோ...”

“மறக்க எல்லாம் இல்லை... அவ அன்னைக்கு என்னை ஹோட்டல்ல நல்லா தெரிஞ்ச மாதிரி தாண்டா பார்த்தா... எனக்குதான் சட்டுன்னு அவளை தெரியலை...”

“அப்புறம் ஏன்டா போகவிட்ட?”

“விடு நாளைக்கு பார்த்துக்கலாம்...”

“அப்ப நாளைக்கும் அவளை பார்க்க வரோமா...”

“பின்ன வேற வேலை என்ன இருக்கு? நல்லா டைம் பாஸ் ஆகுது இல்ல...” என்றபடி அஷ்வின் நடக்க.... அவனுடன் விக்னேஷும் சென்றான்.

காரில் ஏறிய வினோதாவிற்கு இன்னும் படபடப்பு அடங்கவில்லை.... எப்படி பேசுறான் பாரு.... குட்டி பாப்பாவாம்... ஆனா அவன் உயரத்துக்கு நாம அப்படிதான் தெரிவோம் என்று நினைத்ததும், அவளுக்கு சிரிப்பே வந்தது.

மாலை அஷ்வின் அவன் வீட்டிற்கு சென்றபோது... அவனின் அம்மா, அக்கா, மாமி, மாமியின் மகள் எல்லோரும் உட்கார்ந்து கதை பேசிக்கொண்டு இருந்தனர். அஷ்வினின் அக்கா ராதிகாவின் வீடு இரண்டு தெரு தள்ளிதான் இருக்கிறது. அதோடு சொந்த தாய் மாமாவின் வீடு எதிரிலேயே இருப்பதால்... மாலை நேரத்தில் வீட்டுப் பெண்கள் சேர்ந்துதான் இருப்பர்.

அஷ்வினை பார்த்ததும் “டேய் அஷ்வின் வாடா...” என்று அவனையும் அவர்கள் ஜோதிக்குள் இழுக்க...

“ஆளவிடுங்க தாய்க்குலமே... தனியா உங்ககிட்ட மாட்டினா அவ்வளவுதான். நீங்க பேசுங்க நான் அப்புறம் என்னோட படையோட வரேன்.” என்றபடி அஷ்வின் மாடிக்கு நழுவ... அங்கே ப்ளேயரில் பாடல் அலறிக்கொண்டு இருந்தது.

அஷ்வினின் தம்பி அருணும், மாமாவின் மகன் ரகுவும் அறைக்குள் சினிமா பாடலை அலறவிட்டபடி கம்ப்யூட்டரில் கேம்ஸ் ஆடிக்கொண்டு இருந்தனர். அவர்கள் அறையை எட்டிப்பார்த்த அஷ்வின் சத்தமின்றி தன் அறைக்கு நழுவினான்.

உறவினர்கள் அருகிலேயே இருப்பதால்.... வீடு எந்நேரமும் கலகலவென்று இருக்கும். அஷ்வின் உடைமாற்றி முகம் கழுவி வர... வெளியே ஹாலில் அருணும், ரகுவும் இருந்தனர்.

“என்னடா விளையாடி முடிச்சிடீங்களா.... ரகுதான் சின்னபையன். நீ M.C.A., கடைசி வருஷம் படிக்கிற. ஆனா இன்னும் சின்ன பையன் மாதிரி வீடியோ கேம்ஸ் ஆடுற...” அஷ்வின் அருணை பார்த்து கேட்க.... அவன் சிரித்தான். சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டு, இவர்கள் கீழே சென்றபோது.... ராதிகா அவள் வீட்டிற்கு கிளம்பிக்கொண்டு இருந்தாள்.

“எல்லாம் எடுத்துட்டியா ராது... நீயும் இங்கையே சாப்பிட்டு போகலாம். சொன்னா கேட்க மாட்டேங்கிற....” என்றார் அவளின் தாய் ரங்கநாயகி.

“இருக்கட்டும்மா அவரோட சாப்ட்டுகிறேன்.”

“நீ அவருக்கு சூடா அடை தோசை வார்ப்ப. ஆனா... உனக்கு யார் வார்ப்பா?... சூடா சாப்பிட்டா தான நல்லாயிருக்கும்.”

“அதெல்லாம் உன் மாப்பிள்ளை வார்த்து தருவார்...” ராதிகா சிரிக்க...

“அப்ப சரி...” தானும் சிரித்த ரங்கநாயகி அஷ்வினிடம் “அக்காவோட துணைக்கு போ...” என்றார். இது அவர்கள் வீட்டில் வழக்கமாக நடப்பதுதான். அஷ்வின் ராதிகாவின் ஐந்து வயது

மகள் பிரியங்காவை பைக்கில் முன்புறம் அமரவைக்க....ராதிகா இரண்டு வயது மகன் விஷ்ணுவை தன் மடியில் வைத்து பின்புறம் அமர்ந்துக் கொண்டாள்.

வீட்டினர் அனைவரும் வாசல் வரை வந்து அவளை வழி அனுப்பினர். மறுநாள் காலை கணவனை அலுவலகத்திற்கும், மகளை பள்ளிக்கும் அனுப்பிவிட்டு வரப்போகிறவளுக்குதான் இத்தனை பிரிவு உபச்சாரம்.

ராதிகா அவள் வீட்டில் காலை டிபன் மட்டுமே சமைப்பாள். அவளின் கணவன் மகேஷ் மதிய உணவை அலுவலகத்தில் சாப்பிடுவான். அதனால் வேலைக்காரி வந்து பாத்திரம் விலக்கி வீடு பெருக்கி துடைத்ததும், தன் அம்மா வீட்டிற்கு கிளம்பிவிடுவாள். இரவு வரும் போது குழந்தைகளுக்கு அங்கயே உணவு கொடுத்து, தனக்கும் தன் கணவனுக்கும் அங்கிருந்தே எல்லாம் கொண்டுவருவாள். தோசை என்றால் மட்டும் இங்கு வந்து வார்ப்பாள்.

ராதிகாவின் வீட்டின் முன் அஷ்வின் வண்டியை நிறுத்த. வண்டியில் இருந்து இறங்கிய ராதிகா “உள்ள வந்திட்டு போயேன் அஷ்வின்.” என்றதற்கு,

“இருக்கட்டும் கா... நீ போய் குழந்தைகளை தூங்க வை...” என்றவன், ராதிகா உள்ளே சென்று கதவை சாற்றும்வரை இருந்து பார்த்துவிட்டே சென்றான்.

அஷ்வின் வீட்டிற்கு வந்தபோது அவன் வீட்டினர் உணவு மேஜையில் அவனுக்காக காத்திருந்தனர். அவர்கள் வீட்டில் இரவு உணவு சேர்ந்து சாப்பிடுவது வழக்கம். அன்றும் அதுபோல் அனைவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டனர்.

அஷ்வினின் வீட்டில் தாய் ரங்கநாயகி வைத்ததுதான் சட்டம். அவரின் கணவர் வரதராஜன் பாங்கில் பெரிய உத்தியோகத்தில் இருந்தாலும் வீட்டு ராஜ்யம் ரங்கநாயகியிடம்தான். ரங்கநாயகி பெரிய செல்வந்தரின் மகள்... அதனால் இருநூறு சவரன் நகைகளும் ஏராளமான சீர்வரிசைகளுடன்

புகுந்த வீட்டிற்கு வந்ததால் யாரையும் மதிக்கமாட்டார்.

கூட்டு குடும்பத்தில் இருந்த வரதராஜனை தனிக்குடித்தனம் அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். அவருடைய பிறந்த வீட்டிற்கு எதிரிலேயே ஒரு வீடும் வாங்கி குடி வந்துவிட்டார். தாய் தந்தை இப்போது இல்லை... தம்பி ராகவன் அவர் குடும்பத்தோடு அங்கே இருக்கிறார்.

தன்னைப்போல் மகளையும் புகுந்த வீட்டில் வாழவிடாமல்.... அவர் வீட்டின் அருகிலேயே தனிக்குடித்தனம் வைத்துவிட்டார். எல்லோரும் அவர் கணவர் வரதராஜனைப் போல் நல்லவராக இருப்பார்களா என்ன?

ரங்கநாயகி என்னதான் ஆளுமை செய்தாலும் பிள்ளைகள் மேல் அவர் வைத்துள்ள பாசத்திற்கு அளவேயில்லை. அப்படியொரு கண்மூடித்தனமான பாசம். மூன்று பிள்ளைகளும் எது கேட்டாலும் அவர் மறுத்ததில்லை.... ஒருவேளை அவர் பிள்ளைகள் இதுவரை அவர் மறுக்கும்படி எதுவும் கேட்கவில்லையோ என்னவோ.... இனியும் அப்படியே இருக்குமா....

இரவு ஒன்பது மணிக்கு வீட்டிற்கு வந்த மகேஷ் “என்ன டிபன் ராது?” என்றதற்கு “அடை தோசைங்க... ஊத்தட்டுமா...” என்றாள் ராதிகா.

“ஏன்மா உங்க அம்மா அப்பாவுக்கு வயசாகிடுச்சு.... அவங்க இதெல்லாம் சாப்பிட வேண்டியதுதான். எனக்கும் ஏன் இதையே போடுற... ஒரு பிரைட் ரைஸ், நூடுல்ஸ், ரொட்டி பன்னீர் மசாலா எல்லாம் பண்ண கூடாதா...” மகேஷ் சலிப்புடன் பேச....

“ஏன் என் தம்பிகளும் இதைதான் சாப்பிடுறாங்க. உங்களுக்கு சாப்பிட என்னவாம். எங்க வீட்ல வேலை பார்க்கிற சமையல் மாமிக்கு இதெல்லாம் பண்ணத் தெரியாதே....”

ராதிகாவின் பதிலில் எரிச்சல் அடைந்த மகேஷ் “அவங்களுக்கு தெரியலைன்னா என்ன? நீ நெட்ல பார்த்து நம்ம வீட்ல செய்ய வேண்டியது தான...

உடம்பு வளைஞ்சு வேலை செஞ்சா உடம்பும் கொஞ்சம் இளைக்கும். ஆளும் ஸ்லிம்மா அழகா இருப்ப...” என்றான் ராதிகாவின் குண்டான உடம்பை பார்த்து.

குழந்தை பிறந்ததும் தங்கள் உடலை கட்டுகோப்பாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று எல்லாப்பெண்களும் நினைப்பதில்லை... குழந்தை பிறந்திடுச்சு இனி எப்படி இருந்தா என்ன? இப்படித்தான் நிறைய பேர் நினைப்பார்கள்.

சில ஆண்கள் தங்கள் மனைவி குண்டாக இருந்தாலும் பரவாயில்லை ஆரோக்கியமாக இருந்தால் போதும் என்று நினைப்பார்கள். சிலர் தங்கள் மனைவி எப்படியிருந்தாலும் அவர்கள் காட்டும் அன்பில் குறை இருக்காது. ஆனால் சிலர் மனைவியின் அழகுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பவர்களும் உண்டு. அப்படி அழகுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆண்கள், அழகான வேறு பெண்களிடம் தடுமாறவும் வாய்ப்பு உண்டு.

இதெல்லாம் புரியாத ராதிகா “இங்க பாருங்க இப்படியெல்லாம் பேசினீங்க... எங்க அம்மாகிட்ட சொல்லிடுவேன்.” என்று பயம்காட்ட...

“அம்மா தாயே நான் வெளிய எனக்கு பிடிச்சதை சாப்டுக்கிறேன். நீ இப்ப இருக்கிறதை போடு.... உங்க அம்மா நான் எதோ உன்னைக் கொடுமை படுத்துற மாதிரி என்னைப் பார்பாங்க.” என்றவன், அவள் சுட்டு போட்ட அடை தோசையின் ருசி அறியாமலேயே விழுங்கி வைத்தான்.

அடுத்தநாளும் அஷ்வின் வினோதாவை வம்பிழுக்க சென்றான். விக்னேஷ்கு மீட்டிங் இருந்ததால் அவன் வரவில்லை. வினோதாவும் அவன் வருவான் என்ற எதிர்பார்ப்பில் சற்று முன்னதாகவே கீழே இறங்கி வந்திருந்தாள். அஷ்வினை பார்த்ததும் மலர்ந்த முகத்தை கஷ்ட்டப்பட்டு அடக்கி... அவனை அலட்சியமாக பார்க்க முயன்றாள்.

அஷ்வின் அவளைப்பார்த்து “ஹாய் K.P...” என்றான்.

“K.P ன்னா என்ன?” வினோதா புரியாமல் கேட்க...

“ம்ம்.. குட்டி பாப்பா...” என்றான் அஷ்வின் புன்னகையுடன்....

“சும்மா ஏன் அப்படி சொல்றீங்க? யாரவது கேட்டா என்ன நினைப்பாங்க?” வினோதா கோபமாக பேச முயன்றாள்... ஆனால் வார்த்தையில் அவ்வளவு கோபம் இல்லை... சினுங்கலாகவே வந்தது.

“உன் பேரு தெரியாதே... அப்புறம் எப்படி கூப்பிடுறது?” என்றவன், அப்போதுதான் அவள் கழுத்தில் இருந்த அடையாள அட்டையை பார்த்தான். ஏற்கனவே வினோதா அவனைவிட ரொம்பவும் உயரம் கம்மி... அதனால் அடையாள அட்டையில் இருந்த அவளின் பெயரை படிக்க... அஷ்வின் நிறையவே குனிய வேண்டியது இருந்தது.

வினோதா திடிரென்று அவன் குனியவும் பயந்து, அவள் துப்பட்டாவை ஒழுங்காக போட... நிமிர்ந்து அவளைப்பார்த்து முறைத்த அஷ்வின் “லூசு உன் பேருதான் பார்கிறேன். வேற ஒன்னும் இல்லை...” என்றான்.

அதிகம் பேசி பழகாதவள் இருந்தும் ஒருமையில் அழைக்கிறோமே என்று அஷ்வினும் நினைக்கவில்லை... அவன் சொன்னதை வினோதாவும் தவறாக எடுத்துக்கொள்ளவில்லை.

“பேரைக் கேட்டா நான் சொல்ல மாட்டேனா...” என்றாள்.

“யாருக்கு தெரியும்? நீ என்னை ஏற்கனவே பார்த்ததையே இன்னும் ஒதுக்கலை... இதுல பேர் கேட்டா மட்டும் சொல்வியா என்ன?” அஷ்வின் அவளின் முகம் பார்த்து பேச.....

“வினோதா... S.S (Software Solutions) கம்பெனியில ட்ரைனியா சேர்ந்திருக்கேன். உங்களை முதல் தடவை பார்த்த அன்னைக்கு இங்கதான் இன்டர்வியூக்கு வந்திருந்தேன்.”

“so... அப்ப நீ என்னை மறக்கலை... தெரிஞ்சும் தெரியாத மாதிரி ஏன் நடிச்ச?”

“நீங்க என்னை மறந்துடீங்க தான... அதுதான் மறந்து போனவளாவே இருக்கட்டும்னு நினைச்சேன்.”

வினோதாவின் பதில் எதோ ஒருவகையில் அஷ்வினை பாதித்தது. அப்போது வினோதாவிற்கு காரின் ஓட்டுனரிடம் இருந்து அழைப்பு வர... அவள் அஷ்வினிடம் விடைபெறுவது போல் தலையசைக்க... அஷ்வினும் அவளுக்கு நகர்ந்து வழிவிட்டான். வினோதா அஷ்வினின் பெயரை தெரிந்துகொள்ளாமலே சென்றாள்.

மறுநாள் மாலை அஷ்வினிடம் வந்த விக்னேஷ் “டேய் வாடா போய் பாப்பாவை பார்த்திட்டு வரலாம். டைமே போகமாட்டேங்குது...” என்றான்.

விக்னேஷ் சொன்னதை கேட்டு தீவிர சிந்தனைக்கு சென்ற அஷ்வின் “அவ டைம் பாஸுக்காக பேசுற பொண்ணு இல்லடா... விட்டுடு இனி அவளை பார்க்கவேண்டாம்.” என்றான்.

பகுதி – 3

வினோதாவிற்கு ஆறு மாத காலம் பயிற்சி முடிந்து ப்ராஜெக்ட் கொடுக்கபட்டது. அதோடு அவளுடைய அலுவலக நேரமும் மாற்றப்பட்டது. இந்த இடைப்பட்ட நாட்களில் அவள் அஷ்வினை சந்திக்கவில்லை. அஷ்வினும் அவளைத்தேடி வரவில்லை....

புதுப் ரொஜெக்டில் அவளுக்கு நிறைய நண்பர்கள் கிடைத்தார்கள். அதோடு அவளுக்கு ஆரம்பத்தில் வேலையில் சேர்ந்ததில் இருந்தே விஜி என்ற தோழியும் உண்டு. அவளும் இவளுடைய ப்ராஜெக்ட் தான்.

அவளுடைய நண்பர்கள் “நீ மட்டும் ஏன் இங்க தனியா உட்கார்ந்து சாப்பிடுற... எங்களோட வா..” என்று அவளையும் அழைத்துக்கொண்டு

உணவகத்திற்குச் செல்ல... வினோதாவும் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவை அவர்களோடு அமர்ந்து சாப்பிடுவாள்.

சாப்பிட்டதும் உடனே வேலையைப் பார்க்க செல்லாமல்... அவர்கள் அலுவலகக் கட்டிடம் இருக்கும் வளாகத்தை ஒருமுறை பேசி அரட்டை அடித்தபடி வளம் வந்த பிறகே... அவரவர் இடத்திற்குச் சென்று வேலை பார்க்க ஆரம்பிப்பார்கள்.

அப்படி ஒருநாள் நண்பர்கள் கூட்டத்தோடு வளவளத்தபடி வினோதா நடக்க... அஷ்வின் அவன் நண்பர்களோடு எதிரில் வந்தவன், வினோதாவை பார்த்ததும் புன்னகைக்க... அஷ்வினோடு இருந்த விக்னேஷ் உணர்ச்சி வேகத்தில் “ஹாய் பாப்பா...” என்றவன், அப்போதுதான் மற்றவர்களும் அவளுடன் இருப்பதைக் கவனித்துவிட்டு அசடு வழிந்தான்.

விக்னேஷை பார்த்து வினோதா முறைக்க.... அஷ்வின் விக்னேஷின் காதில் “அவ பேரு வினோதா...” என்றான்.

“ஹாய் வினோ எப்படி இருக்க? பார்க்கவே முடியலை...” விக்னேஷ் ரொம்பத் தெரிந்தவன் மாதிரி பேச... “நல்லாயிருக்கேன்...” என்ற வினோதாவின் பார்வை அஷ்வினின் மீதே இருந்தது.

அவர்கள் பேர் தெரியாததால்... நண்பர்களுக்கு எப்படி அறிமுகபடுத்துவது என்பது போல் அவள் யோசிக்க... அதற்குள் அஷ்வின் விடைபெறுவது போல் தலையசைத்து விட்டு, அவன் நண்பர்களோடு அங்கிருந்து நடக்க... வினோதாவும் அவள் நண்பர்களோடு நடக்க ஆரம்பித்தவள், சிறிது தூரம் சென்றதும், திரும்பி அஷ்வினை பார்த்துவிட்டே சென்றாள்.

“யாரு வினோ அவங்க?” நண்பர்களின் கேள்விக்கு “இன்டர்வியூ வந்த அன்னைக்குப் பார்த்தேன்.”

என்றதோடு வினோதா முடித்துக்கொண்டாள்.

அதன்பிறகு வந்த நாட்களில் அஷ்வினும் வினோதாவும் தினம் என்று இல்லாவிட்டாலும் அடிக்கடி சந்தித்தார்கள். ஒன்று உணவகத்திலோ அல்லது வெளியில் இது போல் நடக்கும் போதோ... அப்படியும் இல்லையென்றால் அலுவலகம் முடிந்து செல்லும் போதோ... எப்படியோ பார்த்துக் கொண்டனர். வெறும் பார்வை மட்டுமே...

நேரில் பார்க்கும் போது இருவரும் ஒரு புன்னகையோடு விலகிவிடுவார்கள்.... பேச இருவருமே முயலவில்லை....

அன்று மதியம் வழக்கம் போல் நண்பர்களோடு உணவு அருந்த வந்த வினோ தூரத்திலேயே அஷ்வினை பார்த்துவிட்டாள். அன்று அஷ்வினும் விக்னேஷும் மட்டுமே இருந்தனர். அவனுடைய மற்ற நண்பர்கள் இல்லை...

சாப்பிடும் போது வினோ அஷ்வினையே அடிக்கடி என்று சொல்ல முடியாது.... ரொம்ப அடிக்கடி அதாவது நொடிக்கொருமுறை அவனையே பார்க்க... அப்போது அஷ்வினுக்குத் தெரிந்த யாரோ ஒரு பெண் வந்து அவனருகில் உட்கார்ந்து பேச.... வினோதாவின் முகம் உர்ரென்று ஆகிவிட்டது.

அவர்கள் இருவறும் பேசிக்கொள்ளும் போது சுற்றிலும் பார்த்த விக்னேஷின் பார்வையில் வினோ விழுந்தாள். அவனும் சிறிது நாட்களாக வினோதாவைக் கவனித்துக்கொண்டு தான் இருக்கிறான். அஷ்வினோடு பேசிக்கொண்டிருந்த அந்தப் பெண் சிறிது நேரத்தில் அங்கிருந்து போய்விட்டாள்.

வினோதா அஷ்வினை பார்ப்பதை கவனித்த விக்னேஷ் திரும்பி தன் நண்பனை பார்க்க... அவன் சாதாரணமாகத்தான் இருந்தான். அவன் வினோ பார்ப்பது போல் பார்க்கவில்லை என்றாலும்... அவனுக்கும் வினோ தன்னைப் பார்ப்பது தெரிந்துதான் இருக்கிறது என்று புரிந்து

கொண்டான்.
இவர்களுடைய கண்ணாமூச்சி ஆட்டத்தை முடிக்க எண்ணி.... சாப்பிட்டதும் கிளம்பிய வினோதாவை விக்னேஷ் அழைக்க... அவளும் அவள் நண்பர்களிடம் "நீங்க போங்க வரேன்..." என்றவள், இவர்களை நோக்கி செல்ல... அஷ்வின் ஆர்வமில்லாதவன் போல் அமர்ந்திருந்தான்.

"எதுக்குக் கூப்பிடீங்க?" என்ற வினோவை பார்த்து உட்காரு என்பது போல் விக்னேஷ் ஜாடை காண்பிக்க... அவளும் அஷ்வின் அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

அவள் கையில் இருந்த டப்பாவை பார்த்த விக்னேஷ் "நீ தினமும் வீட்ல இருந்து சாப்பாடு கொண்டு வருவியா..." என்றான்.

"ஆமாம்..." என்றவள், அப்போது தான் நியாபகம் வந்தவளாக "உங்க பேர் என்ன?" என்றாள்.

"விக்னேஷ்..." என்றவன், இவன் பேரு தெரியுமா என்று தன் நண்பனை பார்க்க.... தெரியாது என்பது போல் வினோ தலையசைக்க...

பேர் கூடத் தெரியாமையா அவனை அந்தப் பார்வை பார்க்கிற என்று நினைத்தவன் "அவன் பேரு அஷ்வின்... நாங்க ரெண்டு பேரும் ஸ்கூல் டேஸ்ல இருந்தே ப்ரண்ட்ஸ்." என்றான்.

"ஓ... அப்படியா... நீங்க எங்க வொர்க் பண்றீங்க?" இப்போது வினோ கேள்வி கேட்க...

விக்னேஷ் ஒரு பிரபல மென்பொருள் நிறுவனத்தில் இருவரும் வேலை பார்பதாகச் சொன்னான். அதோடு வினோவை பற்றித் தோண்டித் துருவி கேட்க... வினோவும் எல்லாவற்றிற்கும் பதில் சொன்னாள்.

அடுத்த இருபது நிமிடத்தில் வினோதாவின் படிப்பு, வேலை, குடும்பம் எல்லாவற்றையும் பற்றி விக்னேஷ் கேட்டிருந்தான்.

“சரி டைம் ஆகிடுச்சு நான் கிளம்புறேன்.” வினோதா விடைபெற... “இரு நான் போய் ஐஸ்கிரீம் வாங்கிட்டு வரேன்...” என்ற விக்னேஷ் அஷ்வினிடம் “பாப்பாவை பார்த்துக்கோடா...” என்று அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்துவிட்டு செல்ல...

“பார்கத்தான் பாப்பா... ஆனால் பார்க்கிற பார்வை அப்படி இல்லை...” அஷ்வின் முனங்க... வினோதாவிற்கு அது நன்றாகவே கேட்டது.... “சரி நான் கிளம்புறேன். உங்க ப்ரண்ட் வந்தா சொல்லிடுங்க....” வினோதா அங்கிருந்து நழுவ பார்க்க....

“எங்க போற நீ? உட்காரு உன்கிட்ட கொஞ்சம் பேசணும்.” அஷ்வின் அதட்ட.... வினோதா மீண்டும் அமர்ந்தாள்.

“உனக்கு நீ என்ன பண்றன்னு புரியுதா?” அஷ்வின் வினோதாவின் முகம் பார்த்துக் கேட்க....

“என்ன பண்றேன் நான்? ஒன்னும் பண்ணலையே...” வினோதா அப்பாவியாக முகத்தை வைத்துக்கொண்டு சொல்ல...

“நீ என்னைப் பார்க்கிற தான...”

அஷ்வினின் கேள்விக்கு “பார்க்கிறதுல என்ன தப்பு?” வினோதா பதில் கேள்வி கேட்க... பொறுமை இழந்த அஷ்வின் “சாதாரணமா பார்க்கிறது தப்பு இல்லை.... ஆனா நீ என்னை விழுங்கிற மாதிரி பார்க்கிற...உனக்கு புரியுதா....” அவன் மற்றவர்களுக்குக் கேட்க கூடாது என்று மெதுவாகப் பேச....

ஐயோ ! என்னோட பார்வை அப்படியா இருக்கு... இப்ப இவன்கிட்ட என்ன சொல்லி தப்பிக்கிறது யோசித்த வினோதா “நான் பார்க்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்க என்னைப் பார்கிறதுனால தான... இனி நீங்க என்னைப் பார்க்காதீங்க. அப்ப நான் பார்க்கிறது உங்களுக்குத் தெரியாது. ஓகே...” என்றாள் அறிவாளியாக...

“ரொம்ப அறிவு தான். உனக்கு வயசு என்ன இருக்கும்? இருபது இருக்குமா... எனக்கு இருபத்தியேழு.... என் மேல உனக்கு இருக்கிறது லவ் இல்லை... வெறும் க்ரஷ் தான். நான் உயரமா... ஆள் வாட்டசாட்டமா இருக்கிறதுனால... உனக்கு என்னைப் பார்க்கணும்ன்னு தோணுது... கொஞ்ச நாள் பார்க்கலைன்னா என்னை மறந்திடுவ...”

அஷ்வின் பேசப்பேச முகம் மாறிய வினோதா “எனக்கு உங்க மேல இருக்கிறது க்ரஷ் இல்லை லவ் தான்னு எப்படி ப்ரூப் பண்றது?” என்று அவனையே கேட்டாள்.

அவளைப் பார்த்து முறைத்த அஷ்வின், நான் சொல்றது சொல்லிட்டேன்.... பிறகு உன் இஷ்டம் என்பது போல் இருக்க... தூரத்தில் இருந்து இவர்கள் பேசுவதைப் பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷ், இன்னைக்கு இவ்வளவு போதும் என்று நினைத்தவன், ஐஸ்கிரீம் வாங்கிக்கொண்டு வந்தான்.
ஐஸ்கிரீம் சாப்பிடும் போது விக்னேஷ் தான் பேசினான். மற்ற இருவரும் எதுவும் பேசவில்லை.... வினோதா கிளம்பியதும் “என்னடா பேசினீங்க ஓகே வா...” விக்னேஷ் அஷ்வினிடம் கேட்க...

“என்ன ஓகேவா?” அஷ்வின் பிடி கொடுக்காமல் பேச...

“டேய்... என்ன போட்டு வாங்குறியா? அந்தப் பொண்ணுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. அதனாலதான் கூப்பிட்டு வச்சு பேசினேன். உனக்குப் பிடிச்சிருக்கா இல்லையா சொல்லு...” விக்னேஷ் நேரடியாகக் கேட்க...

“அவ தான் லூசு மாதிரி பண்றான்னா... நீ அவளுக்கு ஜால்ராவா... எனக்கு அப்படியெல்லாம் அவகிட்ட ஒன்னும் தோணலை....” அஷ்வின் எறிந்து விழ... இதுக்கு மேல இவன்கிட்ட பேசினா கடிச்சு வச்சிடுவான் என்பதை உணர்ந்த விக்னேஷ், வினோ என்ன பண்றா பார்போம் என்று

நினைத்தவன், மேலும் அஷ்வினிடம் வழக்காடாமல் விட்டுவிட்டான்.

இங்கே தன் இடத்திற்கு வந்த வினோதா அப்படியே டேபிளில் தலைவைத்து படுத்துவிட்டாள்.
அவளுக்கே இது ஒத்துவராது என்று தெரியும்.
அஷ்வினை யார் என்று தெரியாதே போதே....
அவளுக்கு அவன் மீது ஒரு ஈர்ப்பு இருந்தது. அவன் தன்னை மறந்திருந்த போது... மனதில் ஏமாற்றம் பரவினாலும்... பரவாயில்லை இதுவும் நல்லதிற்குத்தான் என்று நினைத்தாள். ஆனால் அவள் மனம் அவனை நினைப்பதை மட்டும் நிறுத்தவில்லை... நிறுத்தமுடியவில்லை... அவனை நேரில் பார்க்கும் போது... கட்டுபடுத்தமுடியாமல் பார்த்து விடுகிறாள்.

அவள் அஷ்வினிடம் காதலை சொல்லவேண்டும் என்று எல்லாம் நினைத்ததே இல்லை... அவன் வயதுக்கோளாறு என்று சொன்னதால் கோபத்தில் பட்டென்று சொல்லிவிட்டாள். வினோ யோசனையில் இருக்கும் போது... அவளின் தோளைத் தட்டி எழுப்பிவிட்ட பக்கத்து இருக்கை ஹேமா “என்ன சாப்பிட்டதும் தூக்கமா?...” என்று கேட்டு புன்னகைக்க...

“இல்ல ஹேமா சும்மா தலைவலிச்சது அதுதான்.” வினோதா எதோ ஒன்றை சொல்லி சமாளித்தாள்.

பக்கத்து இருக்கையில் இருக்கும் ஹேமா, தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பவள். யாரிடமும் அதிகம் பேசமாட்டாள். திருமணமாகி பின் கணவனைப் பிரிந்து இருப்பதாக வினோதா கேள்விபட்டாள். ஆனால் ஹேமாவிடம் எதுவும் கேட்டதில்லை... அவளும் எதுவும் சொன்னது இல்லை. சில பொதுவான விஷயங்களைப் பேசுவதோடு சரி.
வினோதா வேலையில் கவனம் செலுத்தினாள்.
அவள் படித்தது B.sc., கம்ப்யூட்டர்தான் என்றாலும்... அதை மிக நன்றாகப் படித்திருந்தாள். அதோடு மேலும் சில கம்ப்யூட்டர் கோர்ஸ் முடித்திருந்ததால்...

அவளுக்கு இந்த வேலை கிடைத்தது. ட்ரைனிங்கில் அவளின் ஆர்வத்தையும் திறமையையும் பார்த்தே அவளை ப்ராஜெக்டில் உட்கார வைத்திருந்தனர்.

வினோதா வேலை பார்ப்பது பெரிய நிறுவனம் இல்லை...இப்போதுதான் வளர்ந்து கொண்டிருக்கும் நிறுவனம். பெரிய மென்பொருள் நிறுவனங்களுக்கு வரும் சிறிய வகை ப்ராஜெக்ட்களை இவர்களிடம் கொடுத்துச் செய்ய வைப்பார்கள். அதனால் சம்பளம் குறைவுதான். ஆனால் வேலை கற்றுக்கொள்ள முடியும். வினோதா மேலே M.sc., படித்துக்கொண்டிருந்தாள்.

அன்று மாலை வினோதா ஏற்கனவே மனவருத்தத்தில் வீட்டிற்கு வந்தவள், அங்கே மாலதி தன் அம்மாவிடம் டெய்லி நைட் இட்லி தோசை தானா என்று சண்டை பிடிப்பதையும், உடனே தன் அம்மா பூரி செய்ய ஆரம்பித்ததையும் கவனிதவளுக்கு ஆத்திரமாக வந்தது.

காலை மதியம் தான் எதுவும் செய்வது இல்லை... இரவு உணவாவது இவள் சமைக்கக் கூடாதா... இவளுக்குத் தன் அம்மா வேலைக்காரியா என்ற எண்ணம் வந்தவுடன், அங்கிருந்தால் சண்டை பிடிப்போம் என்று நினைத்து வெளியே கிளம்பினாள்.

கடைத்தெருவில் சும்மா சுற்றிக்கொண்டு இருந்தவள், வீட்டிற்குத் தேவையான சாமான்கள் இருக்கும் கடையைப் பார்த்ததும் அதற்குள் நுழைந்தாள்.

டிவி சோபா செட் எல்லாம் பார்த்தவள், தன் வீட்டில் இருக்கும் பழைய டிவிக்குப் பதில் புதிது வாங்கினால் என்ன என்று தோன்ற.... விலையை விசாரித்து... LED டிவியும், குஷன் வைத்த சோபாவும் வாங்கினாள்.

சம்பள பணத்தைச் சேர்த்து வச்சு தான மாலதி கல்யாணம் பண்ணனும்னு சொன்னா.... அஷ்வினோடு இல்லாத திருமணம் தனக்குத்

தேவையே இல்லை என்ற எண்ணத்தில்...
வேலைக்குச் சேர்ந்த பிறகு இது வரை சேர்த்து வைத்திருந்த மொத்த பணத்தையும் ஒரே நாளில் செலவு செய்தாள்.

“எப்போ டெலிவரி குடுப்பீங்க?” என்றதும், முகவரி விசாரித்த கடைகாரர் “பக்கத்தில் தான இப்பவே அனுப்புறேன்.” என்றார்.
வினோதா வீட்டிற்கு வந்தபோது “இது என்ன புதுப் பழக்கம்? எங்க போறேன்னு சொல்லாம போறது?...” மஞ்சு மகளைக் கண்டிக்க...

வினோதாவின் முகத்திலோ கோபத்திற்குப் பதில் புன்னகை....

“அம்மா உனக்கு ஒரு சர்ப்ரைஸ் இருக்கு...” என்றவள், ஓடிக்கொண்டிருந்த டிவியை அணைத்துவிட்டு அங்கே சேரில் அமர்ந்திருந்த விமலிடம் அண்ணா ஒரு கை பிடியேன் என்றாள்.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை... எதுக்கு என்பது போல் பார்த்தவன், தங்கை சொன்னதையும் செய்தான். இருவருமாக டிவியைத் தூக்கிக்கொண்டு போய்ப் பக்கத்து அறையில் வைத்தனர்.

“டிவியை எங்கடி தூக்கிட்டு போற...” மஞ்சு கத்திக்கொண்டிருக்கும் போதே... வீட்டின் முன்பு வண்டி வந்து நிற்க... வினோதா வேகமாக வந்து ஹாலில் இருந்த பிளாஸ்டிக் சேர்களை அப்புறப்படுத்தினாள்.

முதலில் டிவி வர.... அடுத்து சோபா வந்தது. வீட்டினர் அனைவரும் ஆச்சர்யமாகப் பார்த்திருந்தனர். வந்தவர்கள் சென்றதும் மஞ்சு வினோதாவை ஒரு பிடி பிடித்தார்.

“ரொம்பப் பெரிய மனுஷி ஆகிட்டியா வினோ.... யார்கிட்டயும் கேட்காம உன் இஷ்டத்துக்கு எல்லாம் பண்ற.... இப்ப எதுக்கு இதெல்லாம் வாங்கின?”

“ஏன்மா நம்ம வீட்டுக்கு நான் வாங்க கூடாதா.... உங்ககிட்ட கேட்டா வேண்டாம்ன்னு சொல்வீங்க அதுதான் சொல்லலை...” வினோ பாவமாகச் சொல்ல...

“பாவம் விடுடி குழந்தை எதோ ஆசையா வாங்கி இருக்கா...” பார்த்திபன் மகளுக்குப் பரிந்து பேச....

“காசை வெட்டியா செலவு பண்ணிட்டு வந்திருக்கா... நீங்க அவளுக்குச் சப்போர்ட்டா... இதுல ரெண்டு சவரன் நகையாவது வாங்கி இருக்கலாம். அவ கல்யாணத்துக்காவது உதவும்.”

“ஆமாம்... அம்மா சொல்றது தான் சரி...” மாலதியும் மஞ்சுவிற்கு ஒத்து ஊத...

கல்யாணம் என்றதும் வினோவிற்குக் கோபம் வந்துவிட்டது. “இப்ப என் கல்யாணத்துக்கு என்ன அவசரம்? அது நடக்கும் போது பார்த்துக்கலாம்.” என்றாள் அலட்சியமாக...

“என்ன மனசுல சின்னக் குழந்தைன்னு நினைப்பா...” மஞ்சு சொன்னதும், அப்படித்தான் ஒருத்தன் சொல்லிட்டு இருக்கான் வினோ முனங்க.....

“அங்க என்ன முனங்கள்.... உங்க அப்பா ரிடையர் ஆக இன்னும் ரெண்டு வருஷம் தான் இருக்கு... வர்ற செட்டில்மெண்ட் பணத்தில உனக்குக் கல்யாணம் பண்றது தான் முதல் வேலை...” மஞ்சு உறுதியாகச் சொல்ல... கேட்ட மாலதிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது போல் இருந்தது.

வர்ற பணத்தில இவளுக்குக் கல்யாணம் பண்ணிட்டா... நாளைக்கு வயசான காலத்தில உடம்புக்கு முடியலைன்னா இவங்களுக்கு யாரு செலவு பண்றது?.... அது நம்ம தலையில இல்ல விடியும் என்று நினைத்தவள் “அம்மா அவ எதோ ஆசையா வாங்கிட்டு வந்திட்டா விடுங்களேன். அவளுக்கு இப்ப தான இருவது வயசு... இன்னும்

நல்லா படிச்சு பெரிய வேலைக்குப் போகட்டுமே... இப்ப கல்யாணத்துக்கு என்ன அவசரம்?" என்றவள், வினோவை பார்த்து ஈ... என்று இளிக்க...

இவ கண்டிப்பா அவ்வளவு சீக்கிரம் நம்ம கல்யாணம் நடக்க விடமாட்டா என்ற சந்தோஷத்தில் பதிலுக்கு வினோவும் பிடிக்காத அண்ணியைப் பார்த்து பல்லைக் காட்டிவைத்தாள்.

இதுங்க ரெண்டும் எதுக்கு ஒன்னு சேருதுங்க? என்று மஞ்சு ஆச்சர்யப்பட...

மாலதி வினோவிற்கு அதரவாகப் பேசுவதைப் பார்த்த விமல், தானும் எதாவது செய்தாக வேண்டும் என்ற ஆவலில் "வினோ எவ்வளவு ஆச்சுன்னு சொல்லு நான் குடுத்திடுறேன்." என்றதும், மாலதிக்கு ஐயோ என்று இருந்தது.

"அவ ஆசையா வாங்கிட்டு வந்திருக்கா... நீங்க பணம் கொடுத்தா அவ மனசு கஷ்டப்படாது." மாலதி சாமர்த்தியமாகத் தன் கணவன் பணம் கொடுப்பதைத் தடுத்துவிட... எல்லோரும் எதிர்பார்த்த ஒன்றுதான் என்பதால்... யாருக்கும் பெரிதாக வருத்தமில்லை...

மறுநாள்முதல் வினோ அஷ்வின் எதிரில் வந்தாலும் அவனைப் பார்க்காமல் தவிர்த்தாள். அவனும் அவளைக் கண்டுகொள்ளாமல் இருந்தான். இவர்கள் இருவரையும் பார்த்த விக்னேஷுக்கு தலை சுற்றியது....

என்னடா இது நல்லா தான போயிட்டு இருந்தது. அதுக்குள்ளே என்ன ஆச்சு? என்று குழம்பியவன், வினோவை தனியே சென்று சந்தித்தான். இருவரும் அலுவலகத்திற்கு எதிரில் இருந்த காபி ஷாப்பில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். வினோ அஷ்வின் அவளிடம் சொன்னதைச் சொல்ல....

"இவ்வளவு தான் உன்னோட காதல்லா வினோ... அவன் சொன்னா விட்டுடுவியா..." விக்னேஷ்

அவளை உசுப்பி விட...

“பின்ன என்னைப் பார்த்து... அவரை முழுங்கிற மாதிரி பார்கிறேன்னு அசிங்கமா சொல்றாரு... வேற என்ன பண்ண சொல்றீங்க?” வினோ கோபப்பட...

“அறிவு கெட்டவன் அப்படியா சொன்னான். காதல் பார்வைக்கும் மத்ததுக்கும் வித்தியாசம் தெரியாம சொல்லிட்டான். முன்ன பின்ன லவ் பண்ணி இருந்தா தானே தெரியும். அவன் சொன்னதை எல்லாம் நீ பெரிசா எடுத்துக்காத வினோ...” விக்னேஷ் சமாதானம் செய்ய...

“நான் அவருக்குப் பொருத்தம் இல்லை... அவர் உயரமா இருக்கார். நான் குள்ளமா இருக்கேன். அவருக்கு என்னைப் பிடிக்காது.” வினோ புலம்ப...

“ஷ்..... அப்படி அவன் சொன்னான்னா... எனக்கு அஷ்வினை சின்னதிலிருந்தே தெரியும். அவன் பிடிக்லைன்னா பட்டுன்னு சொல்லிடுவான். அவனுக்கு அவ்வளவு சீக்கிரம் கோபம் வராது... அப்படி வந்தா அவ்வளவு சீக்கிரம் போகவும் செய்யாது. ஆனா உன் விஷயத்துல அவனுக்குக் கோபம் எல்லாம் இல்லை...” விக்னேஷ் சொல்ல வினோ யோசித்தாள்.

“உன்னைப் பிடிக்கலைன்னு அவன் எப்ப சொன்னான். அவனும் உன்னைப் பார்கிறான் தானே... அதனால தான நீ பார்க்கிறது அவனுக்குத் தெரியுது. நீ முயற்சி பண்றதை விடாத... அவன் கண்டிப்பா ஒத்துபான்.” விக்னேஷின் தூபம் வேலை செய்தது.

“ம்ம்... அப்படியா சொல்றீங்க. சரி நானா அவரான்னு ஒருகை பார்த்திடலாம்.” என்று வினோ எழுந்துகொள்ள... விக்னேஷும் அவளுடன் சென்றான்.

பகுதி – 4

விக்னேஷுடன் பேசிவிட்டு வந்ததில் இருந்து வினோதா திரும்பத் தன் பழைய சேட்டைகளை ஆரம்பித்திருந்தாள். அஷ்வினை பார்வையால் தொடர்வது, அவன் அவளைப் பார்க்கும் போது புன்னகைப்பது. அஸ்வினும் விக்னேஷும் மட்டும் இருக்கும் சமயங்களில் நின்று விக்னேஷோடு பேசுவது என்று... ஆனால் அஷ்வின் அவளைக் கண்டும் காணாமல் இருந்தான்.

இப்படியே சில நாட்கள் செல்ல... ஒருநாள் அலுவலகம் முடிந்து வினோதா செல்லும் போது... எதிரில் அஷ்வின் வந்தான். அவனைப் பார்த்ததும் வினோதாவிற்கு ஒரு யோசனை தோன்ற... மறைந்து நின்று கொண்டு அவன் என்ன செய்கிறான்? என்று கவனித்தாள்.

எதிரில் வந்துகொண்டிருந்த வினோதாவை திடிரென்று காணவில்லை என்றதும், அஷ்வினின் பார்வை அவளைத் தேடி அலைந்தது. அதை மறைந்து நின்று பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஒரே சிரிப்பு....

நேர்ல பார்த்தா கண்டுக்காம இருக்கிறது... இப்ப மட்டும் தேடுறதை பாரு.... இரு உனக்கு வச்சிக்கிறேன் என்று நினைத்தவள், நடையில் துள்ளலுடன் சென்றாள்.

ஞாயிறுகளில் ராதிகா குடும்பத்துடன் தன் அம்மா வீட்டில்தான் இருப்பாள். காலையிலேயே வருபவள் இரவு தான் வீடு திரும்புவாள். அன்று மதிய உணவு எல்லோரும் சேர்ந்து சாப்பிடுவதால் உணவு வகைகள் தடபுடலாக இருக்கும்.

அன்றும் அதுபோல் ராதிகா காலையிலேயே தன் அம்மா வீட்டிற்குக் கிளம்ப “ஏன் டி தினமும் உங்க அம்மா வீட்டுக்கு தான போற.... இன்னைக்கும் அங்கதான் போகனுமா.... எனக்குக் கூடப் பெத்தவங்க இருக்காங்க உனக்கு நியாபகம் இருக்கா...” மகேஷ் கிண்டலாகக் கேட்க....

“ஏன் இல்லாம... பெத்தவங்க இல்லாம வானத்தில இருந்து விழ நீங்க தெய்வ குழந்தையா என்ன?” ராதிகா அவன் போட்ட பந்தை அசால்ட்டாகச் சிக்ஸர் அடிக்க... மகேஷுக்கு இன்னும் ஆத்திரம் ஏறியது.

“ரொம்பக் கொழுப்புடி உனக்கு.... இன்னைக்கு எங்க வீட்டுக்கு தான் போறோம்.” என்றான் அழுத்தமாக...

“இன்னைக்குச் சண்டே என்னை ப்ரீயா இருக்க விடுங்க மகேஷ்....”

“மத்த நாளெல்லாம் வெட்டியா முறிக்கிற.... உங்க அம்மா வீட்ல தான இருக்க...”

“உங்க வீட்டுக்கு போனா மட்டும் உங்க அம்மா பெரிசா என்ன சமைக்கப் போறாங்க... ஒரு குழம்பு, காய், ரசம் தான.... எங்க அம்மா வீட்ல இன்னைக்கு விருந்து களைகட்டும். அதோடஅங்க போனா உங்க அம்மாவோட வேலை வேற பார்க்கணும். என்னால முடியாதுப்பா... எங்க வீட்லன்னா சமையல் மாமியே எல்லாம் செய்வாங்க.” ராதிகா அலட்சியாமாகப் பேச...

இதற்கு மேல் ராதிகாவை வற்புறுத்தி அழைத்துச் சென்றாலும், அங்கிருப்பவர்களுடன் முகம் கொடுத்தே பேச மாட்டாள். கிளம்பும் வரை வேண்டா வெறுப்பாக அமர்ந்திருப்பாள். அதோடு அங்கிருப்பவர்களின் மனம் நோகும் படியும் எதாவது பேசிவிடுவாள்.

அதனால் மகேஷ் “சரி நீ வரலைன்னா போ... குழந்தைகளை மட்டும் அழைச்சிட்டு போறேன்.” என்றதற்கு...

“அதெல்லாம் நான் இல்லாம என் குழந்தைங்க எங்கையும் வர மாட்டாங்க. அங்க போய்க் கண்டதையும் சாப்பிட்டு உடம்புக்கு முடியலைன்னா.... யாரு அவஸ்த்தபடுறது? நீங்க வேணா போயிட்டு வாங்க.” ராதிகா பெரியமனதோடு சொல்ல....

அவன் மட்டும் தனியாகச் சென்றால்... குழந்தைங்களைப் பார்க்கணும் போல இருக்குடா... என்னும் தாயின் ஏக்க குரலை கேட்க முடியாது என்பதால்....

“உங்க ஆலோசனைக்குத் தேங்க்ஸ் மேடம். நான் என்ன பண்ணனும்ன்னு எனக்குத் தெரியும். நீ உன் வேலையைப் பாரு...” கோபமாகக் கத்திவிட்டு மகேஷ் அங்கிருந்து செல்ல.... ராதிகா தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு பிறந்த வீட்டிற்குச் சென்றாள்.

மதியம் எல்லோரும் சாப்பிடும் போது மகேஷும் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டான். அதைப் பார்த்து ராதிகா நமட்டுச் சிரிப்பு சிரிக்க... மகேஷ்க்கு அதைப்பார்த்து இன்னும் கோபம் அதிகமாகியது.

“ஏன் அத்தை நீங்களும் ரொம்ப நாளா அஷ்வினுக்குப் பொண்ணு பார்கறீங்க... இன்னுமா ஒரு வரணும் அமையலை.... அஷ்வின் நல்லா தான இருக்கான்.” மகேஷ் கிண்டலாக விசாரிக்க... ராதிகா அவனைப் பார்த்து முறைத்தாள்.

“என் பையனுக்கு என்ன குறை? அவன் ராஜாவாட்டம் இருக்கான். அவனுக்குப் பொண்ணு கொடுக்க.... நான் நீன்னு வராங்க. எனக்குத் தான் இன்னும் எதுவும் பிடிக்கலை....”

“வசதி இருந்தா அழகு இல்லை... இது ரெண்டும் இருந்தா சரியான படிப்பு இல்லை... அஷ்வின் M.E., படிச்சிருக்கான். அவனுக்கு ஏத்த மாதிரி பொண்ணு பார்க்க வேண்டாமா....” ரங்கநாயகி கர்வத்துடன் சொல்ல...

“நீங்க சொல்றதும் சரிதான். உங்களுக்குப் பார்க்க முடியலைன்னா அஷ்வினையே பார்த்துக்கச் சொல்ல வேண்டியது தான... அவனுக்கு யாரையாவது பிடிச்சிருக்கலாம் இல்லையா...” மகேஷ் ராதிகா மேலிருந்த எரிச்சலை தன் மாமியார் மீது காட்ட....

“உங்களை யாராவது கேட்டாங்களா... இதுக்குத் தான் நீங்க இங்க வந்தீங்களா....” ராதிகா மகேஷிடம் சீற.... அவன் அலட்சியமாக உட்கார்ந்து இருந்தான்.

“என் பிள்ளைங்களுக்கு எது எப்போ செய்யணும்ன்னு எனக்குத் தெரியும். என் பிள்ளைங்க என் பேச்சை மீற மாட்டாங்க. அப்படி மீறினா அவங்க என் பிள்ளைங்களா இருக்க மாட்டாங்க.” ரங்கநாயகி அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு எழுந்து செல்ல... அந்தக் குரலில் இருந்த உறுதியை பார்த்து அனைவரும் வாய்யடைத்து போய் விட்டனர்.

மறுநாள் விக்னேஷின் பிறந்தநாள். அதனால் மதிய உணவிற்கு நண்பர்களை அழைத்திருந்தான். அலுவலகத்திற்கு வெளியே நண்பர்கள் அனைவரும் சேர்ந்து நின்று பேசிக்கொண்டிருக்க... சிறிது தாமதமாக வந்த அஷ்வின் விக்னேஷை பார்த்து போகலாமா என்றதும்,

“இருடா அஷ்வின்... இன்னொரு ஆள் வரணும்..” என்றவனை, இன்னும் யாரு என்பது போல் அஷ்வின் பார்க்க... அப்போது “சாரி, லேட் ஆகிடுச்சு...” என்றபடி வினோதா வந்தாள்.
கருநீலத்தில் ஜரிகை வைத்த காட்டன் புடவை அணிந்து, இடைதாண்டி இருந்த கூந்தலை ஒரு க்ளிப்பால் அடக்கி... நெற்றியில் அரக்கு நிறத்தில் பெரிய பொட்டு வைத்து... பார்க்க லக்ஷனமாக இருந்தாள்.

வினோதாவை பார்த்ததும் அஷ்வின் திரும்பி விக்னேஷை முறைக்க... “ப்ரீயா விடு... ப்ரீயா விடு....” என்றபடி விக்னேஷ் அங்கிருந்து சென்று விட.... அஷ்வின் எதுவம் சொல்ல முடியாமல் அவனைப் பின் தொடர்ந்தான்.

ஏற்கனவே முடிவு செய்திருந்தபடி மூன்று கார்களில் ஹோட்டல் சென்றனர். விக்னேஷ் சாமர்த்தியமாக

வினோதாவை அஷ்வினின் காரில் ஏற்றி இருந்தான்.

அஷ்வின் பைக்கில்தான் அலுவலகம் வருவான். விக்னேஷ் கேட்டுக்கொண்டதால் இன்று காரில் வந்திருந்தான். அஷ்வினின் அருகில் காரில் உட்கார்ந்து செல்வதை இன்னும் வினோதாவால் நம்ப முடியவில்லை... அவன் நேர்த்தியாகக் கார் ஓட்டுவதை ரசித்தபடி உட்கார்ந்து இருந்தாள். பின் இருக்கையில் மூன்று பேர் அமர்ந்து பேசிக்கொண்டு வந்தனர்.

டுளிப்ஸ் உணவகத்தில் காரை நிறுத்திவிட்டு இறங்கும் போது... மற்றவர்கள் முன்னே சென்றுவிட... அஷ்வினும் வினோதாவும் சேர்ந்து சென்றனர். அப்போதுதான் அஷ்வின் ஒன்றை கவனித்தான்.

அவன் உயரத்திற்கு வினோதாவை அவன் குனிந்து தான் பார்க்க வேண்டும். ஆனால் இன்று இருவரும் சேர்ந்து நடக்கும் போது... வினோதா ஒன்றும் அவ்வளவு குள்ளமாகத் தெரியவில்லை... ஏன் என்று யோசித்தவன், அவளை முன்னால் செல்லவிட்டு அவளின் காலைப் பார்க்க.....அவள் அரை அடிக்கும் உயரமான ஹீல் வைத்த செருப்பு அனிந்திருந்தாள்.

அவளுக்கு அந்தச் செருப்பைப் போட்டுக்கொண்டு நடப்பது கஷ்ட்டமாக இருக்கிறது என்று நன்றாகவே தெரிந்தது. அஷ்வினுக்குப் பொருத்தமாகப் பெரிய பெண் போல் தெரிய வேண்டும் என்றே சேலையும், உயரமான செருப்பும் அணிந்து வந்திருக்கிறாள் என்று அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

அவளின் சின்னப்பிள்ளை தனமான செயல் சிரிப்பை வரவழைத்தாலும்... தனக்காக அவள் தன்னையே வருத்திக்கொள்வதும் அஷ்வினுக்குப் பிடிக்கவில்லை... வினோதா விக்னேஷின் அருகில் செல்ல... அஷ்வின் தன் மற்ற நண்பர்களிடம் சென்று நின்று கொண்டான்.

விக்னேஷ் தன் அருகில் நின்ற பெண்ணை “வினோ, இவ அர்ச்சனா என்னோட லவ்வர்.” என்று அறிமுகப்படுத்த... வினோதாவிற்கு இது புதுச் செய்தி என்பதால்... அவள் ஆச்சர்யமாக அர்ச்சனாவை பார்க்க...

“உன்னைப் பத்தி விக்கி நிறையச் சொல்லி இருக்கான்.” என்று புன்னகைத்த அர்ச்சனா ஜாடையாக அஷ்வினை காட்ட... வினோதா முகம் சிவந்தாள்.

அர்ச்சனா உயரமாக மிகவும் மாடர்ன்னாக இருந்தாள். அவள் இவர்கள் அலுவலகம் இல்லை என்பதால்... இன்று தான் வினோதா அவளைப் பார்க்கிறாள்.

“விக்னேஷ் அண்ணா, நீங்க என்கிட்டே இவங்களைப் பத்தி சொல்லவே இல்லை...” வினோதா பொய் கோபம் கொள்ள...

“மேடம் என்னை நல்லா சுத்தவிட்டு போன மாசம்தான் என்னோட லவ் அக்செப்ட் பண்ணாங்க.” விக்னேஷ் பேசுவதை அர்ச்சனா புன்னகையுடன் பார்த்துக்கொண்டிருந்தாள். அவர்களுக்குத் தனிமை கொடுத்து வினோதா விலகி சென்று நின்று கொண்டாள்.

இடம் கிடைத்ததும் இவர்கள் உள்ளே சென்று சாப்பிட அமர்ந்தனர். சாப்பிட வசதியாகச் சைவ உணவு அருந்துபவர்கள் ஒருபுறமும், அசைவ உணவு அருந்துபவர்கள் ஒருபுறமும் உட்கார்ந்து கொண்டனர்.

விக்னேஷும் அர்ச்சனாவும் அருகருகே உட்கார்ந்து கொள்ள... மற்றவர்களோடு வினோதாவிற்கு அவ்வளவு பழக்கம் இல்லாததால் அஷ்வினே அவள் அருகில் அமர்ந்துகொண்டான்.

இதுமாதிரி உணவகத்திற்கு வந்து பழக்கம் இல்லாத வினோதாவிற்கு எதைச் சொல்வது என்று தெரியவில்லை... ரொம்ப நேரம் மெனு கார்டை

ஆராய்ந்துவிட்டு “எனக்குப் பிரைட் ரைஸ்..” என்றாள்.

அவளை முறைத்த அஷ்வின் அவளுக்கும் சேர்த்து அவனே ஆர்டர் செய்தான். அதைப் பார்த்துக் கொண்டிருந்த விக்னேஷிற்குச் சந்தோஷமாக இருந்தது. மற்ற நண்பர்கள் விக்னேஷையும் அர்ச்சனாவையும் சேர்த்து வைத்து ஓட்ட... அந்த இடமே கலாட்டாவாக இருந்தது.
அஷ்வின், சாப்பிடும் போது வினோதாவிற்கு மட்டும் கேட்கும் குரலில் “எதுக்கு நீ இவ்வளவு பெரிய ஹீல் வச்ச செருப்புப் போட்டிருக்க? காலமெல்லாம் இந்தச் செருப்போடவே சுத்த போறியா...” அவன் நக்கலாகக் கேட்க...

“அப்ப காலமெல்லாம் நான் தான்னு முடிவு பண்ணிட்டீங்களா ஆஷ்வின்.” வினோதா புன்னகையுடன் அஷ்வினை மடக்க...

“ரொம்பக் கற்பனை பண்ற நீ...” என்றவன் “நீ என்ன நினைச்சிட்டு இருக்க வினோ? அஷ்வின்னா தனி மனுஷன்னா.... இல்லை எனக்கு ஒரு குடும்பம் இருக்கு. உன்னை எனக்கு மட்டும் பிடிச்சா போதுமா... எங்க வீட்ல பிடிக்க வேண்டாமா...”

“அப்ப உங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கு அப்படித்தானே...” வினோ புன்னகைக்க....அஷ்வினுக்கு இவளுக்கு என்ன சொல்லி புரியவைப்பது என்று தெரியவில்லை...

“சரி பிறகு பேசுவோம்...” என்றவன், சாப்பிடுவதில் கவனம் செலுத்த... வினோதாவும் அமைதியாகச் சாப்பிட்டாள்.

அஷ்வினுக்குத் தன்னைப் பிடிக்கிறது. ஆனால் வீட்டில் உள்ளவர்களுக்காக யோசிக்கிறான். இதில் யோசிக்க என்ன இருக்கிறது? வினோதவிற்குச் சுத்தமாகப் புரியவில்லை... வினோதா அப்போது காதலை பற்றி மட்டும் தான் யோசித்தாள்...

அஷ்வின் இந்தக் காதலால் ஏற்படப் போகும் பின்விளைவுகளையும் யோசித்தான்.

திரும்பி காரில் அலுவலகம் வரும் போது... மற்றவர்களும் காரில் இருந்ததால் எதுவும் பேசமுடியவில்லை... அலுவலகத்தில் மற்றவர்கள் இறங்கி சென்றுவிட... அஷ்வினும், வினோதாவும் மட்டும் இருந்தனர்.

“நீ ஒன்னு புரிஞ்சுக்கணும் வினோ. இப்ப லவ் சொல்லிட்டு அப்புறம் வீட்ல பிடிக்கலைன்னு விட்டு விலகுவதோ..... இல்லை வீட்டுக்கு தெரியாம ஓடிப்போறதோ... எனக்குப் பிடிக்காது. நான் அப்படிபட்டவனும் இல்லை.... நடக்கும்னா தான் அதை நினைக்கணும்.”

“நான் ஒத்துகிறேன். எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு. ஆனா எங்க அம்மா ஒத்துக்க மாட்டாங்க. அவங்க எனக்கு ஒரு வருஷமா பொண்ணு பார்த்திட்டு இருக்காங்க. வர்ற பெரிய இடங்களையே எதாவது குறை சொல்லி, இன்னும் பெஸ்ட்டா வேணும்ன்னு தேடிட்டு இருக்காங்க.”
“நான் இதுவரை அவங்க பேச்சை மீறி எதுவும் செஞ்சது இல்லை வினோ... ப்ளீஸ் புரிஞ்சிக்கோ... நான் யாரவது ஒருத்தருக்கு தான் பார்க்க முடியும். யாரையும் ஹர்ட் பண்ண வேண்டாம்ன்னு தான் இதுநாள்வரை உன்கிட்ட இருந்து விலகி நின்னேன். நான் ஹீரோ எல்லாம் இல்லை சாதாரண மனுஷன் தான்.”

அஷ்வின் பேசி முடித்த போது காரில் கனத்த மௌனம் நிலவியது. வினோதா மௌனமாகக் காரில் இருந்து இறங்க... அவளைப் பார்க்கவே அஷ்வினுக்குக் கஷ்ட்டமாக இருந்தது.

“சாரி வினு...” என்றான் உண்மையான வருத்தத்துடன்....

வினோதா திரும்பி அவனைப் பார்த்தவள் “இதுக்கெல்லாம் நான் பீல் பண்ணமாட்டேன். ஆசைப்பட்டது எல்லாம் கிடைச்ச ஹைகிளாஸ்

பொண்ணு இல்ல நானு.... கிடைச்சதை வச்சு சந்தோஷமா வாழற மிடில்கிளாஸ் பொண்ணுதான்.”

“என்னால ஆசைப்பட்ட படிப்பை கூடப் படிக்க முடியலை... இருந்தாலும் நான் ஒன்னும் படிக்காம இருக்கலை... அதே மாதிரி தான் இதுவும். நீ இல்லைன்னா நான் ஒன்னும் செத்துட மாட்டேன். எனக்குன்னு யாரவது வருவாங்க.” வினோதா பேசும் போதே... மழை பெய்ய... மழை நீரில் அவள் கண்ணீர் காணாமல் போனது.

ஒரு மழை நாளில்தான் இருவரும் சந்தித்தனர். இன்றும் அதே மாதிரி ஒரு மழை நாளில் இருவரும் வேறுபட்டு நின்றனர்.

பகுதி – 5

அஸ்வினும் வினோதாவும் மனம் விட்டு பேசி இருப்பார்கள் என்ற எண்ணத்தில் வந்த விக்னேஷ், அஷ்வினின் தீவிரமான முகத்தைப் பார்த்துவிட்டு “என்ன டா? எல்லாம் ஓகே தான...” என்றதற்கு அஷ்வின் பதிலே சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

“டேய் கேட்கிறேன் இல்ல... சொல்லுடா... இப்ப நீ சொல்லைலைனா நான் வினோகிட்ட போய்க் கேட்பேன்.” விக்னேஷ் எழுந்துகொள்ள... அவனைப் பிடித்து உட்கார வைத்த அஷ்வின் “நீயும் ஏன்டா என்னைப் படுத்துற.... வினுவுக்குத் தான் எங்க அம்மாவை பத்தி தெரியாது... உனக்கு நல்லா தெரியும் இல்ல... சின்னதுல இருந்து பார்த்திட்டு தானே இருக்க...”

“அவங்க எங்க கல்யாணம் நடக்க விட்ருவாங்களா... வீணா எல்லார் மனசும் காயப்படும் இதோட விட்டுடு விக்கி...” அஷ்வின் நொந்து போய்ப் பேச...

“அது இல்லடா...” விக்னேஷ் மேலும் எதோ சொல்ல வர... போதும் என்பது போல் அவனைக் கைகாட்டி

தடுத்த அஷ்வின் “நான் வினுகிட்ட பேசிட்டேன் அவ புரிஞ்சிப்பா... இது என்னோட சொந்த விஷயம் இதுல நீ தலையிடாத...” முகத்தில் அடித்தது போல் அவன் பேசிவிட.. விக்னேஷ் அமைதியாக அங்கிருந்து நகர்ந்தான்.

அதன்பிறகு வந்த நாட்களில் வினோதாவை எதேட்ச்சையாக கூட அஷ்வின் சந்திக்கவில்லை... உணவகத்திலோ, அலுவலக வளாகத்திலோ எங்கும் அவன் கண்ணில் அவள் படவே இல்லை.... மேலும் அவனை வற்புறுத்தாமல், அவனின் எண்ணத்திற்கு மதிப்பளித்து அவள் விலகி சென்றது, அவள் மேல் நல்ல எண்ணத்தையே ஏற்படுத்தியது.

இப்போது அஷ்வினுக்கு அவளை இன்னும் பிடித்தது. வினோதா அஷ்வினை பார்க்கவில்லை, பேசவில்லை. ஆனால் அவளைப் பற்றி நினைக்க வைத்தாள்.

மதிய உணவை அவள் இடத்திலேயே அமர்ந்து வினோதா சாப்பிடுவாள். அவளுடன் வேலை பார்க்கும் ஹேமாவும் அங்கேயே அமர்ந்து சாப்பிடும்போது... இருவரும் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.
சிறிது நாட்களில் இருவருக்கும் இடையில் இருந்த இடைவெளி குறைந்து மனம் திறந்து பேச ஆரம்பித்தனர். அப்போது ஒரு நாள் ஹேமா தன் திருமண வாழ்க்கையைப் பற்றிச் சொன்னாள்.

“வீட்ல பார்த்து செஞ்சு வச்ச கல்யாணம் தான். ஆனா கல்யாணமான நாள்ல இருந்து ஒரே சண்டை தான். ஏனோ எனக்கும் அவருக்கும் ஆரம்பத்தில இருந்து ஒத்துப்போகலை...”

“இதுல ரெண்டு பக்க சொந்தகாரங்க வேற பேசிப் பேசி பிரச்சனையைப் பெரிசாக்கி விட்டுட்டாங்க.”

“எங்க வீட்ல நான் ஒரே பொண்ணு. அதனால ரொம்பச் செல்லமா வளர்த்திட்டாங்க. என்னால என் புகுந்த வீட்டுகாரங்களோட ஒத்து போக முடியலை...

எனக்கு அங்க மூச்சு முட்டற மாதிரி இருந்துச்சு. அதனால எங்க அம்மா வீட்டுக்கே வந்திட்டேன்.”

ஹேமா சொன்னதைப் பொறுமையாகக் கேட்ட வினோதா “உங்களுக்கு உங்க கணவரை விட்டு வர கஷ்டமா இல்லையா... அவர் வந்து உங்களைக் கூப்பிடலையா....” என்றதற்கு,

“எப்படிக் கூப்பிடுவார்? நான் கொஞ்சமா அவங்களைப் படுத்தி வச்சேன். நான் வந்ததும் நல்லதா போச்சுன்னு... அவருக்கு வேற பொண்ணைப் பார்த்துக் கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க. இப்ப அவருக்கு ரெண்டு பசங்க இருக்கு.”

“இப்ப நினைச்சு பார்த்தா... இவ்வளவு சின்ன விஷயத்துக்குப் போய்யா நாம அவ்வளவு டென்ஷன் ஆகினோம்ன்னு எனக்கே கேவலமா இருக்கு.”

ஹேமா சொன்னதைக் கேட்ட வினோதாவிற்கு ரொம்பவே வருத்தமாக இருந்தது.

“நீங்களும் மறுகல்யாணம் பண்ணி இருக்கலாமே...” வினோதா தயக்கத்துடன் கேட்க...

“எனக்கு இன்னொரு கல்யாணத்தில எல்லாம் இஷ்ட்டம் இல்லை... என் பொண்ணே எனக்குப் போதும்.”

குழந்தை வேற இருக்கா வினோதா அதிர்ச்சியுடன் பார்க்க...

“நான் நாலு மாசமா இருக்கும் போது தான் சண்டை அதிகமாகி அம்மா வீட்டுக்கு வந்திட்டேன். குழந்தை பிறந்த பிறகு அவர் குழந்தையைப் பார்க்க விரும்பினார்... நான் தான் விடலை... அப்படிப் பார்க்க விட்டிருந்தா கூட எங்களுக்குள்ள சமாதானம் ஆகி இருக்கும்.”

“அப்ப எனக்கு இந்த வாழ்க்கையில இருந்து வெளிய வந்தா போதும், அம்மா அப்பாவோட சேர்ந்து

குழந்தைய வளர்த்திட்டு நிம்மதியா இருந்திடலாம். இப்படித்தான் தோனுச்சு...”

“ஆனா இப்ப குழந்தை வளர வளர... அவங்க அப்பாவை அவ ரொம்பத் தேடுறா... மத்த குழந்தைகள் எல்லாம் அவங்க அப்பாவோட சந்தோஷமா இருக்கும் போது... என் குழந்தை அவள் அப்பாவுக்காக ஏங்கிறது பார்க்க கஷ்ட்டமா இருக்கு...”

“ஒரு குழந்தைக்குத் தாயோட பாசம் மட்டும் இல்லை... தந்தையோட அரவணைப்பும் தேவைன்னு நல்லா புரிஞ்சிகிட்டேன். ஆனா என்ன ரொம்பத் தாமதமா உணர்ந்தேன். என் குழந்தைக்காகவாவது நான் கொஞ்சம் பொறுமையா போய் இருக்கலாம்ன்னு தோணுது. இப்ப என்னோட என் பொண்ணும் இந்த வாழ்க்கைக்குப் பழகிட்டா....” ஹேமா பேசி முடித்த போது... அங்கே கனத்த மௌனமே நிலவியது.

வினோதா அவன் கண்ணிலேயே படவில்லை என்றதும், அவள் அந்த அலுவலகத்தில் தான் இருக்கிறாளா... இல்லை வேறு எங்கும் வேலைக்குச் சென்றுவிட்டாளோ என்று நினைத்த அஷ்வின், ஒருநாள் அவள் அலுவலகத்தில் இருந்து கிளம்பும் நேரத்திற்குச் சென்று பார்க்க... அவள் அலுவலகக் காரில் ஏறிக்கொண்டு இருந்தாள்.

அதைப் பார்த்த அஷ்வினுக்கு அவ்வளவு நிம்மதி. தன் இடத்திற்குச் செல்ல திரும்பியவன், அப்போது தான் தன் பின்னே நின்ற விக்னேஷை கவனித்தான்.

“லவ் பண்றதை சொல்ல தைரியம் இல்லாத கோழை...” விக்னேஷ் அவனைப் பார்த்து கிண்டலாகச் சொல்ல... அஷ்வினுக்குக் கோபம் வந்துவிட்டது.

“லவ் பண்றேன்னு சொல்லி ஊர் சுத்திட்டு அப்புறம் வீட்ல பிடிக்லைன்னு சொல்லி விலகுறதுக்கு... அவங்கவங்க வழிய பார்த்திட்டுப் போறது ஒன்னும்

தப்பு இல்லை...” அவனும் சூடாகப் பதில் கொடுத்தான்.

“கைல பெர்மிஷன் லெட்டர் வச்சிட்டு யாரும் லவ் பண்றது இல்லை... எல்லாம் சேர்வோம்ன்னு ஒரு நம்பிக்கை தான்.” விக்னேஷும் விடவில்லை.....

“என்னால பொய்யா எல்லாம் நம்பிக்கை கொடுக்க முடியாது. ஆசை காட்டி ஏமாத்தவும் முடியாது.” அஷ்வினும் அவன் முடிவில் உறுதியாக இருந்தான்.

மாலை அவன் வீட்டிற்கு வந்த போது வீடு ஏக பரபரப்பாக இருந்தது. ஹாலில் அவன் அம்மா அப்பாவோடு இன்னும் சிலரும் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். அவர்களுக்கு ராஜ உபச்சாரம் நடந்து கொண்டு இருந்தது.

முந்திரி பகோடா... பாதாம் அல்வா வெள்ளி டம்ளரில் பில்ட்டர் காபி என்று அமர்களப்பட்டது. அவர்கள் வீட்டில் நடக்கும் உபசரிப்பில் இருந்தே... வந்திருப்பவர்களின் அந்தஸ்த்தை கண்டுபிடித்து விடலாம்.

அஷ்வின் உள்ளே நுழைந்ததைப் பார்த்த ரங்கநாயகி மகனை பெருமையாக அங்கிருந்தவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

அஷ்வின் அங்கிருந்தவர்களைப் பார்த்து மரியாதைக்காக வணங்க... அவர்கள் முகத்தில் சந்தோஷமும் திருப்தியும் இருந்தது.

“இவர் ஹை கோர்ட் லாயர் சுப்பிரமணி, இவங்க ரெண்டு பேரும் அவரோட தம்பிங்க அவங்களும் வக்கீல்கள் தான். இவர் அவங்களோட அத்திம்பேர் டாக்டரா இருக்கார்.” என்று அங்கிருந்தவர்களை அஷ்வினுக்கு அறிமுகப்படுத்தினார் வரதராஜன்.

அவர்கள் சிறிது நேரம் அஷ்வினோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டு “சரி அப்ப நாங்க கிளம்புறோம். ஞாயிற்றுக்கிழமை நீங்க

குடும்பத்தோட நேரமே வந்திடுங்க.” என்றபடி விடைபெற்று சென்றனர்.

எதுக்கு ஞாயிற்றுக்கிழமை வரணும்? அஷ்வினுக்கு ஒன்றும் புரியவில்லை... அவன் அறைக்குச் சென்றவன் முகம் கழுவி உடைமாற்ற... கதவை தட்டிவிட்டு ரங்கநாயகி உள்ளே நுழைந்தார். கையில் வைத்திருந்த தட்டில் டிபன் காபி இருந்தது.

முக்கியமான விஷயம் இல்லையென்றால்... அவன் அறை வரை அவர் வரமாட்டார் என்பது அவனுக்குத் தெரியும். அஷ்வினிடம் டிபன் தட்டை கொடுத்த ரங்கநாயகி, அவன் அதைச் சாப்பிட்டும் போதே... சுப்ரமணியத்தின் குடும்ப அருமை பெருமைகளை அள்ளிவிட்டார்.
அவர் சென்னையில் புகழ் பெற்ற கிரிமினல் லாயர் என்றும், அவர்கள் குடும்பமே பரம்பரை பணக்காரர்கள் என்றும், அவருக்கு ஒரு பெண்ணும், ஆண்ணும் என்று இருபிள்ளைகள் இருப்பதாகவும். இருவரும் வெளிநாடு சென்று மேற்படிப்புப் படித்தவர்கள் என்றும், இப்போது அவரின் பெண்ணுக்கு மாப்பிள்ளை பார்பதாகவும், அஷ்வினின் ஜாதகம் பொருந்தி இருந்ததால்... சம்பந்தம் பேச நேரிலேயே வந்துவிட்டதாகவும் சொன்னார்.

அவன் அம்மா சொல்லச் சொல்ல... உம் கொட்டியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த அஷ்வினுக்கு, அவர் கடைசியாகச் சொன்னதைக் கேட்டு... வாய்க்குள் இருந்த அல்வா தொண்டைக்குள் இறங்க முடியாமல் அடைத்தது.

அவனது திருமணம் என்றைக்கு இருந்தாலும் நடக்கப் போகும் ஒன்றுதான். ஆனால் இன்று அஷ்வின் அதை ஏற்றுக்கொள்ளும் நிலையில் இல்லை...

“நம்ம குடும்பத்துக்கு ஏத்த சம்பந்தம். பொண்ணு பேரு ஐஸ்வர்யா... கண்ணுக்கு லக்ஷணமா இருக்கா... பேருக்கு ஏத்த மாதிரி சகல

ஐஸ்வர்யங்களும் நிறைஞ்ச இடம். படிப்பு, அந்தஸ்த்து எல்லாத்திலையும் நமக்குச் சமமானவங்க. ஏன் நம்மை விட வசதின்னே சொல்லலாம்.”

“உனக்கு நான் இத்தனை நாள் பெண் தேடினதுக்கு, நம்மள அம்பாள் கைவிடலை.... நமக்கு ஏத்த சம்பந்தத்தைத் தானா தேடி வரவச்சிட்டா.... நீ ரொம்ப அதிர்ஷ்ட்டசாலி அஷ்வின்.” ரங்கநாயகியின் குரலில் அத்தனை பெருமிதம். அஷ்வின் மௌனமாக இருந்தான்.

“ஞாயிற்றுகிழமை பெண் பார்க்க போகணும். நீ ரெண்டு நாளைக்கு வெளிய எங்கும் அலையாம வீட்ல ரெஸ்ட் எடு...” என்றுவிட்டு ரங்கநாயகி அந்த அறையில் இருந்து வெளியே செல்ல... அஷ்வின் அப்படியே படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

இரவு சாப்பிட அழைத்ததும் அஷ்வின் எழுந்து செல்ல... அங்கிருந்த ராதிகாவும், அருணும் அவனைக் கிண்டல் செய்தனர். அஷ்வின் கஷ்ட்டப்பட்டுப் புன்னகை என்ற பெயரில் எதையோ செய்ய....

“டேய் ! இப்பவே உனக்கு எங்களைப் பார்த்துச் சிரிக்கக் கூடக் கஷ்ட்டமா இருக்கா...” ராதிகா சண்டைக்கு வர....

“உன்னைப் பார்த்து சிரிச்சு என்ன ப்ரோஜனம்... இனி அண்ணிக்கு தான் எல்லாம் இல்லையா அண்ணா..” அருண் அஷ்வினுக்குப் பரிந்து பேச... அஷ்வின் முள் மேல் அமர்ந்திருப்பது போல் இருந்தான்.

“அம்மா, அஷ்வினுக்கு ஐஸ்வர்யாவோட போட்டோ காமிச்சியா.... அவனுக்கு அவளைப் பிடிக்கணுமே...” ராதிகா சொல்ல...

“அதெல்லாம் எனக்குப் பிடிச்சா அஷ்வினுக்கும் பிடிக்கும். பொண்ணு பார்க்க போறதே ஒரு சம்ப்ரதயாத்துக்குத் தான். மத்தபடி இந்தப்

பொண்ணு தான் அஷ்வினுகுன்னு நான் முடிவே பண்ணிட்டேன்.”

“அவன் என்கிட்டே பொண்ணு போட்டோ பார்க்கனும்ன்னு கூடச் சொல்லலை... இப்ப நீ சொன்னதும் தான் ஞாபகம் வருது.” என்ற ரங்கநாயகி உள்ளே சென்று போட்டோவை கொண்டு வந்து அஷ்வினிடம் கொடுக்க... அஷ்வின் அதை வாங்கிப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான்.

“அஷ்வின் இன்னைக்கு ராதிகாவை அருண் கொண்டு விடட்டும். நீ போய் ரெஸ்ட் எடு.” என்றதும், விட்டால் போதும் என்று அஷ்வின் அங்கிருந்து செல்ல... அவன் போட்டோவை பார்க்கத்தான் வேகமாகச் செல்கிறான் என்று நினைத்து ராதிகாவும், அருணும் சிரித்தனர்.

மறுநாள் காலையில் எழுந்து கீழே செல்லும் முன் அஷ்வின் ஐஸ்வர்யாவின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்துக்கொண்டான். அவன் அம்மா அவளைப்பற்றி எதாவது கேட்டால் சொல்லத் தெரிய வேண்டுமே...

ஐஸ்வர்யா மிகவும் அழகாக இருந்தாள். ஆனால் அஷ்வினுகுத்தான் மனதில் அவள் முகம் பதியவில்லை... கீழே வந்தவன் தன் அம்மாவிடம் சென்று போட்டோவை கொடுக்க...

இதை எதுக்கு என்கிட்டே கொடுக்கிறான் என்பது போல் பார்த்த ரங்கநாயகி, “அழகா இருக்கா இல்ல...” என்றதற்கு “ம்ம்..” என்று முனங்கி விட்டு அஷ்வின் அங்கிருந்து சென்றான்.

இப்போதும் பெண் அழகாக இருக்கிறாளா என்றுதான் ரங்கநாயகி கேட்டார். உனக்குப் பெண்ணைப் பிடித்திருகிறதா என்று கேட்கவில்லை... தன் மேல் இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கும் அம்மாவிடம் என்ன சொல்வது என்ற குழப்பத்தில் அஷ்வின் இருந்தான்.

யாரவது அவனுக்குப் பார்த்திருக்கப் பொண்ணு போட்டோவை கேட்காம கொண்டு வந்து கொடுப்பானா... என்ற எண்ணத்தில் அஷ்வினை பார்த்த ரங்கநாயகி, அவன் எதோ சிந்தனையில் இருப்பதைப் பார்த்து யோசித்தார்.

திருமணத்திற்குப் பெண் பார்க்க போகிறோம் என்ற மகிழ்ச்சி, அவன் முகத்தில் துளி கூட இல்லை என்பதைக் கவனித்தார். ஒரு தாய்க்கே உண்டான கலக்கம் அவரைச் சூழ்ந்தது. கடவுளே ! இந்தக் கல்யாணம் நல்லபடியா நடக்கணும் மனதில் வேண்டியவர். வெளியே ஒன்றும் காட்டிக்கொள்ளவில்லை...

ஞாயிறு மாலை நல்ல நேரத்தில் பெண்பார்க்க சென்றனர். பெண் வீடே மாளிகை போல் தான் இருந்தது. இவர்களை விழுந்து விழுந்து உபசரித்தனர்.

ஐஸ்வர்யா சுடிதாரில் அழகாக, நாகரிகமாக இருந்தாள். பெண் பார்க்க வருகிறார்கள் என்ற பதட்டம் அவள் முகத்தில் சிறிதும் இல்லை... இவர்கள் வந்த போது அவளும் ஹாலில்தான் இருந்தாள். அதனால் அது ஒரு பெண் பார்க்கும் நிகழ்ச்சி போலவே இல்லை... வீட்டிற்கு விருந்தினர் வந்தது போல்தான் இருந்தது.

முதல் தடவை பெண் பார்க்க செல்வதால் அஷ்வின் தான் பதட்டத்தில் இருந்தான். ஆனால் அங்கிருந்த சூழ்நிலை அவனை இயல்பாக்கியது. ஐஸ்வர்யாவின் தம்பியுடன் பேசிக்கொண்டு இருந்தான்.

ரங்கநாயகி தன் வருங்கால மருமகளுடன் பேசிக்கொண்டு இருந்தார். அவர் கேட்ட கேள்விகளுக்கு ஐஸ்வர்யா பொறுமையாகப் பதில் சொன்னது அவருக்கு மிகவும் பிடித்தது.

பெரியவர்கள் அஷ்வினையும் ஐஸ்வர்யாவையும் தனியாகப் பேசிக்கொள்ள அனுமதிக்க... அஷ்வின் என்ன பேசுவது? என்று பதட்டத்துடன் செல்ல...

அஷ்வினுக்கு வாய்ப்புக் கொடுக்காமல் ஐஸ்வர்யாவே நிறையப் பேசினாள்.

படிப்பு, வேலை பிடித்தது பிடிக்காதது என்று நிறையப் பேசினார்கள். ஐஸ்வர்யா தானும் நிறையப் பேசினாள்... அஷ்வினையும் நிறையப் பேச வைத்தாள். அஷ்வினுகே தான் இவ்வளவு பேசுவோமா என்று ஆச்சர்யமாக இருந்தது.

ஐஸ்வர்யாவுடன் பேசிவிட்டு வந்த பிறகு அஷ்வினே சற்று தெளிந்து இருந்தான். பார்க்க நல்லா இருக்கா... நல்லா படிச்சிருக்கா.... நிறைய விஷயம் தெரிஞ்சு வச்சிருக்கா... அம்மாவுக்கும் ரொம்பப் பிடிச்சிருக்கு... இவதான் நமக்குப் போலிருக்கு என்ற முடிவுக்கு வந்திருந்தான்.

ஐஸ்வர்யாவின் வீட்டில் நிச்சயத்துக்கு அவசரப்படுத்தியதால்.... அடுத்த இரண்டாவது ஞாயிறு நிச்சயம் என்று முடிவு செய்தனர். ரங்கநாயகியும் அஷ்வின் மனம் மாறிவிடக் கூடாது என்று அதற்கு ஒத்துக்கொண்டார்.

இப்போது மண்டபம் கிடைக்காது என்பதால் ஸ்டார் ஹோட்டலில் நிச்சயம் வைப்பது என்று முடிவு செய்தனர். எல்லாம் பேசி முடித்து வீடு திரும்ப இரவானது.
மறுநாள் காலையே ஐஸ்வர்யா அஷ்வினை செல்லில் அழைத்துப் பேசினாள். அவள் உரிமையுடன் பேசும் போது... அஷ்வினால் தவிர்க்க முடியவில்லை...

அலுவலகத்திற்கு வந்து விக்னேஷை பார்க்கும் வரை இயல்பாக இருந்த அஷ்வின், அதன்பிறகு சற்று பதட்டத்துடன் இருந்தான். அவனது திருமணத்தைப் பற்றிச் சொல்லக் கூடத் தயக்கமாக இருந்தது.

மதிய உணவின் போது அவன் நண்பர்கள் அனைவரும் இருக்கும் போது... எல்லோருக்கும் பொதுவாகச் சொல்வது போல்... தனது திருமண விஷயத்தை அஷ்வின் சொல்ல... எல்லோரும்

சந்தோஷ ஆராவாரம் செய்ய... விக்னேஷ் மட்டும் அமைதியாக இருந்தான்.

அலுவலகத்திற்குத் திரும்பும் வழியில் “என்ன டா கோபமா? பேசவே மாட்டேங்கிற...” அஷ்வின் கேட்க...

“எனக்கு என்ன டா? நான் நல்லாத்தான் இருக்கேன். உன்னோட லைப், நீ தான் முடிவு பண்ணனும். நீ சந்தோஷமா இருந்தா சரிதான்.” விக்னேஷ் பட்டும் படாமல் பதில் சொன்னான்.

அதன் பிறகு வந்த நாட்களில் ஐஸ்வர்யா அலுவலக நேரத்தில் கூட அஷ்வினை அழைத்துப் பேசுவாள். வார இறுதியில் நல்ல நாள் இல்லை என்று வெள்ளிக்கிழமை நிச்சயத்திற்குப் புடவை வாங்க செல்ல... அஷ்வின் அலுவலகத்தில் வேலை இருக்கிறது என்று வர மறுக்க... ஐஸ்வர்யா அவனுக்கு மீண்டும் மீண்டும் அழைத்துக் கொண்டே இருந்ததால்... அஷ்வின் நேராகக் கடைக்கு வருவதாகச் சொல்லியிருந்தான்.

மதியம் பன்னிரெண்டு மணி போல் அஸ்வின் கிளம்ப... விக்னேஷ் அவனைத் திரும்பிப் பார்க்க... “நிச்சயத்துக்கு நகையும் புடவையும் இன்னைக்கு வாங்கிறாங்க. என்னையும் வர சொன்னாங்க அதுதான் கிளம்புறேன். நீயும் வரியா...” அஷ்வின் அழைத்ததும், போய்த் தான் பார்ப்போமே என்ற எண்ணத்தில் விக்னேஷும் அவனுடன் சென்றான்.

அஷ்வின், ஐஸ்வர்யா இருவரது குடும்பமும் நகைகள் வேறு கடையில் வாங்கி முடித்து, புரசைவாக்கத்தில் இருந்த பெரிய கடையில் டிஸைனர் பட்டு புடவை நன்றாக இருக்கும் என்று அங்கே வர... அஷ்வினும் விக்னேஷும் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

அஷ்வின் விக்னேஷை ஐஸ்வர்யாவுக்கு அறிமுகப்படுத்த.... அவள் அவனிடம் நன்றாகப் பேசினாள். எடுத்து பார்க்கும் ஒவ்வொரு

புடவைக்கும் அஷ்வினின் விருப்பத்தைக் கேட்டுக்கொண்டாள்.

இது நல்லா இருக்கா... அது நல்லா இருக்கா என்று அவனைப்போட்டு பாடாகப் படுத்தி எடுத்து ஒருவழியாக ஒரு புடவையைத் தேர்ந்தெடுத்தாள்.

விக்னேஷ் அவளையே கவனித்துக்கொண்டு இருந்தான். நல்லா தான் இருக்கா... ஆனா என்னவோ இடிக்குது. விக்னேஷுக்கு அது என்னவென்று அப்போது புரியவில்லை...

பகுதி – 6

விடியற்காலை நேரம் அசந்த உறக்கமும்மில்லை... அதேசமயம் முழுவதுமாக விழிக்கவுமில்லை.... கனவு உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த அஷ்வினின் நாசியில் ஷாம்பூவின் வாசம் இதமாய் வீச...

கண்களைத் திறக்காமலே கைகளை மட்டும் நீட்டி... அருகில் இருந்தவளை இழுத்துக் கட்டிலில் போட்டவன், அவள் கழுத்து வளைவில் முகம் புதைக்க... இப்போது தான் குளித்திருந்ததால்.... அவள் மேனியின் வாசம் அவனை மேலும் கிறங்க செய்ய... அவள் தடுப்பதைப் பொருட்படுத்தாமல் முன்னேறினான்.

சிறிது நேரம் சென்று விளகியவனின் முகத்தில் நினைத்ததைச் சாதித்த திருப்தியில் புன்னகை பொங்க... தன் மனம் நிறைந்தவளின் முகம் பார்க்க கண் திறந்தவன் அதிர்ந்தான்.

ஏனென்றால் அவனின் படுக்கையில் இருந்தது ஐஸ்வர்யா இல்லை.... வினோதா... ஒரு நொடியில் நிலைமை சட்டென்று மாற... உடல் குப்பென்று வியர்க்க... பதறி எழுந்த அஷ்வின் அப்போது தான் அது கனவென்று உணர்ந்தான்.

நாளைக்கு நிச்சயத்தை வச்சிட்டு வர்ற கனவா இது? ரொம்ப நல்லவன் டா நீ... என்று தன்னையே திட்டிக்கொண்டவன், எதை எதையோ நினைத்துக்

குழப்பிக்கொள்ள.... தலைவலி வந்தது தான் மிச்சம். காபி குடித்தால் தேவலை என்று நினைத்து கீழே செல்ல... அந்த அதிகாலை நேரத்திலும் எழுந்து குளித்துப் பூஜையை முடித்துவிட்டுக் கம்பீரமாகச் சோபாவில் அமர்ந்திருந்தார் ரங்கநாயகி.

அஷ்வினை பார்த்ததும் புன்னகைத்தவர், சமையல் மாமியை அழைத்துக் காபி கொண்டு வரச் செய்து அதை அஷ்வினிடம் கொடுத்தார்.

“ஏன் இவ்வளவு சீக்கிரம் எழுந்த? இன்னும் கொஞ்ச நேரம் தூங்கி இருக்கலாமே....கொஞ்ச நேரத்தில ஊர்ல இருந்து சொந்தகாரங்க எல்லாம் வந்திடுவாங்க. நீ அவங்க முன்னாடி எல்லாம் ரொம்ப வராதே... கண்ணு படும். ஏற்கனவே இவ்வளவு பெரிய சம்பந்தமான்னு வாயப் பிளக்குறாங்க. அம்பாள் தான் இந்தக் கல்யாணத்தை நல்லபடியா நடத்தி கொடுக்கனும்.” ரங்கநாயகி புலம்பலும் வேண்டுதலுமாக இருக்க... அஷ்வின் வேறு எதோ சிந்தனையில் இருந்தான்.

அவனைப்பார்த்த ரங்கநாயகி, கல்யாணம் ஆகப்போற பையன் மாதிரியா இருக்கான். இவனுக்கு இன்னும் கல்யாணக்களையே வரலையே... ஒருவேளை நிச்சயம் முடிஞ்சா வருமோ... இவன் தான் இப்படி இருக்கான். ஐஸ்வர்யா எவ்வளவு ஆர்வமா இருக்கா... நல்ல பொண்ணு. மனதில் நினைத்தபடி அவர் வேலையைப் பார்க்க சென்றார்.

உள்ளூரில் இருக்கும் சொந்த பந்தம் நேராக மண்டபத்திற்குத் தான் வருவார்கள். ஆனால் வெளியூரில் இருக்கும் சிலர் மட்டும் முதல் நாளே வீட்டிற்கு வந்து விடுவதாக ஏற்பாடு.

பரபரப்பாக இருவர் வீட்டிலும் வேலைகள் நடந்துகொண்டு இருக்க... தினமும் காலையிலேயே அழைத்து விடும் ஐஸ்வர்யா... இன்று அஷ்வினை அழைக்கவேயில்லை.... மேடம் ரொம்பப் பிஸி

போல என்று நினைத்துக்கொண்டான். அவள் நேற்றே பார்லர் போவதாகச் சொல்லி இருந்தாள்.

ஊரில் இருந்து வந்த உறவினர்கள் நன்றாக மதிய விருந்து சாப்பாட்டை மொக்கிவிட்டு உறங்க... மறுநாள் நிச்சயத்திற்குக் கொண்டு செல்லத் தேவையான பொருட்களை ரங்கநாயகியும், ராதிகாவும் சரி பார்த்துக்கொண்டிருந்தனர்.

அப்போது வீட்டின் அழைப்பு மணி ஒலிக்க.... எதிரில் ரங்கநாயகியின் தம்பி ராகவன் வீடு இருப்பதால்... கதவு எப்போதும் திறந்து தான் இருக்கும். அதனால் யாரோ வெளி ஆட்கள் என்று நினைத்து ராதிகா யார் என்று பார்க்க வந்தவள்? வெளியில் ஐஸ்வர்யாவின் சித்தப்பாக்களைப் பார்த்ததும்,

“இவங்க எதுக்கு இப்ப வந்திருக்காங்க?” என்று குழம்பியவள் சம்ப்ரதாயமாக “வாங்க...” என்றாள்.

உள்ளே வந்தவர்களின் முகம் இருண்டு போய் இருந்தது. ராதிகா உள்ளே சென்று தன் அம்மாவிடம் விஷயத்தைச் சொல்ல... எதாவது கேட்க வந்திருப்பாங்க என்று நினைத்த ரங்கநாயகி நிதானமாகவே இருந்தார்.

ஹாலுக்கு வந்து அவர்களை வரவேற்றவர், சமையல் மாமியிடம் காபி கொண்டு வரச் சொல்ல....

அதை மறுத்த ஐஸ்வர்யாவின் சித்தப்பாக்கள் “வரதராஜனை கொஞ்சம் கூப்பிடுங்களேன், அவரோட பேசணும்.” என்றதும், ரங்கநாயகிக்கே உள்ளுர கலக்கம் பிறந்தது. அதைக் காட்டிக்கொள்ளாமல் அருணை பார்த்து “உங்க அப்பாவை அழைச்சிட்டு வா...” என்றார்.

அருண் சென்றதும், ராதிகா மாடிக்கு சென்றவள், அஷ்வினிடம் விஷயத்தைச் சொல்லி அவனையும் அழைத்துக்கொண்டு வந்தாள். இவர்கள் வந்ததைப்

பார்த்து ராகவனும் அவர் மனைவியும் வந்திருந்தனர்.

உறக்கத்தில் இருந்து விழித்த உறவினர்களும் சம்பந்தி வீட்டினர் வந்திருக்கிறார்கள் என்றதும், ஹாலுக்கு வந்தனர்.

எல்லோரையும் சுற்றி வைத்துக்கொண்டு பேசவே சங்கடப்பட்ட ஐஸ்வர்யாவின் உறவினர்கள், சொல்லித் தான் ஆக வேண்டும் வேறுவழி இல்லை என்பதால்... தயக்கத்துடன் ஆரம்பித்தனர்.

“ஐஸ்வர்யாவை காலையில எழுந்ததுல இருந்தே காணோம். நாங்களும் எல்லா இடத்திலையும் தேடிட்டோம். ஆனா கிடைக்கலை...இதுக்கு மேலையும் உங்ககிட்ட சொல்லைன்னா நல்லா இருக்காதுன்னு தான் நேர்லையே வந்தோம்.” அவர்கள் சொல்லி முடித்த போது... அங்கே குண்டூசி விழுந்தால் கூட... தெளிவாகக் கேட்கும் அளவு எல்லோரும் வாய் அடைத்து போய் இருந்தனர்.

ராகவனின் மனைவி சுபத்ரா தான் முதலில் சுதாரித்தார். “போலீஸ்ல கம்ப்ளைன்ட் குடுத்தீங்களா.... யாராவது பணத்துக்காகக் கடத்தி இருப்பாங்களோ....” ஐஸ்வர்யா ஆர்வமாகத் திருமண வேளைகளில் பங்கு எடுத்ததால்... அவர் வேறு மாதிரி யோசிக்கவில்லை....

சுபத்ரா சொன்னதைக் கேட்டதும், வந்திருந்தவர்களின் முகம் இன்னும் இருள... அவர்கள் தலை குனிந்தனர். அதைக் கவனித்த உறவுப் பெண்மணி “நல்லா கேட்கிற சுபத்ரா.... கடத்திட்டு போக அவ சின்னக் குழந்தையா என்ன?” என்றவர், ஐஸ்வர்யாவின் உறவினரை பார்த்து “ஏன் முழிக்கிறேல் வாயத் திறந்து சொல்லுங்கோ.... என்ன நடந்தது?” என்று அதட்ட....

“ஐஸ்வர்யா வெளிநாட்டில் படிக்கும் போதே... அந்த ஊர் பையனை லவ் பண்ணா போலிருக்கு....அதுதான் இப்ப அந்தப் பையனை

கல்யாணம் பண்ணிக்க அவங்க ஊருக்கே போய்ட்டா...” என்றனர்.

“இது உங்களுக்கு எப்படித் தெரியும்?” வரதராஜன் கேட்க...
“அவ கொஞ்ச நேரத்திற்கு முன்னாடி மலேசியாவில் இருந்து போன் பண்ணா... அது தான் அண்ணா உங்க வீட்ல போய் நேர்லையே சொல்லிட்டு வரச் சொன்னார்.” என்றார்.

அதுவரை மௌனமாக இருந்த ரங்கநாயகி அப்போது தான் வாயைத் திறந்தார். “அவ லவ் பண்ண விஷயம் உங்களுக்கு முன்னமே தெரியாது. சும்மா நடிக்காதீங்க..... தெரிஞ்சதுனால தான நிச்சயத்தைச் சீக்கிரம் வைக்க அவசரப்பட்டீங்க. உண்மையா இல்லையா...” அவரின் அழுத்தமான குரலில் ஐஸ்வர்யாவின் உறவினர்களுக்கு உள்ளுர குளிர் எடுக்க....

“லண்டன்ல இருந்து வந்ததும் வீட்ல சொன்னா... ஆனா இங்க யாருக்கும் அவ வெளிநாட்டுப் பையனை கல்யாணம் பண்றதுல விருப்பம் இல்லை... அதனால அவளுக்கு அவசரமா இங்க மாப்பிள்ளை பார்த்தோம். அவளும் சரின்னு தான் சொன்னா... ஆனா இப்படிப் பண்ணுவான்னு எதிர்பார்க்கலை....” என்றனர்.

“என்ன எதிர்பார்க்கலை? உங்க குடும்பப் பிரச்சனையில தேவையில்லாம எங்களை இழுத்து... விருப்பம் இல்லாத பொண்ணை எங்க தலையில கட்ட பார்த்திருக்கீங்க. இப்ப நிச்சயம் நின்னு எங்களுக்குத் தான் அசிங்கம். இதுக்கு என்ன பதில்?” ரங்கநாயகி ஆவேசமாகக் கேட்க... அவரோடு மற்றவர்களும் சேர்ந்து கொள்ள... ஐஸ்வர்யாவின் உறவினர்கள் திண்டாடினர்.

“அவ பண்ணிட்டுப் போனது எங்க குடும்பத்துக்கும் அவமானம் தான். நீங்க அதையும் நியாபகம் வச்சிக்கோங்க.” ஐஸ்வர்யாவின் சித்தப்பா சொல்ல....

“என்ன தேவைக்கு நாங்க அதை நியாபகம் வச்சிக்கணும்? உங்க வீட்டு பொண்ணு உங்களை அவமானப்படுத்தினா சரி... ஆனா எங்க குடும்பத்தை அசிங்கபடுத்த அவளுக்கு என்ன உரிமை இருக்கு?”

“இந்த உலகத்தில அவ ஒருத்தி தான் பொண்ணா.... என் பையனுக்கு எவ்வளவு எடத்தில பொண்ணு கொடுக்கத் தயாரா இருந்தாங்க. உங்க வீட்ல சம்பந்தம் பேசின பாவத்துக்கு... எங்க குடும்பத்தைப் பார்த்து எல்லோரும் கேலியா சிரிக்கும் படி பண்ணிட்டு போயிட்டாளே... போறவள் முன்னாடியே போறது தான....”

“எங்க மனசை எல்லாம் கஷ்ட்டபடுத்தின அவ நல்லாவே இருக்க மாட்டா...” ரங்கநாயகி ஆவேசத்தில் ஐஸ்வர்யாவுக்குச் சாபம் விட....

“உங்க பொண்ணு அவ விரும்பினவனைக் கல்யாணம் பண்ணிகிறது தப்பு இல்லை. ஆனா வீணா எங்க குடும்பத்தை நடுவுல இழுத்தது தான் தப்பு.” வரதராஜன் அவர்களைப் பார்த்து சொல்ல... அவர் பேசுவது நியாயம் என்பதால்... ஐஸ்வர்யாவின் சித்தப்பா “கண்டிப்பா தப்பு தான் சார். எங்களை மன்னிச்சிடுங்க. அதனால தான் நீங்க திட்டினாலும் பரவாயில்லைன்னு நேர்ல வந்தோம். எங்க அண்ணா இனி எப்படி வெளியில தலைகாட்டுவார்.” அவர் நொந்து போய்ப் பேச...

“சரி விடுங்கோ எது நடக்கணுமோ அது தான் நடக்கும். நீங்க கிளம்புங்க.” வரதராஜன் சொன்னதும், தலை குனிந்தபடி அவர்கள் வெளியே செல்ல... அதுவரை யாரும் அஷ்வின் என்ன ஆனான் என்றே கவனிக்கவில்லை... அவர்கள் சென்றதும் தான் எல்லோருக்கும் அவனின் நினைவே வந்தது.

அவன் ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தான். அவன் முகத்தில் இருந்து... அவன் எப்படி உணர்கிறான் என்று எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை.... அவனிடம் வேகமாக வந்த

ரங்கநாயகி “அஷ்வின், மன்னிச்சிடு டா... உனக்கு நல்லது பண்றதா நினைச்சு... உனக்குத் தப்பான பொண்ணைப் பார்த்திட்டேன்.” என்றவர்,

“அவ போனா போறா விடு... உனக்கு அம்மா இவளை விட எல்லாவிதத்திலும் உசத்தியா ஒரு பெண்ணைப் பார்க்கிறேன். நீ எதுவும் மனசில நினைச்சு உன்னையே வருத்திக்காத...சரியா கண்ணா...” அவர் மகனை விதவிதமாகச் சமாதானம் செய்ய... அஷ்வின் தன் தாயின் கையைப் பிடித்து அழுத்தி விட்டவன், அவர் சொன்னதிற்கு எல்லாம் சரி என்றான்.

அடுத்துச் செய்யவேண்டியது பற்றிக் குடும்பத்தினர் பேச... முதலில் நிச்சயத்திற்கு அழைத்தவர்களிடம், நாளை நிச்சம் இல்லை என்று தகவல் சொல்ல வேண்டுமே... அதனால் அதைச் செய்ய ஆரம்பித்தனர்.

ராதிகாவும், அருணும் ஒவ்வொரு உறவினர்களாக அழைத்துப் பேச... ரங்கநாயகிக்கு தன் புகுந்த வீட்டில் இதனால் தன் கவுரவம் குறையுமே என்ற கவலை... அதே கவலை ராதிகாவுக்கும். அவள் தன் தம்பியின் திருமணத்தைப் பற்றி அவ்வளவு பெருமை பேசி இருந்தாள். இப்போது எதுவும் இல்லை என்று ஆனதும், புகுந்த வீட்டில் தன்னைக் கேலி பேசி சிரிப்பார்களோ என்று அவளாகவே கற்பனை செய்து கொண்டாள்.

அஷ்வின் மெதுவாக நழுவி அவன் அறைக்கு வந்துவிட்டான். அவன் எப்படி உணர்கிறான் என்று அவனுக்கே புரியவில்லை... அவன் வருத்தமாகவும் இல்லை... சந்தோஷமாகவும் இல்லை. ஆனால் ஐஸ்வர்யா செய்தது அவனை நிச்சயமாகப் பாதிக்கத்தான் செய்தது.

தன்னால் தன் குடும்பத்திற்கு இந்த நிலை வரக்கூடாது என்றுதான் அவன் விருப்பத்தைக் கூடப் பெரிதாகக் கருதவில்லை. ஆனால் இப்போது அவன் எது நடக்கக் கூடாது என்று நினைத்தானோ... அது

தான் நடந்தது.

தன் அம்மாவை மனம் நோக செய்த ஐஸ்வர்யாவின் மீது அவனுக்கு நிறையக் கோபம் இருந்தது. எதுக்காக இப்படி ஒரு நாடகம்? குழம்பிப்போய் இருந்தவன், தன் நண்பர்களிடம் நிச்சயம் நின்றதை பற்றிச் சொல்லவேண்டுமே... அதனால் விக்னேஷை அழைத்தான்.

இருவரும் பள்ளி காலத்தில் இருந்தே நண்பர்கள். அதோடு ஒரே அலுவலகத்தில் வேலை பார்ப்பதால்... இருவருக்கும் பொதுவான நண்பர்கள் தான்.

“டேய் விக்கி, நாளைக்கு நிச்சயம் இல்லை...” அஷ்வின் சாதாரணமாகச் சொல்ல.... விக்னேஷுக்கு புரியவில்லை... “நாளைக்கு இல்லையா.... ஏன் வேற நாளைக்கு மாத்திட்டாங்களா...” அவன் புரியாமல் கேட்க....

“எப்பவுமே இல்லை...” என்ற அஷ்வின் விவரம் சொல்ல....

“ஒரு நிமிஷம் இரு...” என்ற விக்னேஷ் செல்லை கீழே வைத்துவிட்டு... ஒரு குத்தாட்டம் போட்டான். அவனுக்கு அவ்வளவு சந்தோஷம். பிறகு செல்லை எடுத்து “அது தான பார்த்தேன். ஒருத்தரை பார்த்தாவே... அவங்களைப் பத்தி சொல்லிடுவேன். எனக்கு அவளைப் பார்த்த அன்னைக்கே தோனுச்சு டா... எதோ சரி இல்லைன்னு... இப்ப தான் புரியுது. அந்தப் பொண்ணு ஓவர் ஆக்டிங் பண்ணுச்சு டா.... இதுக்குத் தானா...” என்றவன்,

“சாரி டா... ரொம்பக் கஷ்ட்டமா இருக்கு...” என்று வரவழைத்த சோகத்தோடு சொல்ல...

“நீ அவளுக்கு மேல நடிக்காத டா... நீ எப்படிப் பீல் பண்ணுவேன்னு எனக்குத் தெரியும். நம்ம ப்ரண்ட்ஸ் கிட்ட சொல்லிடு...” என்ற அஷ்வின் போன்னை வைக்க.... கண்டுபிடிச்சிட்டானே என்று நினைத்த விக்னேஷ் முகத்தில் அவ்வளவு சிரிப்பு....

எங்கையோ சுற்றி விட்டு இரவு வீட்டிற்கு வந்த ராதிகாவின் கணவன் மகேஷ், நாளை நிச்சயம் என்பதால்... ராதிகா அவள் அம்மா வீட்டில் இருப்பாள் என்று தான் எதிர்பார்த்தான். ஆனால் அவள் தங்கள் வீட்டில் இருந்தது ஆச்சர்யத்தைக் கொடுக்க...

“என்ன இங்க இருக்க?” என்று கேட்டதும், ராதிகா கண்களில் இருந்து பொல பொலவென்று கண்ணீர் கொட்ட... அவள் நடந்ததை அழுகையுடன் சொல்லி முடிக்க.... கேலியாகப் பேசுவான் என்று எதிர்பார்த்த மகேஷ் மிக அனுசரணையுடன் நடந்து கொண்டான்.

“ச்ச... அந்தப் பொண்ணா இப்படி. அஷ்வின் ரொம்ப நல்ல பையன் ஆச்சே... அவனுக்கு இப்படி நடந்திருக்க வேண்டாம். நீ கவலைப்படாத ராது.... அஷ்வினுக்கு இதை விட நல்ல பொண்ணு வருவா....” மகேஷ் ஆறுதலாகப் பேசினான்.

ராதிகாவுக்கு அவள் கணவன் பேசியதை கேட்டதும் அவ்வளவு சந்தோஷம்.

“நீ சாப்பிட்டியா ராது... வா உனக்கு நான் தோசை வார்க்கிறேன்.” என்றவன், சமையல் அறைக்குச் செல்ல... ராதிகாவும் அவனுடன் சென்றாள்.

அஷ்வின் வீட்டில் எல்லோரும் ரங்கநாயகிக்காக இயல்பாக இருப்பது போல் காட்டிக்கொண்டனர். அவர்தான் நாளெல்லாம் புலம்பி தள்ளிவிட்டார். வந்திருந்த உறவினர்கள் வேறு எதாவது பேச ... அவர் BP ஏறியது.

அதனால் செலவு ஆனாலும் பரவாயில்லை என்று, வந்திருந்த உறவினர்களுக்குத் தக்களில் டிக்கெட் எடுத்து.. அவரவர் ஊருக்கு ரயிலில் ஏற்றிவிட்டு வர அருணும், அவன் மாமன் மகன் ரகுவும் சென்றிருந்தனர்.

ராகவனின் மனைவி சுபத்ரா தான் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டார்.

எல்லோரும் சாப்பிட்டு அவரவர் அறைக்குச் செல்ல... அஷ்வின் அவன் அறையில் கட்டிலில் படுத்துக்கொண்டு ஐஸ்வர்யாவை சந்தித்ததில் இருந்து நடந்ததை நினைத்துப் பார்த்தான்.

அவளுக்கு இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று இப்போது கூட அவனால் நம்ப முடியவில்லை... அவள் நடந்து கொண்டது, பேசியது எல்லாவற்றையும் நினைத்து பார்த்தவனுக்குக் குழப்பமே மிஞ்சியது. குழப்பத்துடனே உறங்கியும் விட்டான்.

மறுநாள் காலை அஷ்வின் உறங்கிக் கொண்டிருந்த போது... அவன் செல் அழைத்தது. கடந்த இருவாரமாக ஐஸ்வர்யா தான் அவனை இந்த நேரத்தில் அழைப்பாள். அதே நினைவில் செல்லை எடுத்த பின்புதான் நேற்று நடந்தது எல்லாம் அவன் நினைவுக்கு வந்தது.

அவன் செல்லை எடுத்து பார்க்க... அது வெளிநாட்டு எண். அது கண்டிப்பாக ஐஸ்வர்யா என்று தெரியும்.... எடுப்போமா வேண்டாமா என்று யோசித்தவன், பிறகு பேசிவிடுவது நல்லது என்று எடுக்க....

“அஷ்வின், நான் ஐஸ்வர்யா.... நீங்க கோபமா இருப்பீங்கன்னு தெரியும். சாரி அஷ்வின், ரியலி வெரி சாரி...” அவள் பேசிக்கொண்டே இருக்க... இந்தப் பக்கம் அஷ்வின் மௌனமாக இருந்தான்.

அஷ்வின் எதுவும் பேசவில்லை என்றதும், ஒருவேளை வைத்துவிட்டானோ என்று நினைத்த ஐஸ்வர்யா தன் கைப்பேசியைப் பார்த்தவள் “அஷ்வின் இருக்கீங்க தான.... பேசுங்க அஷ்வின் என் மேல கோபமா....” என்றாள்.

“நான் யாரு உன் மேல கோபப்பட... ஆனா எனக்கு ஒன்னு தான் புரியலை... என்கிட்டே ஏன் ரொம்பப் பிடிச்ச மாதிரி நடிச்ச...” அஷ்வின் மனதில் இருந்ததைக் கேட்டு விட....

“எனக்கு வேற வழி இல்லை அஷ்வின். நான் இந்தக் கல்யாணம் பிடிக்காத மாதிரி நடந்திருந்தேன்னா... என்னைத் தனியாவே எங்கையும் விட்டிருக்க மாட்டாங்க. அதனால தான் உங்க கிட்ட கூட எதுவும் சொல்லலை....” என்றாள் வருத்தமாக....

“சரி எங்களை விடு... ரெண்டு நாள்ல எங்க நிலைமை சரி ஆகிடும். ஆனா நீ செஞ்ச காரியத்தால உன் குடும்பம் தலை குனிஞ்சு நின்னாங்களே... அதோட இனி அவங்க கேட்கிற ஒவ்வொருத்தருக்கும் பதில் சொல்லணுமே... நீ அதைப் பத்தி கொஞ்சம் கூடக் கவலைப்படலை இல்லையா...” அஷ்வின் கேட்க....
“நான் ஏன் கவலைப்படணும் அஷ்வின். என்னைப் பத்தி அவங்க நினைச்சாங்களா... என்னோட விருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காதவங்களைப் பத்தி நான் மட்டும் ஏன் கவலைப்படணும்? எனக்கு அவங்களை நினைச்சு எந்த வருத்தமும் இல்லை... என்னோட விஷயத்தில உங்களைத் தேவையில்லாம சங்கடபடுதிட்டோமேன்னு தான் எனக்குக் கவலை.... உங்க அம்மா கிட்ட நான் மன்னிப்புக் கேட்டதா சொல்லிடுங்க.” என்ற ஐஸ்வர்யா போன்னை வைத்து விட்டாள்.

சிலர் பெற்றவர்களுக்காகக் காதலை விட்டு கொடுக்கின்றனர். சிலர் காதலுக்காகப் பெற்றோரை விட்டு விடுகின்றனர். சில பெற்றோர் பிள்ளைகளின் விருப்பத்தை மதிப்பதில்லை... சில பிள்ளைகள் பெற்றோரையே மதிப்பதில்லை...

அஷ்வின் காதலை விடக் குடும்பம் தான் முக்கியம் என்று நினைத்தான். ஐஸ்வர்யா காதலுக்காகத் தன் குடும்பத்தை விட்டே சென்று விட்டாள். அவரவருக்கு அவரவர் செய்வது நியாயமாகத் தெரியும்.

பகுதி – 7

அஷ்வின் குடும்பத்தினர் வடபழனி முருகன் கோவிலுக்கு வந்திருந்தனர். வீட்டில் எல்லோரும்

நிச்சயம் நின்றதை பற்றியே பேசி வருந்தியதால்... மனதிற்கு மாற்றமாக இருக்கட்டும் என்று அஷ்வின் தான் அவர்களை அழைத்துக்கொண்டு கோவிலுக்கு வந்திருந்தான்.

அஷ்வின் முருகனையே கண்நிறைய பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எப்போதுமே தனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று கேட்டதில்லை.... உனக்குத் தெரியும் எனக்கு என்ன தரணும்ன்னு... நீ எது கொடுத்தாலும் சந்தோஷம் என்று தான் வேண்டிக்கொள்வான். இன்றும் அதையே செய்தான்.

ஸ்வாமி தரிசனம் முடிந்து பிரகாரத்தில் வந்து உட்கார்ந்து, கோவில் பிரசாதத்தை அருந்தினர்.

“ம்ம்... இந்நேரம் எப்படி இருந்திருக்கணும். இங்க கோவில்ல வந்து உட்கார்ந்திருக்கோமே...” ரங்கநாயகியால் புலம்பாமல் இருக்க முடியவில்லை....

“ஓடிப்போகிறவ முன்னாடியே போய் இருக்கக் கூடாது... எத்தனை நல்ல இடம் எல்லாம் வந்தது. வேற இடத்தில நிச்சயம் பண்ணி இருப்போமே... கரெக்டா நிச்சயத்துக்கு முன்னாடி நாள்லா ஓடிப்போவா...” ராதிகா வேறு அவள் பங்குக்குப் பேச...

“ராது ப்ளீஸ் விடேன்...” என்ற அஷ்வின் “காலையில ஐஸ்வர்யா போன் பண்ணா... உங்க கிட்ட எல்லாம் சாரி சொல்லச் சொன்னா...” என்றான். அவன் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகிக்கு மேலும் ஆத்திரம் அதிகமாகியது.

“கழுத்தருத்திட்டு சாரி சொல்வாளா அவ....சாரி சொன்னா மட்டும் எல்லாம் சரியா போகிடுமா.... நம்மை எல்லாம் கஷ்ட்டபடுத்தின அவ...”

“அம்மா... நிறுத்துங்க. இது கோவில் அவளைச் சபிக்காதீங்க.” அஷ்வின் தன் குரலை உயர்த்த... ரங்கநாயகி வாயை மூடிக்கொண்டார்.

“முடிஞ்ச விஷயத்தைப் பத்தி ஏன் திரும்பப் பேசணும். அவளுக்கு வேற வழி இல்லை .... அதனால தான்.”

“நீ என்ன அவளுக்குச் சப்போர்ட்டா.....” ராதிகா ஆரம்பிக்க....

“நான் அவளுக்குச் சப்போர்ட் பண்ணலை.... வீட்ல அவ லவ் பத்தி சொல்லியிருக்கா... அவங்க வீட்ல ஒத்துக்கலை... அவங்க வேகமா மாப்பிள்ளை பார்த்தா... அவ என்ன செய்வா?”

“அப்ப அவ செஞ்சது சரின்னு சொல்றியா...சரி அவ தான் அப்படின்னா அவங்க வீட்ல ஏன் இப்படி ஒரு பொண்ணுக்கு மாப்பிள்ளை பார்கிறாங்க. எல்லாம் அவங்களால....” ரங்கநாயகியும் விடவில்லை...

தன் அம்மாவின் எதிரில் வந்து அமர்ந்த அஷ்வின் “அம்மா, நீங்களே சொல்லுங்க. நான் ஒரு பொண்ணை லவ் பண்றேன்னு சொல்றேன் வைங்க. நீங்க என்ன பண்ணுவீங்க? ஒத்துபீங்களா.... கண்டிப்பா இல்லை. எனக்கு வேற பொண்ணு பார்த்து உடனே கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணுவீங்க. அதே தான் ஐஸ்வர்யா வீட்ல செஞ்சாங்க. கல்யாணம் நிச்சயமானா ஐஸ்வர்யா மாறிடுவான்னு நினைச்சிருப்பாங்க. ஆனா ஐஸ்வர்யா அவ காதல்ல உறுதியா இருந்தா... இதுல யாரையும் தப்பு சொல்ல முடியாது. நம்ம நேரம் இதுல நாமும் பாதிக்கிற மாதிரி ஆகிடுச்சு.”

“அவ விருப்பம் இல்லாம என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு, மனசு ஒத்து போகாம வாழறதை விட... அவளுக்குப் பிடிச்ச வாழ்க்கையை அவ தேடி போனது எனக்குச் சந்தோஷம் தான்.” அஷ்வின் சொன்னதை ரங்கநாயகியும், ராதிகாவும் கேட்ட மாதிரியே காட்டிக்கொள்ளவில்லை.... நீ என்னமோ சொல்லிக்கோ என்பது போல் தான் இருந்தனர். வரதராஜன் தான் அவன் பேசியதை கவனித்துக் கொண்டிருந்தார். அருண் ராதிகாவின் குழந்தைகள் பின்னாடி திரிந்து கொண்டு இருந்தான்.

இவர்கள் கிளம்பும் நேரத்தில் அங்கே வயதான தம்பதிகள் வந்தனர். வாங்கோ என்று கேட்ட ரங்கநாயகியின் குரலில் அவ்வளவு கடுகடுப்பு... அவர்கள் வேறுயாருமில்லை வரதராஜனின் பெற்றோர்.

ரங்கநாயகிக்கு பயந்து வரதராஜனே அவர்களிடம் அளவாகத்தான் பேசுவார். அதே போல் தான் ராதிகாவும், அருணும் சம்ப்ரதயாத்துக்கு இரண்டு வார்த்தைகள் பேசினர். அஷ்வின் தான் அவர்களிடம் ஒழுங்காகப் பேசினான்.

“நிச்சயம் நின்னது மனசுக்கு கஷ்ட்டமா இருந்தது. அது தான் கோவிலுக்கு வந்தோம்.” அவர்கள் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகியின் கோபம் இன்னும் அதிகமாக... “மத்தவங்க எங்களைப் பார்த்து பரிதாப படனும்ன்னு பகவான் எங்கள் தலையில எழுதிட்டார். எல்லாம் எங்க நேரம்.” அவர் சிடு சிடுக்க.... அந்த வயதான தம்பதிகளின் முகம் வாடிவிட்டது.

அவர்கள் இருப்பதையும் பொருட்படுத்தாமல் ரங்கநாயகி கிளம்புவதிலேயே குறியாக இருக்க... அஷ்வின் தன்னிடம் இருந்த கார் சாவியை அருணிடம் கொடுத்து “நீங்க எல்லாம் வீட்டுக்கு போங்க... நான் கொஞ்சம் நேரம் கழிச்சு வரேன்.” என்றான்.
மகனின் செய்கை ரங்கநாயகிக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை.... “அஷ்வின்... நீ மட்டும் இங்க இருந்து என்ன செய்யப்போற?” அவரின் குரல் அதிகாரமாக ஒலித்தது.

“தாத்தாவும், பாட்டியும் தனியா வந்திருக்காங்க... அவங்க ஸ்வாமி கும்பிட்டதும், அவங்களைப் பத்திரமா அனுப்பி வச்சிட்டு வரேன்.” என்றான்.

“வந்தவங்களுக்குப் போகத் தெரியாதா.... அவங்க போய்ப்பாங்க நீ வா...” என்றார் ரங்கநாயகி கோபமாக... அவருக்குத் தன் பிள்ளைகள் புகுந்த வீட்டினறோடு ஓட்டுவது பிடிக்காது.

ரங்கநாயகிக்கு பயந்து அவரின் மாமனார் மாமியாரும் “நாங்க பொறுமையா ஸ்வாமி கும்பிட்டு கிளம்ப நேரம் ஆகும் அஷ்வின், நீயும் அவங்களோடவே கிளம்பு....” என்றனர்.

“அம்மா...நான் வர லேட் ஆகும் கிளம்புகன்னு சொல்லிட்டேன். பிறகு போறதும் போகாததும் உங்க இஷ்ட்டம்.” என்ற அஷ்வினும் பிடிவாதத்தில் ரங்கநாயகியின் மகன் என்று நிருபித்தான்.

அஷ்வின் தன் தாத்தா பாட்டியோடு அங்கிருந்து சென்றுவிட... முதல்முறையாகத் தன் புகுந்த வீட்டினர் முன்பு மூக்கு உடைபட்ட ரங்கநாயகி ஆத்திரத்துடன் அங்கிருந்து கிளம்பி சென்றார்.

அவருக்கு அஷ்வினை பற்றி நன்றாகவே தெரியும். எதற்கும் வளைந்துகொடுத்தே போகும் அஷ்வின், சில சமயம் ஒரு முடிவெடுத்து விட்டால்..... அதிலிருந்து அவனை மாற்றுவது முடியாது என்று...

அஷ்வினின் முகத்தை வருடிய அவனின் பாட்டி “உங்க அம்மா சொல்றது போல இல்லை டா ராஜா... எங்களுக்கும் உன் கல்யாணம் நின்னது மனசுக்கு ரொம்ப வருத்தம் தான்.” என்றார் குரல் நடுங்க...

“எனக்குத் தெரியும் பாட்டி... அவங்க நிச்சயம் நின்ன வருத்ததில பேசுறாங்க. நீங்க வாங்க ஸ்வாமி கும்பிடுவோம்.” என்றவன், அவர்களோடு மீண்டும் ஒரு முறை கோவிலுக்குள் சென்றான்.

நிதானமாக ஒவ்வொரு சந்நிதியிலும் நின்று சாமி கும்பிட்டவர்கள், பிரகாரத்தில் வந்து உட்கார்ந்ததும், அஷ்வின் சென்று அவர்களுக்குப் பிரசாதம் வாங்கி வந்து கொடுக்க... வீட்டில் இருப்பவர்களுக்கு இருக்கட்டும் என்று அவர்கள் அதைப் பத்திரமாக வைத்துக்கொள்ள....

“நீங்க இதைச் சாப்பிடுங்க... வீட்டுக்கு போகும் போது...இன்னும் கொஞ்சம் வாங்கிக்கலாம் என்று அஷ்வின் அவர்களை வற்புறுத்தி சாப்பிட வைத்தான்.

கோவிலில் இருந்து வெளியே வந்ததும், ஒரு டாக்ஸி பிடித்து அதில் அவனும் அவர்களோடு ஏறிக்கொண்டான். கே.கே நகரில் இருக்கும் அவர்கள் பூர்வீக வீட்டிற்குச் சென்றபோது... அஷ்வினுக்கு அங்கே பலத்த வரவேற்பு கிடைத்தது.

அவனுக்கு இரண்டு சித்தபாக்கள் அவர்களுக்கு ஆளுக்கு இரண்டு பிள்ளைகள். இவர்கள் சென்ற போது... வீட்டில் சித்திகள் மட்டுமே இருந்தனர். மற்றவர்கள் ஆளுக்கு ஒரு வேலையாக வெளியே சென்றிருந்தனர்.

மதிய உணவு நேரத்திற்குத் தான் ஒருவர் பின் ஒருவராக வீட்டிற்கு வந்தனர். அவர்களுக்கு அஷ்வினை பார்த்ததும் அவ்வளவு மகிழ்ச்சி. வீட்டில் வடை பாயசம் என்று அந்த நேரத்திற்குள் என்னென்ன செய்ய முடியுமோ அத்தனையும் செய்து... ஹாலில் இலை போட்டு எல்லோரும் சேர்ந்து சாப்பிட்டனர்.

அஸ்வினின் சித்தப்பா பிள்ளைகள் அனைவரும் அவனுக்கு இளையவர்கள் என்பதால்... அண்ணா என்று அவன் மேல் மிகுந்த பாசமாக இருப்பார்கள்.

முதல் சித்தப்பா ஹரிகரனுக்கு இரண்டுமே ஆண் பிள்ளைகள். இரண்டாவது சித்தப்பா கிரிதரனுக்கு இரண்டு பெண்கள். இரண்டு சித்தப்பாகளுக்குமே பெரிய வேலை இல்லை... இனி இளைய தலைமுறையினர் முன்னேறினால் தான் உண்டு.
“அஷ்வின் அண்ணா... இன்னைக்கு உன் நிச்சயம் மட்டும் நடந்திருந்தா... நாங்களும் அங்க வந்திருப்போம் இல்லை... நான் இதுவரை ஸ்டார் ஹோட்டல் எல்லாம் போனது இல்லை... இன்னைக்குப் பார்த்திடலாம்ன்னு ஆசையா இருந்தேன். இப்படி நிச்சயம் நின்னு போச்சே....”
அந்த வீட்டில் கடைக்குட்டி அகல்யா வருத்தப்பட...

அஷ்வின் மனது கஷ்ட்டப்படக் கூடாது என்று தான், யாரும் அவன் நிச்சயத்தைப் பற்றிப் பேசவில்லை... குட்டி பிசாசு அகல்யா வாயை விட.. அவள் முதுகில்

ஒன்று சாத்திய அவளின் அம்மா “ரொம்ப முக்கியம். இங்க மனுஷங்க என்ன நிலைமையில இருக்காங்கன்னு புரிஞ்சிக்காம...” என்றார் முறைத்துக்கொண்டே....

“இவ எப்பவுமே இப்படித்தான் அண்ணா... அவளைப் பத்தி தான் யோசிப்பா....” அகல்யாவின் அக்கா அருந்ததி தன் தங்கையைக் குறை சொல்ல... “ஆமாம், நான் அப்படித்தான். இப்ப என்ன?” என்ற அகல்யா “அண்ணா, உன் கல்யாணத்துக்கு எனக்கு ரெண்டு சுடிதார் வாங்கித் தர சொல்லி கேட்கணும்ன்னு இருந்தேன். காலேஜ் போட்டுட்டு போக நல்ல சுடிதாரே இல்லை... இப்ப உன் கல்யாணம் நின்னு போச்சே என்ன பண்றது?” என்று அஷ்வினிடமே கேட்க....

மற்றவர்கள் அகல்யாவைப் பார்த்து முறைக்க... அஷ்வினுக்குச் சிரிப்பை அடக்கவே முடியவில்லை... “ஏன் அகல்யா இவ்வளவு கவலைப்படுற... எனக்கு இனி கல்யாணமே நடக்காதுன்னு முடிவு பண்ணிட்டியா...” அவன் முகத்தில் புன்னகையுடன் கேட்க... பெரியவர்களுக்கு வருத்தமாகப் போய் விட்டது.

“அப்படிச் சொல்லாத கண்ணா.... உனக்குச் சீக்கிரமே நல்ல பொண்ணு பார்த்துச் சிறப்பா கல்யாணம் நடக்கும்.” அவனின் பாட்டி ஆசிர்வதிப்பது போல் சொல்ல... மற்றவர்களும் அதற்குத் தலையசைத்தனர்.

சாப்பிட்டு எழுந்த அஷ்வின் தன் பர்சில் இருந்து பணத்தை எடுத்து அகல்யவிடம் கொடுத்தவன் “நீ என் கல்யாணம் வரை வெயிட் பண்ண வேண்டாம். உனக்குப் பிடிச்ச மாதிரி நாலு சுடிதார் வாங்கிக்கோ என்று ஐந்தாயிரம் கொடுக்க... அகல்யாவுக்கு அவ்வளவு சந்தோஷம்.

“தாங்கஸ் அண்ணா.... நாலு எல்லாம் வேண்டாம், ரெண்டு மட்டும் போதும். இவ்வளவு ரூபாய்ல நாங்க நாலு பேருமே வாங்கிப்போம்.” அகல்யா தன்

பெரியப்பா பிள்ளைகளையும் சேர்த்து சொல்ல.... சின்னப் பெண்ணாக இருந்தாலும் அவளின் நல்ல மனதை பார்த்த அஷ்வினுக்குச் சந்தோஷமாக இருந்தது.

“அண்ணாவுக்கு இப்படித் தான் செலவு வைப்பியா... பணத்தைத் திருப்பிக் கொடு....” அகல்யாவின் தந்தை சொல்ல...

“இருக்கட்டும் சித்தப்பா... எனக்கு ஒன்னும் கஷ்ட்டம் இல்லை... நானும் தான் வேலைக்குப் போறேன்னே... நானே அடுத்த வாரம் வரணும்ன்னு தான் நினைச்சிட்டு இருந்தேன். கோவில்ல தாத்தாவையும் பாட்டியையும் பார்த்ததும் அவங்களோட இன்னைக்கே வந்துட்டேன்.” என்றான்.

“ஏன் நீங்க ரெண்டு பேரும் தனியா போனீங்க? நாங்க யாராவது வர்ற வரை இருந்திருக்கலாம் இல்லை...” கிரிதரன் தன் பெற்றோரை கண்டிக்க... அவர்கள் எதோ சொல்லி சமாளித்தனர்.

தன் சித்தப்பா பிள்ளைகளிடம் அவர்கள் படிப்பை பற்றிக் கேட்ட அஷ்வின், படிப்புக்கு எதாவது உதவி தேவை என்றால்... தன்னைக் கண்டிப்பாக அழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்.
விடைபெறும் போது அஷ்வின் அகல்யாவிடம் “இன்னொரு நாள் நாம எல்லாம் சேர்ந்து பெரிய ஹோட்டல் போய்ச் சாப்பிடலாம்.” என்றதும், அவள் சந்தோஷமாகத் தலையாட்ட.... அஷ்வினுக்குச் சட்டென்று வினோதா தான் நியாபகம் வந்தாள். அகல்யா போலத்தான் வினோதாவும் இருப்பாள். சின்னப்பெண்ணாகக் கண்களில் குறும்போடு.... சட்டென்று தன்னை மீட்டெடுத்தவன், எல்லோரிடமும் விடைபெற்று டாக்ஸியில் ஏறினான்.

ரங்கநாயகி ஹாலிலேயே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். அவரின் கண்கள் நொடிக்கொரு தரம் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு திரும்ப.... மற்றவர்களும் ஹாலில் தான் இருந்தனர்.

நான்கு மணி போல் வீட்டிற்கு வந்த அஷ்வின் மிகவும் களைத்து போய் இருந்தான். அதனால் நேராக அவன் அறைக்குச் செல்ல...
“உனக்கு எங்களை எல்லாம் கண்ணுக்கு தெரியலையா அஷ்வின்... கொஞ்ச நேரமுன்னு சொல்லிட்டு இவ்வளவு நேரம் கழிச்சு வர்ற... எங்க போன நீ?” ரங்கநாயகி கோபத்தில் பொரிய....

“தாத்தா பாட்டிய கொண்டு வீட்ல விட்டுட்டு... அவங்களோட கொஞ்ச நேரம் இருந்திட்டு வரேன்.” என்றான் அஷ்வின்.
“இன்னைக்கு என்ன திடீர் அக்கறை....” ரங்கநாயகி கிண்டலாகக் கேட்டதும் அஷ்வினுக்குக் கோபம் வந்துவிட்டது.

“திடிர்ன்னு எல்லாம் இல்லை... நான் எப்பவும் அங்க போறது தான்.”

அஷ்வின் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகி அதிர்ந்து விட்டார். “நீ அங்க போவியா... ஏன் என்கிட்டே சொல்லலை?....”நீ யாரை கேட்டு போன?”

ரங்கநாயகியின் கேள்விக்கு “தெரியாதவங்க வீட்டுக்குப் போனாதான் கேட்டுட்டு போகணும். அது நம்ம வீடு தான... அங்க போறதுக்கு எதுக்குக் கேட்கணும்? நான் கேட்டாலும் நீங்க போக விடுவீங்களா என்ன.... நீங்க வேண்டாம்ன்னு சொல்லி நான் போனா... அது உங்களை மதிக்காத மாதிரி ஆகிடும். அது தான் கேட்கவே இல்லை...” என்றான் அஷ்வின் விளக்கமாக...

அவனின் பேச்சை கேட்டு ரங்கநாயகி கொதித்துப் போய் இருந்தார் என்றால்... மற்றவர்கள் இப்போது என்ன ஆகுமோ என்ற கவலையில் இருந்தனர்.

“ரொம்பச் சாமர்த்தியமா பேசுற அஷ்வின்... அது நம்ம வீடா... அப்ப இது யார் வீடு?” ரங்கநாயகி கேட்க....

“இது உங்க வீடு...” என்று அஷ்வினும் பதில் சொல்லிவிட்டான். அவன் சொன்ன பதிலில்

ரங்கநாயகி சிலை போல் நின்றுவிட்டார்.

அஷ்வினுக்கு இவ்வளவு பேச தெரியுமோ என்பது போல் தான் எல்லோரும் பார்த்தனர். “ஆமாம் மா... இது உங்க வீடு தான். உங்க அம்மா வீட்ல கொடுத்த பணத்தில நீங்க வாங்கின வீடு... அப்ப இது உங்க வீடு தான...” சொல்லிவிட்டு அஷ்வின் படி ஏறி சென்று விட.... மற்றவர்கள் ரங்கநாயகியை பார்க்க... அவர் வரதராஜனை பார்த்து முறைத்துக்கொண்டு இருந்தார்.

இதில் வரதராஜனை முறைக்க ஒன்றும் இல்லை... அவரைக் கேட்டு அஷ்வின் எதையும் செய்யவில்லை... அவரும் மகனுக்கு எதுவும் சொல்லவில்லை... நாம் என்ன தான் குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வளர்த்தாலும், அவர்கள் தங்கள் வேரைத் தேடி செல்லத்தான் செய்வார்கள்.

தன் தந்தையைப் பெற்றவர்கள் வீட்டிற்குச் சென்றதற்கு எதோ குற்றவாளியை போல் தன்னை நிறுத்தி வைத்துக் கேள்வி கேட்டது அஷ்வினுக்குப் பிடிக்கவில்லை... ஏற்கனவே இருந்த மனக்குழப்பம் எல்லாம் சேர்ந்து அவனை அப்படிப் பேச வைத்தது. இல்லையென்றால் அவன் அப்படிப் பேசுபவன் இல்லை... எல்லோரிடம் நல்லவிதமாகவே அஷ்வின் நடந்து கொள்வான். அதுவும் தன் அம்மாவிடம் இன்னும் அதிகமாக... ஆனால் எல்லோருக்கும் நல்லவர்களாக இருக்க முடியாது என்பது அவனுக்கு விரைவில் தெரிய வரும்.

மறுநாள் காலை அலுவலகம் செல்ல கிளம்பி வந்த அஷ்வின், முன்தினம் தன் அம்மாவிடம் அதிகம் பேசிவிட்டோம் என்ற குற்ற குறுகுறுப்பில் இருந்ததால்... ரங்கநாயகியிடம் சென்று அவனாகவே வழிய பேச.... அவரும் முறுக்கிக்கொள்ளாமல் ஒழுங்காகப் பேசினார்.

அவருக்குத் தெரியும் அஷ்வினை பாசத்தைக் காட்டி வளைக்க முடியுமே தவிர அதிகாரத்தால் அல்ல....

அலுவலகத்தில் அஷ்வினுடன் வேலை செய்யும் சிலரை மட்டும் தான் நிச்சயத்திற்கு அழைத்திருந்தனர். அவர்களிடம் ஐஸ்வர்யா பற்றிச் சொல்லாமலே வேறு எதோ காரணம் சொல்லி விக்னேஷ் சமாளித்து விட்டான். அஷ்வின் அவனின் உயர் அதிகாரி அழைத்ததால் அவரைச் சந்திக்கச் சென்றிருந்தான்.

“ஹாய் அஷ்வின் வெல்கம்...How are you?” பங்கஜ் அவனை ஆர்வமாக வரவேற்க...

“ஹாய் பங்கஜ், பைன்.” என்றான் அஷ்வினும் புன்னகையுடன்.

அவனை ஆழ்ந்து நோக்கிய பங்கஜ் “ரியலி அஷ்வின்.” என்று வார்த்தைக்கு அழுத்தம் கொடுக்க... அவரையும் அவன் நிச்சயம் நின்ற செய்தி எட்டி இருக்கும் என்று புரிந்து கொண்ட அஷ்வின், புன்னகையுடன் ஆமாம் என்றான்.

“Well that’s good. We will come to the point. You have got an opportunity to go German for three months project. Are you willing to go Ashwin.”

“yes...” அஷ்வினும் தனக்குக் கிடைத்த வாய்ப்பை ஏற்று ஜெர்மன் செல்ல சம்மதிக்க... அதன்பிறகு இருவரும் அதைப் பற்றி நீண்ட நேரம் பேசிக்கொண்டு இருந்தனர்.

அஷ்வின் தன் இருக்கைக்கு வந்ததும், அவனுடன் விக்னேஷ் வந்து சேர்ந்து கொண்டான்.

“என்ன டா நம்ம அமுல் பேபி என்ன சொல்லுச்ச?” பங்கஜ் நல்ல வெள்ளை நிறத்தில் கொழுக் மொழுக் என்று இருப்பார். அதனால் விக்னேஷ் அவரை அப்படித்தான் கூப்பிடுவான்.

“ம்ம்... என்னை மூன்னு மாசம் ஜெர்மன் போகச் சொல்லி இருக்கார்.” அஷ்வின் சொன்னதும்,

“ஓ... சூப்பர் வாழ்த்துக்கள் டா...” விக்னேஷ் அஷ்வினின் முதுகில் தட்ட... அஷ்வினும் அவனின் வாழ்த்தை ஏற்றுக்கொண்டான்.

மதிய உணவு நேரத்தில் அஷ்வினுடன் தனியாக இருக்கும் போது மெதுவாக வினோதாவை பற்றி விக்னேஷ் பேச்சை ஆரம்பித்தான்.

“டேய் அஷ்வின், சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காத.... நீ இப்பவாவது வினோவோட லவ்வை ஏத்துக்கலாம் இல்லையா....”

“அவ லவ் சொல்லும் போது நானும் சொல்லி இருந்தா ஓகே... இப்ப எப்படிடா சொல்றது?... அது ரொம்பச் சுயநலமா இருக்கும். இதே நிச்சயம் நடந்திருந்தா... நான் வினுவை தேடி போவேன்னா...”

“அவகிட்ட காசு பணம் தான் இல்லை... மத்தபடி வினு நல்ல பொண்ணுடா... அவளுக்கு என்னை விட ரொம்ப நல்லவன் வருவான் டா...” என்ற அஷ்வினை... எதனால் அடிப்பது என்பது போல் கொலை வெறியில் விக்னேஷ் இருந்தான்.

மறுநாள் வினோதாவை சென்று சந்தித்த விக்னேஷ் “அஷ்வினுக்கு நிச்சயம் ஆகப்போகுது தெரியுமா....” என்றான்.

வினோதாவின் முகம் உடனடியாக மாற... “ஓ... அப்படியா யாரு? என்றாள். விக்னேஷ் வேண்டுமென்றே ஐஸ்வர்யாவை பற்றிப் புகழ்ந்து சொல்லி... வினோவை நோட்டம் விட்டான்.

“சரி உங்க நண்பரை நான் வாழ்த்தினதா சொல்லிடுங்க...” என்ற வினோ எழுந்துகொள்ள...

“இரு எங்க போற? முழுசா கேட்டுட்டு போ... இப்ப நிச்சயம் நின்னுடுச்சு.” என்றான். அவன் சொன்னதைக் கேட்டு வினோதாவிற்குக் கோபம் வந்து விட்டது.
“நிச்சயம் நடந்ததா இல்லையா... ஏன் இப்படிக் குழப்புறீங்க? வினோதா எரிச்சலாகக் கேட்க.....

“நடக்கிறதா இருந்தது. ஆனா நடக்கலை...” என்றவன், முழு விவரம் சொல்ல...

வினோதா உடனே சந்தோஷம் எல்லாம் படவில்லை... அமைதியாக இருந்தாள்.

“வினோ, நீ இப்ப வந்து அஷ்வின் கிட்ட பேசினா அவன் கண்டிப்பா ஒத்துப்பான்.” என்ற விக்னேஷை பார்த்து வினோதா முறைத்தாள்.

“ஏன் இந்த உலகத்தில என்னையும் ஐஸ்வர்யாவையும் தவிர வேற பொண்ணே இல்லையா?... அதெல்லாம் அவங்க அம்மா வேற அழகான பொண்ணைப் பார்த்து திவ்யமா அஷ்வினுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பாங்க. நீங்க கவலைப்படாதீங்க...” வினோ சொல்ல...

“எதுக்கு நிச்சயத்துக்கு முன்னாடி ஓடிப்போன மாதிரி... கல்யாணத்துக்கு முன்னாடி ஓடிப்போகவா...” விக்னேஷ் சொன்னதைக் கேட்ட வினோ சிரித்து விட...

“இப்ப எந்தப் பையனையும், பெண்னையும் நம்பி கல்யாணம் பேசவே முடியலை தெரியுமா....போன வாரம் இப்படித்தான் எங்க அத்தை அவங்களுக்குத் தெரிஞ்சவங்களுக்கு மாப்பிள்ளை பார்த்து கொடுத்தாங்க.”

“பொண்ணு பையன் ரெண்டு பேருமே.... பொண்ணு பார்க்கிற அன்னைக்குச் சாதுவா இருந்ததுங்க... அப்புறம் பார்த்தா அடுத்த வாரம் அந்தப் பொண்ணு வேற யார் கூடவோ ஓடிப்போய்டுச்சு... அந்தப் பையனுக்கு ஏற்கனவே கல்யாணம் ஆகிடுச்சாம். ரெண்டு பேரோட பெத்தவங்க தான் பாவம்.”
“என்னைக் கேட்டா இனி வர்ற காலத்தில லவ் மரேஜ் தான் பெஸ்ட்டுன்னு சொல்வேன்.” விக்னேஷ் சொன்னதைக் கேட்டு தலை ஆட்டிய வினோ “கேட்க ரொம்ப நல்லா இருக்கு... ஆனா ஒத்துவருமான்னு தெரியலை... அதை விடுங்க இப்போ.... நான் வந்து அஷ்வின் கிட்ட பேசுறது எல்லாம் நடக்காது. அதுக்கு வேற ஆளைப் பாருங்க. எங்ககிட்ட வசதி வேணா

இல்லாம இருக்கலாம். ஆனா சுயமரியாதை அதிகமா இருக்கு. நான் வேண்டாம்ன்னு சொல்லி போன அஷ்வினை தேடி நான் வரமாட்டேன்.” வினோதா அவள் முடிவில் உறுதியாக இருக்க...

என்னடா ரெண்டும் ஒரே மாதிரி பேசுதுங்க என்று நினைத்த விக்னேஷ் தலையில் கைவைத்துச் சோகமாகப் போஸ் கொடுக்க... அவனைப்பார்க்க வினோதாவிற்கே பாவமாக இருந்தது. தனக்காகத்தானே அவன் இவ்வளவு பார்கிறான் என்று நினைத்தவள் “விட்டுடுங்க விகேன்ஷ் அண்ணா...” என்றாள்.

“எப்படி விட முடியும் வினோ? இதே தான் அஷ்வினும் சொன்னான்.” என்றவன், அஷ்வின் சொன்னதைச் சொல்லிவிட்டு அங்கிருந்து செல்ல... வினோதா யோசிக்க ஆரம்பித்தாள்.

பகுதி – 8

அஷ்வின் மறுவாரம் ஜெர்மன் கிளம்பினான். அவன் அலுவலக விஷயமாக இதற்கு முன்பே இரண்டு முறை வெளிநாடு சென்றிருப்பதால்... வீட்டில் பெரிய பரபரப்பு இல்லை... அதோடு அவன் அலுவலகத்திற்குச் சென்று விட்டு அங்கிருந்து விமான நிலையம் செல்வதால்... அவனோடு யாரும் விமான நிலையம் செல்லவில்லை. டாக்ஸி வரவழைத்து அதில் சென்றான்.

அவன் சென்றதும் உள்ளே வந்த ரங்கநாயகி, அஷ்வின் திரும்பி வருவதற்குள் அவனுக்குப் பெண் பார்த்துவிட வேண்டும் என்று மனதிற்குள் உறுதி கொண்டார்.

அஷ்வினுக்கு மாலை தான் விமானம் என்பதால்... தனது பெரிய பெட்டியை கையேடு அலுவலகம் கொண்டு சென்றான். மதியம் வரை அலுவலகத்தில் இருந்தவன், விமான நிலையத்தில் இருந்து டாக்ஸி வந்ததும், அவனுடன் வேலை பார்க்கும்

சர்வேஷோடு இறங்கி வந்தான். விக்னேஷ் மீட்டிங்கில் இருந்ததால் வரவில்லை...

அஷ்வின் டாக்ஸியில் பெட்டியை வைத்துக்கொண்டிருந்த போது வினோதா வெளியில் இருந்து வந்தாள். ஹேமா தன் மகள் பிறந்தநாளுக்கு உடை வாங்க துணைக்கு அழைத்ததால் அவளோடு சென்றிருந்தாள். அஷ்வின் பெரிய பெட்டியை டாக்ஸியில் வைப்பதை பார்த்ததும், அவன் வெளிநாடு செல்கிறான் என்று வினோதா புரிந்து கொண்டாள். ஒரு வேளை அவன் திரும்ப வராமல் அங்கயே தங்கிவிட்டால்.... இனி அவனைப் பார்க்க முடியாதே... அதை நினைக்கவே அவளுக்குக் கலக்கமாக இருந்தது.

ஹேமாவிடம் எதோ காரணம் சொல்லி அனுப்பிவிட்டு, திரும்ப அஷ்வின் இருக்கும் பக்கம் வந்தாள். அவளாகவே சென்று அஷ்வினிடம் பேசவும் எதோ தடுத்தது. யாரையோ தேடுவது போல் அங்கேயே நின்றாள்.
அஷ்வின் வெகு நாட்கள் கழித்து இன்று தான் அவளைச் சந்திக்கிறான். அதனால் சர்வேஷுடன் பேசுவது போல் கிளம்பாமல் அங்கேயே நின்றுவிட்டான்.

அவளின் வட்ட முகத்தில் கருப்பு நிற சிறு பொட்டு மட்டும் தான் இருந்தது. வேறு ஒப்பனை எதுவும் செய்யாமலே அழகாக இருந்தாள். யாரையோ எதிர்பார்த்து நிற்பது போல் நின்றிருந்தவளின் பார்வை அஷ்வினையே சுற்றி வர...

சற்றுப் பதட்டமாக இருக்கிறாள் என்பது அவளின் ரோஜா வண்ண கீழ் உதட்டை கடிப்பதில் இருந்தே தெரிந்தது. இன்னும் கொஞ்சம் நேரம் விட்டா உதடை கடிச்சே முழுங்கிடுவா போலிருக்கு என்று நினைத்த அஷ்வின் சர்வேஷை பார்த்து “நீங்க கிளம்புங்க.” என்றான்.

சர்வேஷ் சற்று தள்ளி சென்றதும் “Bye Sarvesh, see you after 3 months.” அஷ்வின் சத்தமாகச் சொல்ல....

“மூன்னு மாசத்துக்குத் தான் இவ்வளவு பில்ட் அப்.... பா” வினோதா அஷ்வினை கிண்டலாகப் பார்த்துவிட்டு உள்ளே செல்ல திரும்ப... அவன் அவளைப் பார்த்து புன்னகைத்தபடி நின்றிருந்தான்.

கொஞ்ச தூரம் சென்றவள், அஷ்வின் போய் விட்டானா என்று திரும்பி பார்க்க... அவன் அங்கேயே நின்று வினோதாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

போதும் பார்த்தது.... என்று சைகை செய்த வினோதா... தன் வலது கையால் விமானம் பறப்பது போல் செய்து காட்ட.... சரி என்பதாகத் தலை அசைத்த அஷ்வின், புன்னகையுடன் சென்று காரில் ஏறினான். வினோதாவும் புன்னகையுடன் அங்கிருந்து சென்றாள்.

ஜெர்மன் சென்று இறங்கியதும் வீட்டிற்கு அழைத்துத் தான் நலமாக வந்து சேர்ந்ததைச் சொன்ன அஷ்வின், மூன்று மாதத்திற்குள் தான் வந்த வேலையை முடிக்க வேண்டும் என்பதால் அதில் கவனமாக இருந்தான்.
அவனுக்கு அலுவலகத்தில் இருந்து விருந்தினர் விடுதி ஏற்பாடு செய்து கொடுத்திருந்தனர். காலை உணவும் அங்கேயே சாப்பிட்டுக் கொள்ளலாம். பிரட் சான்விச், கார்ன் ப்ளேக்ஸ், பழச் சாறு, பழ வகைகள் என்று நிறையவே இருக்கும். அதை உண்டுவிட்டு, டாக்ஸியில் அலுவலகம் சென்று வருவான்.

மதிய உணவு அலுவலகத்திலும், மாலை எங்காவது வெளியில் சுற்றிவிட்டு எதாவது உணவகத்தில் இரவு உணவை முடித்துக்கொண்டு விடுதிக்குத் திரும்புவான்.

அஷ்வின் இந்திய திரும்ப நான்கு நாட்களே இருந்த போது, அவன் அலுவலகத்தில் அவனோடு வேலை பார்க்கும் மார்க், இரவு உணவை தன்னோடு சாப்பிட அழைத்தான். அஷ்வினும் அவன் அழைப்பை

ஏற்றுக்கொண்டு அவனுடன் சென்றான். இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டனர். அவர்கள் இருவரும் ஆங்கிலத்திலேயே பேசிக்கொண்டனர்.

“உங்களுக்குக் கல்யாணம் ஆகிடுச்சா அஷ்வின்?”

“இல்லை, உங்களுக்கு மார்க்...”

“எனக்கும் இல்லை... ஆனா நான் ரெண்டு வருஷமா... ஒரு பெண்ணோட ஒரே வீட்ல சேர்ந்து இருக்கேன்.” என்ற மார்க்கிடம் அஷ்வின் மேலும் எதுவும் அதைப் பற்றிக் கேட்கவில்லை... ஆனால் அவன் சொன்னதை அவனால் எளிதாகவும் எடுத்துக்கொள்ள முடியவில்லை....

அவனைப் புரிந்து கொண்டது போல் “எனக்குத் தெரியும், இது உனக்கு ஆச்சர்யமா இருக்கும். ஆனா இங்க இப்படித்தான். நாங்க சேர்ந்து வாழ்ந்து பிடிச்சிருந்தா தான் கல்யாணத்தைப் பத்தி சிந்திப்போம். இல்லைன்னா இப்படியே பிரிஞ்சிடுவோம். நான் ஏற்கனவே ரெண்டு பெண்களைப் பிடிக்காம விலகிட்டேன். இது மூன்னாவது.” மார்க் சாதாரணமாகச் சொல்ல.... கேட்ட அஷ்வினுக்குத் தான் ஒருமாதிரி இருந்தது.

அவனைப்பார்த்து சிரித்த மார்க் “நான் ஒன்னு கேட்டா கோவிச்சிக்க மாட்டியே...” என்று கேட்க... அவன் எதோ எக்குதப்பாகக் கேட்கப்போகிறான் என்று புரிந்த போதிலும் அஷ்வின் இல்லை என்று தலை ஆட்ட...

“Are you still virgin?” மார்க் பட்டென்று கேட்டு விட... அஷ்வின் ஆமாம் என்றதும், மார்க் வாய்விட்டுச் சிரித்தான்.

“I know about Indians. ஆனா என்னால இன்னும் ஏத்துக்க முடியாத விஷயம், யாருன்னே தெரியாதவங்களை எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியுது?... லைப் லாங் எப்படிச் சேர்ந்திருக்கீங்க? கண்டிப்பா அது பெரிய விஷயம் தான்.”

மார்க் சொன்னதைக் கேட்ட அஷ்வின் “இந்தியாவில் கல்யாணம் என்பது ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் பந்தம் மட்டும் இல்லை... இரண்டு குடும்பங்களுக்கு இடையே ஏற்படும் சொந்தமும் கூட... அதனால ஒரு முடிவு எடுக்கும் முன் தனி நபரா பார்ப்பதை விட... குடும்பமா பார்கிறதுனால தான். அங்க பெற்றோர் பார்த்துச் செய்து வைக்கிற திருமணங்கள் வெற்றி அடையுது.” என்றான்.

மார்க் வியந்து புருவத்தை உயர்த்த... அஷ்வின் அவனைப்பார்த்துப் புன்னகைத்தான். இருவருமே எங்களுடையது தான் சிறந்தது என்று வாதாடவில்லை... அவரவர் வழி வேறு என்பதைப் புரிந்து நடந்து கொண்டனர். அதனால் அன்றைய பொழுது நன்றாகவே சென்றது.

ஜெர்மனியில் சிறிது நாட்கள் தனிமையில் தங்கி இருந்தது, அதோடு மார்க்குடன் பேசியது எல்லாம் சேர்ந்து அஷ்வினின் திருமணத்தைப் பற்றிய எண்ணத்தைச் சிறிது மாற்றி இருந்தது. திருமணத்திற்குப் பெற்றோர் விருப்பம் மட்டும் இல்லை... திருமணம் செய்து கொள்ளப் போகிறவர்களின் விருப்பமும் முக்கியம் என்பதை உணர்ந்தான். மற்றவர்களுக்காகத் திருமணம் செய்வதை விடத் தனக்குப் பிடித்த பெண்ணைத் அதோடு தன்னை விரும்பும் பெண்ணை திருமணம் செய்வது நல்லது என்றும் நினைத்தான். இதற்கு ஐஸ்வர்யாவும் ஒரு காரணம்.

அஷ்வின் மனதில் ஒரு முடிவுடன் இந்தியாவிற்குத் திரும்ப... அங்கே ரங்கநாயகி வேறு முடிவுடன் இருந்தார்.

அஷ்வின் அன்று வீடு வந்து சேரும் போதே... நள்ளிரவு இரண்டு மணி. இருந்தாலும் மறுநாள் வேலைக்குச் செல்வதில் தீவிரமாக இருந்தான்.

“இன்னைக்கே போகனுமா என்ன?” அலுவலகம் கிளம்பி கொண்டிருந்த அஷ்வினை பார்த்து ரங்கநாயகி கேட்க....

“ஆமாம் ம்மா... போயிட்டு வந்த ரிப்போர்ட் சப்மிட் பண்ணனும்.” என்றவன், தன் பைக்கில் கிளம்பினான். உண்மையில் இன்றே அலுவலகம் செல்ல வேண்டும் என்பது கட்டாயம் இல்லை... அவனுக்கு வினோதாவை பார்க்க வேண்டும். இன்று விட்டால் மீண்டும் திங்கள்கிழமை தான் பார்க்க முடியும் அதற்குத் தான் இந்த அவசரம்.

அலுவலகம் வந்தவனை அவனுடன் பணிபுரிவோர் உற்சாகமாக வரவேற்க... அஷ்வின் தான் கொண்டு வந்த சாக்லேட் வகைகளைப் பிரித்து அவன் மேஜையில் வைத்தவன், எல்லோரையும் எடுத்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டான்.
மதிய உணவு இடைவேளைக்குச் சற்று முன்னர் விக்னேஷிடம் வந்த அஷ்வின் “இன்னும் அரை மணி நேரத்தில வினோவை காபி டே வர சொல்லு...” என்றான்.

“ஏன் நான் சொல்லணும்? நீ சொல்லு...” விக்னேஷ் முருகிக்கொள்ள....
“சொல்லுடா....என்கிட்டே அவ நம்பர் இல்லை...நான் சொன்னேன்னு சொல்லாத... நீயா கூப்பிடுற மாதிரி கூப்பிடு...”

அஷ்வினை சொன்னதைக் கேட்ட விக்னேஷ் “கூப்பிடுவேன், ஆனா திரும்ப அவளை நோகடிச்ச... மனுஷனா இருக்க மாட்டேன் சொல்லிட்டேன்.” எச்சரித்த பின்பே வினோதாவை செல்லில் அழைத்தான். அவள் இவர்கள் இருவரையும் நோகடிக்கப் போவது தெரியாமல்....

இவர்கள் காபி டே சென்ற போது வினோதா இன்னும் வந்திருக்கவில்லை... அவளுக்காக இருவரும் காத்திருந்தனர். சிறிது சேரம் சென்று வந்த வினோதாவின் முகத்தில் அஷ்வினை பார்த்ததும் ஆச்சர்யம் தோன்றியது. இருந்தாலும் எதையும் காட்டிக்கொள்ளாமல் சாதாரணமாக அவர்கள் எதிரில் அமர்ந்தாள்.

“ம்ம்... சொல்லுங்க எதுக்கு வர சொன்னீங்க?” அவள் அஷ்வினை கண்டுகொள்ளாமல்... விக்னேஷிடம் பேச...

“நான் கூப்பிடலை... இவனுக்கு உன்னோட எதோ பேசணுமாம்.” விக்னேஷ் சொன்னதும் வினோதா அஷ்வினை பார்க்க... அவன் அவளைப்பார்த்துப் புன்னகைத்தான்.

“நல்லா இருக்கியா வினு.... ஜாப் எல்லாம் எப்படிப் போகுது?.... என்ன ப்ராஜெக்ட்ல இருக்க?... எந்த டொமைன்?” அஷ்வின் வரிசையாகக் கேள்விகளாகக் கேட்க.... இதைக் கேட்கத்தான் வந்தனா என்று விக்னேஷுக்கு எரிச்சலாக இருந்தது.

வினோதாவிற்கும் எதற்கு இவ்வளவு கேள்விகள் என்று புரியவில்லை.... இருந்தாலும் அவன் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள்.

“டேய் ! அவளுக்கு வேற வேலை வாங்கித் தரப்போறியா என்ன?” விக்னேஷ் பொறுமை இழந்து கேட்டு விட...

அவனைப் பார்த்து முறைத்த அஷ்வின் “நீ வேணா போயேன்... நாங்க கொஞ்ச நேரம் பேசிட்டு வரோம்.” என்றான்.

“இதுக்கு எதுக்குடா என்னையும் கூடிட்டு வந்த?” என்ற விக்னேஷ் எழுந்துகொள்ள....
“நீங்க போனா நானும் போய்டுவேன் விக்னேஷ் அண்ணா...” என்றபடி வினோதாவும் எழுந்துகொண்டாள்.

இதென்னடா வம்பு, விக்னேஷ் நினைக்க.....

“ஏன் நான் உன்னை என்ன பண்ணிடுவேன்?” அஷ்வினின் கேள்விக்கு வினோதா பதில் சொல்லாமல் அமைதியாக நிற்க...

“சரி நீயும் இரு விக்னேஷ்.” என்றதும், இருவரும் மீண்டும் அமர்ந்தனர்.

“விக்னேஷ் என்னோட ப்ரண்ட், அதனால அவன் என்னோட இருக்கிறது எனக்கு ஒன்னும் பிரச்சனை இல்லை... உனக்குச் சங்கடமா இருக்குமேன்னு நினைச்சேன்.” அஷ்வின் கெத்தாகச் சொன்னாலும், அவனுக்கு விக்னேஷை வைத்துக்கொண்டு பேச ஒருமாதிரி தான் இருந்தது.

அதைப் புரிந்து கொண்ட விக்னேஷ், தன் விரல்களால் காது இரண்டையும் பொத்திக்கொண்டு “இப்ப சொல்லுடா...” என்றான். “வினு, நீ லவ் சொல்லும் போது... எனக்கு எங்க வீட்டை நினைச்சு யோசனையா இருந்தது. லவ் பண்றேன்னு சொன்னாலும் எங்க வீட்ல ஒத்துக்க மாட்டாங்க... எதுக்கு எல்லார் மனசும் கஷ்ட்டபடனும்னு நினைச்சேன். ஆனா... இப்ப என்ன பிரச்சனை வந்தாலும் சமாளிச்சிடலாம்ன்னு தோணுது.” என்று ஒரு நொடி பேச்சை நிறுத்தியவன்,

“I love you. நாம கல்யாணம் பண்ணிக்கலாமா...” அஷ்வின் மனதை திறந்து வினோதாவை விரும்புவதைச் சொல்லி விட்டான்.

என்ன தான் காதை மூடி இருந்தாலும், அவன் பேசியது விக்னேஷுக்கு கேட்டு விட... அவன் சந்தோஷமாகச் சிரிக்க... வினோதா மட்டும் எந்த உணர்ச்சியும் காட்டாமல் அமைதியாக இருந்தாள்.

“என்ன வினு? அமைதியா இருக்க...” அஷ்வின் அவளைப் பார்க்க...

“நீங்க ரொம்ப லேட் அஷ்வின். நிறைய நாள் நீங்க வருவீங்களான்னு எதிர்பார்த்திருக்கேன். அப்பவெல்லாம் வரலை.. இப்ப எனக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகிடுச்சு. இப்ப போய் இப்படிக் கேட்கிறீங்களே...” வினோதா அஷ்வின் தலையில் குண்டை போட... அவன் அதிர்ந்து போய் இருந்தான்.

அவனால் வினோதாவை வேறு ஒருவருடன் நினைத்து பார்க்கவே முடியவில்லை... எனக்குத் தான் வினு, நான் யாருக்கும் அவளை விட்டு தர மாட்டேன். இப்படித் தான் அவன் மனதில் ஓடிக்கொண்டு இருந்தது. இப்படித் தானே அவளுக்கும் இருந்திருக்கும். இவன் அவளைப் பற்றி அப்போது நினைத்தானா....

“டேய் ! சும்மா சொல்றாடா.... இந்தப் பொண்ணுங்க இருக்காங்க பாரு... நாம அவங்களைப் பார்க்கிற வரை நம்மைச் சுத்தி வருவாங்க... பார்க்க ஆரம்பிச்சிட்டோம்ன்னு தெரிஞ்சது... நம்மைச் சுத்த விடுவாங்க. ஆர்ச்சனாவும் அப்படித்தான்.” விக்னேஷ் அனுபவத்தில் பேச....

அஷ்வின் அப்படியா என்பது போல் வினோதாவை பார்க்க... “நான் சொல்றது உண்மை தான்... வேணா போட்டோ பாருங்க.” என்ற வினோ தன் செல்லில் எதையோ தேடினாள்.

“அவர் பேரு ஜீஜு. எங்க சொந்தக்காரர் தான். வரதட்சனை எதுவும் கேட்கலையா... அதனால எங்க வீட்ல உடனே நிச்சயம் பண்ணிட்டாங்க. நான் அவர்கிட்ட கேட்டுட்டேன், அவர் வேற யாரையும் லவ் பண்ணலையாம். அதனால ஓடிப் போகமாட்டார்.” அஷ்வினை பார்த்துக் குத்தலாகச் சொல்லிக்கொண்டே வினோதா தன் செல்லை அவர்கள் பக்கம் நீட்டினாள் “இவர் தான் ஜீஜு.” என்றபடி.

வாங்கிப் பார்த்த இருவருக்கும் சிரிப்பை அடக்கவே முடியவில்லை... “இவரா...” என்றதும், “இவரைத் தெரியுமா உங்களுக்கு...” வினோதா அவர்களைப் பதட்டத்துடன் பார்க்க...

“ஜீஜுன்னு பேரை கேட்டதும், நான் கூட எதோ நாய் குட்டி ரேஞ்சுக்கு இருப்பாருன்னு நினைச்சேன்டா... ஆனா காண்டாமிருகத்தோட குட்டியை காமிச்சு மாப்பிள்ளைன்னு சொல்றாளே....” என்ற விக்னேஷ் தொடர்ந்து,

“வினோ, இவர் கூட உன் கல்யாணம் நடந்தா... நீ முதல் ராத்திரி முடிஞ்சு முழுசா வருவியா... இல்லை உன்னைக் கூடையில அள்ளிட்டு வரணுமா....” என்றான். உண்மையிலேயே அந்த மாப்பிள்ளை பீம் பாய் மாதிரி தான் இருந்தான். அவன் முன்பு வினோதா கொசு போல இருப்பாள்.

அவன் சொன்னது புரியாமல் “ஏன் அப்படிச் சொல்றீங்க?” வினோதா கேட்க...

அவன் தான் லூசு மாதிரி பேசுறான்னு பார்த்தா... இவ விளக்கம் வேற கேட்கிறா என்று நினைத்த அஷ்வின் “இப்ப ரொம்ப முக்கியம். இவன் எல்லாம் ஒரு ஆளுன்னு... இவனைப் போய் நீ கல்யாணம் பண்ணப் போற...” அவன் தன் எரிச்சலை மறைக்காமல் காட்ட...
“உருவத்தை வச்சு யாரையும் எடை போடதீங்க. அவர் ரொம்ப நல்லவர், ரொம்பத் திறமையானவர். தன்னைச் சுத்தி இருக்கிறவங்களை எப்பவும் சிரிக்க வைப்பார் தெரியுமா...” வினோதா தன் வருங்காலக் கணவனுக்குப் பரிந்து பேச... கேட்ட அஷ்வினுக்கு எதாவது சுவற்றில் சென்று முட்டிக்கொள்ளவேண்டும் போல் இருந்தது.

“இங்கப்பாரு வினு... உனக்கு என்னோட தான் கல்யாணம் நடக்கும். நான் எங்க அம்மா கிட்ட பேசிட்டு, உங்க வீட்டுக்கு பொண்ணு கேட்டு வருவேன். அதுவரை பொறுமையா இரு... எதாவது இது மாதிரி உளறினா கொன்னுடுவேன்.” அஷ்வின் வினோதாவை எச்சரித்துவிட்டு எழுந்து செல்ல...

அவனோடு செல்வது போல்... சிறிது தூரம் சென்று விட்டு திரும்ப வந்த விக்னேஷ் “நீ பொய் தான சொல்ற வினோ.... இந்த மாதிரி யாருமே இல்லை தான...” அவன் ரகசியமாக வினோதாவின் அருகே சென்று கேட்க...

“இருக்காரு.... சந்தேகமா இருந்தா... நீங்க என் கல்யாணத்தில வந்து பாருங்க.” வினோதா அலட்சியமாக அவனைப் பார்த்து விட்டு செல்ல...

விக்னேஷ், டேபிளில் இருந்த குளிர்ந்த நீரை எடுத்து... மொத்தமாக வாயில் ஊற்றிக் கொண்டான்.

அஷ்வின் விக்னேஷுக்காக வெளியில் காத்திருக்க... அவனைக் கண்டுகொள்ளாமல் வினோதா சென்றாள். அவனருகில் வந்த விக்னேஷ் "இப்ப என்ன டா பண்றது? அவ லவ் சொல்லும் போது நீ ஒத்துக்கலை... இப்ப நீ சொல்லும் போது.... அவளுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகி இருக்கு." என்றான் கவலையாக...

"நிச்சயம் தான ஆகி இருக்கு.... எங்க வீட்ல பேசிட்டு, அவ வீட்ல பேசுவோம். எதாவது வேண்டாம்ன்னு சொல்லட்டும்... அவளைத் தூக்கிட மாட்டேன்." அஷ்வின் சொன்னதைக் கேட்டு திடுகிட்ட விக்னேஷ் "டேய், தூக்குகிறதுன்னா... நம்ம சினிமா அகராதியில ஆளை காலி பண்றதுன்னு அர்த்தம் டா... நீ எந்த அர்த்தத்தில டா சொல்ற?...." அவன் பயந்து போய்க் கேட்க...

"இவன் வேற.... கல்யாணம் பண்ண தாண்டா சொன்னேன்..." அஷ்வின் அவன் நெஞ்சில் பால் வார்க்க....
"நீ இறங்கினா பள்ளத்துக்குப் போற... அதே போல ஏறினா உச்சியில எறிக்கிற... நடுவுலையே இருக்க மாட்டியா டா.... வினோகிட்ட திரும்பப் பேசு... அவசரப்பட்டு எதுவும் முடிவு பண்ணிடாத..." விக்னேஷ் சொல்ல... அஷ்வின் சரி என்பதாகத் தலை அசைத்தான்.

அவன் வீட்டிற்குச் சென்ற போது... அங்கே ரங்கநாயகி ஞாயிறு அன்று பெண் பார்க்க போகவேண்டும் என்று வீட்டினரிடம் பேசிக்கொண்டு இருந்தார்.

அங்கே நின்றால்... கோபத்தில் எதாவது பேசி விடுவோமோ என்ற அச்சத்தில் அஷ்வின் விறுவிறுவென்று படி ஏறி தன் அறைக்கு வந்துவிட்டான்.

நேற்று இரவு வேறு உறக்கம் இல்லை... இன்று ஏற்பட்ட மனக்குழப்பம் என்று அவனுக்குத் தலையை வலிக்க ஆரம்பித்தது. அந்த நேரம் பார்த்து ரங்கநாயகி டிபன் காபியோடு அவன் அறைக்கு வர... அவர் என்ன பேச போகிறார் என்று தெரியுமென்பதால்...

அவர் பேசும் முன் "அம்மா, ப்ளீஸ்... எனக்கு ரொம்பத் தலை வலிக்குது. எதுனாலும் நாளைக்குப் பேசிக்கலாம்." என்ற அஷ்வின் காபீயை மட்டும் எடுத்து குடித்து விட்டு, தன் மெத்தையில் போய்ப் படுத்துக்கொண்டான்.

"இதுக்குத்தான் காலையிலேயே சொன்னேன், நீ தான் கேட்காம ஆபீஸ் போன... சரி தூங்கி எழுந்து சாப்பிட வா..." என்றபடி ரங்கநாயகி கீழே செல்ல... உண்மையிலேயே தூங்கி எழுந்தால் தான் தெளிவு பிறக்கும் என்பதால்... அஷ்வின் எல்லாவற்றையும் ஒதுக்கி விட்டு உறங்க முயன்றவன் அதில் வெற்றியும் பெற்றான்.

அஷ்வின் இரண்டு மணி நேரம் சென்று கண் விழித்த போது மணி எட்டரை ஆகி இருந்தது. அவன் முகம் கழுவி விட்டு வந்த போது அவனுக்கு நன்றாகப் பசித்தது. மதியம் நடந்த கூத்தில் சாப்பிடவே இல்லை...

அறையை விட்டு அவன் வெளியே வந்த போது மாடி ஹாலில் அருணும், ரகுவும் உட்கார்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தனர். டிவியில் எதோ காமெடி நிகழ்ச்சி ஓடிக்கொண்டு இருந்தது.

கீழே சென்றால் எங்கே அவன் அம்மா திருமணத்தைப் பற்றிப் பேச்சை எடுத்து விடுவார்களோ என்ற கவலையில், அஷ்வினும் அவர்களுடன் அங்கயே உட்கார்ந்து விட்டான். கடனே என்று டிவி பார்த்துக் கொண்டிருந்தவன், காட்சி முடிந்ததும் வந்த வர்ணனையாளரை பார்த்ததும் திடுகிட்டான்.

வினோ இன்று யாரை மாப்பிள்ளை என்று காட்டினாளோ... அவன் தான் அந்த நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கிக் கொண்டிருந்தான். அவனோடு ஒரு பெண்ணும் இருந்தாள். வினோ சொன்னது பொய்யோ என்ற சந்தேகம் அஷ்வினுக்கு வந்தது. “இவனுக்குக் கல்யாணம் ஆகிடுச்சா...” அஷ்வின் அருணிடம் கேட்க...

டிவியில் இருந்த பெண்ணைத் தான் கேட்கிறான் என்று நினைத்த அருண் “ஆகிடுச்சு... இந்த ப்ரோக்ராம்ல எல்லாம் கல்யாணம் ஆனவங்க தான் வராங்க... நம்ம நாட்டில இளம் பொண்ணுங்களுக்குப் பஞ்சமா என்ன? ஏன் இப்படி ஆன்டிஸ் வச்சு ப்ரோக்ராம் பண்றாங்க.” அவன் சோகமாகச் சொல்ல... அஷ்வின் சிரித்துவிட்டான். அவன் கவலை அவனுக்கு....

“டேய் ! நான் அந்தப் பொண்ணைக் கேட்கலை டா.... பக்கத்தில நிற்கிற அந்த ஆளை கேட்கிறேன்.” அஷ்வின் விளக்கியதும்,

“ஓ... அவனா அவனுக்கு ஆகிடுச்சான்னு தெரியலையே...” என்றான்.

அஷ்வின், விக்னேஷை அழைத்து அவனிடம் வினோதாவின் செல் நம்பரை வாங்க... அவன் ஏன் என்று கேட்டதும் “காமெடி சேனல் பாரு.. தெரியும்.” என்றபடி செல்லை வைத்துவிட்டான்.

அஷ்வின் வினோதாவை அழைக்க... அஷ்வின் நம்பர் ஏற்கனவே அவளிடம் இருந்ததால்... அவன் எண்ணை பார்த்ததும் சற்று பதட்டமானவள் போன்னை எடுத்து “என்ன அஷ்வின் இந்த நேரத்தில?” என்றாள்.

அவளுக்குத் தன் நம்பர் கூடத் தெரியுமா என்று வியந்தவன் “சும்மா தான் கால் பண்ணேன். உன் உட்பி என்ன பண்றாரு?” என்றான் நேரடியாக...

அஷ்வின் திடிரென்று அழைத்துக் கேட்டதும், பதட்டத்தில் சட்டென்று பொய் சொல்ல

வரவில்லை... அவள் திணறுவதைப் பார்த்து “டாக்டரா....” அஷ்வின் இழுக்க வினோதா “ம்ம்...” என்றாள். அதற்குள் அஷ்வின் “இன்ஜினியரா...” என்றதும், அதற்கும் “ம்ம்...” என்றாள்.

“பரவாயில்லை... உன்னோட ஆள் சூப்பர் மேன் தான். அதனால் தான் டிவியில எல்லாம் காட்றாங்க போல....” அஷ்வின் சொன்னதும், தான் சொன்ன பொய் அவனுக்குத் தெரிந்து விட்டது என்று வினோதா புரிந்துகொண்டாள்.

அவள் திட்டமிட்டு அஷ்வினிடம் அப்படிப் பேச வேண்டும் என்று பேசவில்லை. சும்மா... அவன் கேட்டதும் ஒத்துக்கொள்ள வேண்டுமா என்ற வீம்பில் ஆரம்பித்தது. வாட்ஸ் அப்பில் வந்த புகைப்படத்தை எடுத்து இவன் தான் மாப்பிள்ளை என்று காட்டிவிட்டாள். அவள் நேரம் அஷ்வினுக்கு அவன் யாரென்று தெரியவில்லை....

அவள் சிந்தனையில் இருந்த போதே... “வினு, போதும் விளையாட்டு. அம்மா எனக்குத் திரும்பப் பொண்ணு பார்த்திருகாங்க. நான் அவங்ககிட்ட நம்மைப் பத்தி பேசணும். நீ ஓகே சொன்னா தான் பேச முடியும். ஓகே வா....” அஷ்வின் கேட்க வினோதா மௌனம் சாதித்தாள்.

அவள் என்ன நினைக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். இதே ஐஸ்வர்யாவுடன் அவன் நிச்சயம் நடந்திருந்தால்... அவன் தன்னைத் தேடி வந்திருப்பானா என்ற குமுறல்... அது என்றும் அவள் மனதை விட்டு நீங்காது.

“சாரி வினு.... நடந்ததை மாத்த முடியாது. தப்பு என் மேல தான். நான் தான் எதையெதையோ நினைச்சுக் குழப்பிகிட்டேன். இனி உன்னை யாருக்காகவும் விட்டு கொடுக்க மாட்டேன்.”

“அம்மா கிட்ட பேசி அவங்க சம்மதம் வாங்கின பிறகு உன்கிட்ட லவ் சொல்லி இருக்கலாம். ஆனா நான் அப்படிப் பண்ணலை.... உன்கிட்ட லவ் சொல்லிட்டு தான் அம்மா கிட்ட பேசப்போறேன்.

எவ்வளவு எதிர்ப்பு வந்தாலும், நம்ம கல்யாணம் நிச்சயம் நடக்கும் வினு ப்ளீஸ் புரிஞ்சிக்கோ...” என்றான்.

அஷ்வின் இவ்வளவு எல்லாம் பேச வேண்டியதே இல்லை... வினோதா ஒருநாளும் அஷ்வின் வேண்டாம் என்று சொல்லமாட்டாள். அவன் மீது அவ்வளவு அன்பு வைத்திருந்தாள்.

“சரி ரொம்பக் கெஞ்சுறீங்க... அதனால ஓகே.” அவள் போனால் போகிறது என்பது போல் பேச.... அஷ்வினுக்கு அவளைப்பற்றித் தெரியும் என்பதால்... சிரித்து விட்டான்.

“உங்க அம்மா நம்ம விஷயம் தெரிஞ்சா ரொம்பத் திட்டுவாங்களா...” வினோதா பயத்துடன் கேட்க... “பின்ன கொஞ்சுவாங்களா.... நான் இப்பவே சொல்லிடுறேன். நம்ம கல்யாணம் ரொம்ப ஈஸியா நடந்திடாது. எங்க அம்மா ரொம்பப் பேசுவாங்க உன்னையும் உன் குடும்பத்தையும் பத்தி. நீ ஸ்ட்ராங்கா இருக்கணும் வேற வழி இல்லை.”

“நான் யாருக்கும் சேதாரம் இல்லாம நம்ம கல்யாணம் நடக்க முயற்சி பண்றேன்.” சொன்ன அஷ்வினுக்கே அதில் நம்பிக்கை இல்லை... அப்போது கீழே இருந்து ரங்கநாயகி அவனை அழைக்க... வினோவிடம் சொல்லிவிட்டு கீழே சென்றான்.

போன்னை வைத்த வினோதா அவ்வளவு பயந்து போய் இருந்தாள். அவள் இதயத்தின் துடிப்பு. அவளுக்கே நன்றாகக் கேட்டது. அதே சமயம் அஷ்வினை யாருக்காகவும் விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற உறுதியும் பிறந்தது.

பகுதி – 9

சாப்பிடும் போது வரதராஜன் அஷ்வினின் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிப் பேச .... அவனும் அவர் கேட்டதற்குப் பதில்

சொல்லிக்கொண்டிருந்தான். மற்றவர்களும் அவர்கள் பேசுவதைக் கேட்டபடி இருந்தனர். ரங்கநாயகி எப்போது இருவரும் பேசி முடிப்பார்கள் என்பது போல் பார்த்திருந்தார்.

சாப்பிட்டதும் எல்லோரும் ஹாலுக்கு வர... அஷ்வின் மட்டும் அங்கே உட்காராமல்.... மாடியை நோக்கி சென்றான்.

“அஷ்வின், இங்க வா... உன்னோட கொஞ்சம் பேசணும்.” ரங்கநாயகி அழைக்க.... வேறு வழியில்லாமல் அவனும் வந்து உட்கார்ந்தான்.

“அஷ்வின் உனக்கு ஒரு நல்ல வரன் வந்திருக்கு....” ரங்கநாயகி ஆரம்பிக்க.... அஷ்வின் பொறுமையில்லாமல் எழுந்தே விட்டான்.

“அம்மா ப்ளீஸ்... நான் திரும்ப ஒரு டிராமா பார்க்க எல்லாம் ரெடியா இல்லை... தயவு செஞ்சு விட்டுடுங்க.”

“இது ரொம்ப நல்ல இடம் அஷ்வின், பொண்ணு ஆடிட்டர் உனக்குப் பிடிக்கும்.” ரங்கநாயகி எப்படியும் மகனை ஒத்துக்கொள்ள வைக்கும் முடிவில் இருக்க....

“அம்மா, என்னைப் போர்ஸ் பண்ணாதீங்க. எனக்கு எப்ப கல்யாணம் பண்ணிக்கத் தோணுதோ... அப்ப நானே உங்ககிட்ட வந்து சொல்றேன். இப்ப என்னை விட்டுடுங்க.” என்றபடி அஷ்வின் அங்கிருந்து சென்றே விட்டான்.

என்ன இவன்? இப்படிப் பேசுறான் என்பது போல் ரங்கநாயகி பார்க்க... “நிச்சயம் வரை வந்து கல்யாணம் நின்னது அவனுக்கும் கஷ்ட்டமா தான் இருக்கும். விடு கொஞ்ச நாள் போகட்டும்.” வரதராஜன் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே சென்றார்.

ஒருவேளை ஐஸ்வர்யாவை மறக்க முடியாமல் இப்படிச் சொல்கிறானோ... அவனுக்கு அவளை ரொம்பவும் பிடித்துவிட்டதோ.... படுபாவி என்

பையனை இப்படி ஏமாத்திட்டாளே என்று ரங்கநாயகியின் மனம் கொதிக்க ஆரம்பித்தது.

மறுநாள் காலையிலாவது சரி ஆகி இருப்பான் என்று நினைத்து ரங்கநாயகி அஷ்வினை நோட்டம் விட... அவன் மடிக்கணினி எடுத்து வைத்திக்கொண்டு அதில் முழ்கி விட்டான். அவன் இறுகிய முகம் வேறு... அவரை எதுவும் பேசமுடியாமல் செய்தது.

ஞாயிறு அன்று மாலை ஹேமாவின் பெண் அனுஷ்காவின் பிறந்தநாள். ஹேமா வருந்தி அழைத்ததால்... வினோதா அவர்கள் வீட்டிற்கு வந்திருந்தாள்.

“வேற யாரும் இன்னும் வரலையா...” வினோதா வீட்டை சுற்றிப் பார்த்துக்கொண்டே கேட்க...

“வேற யாரையும் கூப்பிடலை... அக்கம் பக்கம் இருக்கிற குழந்தைங்க மட்டும் தான். அவங்க அஞ்சு மணிக்கு தான் வருவாங்க.” என்ற ஹேமா சமையல் அறைக்குள் செல்ல...

வினோதா அனுஷ்காவை பார்த்து புன்னகைத்தவள் “உன் ப்ரிண்ட்ஸ் வராங்க.... ஆனா இன்னும் எதுவும் பண்ணாம இருக்கு...” வீட்டை அலங்கரிக்கவில்லையே என்ற அர்த்தத்தில் அவள் கேட்க....

அதைப் புரிந்து கொண்ட அனுஷ்கா “யாரு பண்றது? தாத்தாக்கு முடியாது அம்மாவுக்கும் பாட்டிக்கும் தெரியாது. எங்க அப்பா இருந்திருந்தா பண்ணி இருப்பார்.... அவர் தான் இங்க இல்லையே...” என்றவளின் குரலில் ஏமாற்றம், வருத்தம், கோபம் எல்லாமே இருந்தது.

அதைக் கவனித்தாலும் காட்டிக்கொள்ளாத வினோதா “அதுக்குத்தான் நான் வந்திருக்கேன்... வா நாம ரெண்டு பேரும் சேர்ந்து பண்ணலாம்.” என்றதும், அனுஷ்காவிற்கும் உற்சாகம் தொற்றிக்கொள்ள....

“நிஜமாவா அக்கா... வெரி ஹாப்பி.... தேங்க்ஸ்...” என்றபடி துள்ளி குதித்து உள்ளே சென்றவள், வரும் போது அவள் கையில் வீட்டை அலங்கரிக்கத் தேவையான அத்தனையும் இருந்தது.

இருவருமாகச் சேர்ந்து அரைமணியில் ஹாலை அழகாக அலங்கரிக்கச் சமையல் அறையில் இருந்து வந்து பார்த்த ஹேமா அசந்துவிட்டாள். “ரொம்பத் தேங்க்ஸ் வினோ.... இதெல்லாம் எப்பவோ வாங்கினது. எனக்கு இதெல்லாம் பண்ண தெரியாது. அதனால அப்படியே போட்டு வச்சிருந்தோம். நீ அழகா பண்ணிட்டியே...” அவள் வியக்க...

“நானும் அணிஷ்காவும் சேர்ந்து தான் பண்ணோம். இனி நீ பெரிய பொண்ணு ஆகிட்ட அனுஷ்கா... அடுத்ததடவை நீயே உன் ப்ரிண்ட்ஸ் கூடச் சேர்ந்து இன்னும் அழகா பண்ணிடனும்.” வினோ புகழ்வது போல் எதார்த்தத்தை எடுத்து சொல்ல... அதைக் கேட்ட அனுஷ்காவுக்கு மிகவும் சந்தோஷம் “கண்டிப்பா ஆன்டி...” என்றவள், பிறந்தநாள் விழாவுக்குத் தயாராக உள்ளே சென்றாள்.

அனுஷ்காவின் நண்பர்கள் வந்ததும், வினோதா அவர்களுக்குச் சில விளையாட்டுப் போட்டிகள் வைக்க... அனுஷ்கா அதில் இன்னும் உற்சாகமாகி விட....தன் தந்தையைப் பற்றிய ஏக்கம் கூட அவளுக்குப் பின்னுக்குச் சென்றுவிட்டது. எல்லோரும் சந்தோஷமாக விளையாட்டில் கலந்து கொள்ள... அதன்பிறகு கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடிவிட்டு, வினோ வீடு திரும்ப எட்டு மணி ஆகிவிட்டது.

வரும் வழியெல்லாம் அனுஷ்காவை பற்றியே வினோதா நினைத்துக்கொண்டு வந்தாள். அந்தக் குழந்தையின் மனதில் தந்தையைக் குறித்து எவ்வளவு ஏக்கம் இருக்கும். பெரியவர்கள் செய்யும் தவறால் பாதிக்கப்படுது ஒன்றும் தெரியாத சின்னக் குழந்தைகள் தான். ஒரு தந்தையின் இடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது. எப்படி

ஒரு குழந்தைக்குத் தாய் இன்றியமையாதவரோ... அதுபோல் தான் தந்தையும். வினோவுக்கு மனம் ஏனோ பாரமாக இருந்தது.

அஷ்வினுக்கு இரண்டு நாட்களைக் கடத்துவது பெரும்பாடாக இருந்தது. திங்கள் அன்று தப்பித்தால் போதும் என்று அலுவகம் வந்தவன், நேராக வினோதாவை பார்க்க சென்றான்.

“ஹாய் வினு.....” என்றவனை... வீட்டில் அவர்களைப் பற்றிச் சொல்லியிருப்பான் என்ற எண்ணத்தில் வினோதா ஆவலாகப் பார்க்க.... அவள் எப்போதும் அப்படித்தான் அவனைப் பார்ப்பாள் என்பதால்.... அவனுக்கு வித்தியாசமாக ஒன்றும் தோன்றவில்லை.

“அப்புறம் வீகென்ட் எப்படிப் போச்சு? என்ன பண்ண?” அஷ்வின் கேள்விகளாகக் கேட்க.... வினோதா பதில் சொன்னாலும், அவள் குரலில் சுரத்தே இல்லை... அதைக் கவனித்தவன், என்ன என்பது போல் அவளைப் பார்க்க....

“உங்க வீட்ல பேசிடீங்களா....” என்றவளின் கண்களில் அவ்வளவு தவிப்பு.

“ஏன் உனக்கு அவசரம்? எங்க அம்மா எண்ணை அடிக்கிறதை பார்க்க உனக்கு அவ்வளவு ஆசையா? மெதுவா சொல்லிக்கலாம்.” என்றதும், வினோவின் முகம் வாட அதைக் கவனித்தவன்,

“இப்பவே சொன்னா.... எங்க அம்மா முடியாதுன்னு சொல்லி நமக்கு மூடு விழா நடத்திடுவாங்க. கொஞ்ச நாள் கல்யாணமே வேண்டாம்ன்னு சொன்னா.... யாரையாவது கல்யாணம் பண்ணி தொலைடான்னு சொன்னாலும் சொல்லலாம்.” அவன் கேலியாகச் சொல்ல... வினோ அவனை முறைத்தாள்.
“இன்னும் லவ் பண்ணவே ஆரம்பிக்கலை... அதுக்குள்ள உனக்குக் கல்யாணம் பண்ணிக்கனுமா.... வா முதல்ல லவ் பண்ணுவோம்.” அஷ்வின் வினோவின் கைபிடித்து

இழுக்க... அவள் அவன் இழுத்த இழுப்பிற்கு அவன் பின்னே சென்றாள்.

அஷ்வின் தன் பைக்கை எடுக்க... வினோதா அதில் ஏறாமல்... தன் கைபேசியில் இன்று தான் அலுவலகம் வரவில்லை என்று அழைத்துச் சொல்ல... அதன் பிறகு தான் அஷ்வினுக்குத் தானும் விடுப்பு சொல்லவில்லையே என்பது நினைவுக்கு வர.... விக்னேஷுக்கு தான் இன்று அலுவலகம் வரவில்லை என்று தகவல் மட்டும் அனுப்பினான்.

இருவரும் பைக்கில் கிளம்பி சிறிது தூரம் வந்ததும், வண்டியை நிருத்திவிட்டு அஷ்வின் யோசிக்க.... எதையும் மறந்து விட்டு வந்து விட்டானோ என்று நினைத்த வினோதா அவனைக் குழப்பமாகப் பார்க்க....

“இல்லை கிளம்பி வந்துட்டோம், ஆனா எங்க போறது?” அஷ்வின் கேட்க, வினோதாவிற்கும் எங்கே செல்வது என்று தெரியவில்லை?... அவன் கூப்பிட்டதும் எங்கே என்று யோடிக்காமல் கூட வந்துவிட்டாள்.

அப்போது மணி ஒன்பது தான். சினிமா தியேட்டர், மால் எதுவும் திறந்திருகாது. இந்த வெயில பீச்க்கு எப்படிப் போறது? அஷ்வின் வாய்விட்டே புலம்ப... “பேசமா ஆபீஸ் போய்டலாம்.” என்றாள் வினோதா.

சிறிது நேரம் யோசித்த அஷ்வின் “சரி ஏறு.... உன்னை ஒரு இடத்துக்குக் கூடிட்டு போறேன்.” என்றான். வினோவும் எங்கோ போனால் சரி என்று அவன் பின்னே அமர.... அஷ்வின் அவன் தாத்தா பாட்டி வீட்டில் சென்று வண்டியை நிறுத்தினான்.

வினோவிற்கு அந்த வீட்டை பார்த்ததும் ஒன்றும் புரியவில்லை... இது அஷ்வினோட வீடோ என்று நினைத்து பயந்துவிட்டாள். அஷ்வின் அவளை உள்ளே அழைத்துக்கொண்டு செல்ல.... வினோதா பயந்தபடி அவன் பின்னே சென்றாள்.

டிராபிக்கில் அவர்கள் அங்கே சென்று சேர்ந்த போது பத்தரை மணி ஆகி இருந்தது. அதனால் வீட்டில் பெண்கள் மட்டும் தான் இருந்தனர். திடிரென்று அஷ்வின் ஒரு பெண்ணோடு வந்து நின்றதில், அவன் பாட்டியும், சித்திகளும் அதிர்ந்து போய் இருந்தாலும், அதைக் காட்டிக்கொள்ளாமல் அவர்களை வரவேற்றனர்.

“வா அஷ்வின், வாம்மா...” என்றபடி பாட்டி அவர்களைப் பார்த்து புன்னகைக்க... மற்றவர்களும் அவர்களைப் பார்த்து புன்னகைத்தனர். வினோதாவிற்கு அவர்களை யார் என்றே தெரியவில்லை... இருந்தாலும் அவளும் அவர்களைப் பார்த்து புன்னகைத்து வைத்தாள். யார்? என்ன? ஏது? என்று எதுவும் சொல்லாமல் அழைத்து வந்த அஷ்வின் மீது கோபமாக வந்தாலும், அவன் மீது நம்பிக்கையும் இருந்ததால் அமைதியாக இருந்தாள்.

யார் இந்தப் பெண்? என்ற கேள்வி இருந்தாலும், வினோதாவின் குழந்தைதனமா முகத்தையும், அவள் அமைதியான தோற்றத்தையும் வைத்து பாட்டிக்கு மனதிற்குள் திருப்திதான்.

“பாட்டி இவ வினோதா... உங்க பேத்தி.” அஷ்வின் உறவுமுறை சொல்லி அறிமுகப்படுத்த.... அவன் சொன்ன விதத்தில் அனைவரும் சிரித்து விட...

“எனக்கே தெரியாம... எனக்கு இவ்வளவு பெரிய பேத்தியா... உங்க அப்பா கூடச் சொல்லலையே.... உன்னோட தங்கச்சியா...” பாட்டி நமட்டு சிரிப்புடன் கேட்க....

“தங்கச்சியா....” அஷ்வினின் முகம் அஷ்ட்ட கோணலாக.... அவனை ஓரக்கண்ணில் பார்த்த வினோதா சிரிப்பை அடக்கிக்கொண்டு நின்றாள்.

“ஐயோ பாட்டி ! பேரன் பொண்டாட்டி உங்களுக்குப் பேத்தி தான... அந்த அர்த்தத்தில சொன்னா...நீங்க வேற...” அஷ்வின் அசடு வழிய...

“ஓ... உங்க அம்மா உனக்குப் பொண்ணு பார்த்திட்டாளா.... சொல்லவேயில்லை... எப்ப நிச்சயம்?” என்றதும், அஷ்வினின் முகம் காற்று போன பலூன் போலச் சுருங்கிவிட...

“எல்லாம் உங்களுக்கு இப்பவே சொல்லனுமா.... போங்க போய்க் காபி கொண்டு வாங்க, தலைவலிக்குது.” கடுகடுத்த அஷ்வின், தரையில் விரித்திருந்த பாயில் சென்று அமர... வினோதா அதே இடத்தில் அமைதியாக நின்றாள்.

அவளைக் கனிவாகப் பார்த்த பாட்டி “நீயும் போய் உட்காருமா.... வெயில்ல வந்தான் இல்ல... அது தான் எரிச்சலா இருக்கான்.” அவர் சொல்ல... வினோ சென்று பாயில் அமர்ந்தாள்.

அவன் சித்திகள் அங்கே இருப்பதைப் பார்த்த அஷ்வின் “வினோ, இவங்க என்னோட பெரிய சித்தி தீபா. அவங்க என்னோட சின்னச் சித்தி ரேணுகா...” என்று அறிமுகபடுத்த... வினோதா அவர்களைப் பார்த்து புன்னகைக்க... அவர்கள் இருவரும் வினோதாவின் அருகே வந்து அமர்ந்தனர்.
பாட்டி காபியோடு வந்தவர், அதை அவர்களிடம் கொடுக்க “எங்க பாட்டி தாத்தா?..”
கேட்டுக்கொண்டே அஷ்வின் காபீயை கையில் எடுக்க...

“அவர் சாப்டிட்டு தூங்கிறார். இனி மதியம் தான் எழுந்திருப்பார். ஏன் கேட்கிற? அவர்கிட்டையும் உங்க பேத்தின்னு சொல்லி அவருக்கு அதிர்ச்சியில நெஞ்சு வலி வர வைக்கவா....” பாட்டி கேலி செய்ய.... கேட்டுக்கொண்டிருந்த வினோதாவிற்குப் புரை ஏற.... அஷ்வின் அவள் தலையில் மெதுவாகத் தட்டினான்.

“எனக்குத் தெரியாதா பாட்டி.... நான் அப்படியெல்லாம் பண்ண மாட்டேன். நீங்க எல்லாம் மட்டும் தான் இந்த நேரத்தில வீட்ல இருப்பீங்கன்னு தெரிஞ்சு தான் வினுவை இங்க கூடிட்டு வந்தேன்.” என்றான்.

“இப்படித்தான் உங்க அம்மாகிட்டயும் இவளை கூடிட்டு போய்...உங்க மருமகன்னு சொல்லப்போறியா...” பாட்டி கேட்க....

“சொல்லனும்ன்னு ஆசை தான். ஆனா அம்மா வீட்டை விட்டுத் துரத்திடுவாங்களே.... அப்படி அம்மா துரத்தினா... இங்க தான் வருவேன்.” அஷ்வின் சிரித்துக்கொண்டே சொல்ல...

“உங்க அம்மாவுக்குச் சும்மாவே எங்களைக் கண்டா ஆகாது. நாங்க தான் உன்னைத் தூண்டிவிட்டு பார்கிறோம்ன்னு சொல்லுவா....” என்றவர், அஷ்வினின் முகம் வாடுவதைக் கவனித்து “சொன்னா சொல்லிட்டு போறா... உனக்கு இல்லாத உரிமையா.... நீ எப்ப வேணா இங்க வரலாம்.” என்றார் அழுத்தமாக.

காலையிலேயே சமையல் முடிந்திருந்தாலும், இவர்கள் வந்திருப்பதால் இன்னும் வேறு எதாவது செய்வோம் என்று தீபாவும் ரேணுகாவும் எழுந்து கொள்ள...

அதைக் கவனித்த அஷ்வின் “எங்க சமையல் பண்ண போறீங்களா.... வேண்டாம். இன்னைக்குத் தான் ரெண்டு பேரும் சேர்ந்து முதல் தடவை வெளிய கிளம்பினோம். எங்க போறதுன்னு தெரியலை?.... நீங்க எல்லாம் பார்க்கட்டும்ன்னு இங்க அழைச்சிட்டு வந்திட்டேன். அதனால மதியம் வெளிய சாப்டிக்கிறோம்.” அவன் சொல்ல... அவர்களும் சரி என்று அமர்ந்தனர்.

தீபாவும் ரேணுகாவும் வினோதாவிடம் அவளைப்பற்றி அவள் குடும்பத்தைப் பற்றிக் கேட்க... அவளும் அவர்கள் கேட்டதற்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தாள். அஷ்வின் அவன் பாட்டியின் மடியில் தலைவைத்து வசதியாகப் படுத்துக்கொண்டு, அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு இருந்தான்.
ரேணுகா சென்று அவர்களிடம் இருந்த புகைப்படங்களைக் கொண்டு வந்து காண்பிக்க...

வினோதா அவற்றை ஆர்வமுடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அஷ்வினுக்கு ஆறு வயது வரை இந்த வீட்டில் தான் அவனும் வளர்ந்தான் என்பதால்... அவனின் புகைப்படங்களும் அதில் இருந்தது. அஷ்வின், சிறு வயதில் இவர்களோடு சேர்ந்து இருந்ததால் தான், வளர்ந்த பின்பும் இவர்கள் மீது இருந்த பாசம் விடவில்லை.

சிறிது நேரம் சென்று எழுந்து கொண்ட அஷ்வின் "இரு வந்திடுறேன்." என்று வினோதாவை பார்த்து சொன்னவன், அவன் பைக்கை எடுத்துக்கொண்டு செல்ல.... என்ன இப்படி விட்டுட்டு போய்ட்டான்? என்று நினைத்த வினோதா, அவன் செல்வதைக் கலவரமாகப் பார்க்க...

"பயப்படாத.... பக்கத்தில எதாவது கடைக்குத் தான் போய் இருப்பான். இப்ப வந்திடுவான். அவன் தம்பி தங்கைகளுக்கு எதாவது வாங்க போய் இருப்பான்." என்றார் பாட்டி. பிறகு தான் வினோதாவின் பதட்டம் குறைந்தது.

"உனக்கு எங்க குடும்பத்தைப் பத்தி தெரியுமா..." பாட்டி கேட்டதற்கு வினோதா இல்லை என்றாள்.

"எனக்கு மொத்தம் ஒரு பொண்ணு மூன்னு பசங்க. பெரியவ தஞ்சாவூர்ல இருக்கா... அஷ்வின் அப்பா வரதராஜன் தான் ரெண்டாவது பையன். அவனுக்கு ராதிகா, அஷ்வின், அருண்ன்னு மூன்னு பிள்ளைங்க. அவனுக்கு அடுத்து ஹரிகரன், தீபாவோட புருஷன். அவங்களுக்கு ரெண்டுமே பசங்க. விஷ்ணு, கிருஷ்ணா.... கடைசிக் கிரிதரன் ரேணுகாவோட புருஷன். அவங்களுக்கு ரெண்டும் பொண்ணுங்க. அருந்ததி, அகல்யா."

"எல்லோரும் ஒரே குடும்பமா சந்தோஷமா தான் இருந்தோம். அப்ப கிரிதரனுக்கு மட்டும் தான் கல்யாணம் ஆகலை...உன் மாமியார் பணக்கார வீட்டு பொண்ணு. இங்க யார் கூடயும் ஒட்டமாட்டா...தினம் சண்டை சச்சரவு.... அப்பதான் எங்க கடமை எல்லாம் முடிஞ்சு குடும்பம் கொஞ்சம்

முன்னேறிச்சு.... அதுக்குள்ளே அவ புருஷனை கூடிட்டுத் தனிக்குடித்தனம் போய்ட்டா...”

“இந்த வீடு, நாங்க அந்தக் காலத்தில கட்டினது. இதை இப்போ இடிச்சு கட்ட கூடக் கைல காசு இல்லை... அப்பார்ட்மெண்ட் கட்டுறவன் வந்து இந்த இடத்தைக் கேட்டான். எங்க காலத்திற்குப் பிறகு குடுத்திட்டு, இங்கயே ஆளுக்கொரு வீடு வாங்கி இருந்துக்கோன்னு சொல்லி இருக்கோம்.” வினோதாவை யாரோ என்று நினைக்காமல் பாட்டி தன் மனதிலிருப்பதைப் பேச... அவள் அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

“உன் குடும்பத்தைப் பார்த்தாலும் சாதாரணக் குடும்பமா தான் தெரியுது. உங்க விஷயம் தெரிஞ்சா... உன் மாமியார் என்ன ஆட்டம் ஆடப் போறாளோ? எனக்கு அதை நினைச்சாலே பயமா இருக்கு.” பாட்டி கவலைப்பட... அதைக் கேட்டு வினோதாவிற்கு உள்ளுக்குள் குளிரெடுத்தது.

அவள் சற்றுமுன்பு தான், தன் மாமியாரை புகைப்படத்தில் பார்த்திருந்தாள். அவரின் உயரமும், அதற்கேற்ற உடற்கட்டும் என்று பார்க்கவே கம்பீரமாக இருந்தார். அவரின் தோற்றத்திலேயே பணக்காரத்தனம் நன்றாகத் தெரிந்தது.

அவளை ரொம்ப நேரம் கலங்க விடாமல் அஷ்வின் வந்து சேர்ந்தான். தான் வாங்கி வந்ததை, சித்திகளிடம் கொடுத்தவன் “அகல்யா இருந்திருந்தா நல்லா இருந்திருக்கும். வினுவை விடவே மாட்டா.... இன்னொரு நாள் அவ இருக்கும் போது வரோம்.” என்றவன் விடைபெற.... வினோதாவும் அவர்களிடம் சொல்லிக்கொண்டாள்.

தீபாவும், ரேணுகாவும் வினோவுடன் பேசிக்கொண்டே முன்னால் நடக்க... அஷ்வினும் பாட்டியும் பின் தங்கினர்.

“ரொம்ப நல்ல பொண்ணா இருக்கா அஷ்வின்.”

“ஆமாம் பாட்டி. அவளுக்கு என்னைப் பத்தி எதுவுமே தெரியாது. ஏன் என் பேரு கூடத் தெரியாது. என்னை எனக்காகவே விரும்பினா...” அஷ்வின் வினோவை பற்றிப் பெருமையாகச் சொல்ல...

“ஆனா.. இதெல்லாம் உங்க அம்மா கண்ணுக்குத் தெரியாது. அவ உன்னைப் பத்தி நிறையக் கனவுகள் கண்டிருந்தா.... இப்ப அதெல்லாம் நடக்காதுன்னு தெரிஞ்சா என்ன ஆகுமோ?” என்றார். அஷ்வினுக்கும் அந்தக் கவலை இருந்தது.

அஷ்வின் தன் அம்மாவை பற்றிய யோசனையில் வர.... வினோ அவனைக் கவலையாகப் பார்க்க... அவளுக்காகச் சட்டென்று தன்னை மாற்றியவன், புன்னகையுடன் அவளைப்பார்த்து போகலாமா என்றான்.

மதிய உணவிற்கு இருவரும் ஒரு பெரிய உணவகத்திற்கு வந்திருந்தனர். அஷ்வின் உணவுக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு வினோவின் பக்கம் நன்றாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டான்.

“கோபமா.... வெளியில போறோம்ன்னு சொல்லிட்டு தாத்தா பாட்டி வீட்டுக்கு கூடிட்டு போயிட்டேன்னு.” அஷ்வின் கேட்டதற்கு இல்லை என்று மறுப்பாகத் தலையசைத்த வினோதா “ஆனா... அங்க தான் போறோம்ன்னு சொல்லி இருக்கலாம். யாருன்னு தெரியாம முழிக்கிற மாதிரி பண்ணிடீங்க.” என்றாள்.

“சாரி, இனிமே அப்படிப் பண்ணலை...” அஷ்வின் வினோதாவின் இடது கையை எடுத்துப் பிடித்துக்கொள்ள.... அவள் சற்று பத்தட்டமானாள். அதைக் கவனித்தாலும் ,அஷ்வின் அவன் பிடித்த பிடியை விடாமல்... அவன் குடும்பத்தைப் பத்தி சொல்லிக்கொண்டிருந்தான்.

பாட்டி சொன்ன அதே கதை தான். ஆனால்... அஷ்வின் தன் அம்மாவை பற்றிக் குறையாக ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. வினோதாவும்

தனக்கு ஏற்கனவே தெரியும் என்பது போல் காட்டிக்கொள்ளவில்லை.

மாலை அஷ்வின் வினோதாவை அலுவலகம் முன்பு இறக்கி விட... அப்போது அவர்கள் எதிரில் விக்னேஷ் வந்து நின்றான்.

“அடப்பாவிங்களா.... ரெண்டு பேரும் ஆபீஸ் வரலையே... என்ன ஆச்சோன்னு கவலைப்பட்டா.... ரெண்டு பேரும் சேர்ந்து ஊர் சுத்திட்டு வரீங்க.”

“டேய் அஷ்வின், ரெண்டு நாள் முன்னாடி வரை... வினோவை பிடிக்காத மாதிரியே லுக் விடுவியே டா....”

“ஏன் ம்மா வினோ.... நீ எதோ ரோடு ரோல்லரை கல்யாணம் பண்றதா சொன்ன.... அதுக்குள்ளே அவனுக்குக் கல்த்தா குடுத்திட்டியா.... லவ் பண்றேன்னு சொல்லி முழுசா ரெண்டு நாள் கூட ஆகலை... அதுக்குள்ள ரெண்டு பேரும் சேர்ந்து ஆபீஸ் கட் அடிச்சிட்டு லவ்ஸ்.... இதெல்லாம் அடுக்குமா.... நியாயமா....” விக்னேஷ் புலம்ப....

“வினோ, இவனை உனக்குத் தெரியும்.” அஷ்வின் சிரிப்பை வாய்க்குள் அடக்கியபடி கேட்க.... வினோதா தெரியாது என்றாள்.

“டேய், வேணாம் கடுப்பாய்டுவேன், மரியாதையா ஓடிடுங்க...” விகேன்ஷ் டென்ஷனாக.... “ஓகே....” என்றபடி அஷ்வினும், வினோதாவும் அங்கிருந்து சென்றனர்.

அவர்களின் செயலில் விக்னேஷ் நொந்தே விட்டான். அவன் திரும்பி நடக்க.... அவன் முதுகில் பட்டென்று அடித்த அஷ்வின், அவன் தோளில் கைபோட்டு சிரிக்க.... அப்போது அங்கே வந்த வினோதா “தேங்க்ஸ் விக்னேஷ் அண்ணா....” என்றவள், “பாய் அஷ்வின்.” என்று சொல்லிவிட்டு சென்றாள்.

விக்னேஷ் அவள் போவதையே பார்த்திருந்தான். வினோதாவின் முகத்தில் அவ்வளவு தெளிவு...

அவனுக்குப் பார்க்கவே சந்தோஷமாக இருந்தது. அவனுக்குத் தெரியும் வினோதா அஷ்வினை உண்மையாகக் காதலிக்கிறாள் என்று....

பகுதி – 10

வீட்டிற்கு வந்த பிறகும் வினோதா எதோ கனவு உலகத்தில் இருப்பது போல் தான் இருந்தாள். அஷ்வின் நிஜமாகவே தன் காதலை சொன்னான்னா.... இன்று முழுவதும் அவனோடு தான் இருந்தோமா... இதெல்லாம் கனவு இல்லையே என்று, அவளே தன் கையைக் கிள்ளி பார்த்துக்கொண்டாள்.

அவள் வீட்டினரை பற்றி அவளுக்குப் பெரிதாகப் பயம் ஒன்றும் இல்லை... அவள் அண்ணன் விமலே மாலதியை காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டான். ஒரு திருமணத்தில் சந்தித்த இருவரும் காதல் கொண்டே மணந்து கொண்டனர். அதனால் அவள் காதலுக்குப் பெரிதாக எதிர்ப்பு வரும் என்று நினைக்கவில்லை. அப்படியே வந்தாலும் அந்த எதிர்ப்பை சமாளிக்கத் தைரியத்துடன் தான் இருந்தாள்.

அஷ்வினுக்கும் வினோதாவிற்கும் நாட்கள் இனிமையாகச் சென்றது. இருவரும் தினமும் காலை ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு தான் அலுவலகம் செல்வார்கள். அதே போல் மதியமும் இருவரும் சேர்ந்து தான் உணவு அருந்துவார்கள். மாலை முதலில் வினோதா கிளம்பிவிடுவாள், அதனால் அஷ்வின் வந்து அவளை வழி அனுப்பிவிட்டு செல்வான்.

அலுவலக நாட்களிலேயே எதாவது ஒருநாள் இருவரும் வெளியே சென்று வருவார்கள். சில நாட்கள் அப்படி வெளியே செல்லும் போது விக்னேஷ்ம் அர்ச்சனாவும் அவர்களோடு சேர்ந்து கொள்வார்கள். இரண்டு ஜோடியும் சேர்ந்து வெளியில் சென்றால்... ஒரே கலட்டாவாக இருக்கும்.

மூன்று மாதம் கடந்த நிலையில் ரங்கநாயகி தன் பொறுமையின் எல்லையைக் கடந்து இருந்தார். அஷ்வின் எப்போது திருமணத்தைப் பற்றிப் பேசினாலும் பிடிகொடுத்தே பேசாமல் தட்டி கழிப்பதிலேயே குறியாக இருந்தான். அவரும் வந்த சம்பந்தத்தை விடாமல்... அவர்கள் வீட்டில் எதோ சொல்லி சமாளித்தபடி இருந்தார். இனியும் இப்படியே விட முடியாது அஷ்வினிடம் இன்று இரண்டில் ஒன்று பேசிவிடுவது என்ற முடிவில் இருந்தார்.

ராதிகாவை அவள் வீட்டில் விட்டுவிட்டு வந்த அஷ்வின் அன்று இரவு உணவு அருந்திவிட்டு, அவன் அறைக்குச் செல்ல அவசரம் காட்டினான். அவன் வினோதாவுடன் போன்னில் பேசும் நேரம் அது.... ஆனால் ரங்கநாயகி இன்று அவனுடன் பேசிவிடும் முடிவில் இருந்ததால்.... அவர் தம்பி ராகவனையும் அவர் மனைவி சுபத்ராவையும் வரவழைத்திருந்தார். அவர்கள் வீட்டில் இருந்ததால் அஷ்வினும் கீழேயே இருக்க வேண்டிய நிலை....வினு காத்திருப்பாளே என்று அஷ்வினுக்குத் தவிப்பாக இருந்தது.

எல்லோரும் ஹாலில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். ஏதேதோ பேசிவிட்டுக் கடைசியில் அஷ்வினின் திருமணப் பேச்சிற்கு வந்தனர்.

“பொண்ணு பேரு லாவண்யா.... B.com., C.A., முடிச்சிருக்கா... C.A., பரிட்சையில இந்தியாவுலேயே ரெண்டாவது இடம் வந்திருக்கா... ரொம்பப் புத்திசாலி. அவங்க அப்பா பிசினஸ் பண்றார். கோடீஸ்வர குடும்பம் ஒரே பொண்ணு...” ரங்கநாயகி எல்லோருக்கும் சொல்வது போல் பொதுவாகப் பேசினார்.

ரங்கநாயகி சொல்லிவிட்டு அஷ்வினின் முகத்தைப் பார்க்க.... அவனுக்கு இதில் துளியும் விருப்பம் இல்லை என்பது, அவன் முகத்தில் இருந்தே தெரிந்தது. இவனுக்கு என்ன தான் பிரச்சனை.... முன்பு போல் அஷ்வினிடம் உரிமை எடுத்து அவரால்

பேச முடியவில்லை... எதோ அவரைத் தடுத்தது. என்னவென்று அவருக்குச் சரியாகப் புரியவில்லை.

அஷ்வின் மௌனமாக இருந்தான். ரங்கநாயகி ராகவனுக்குக் கண் ஜாடை காட்ட... அதைப் புரிந்து கொண்ட அவர் பேச ஆரம்பித்தார்.

“என்ன அஷ்வின் உனக்கு ஓகே வா?... இந்த வாரம் பொண்ணு பார்க்க போகலாமா...”

“இல்ல மாமா... சாரி எனக்கு இதுல இஷ்டம் இல்லை.” அஷ்வின் சொன்னதைக் கேட்டு ரங்கநாயகியின் ரத்த அழுத்தம் எகிறியது. அவர் கோபமாக எதோ சொல்ல வர.... ராகவன் அவரைப் பார்வையில் அடக்கினார்.

“ஏன் அஷ்வின்? வேண்டாம்ன்னு சொல்ல எதாவது காரணம் இருக்கணும் இல்லை. உனக்கு இந்தப் பொண்ணு பிடிக்கலையா.... வேற பொண்ணு பார்ப்போமா...”

“சொல்லிடு அஷ்வின், மனசில எதையோ வச்சிக்கிட்டு இருக்க.... அது என்னன்னு நீ சொன்னா தானே எங்களுக்குத் தெரியும்.” ராகவன் கேட்க...

“அவன் கிட்ட என்ன பேச்சு? இந்தப் பொண்ணு தான் நான் முடிவு பண்ணிட்டேன்.” என்றார் ரங்கநாயகி அதிகாரமாக...

“போன தடவை இப்படித் தான் ஒரு பொண்ணு பார்த்தீங்க. நானும் அம்மா நமக்கு நல்லது தான் செய்வாங்கன்னு நம்பி வந்தேன். அது என்ன ஆச்சு?” அஷ்வின் கிண்டலாகக் கேட்க...

“நானும் உனக்கு நல்லதுன்னு நினைச்சு தான் செஞ்சேன். அந்தப் பொண்ணு இப்படிப் பண்ணுவான்னு யாரு கண்டா... அதுக்காக உனக்குக் கல்யாணம் பண்ணாம இருக்க முடியுமா...”

“முடியாது தான். நான் ஒரு கேள்வி கேட்கிறேன், அதுக்கு நீங்க பதில் சொல்லுங்க.”

“இப்ப ஒரு பொண்ணு பார்த்து இருக்கீங்களே.... இந்தப் பொண்ணும் ஐஸ்வர்யா மாதிரி பண்ண மாட்டான்னு என்ன நிச்சயம்?

“ஒருத்தி அப்படிப் பண்ணா எல்லோரும் அப்படித்தான் பண்ணுவாங்களா என்ன? இந்தப் பொண்ணு அப்படிக் கிடையாது.” என்றார் ரங்கநாயகி உறுதியான குரலில்.

“எப்படி மா இவ்வளவு உறுதியா சொல்றீங்க?”

“நம்பிக்கை தான் அஷ்வின் வாழ்க்கை.”

“முடியாது மா..... என்னால வெறும் நம்பிக்கையை மட்டும் வச்சிக்கிட்டு என்னோட வாழ்க்கை துணையைத் தேர்ந்தெடுக்க முடியாது. எனக்கு உறுதியா தெரியனும், நான் கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்க முழு விருப்பம்ன்னு.”

அவன் சொன்னதைக் கேட்டு ரங்கநாயகி சிரித்துக்கொண்டே “இது ஒரு பெரிய விஷயமா அஷ்வின், அந்தப் பொண்ணைத் தனியா கூப்பிட்டுக் கேட்டா சொல்லிட போறா....” என்றார் எளிதாக.

“அது எப்படிமா உறுதியா அந்தப் பொண்ணு உண்மை தான் சொல்லுதுன்னு தெரியும், அவ அவங்க வீட்டுக்கு பயந்திட்டு கூடச் சொல்லலாமில்லை....அவங்க அம்மா அப்பாவுக்காக என்னைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கலாம்.”

“டேய், நீ ஐஸ்வர்யாவை மனசுல வச்சிக்கிட்டு பேசுறேன்னு நினைக்கிறேன். உன்னைப் போய் யாருக்காவது பிடிக்காம இருக்குமா அஷ்வின். உன் அழகுக்கும் படிப்புக்கும் அதோட நம்ம அந்தஸ்த்துக்கும், நம்ம வீட்ல பொண்ணு கொடுக்கப் பெரிய போட்டியே இருக்கு....”

“இருக்கலாம் ம்மா... ஆனா எல்லோரும் இது மட்டும் போதும்ன்னு நினைக்கிறது இல்லை.

ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு விருப்பம் இருக்கும். நமக்கு ஒசத்தியா தெரியறது மத்தவங்களுக்குச் சாதாரணமா தெரியலாம்.”
“கல்யாணம், வெறும் வாழ்க்கையில வரும் ஒரு நிகழ்வு மட்டும் இல்லை..... அதுக்குப் பிறகு தான் ஒரு மனுஷனோட முக்கால்வாசி வாழ்க்கையே இருக்கு.”

“அப்படி என் வாழ்க்கையில பெரும் பங்கு கூடவே வரப்போற என்னோட மனைவி, யாருன்னே தெரியாதா ஒரு பொண்ணா... இருக்கிறதை விட, எனக்கு நல்லா தெரிஞ்ச பொண்ணா இருந்தா நல்லா இருக்கும். என்னை எனக்காகவே கல்யாணம் பண்ணிக்கிற பொண்ணு தான் எனக்கு வேண்டும்.”

அஷ்வின் சொன்னதைக் கேட்ட மொத்த குடும்பமும் குழம்பிப்போய் இருந்தனர். ஒருவேளை ராகவனின் மகள் சுஷ்மிதாவை அஷ்வின் திருமணம் செய்ய விரும்புகிறானோ என்று ரங்கநாயகி நினைத்தார். அவள் அவனை விட மிகவும் இளையவள் என்பதால்.... அவளை அருணுக்குத் திருமணம் செய்ய நினைத்திருந்தார்.

அஷ்வின் யாரையோ விரும்புகிறான் என்று ராகவனுக்குச் சுபத்ராவுக்கும் புரிந்தது. அவர்கள் எதுவாக இருந்தாலும் அதை அஷ்வினே சொல்லட்டும் என்று அமைதியாக இருந்தனர்.

“நான் ஒரு பொண்ணை விரும்புறேன். எனக்கு அவளைக் கல்யாணம் செஞ்சுக்கத் தான் விருப்பம்.” அஷ்வின் சொல்லி முடிக்க.... ரங்கநாயகி தலையில் இடி விழுந்தது போல் அதிர்ச்சியில் இருந்தார். இதையே அருண் சொல்லி இருந்தால் கூட அவர் இவ்வளவு அதிரிந்திருக்க மாட்டார். அஷ்வின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார்.

“இந்தப் பொண்ணு மட்டும் நல்லவ, உன்னை மட்டும் தான் விரும்பினான்னு உனக்கு நல்லாத் தெரியுமா... உனக்கு முன்னாடியே அவ வேற யாரையும் விரும்பி இருக்கலாம்.” ரங்கநாயகி கோபத்தில்

வார்த்தையில் விஷத்தை கலந்து கேட்க...
அவர் பேசியது தேள் கொட்டியது போல்
அஷ்வினுக்குச் சுள்ளென்று வலியை கொடுக்க...
அவன் எழுந்தே விட்டான்.

“அம்மா, நீங்க ரொம்பக் கோபத்தில இருப்பீங்க.
எனக்கு உங்க நிலைமை நல்லா புரியுது. ஆனா
ஒன்னு தெரிஞ்சிக்கோங்க.... பார்த்ததும் காதல் வர
உங்க பையன் ஒன்னும் விடலைப்பருவத்தில
இல்லை... எனக்கு அவளை ஒரு வருஷமா தெரியும்.”

“ஐஸ்வர்யாவை பார்கிறதுக்கு முன்னாடியே எனக்கு
வினோதாவை தெரியும். அவ என்னை விரும்புறதும்
தெரியும், நான் அவளை விரும்பினேன்னும்
தெரியும். ஆனா அப்ப நம்ம குடும்பத்துக்கு
இதெல்லாம் ஒத்துவராதுன்னு நினைச்சு தான், நீங்க
பார்த்த பொண்ணு சரின்னு சொன்னேன்.”

“அப்ப இருந்த அறிவு இப்ப எங்க போச்சு?”
ரங்கநாயகி மகனின் பேச்சில் குறுக்கிட....

“குடும்பத்துக்காகக் கல்யாணம் பண்ணிக்கிறதை
விட.... நம்ம மனசுக்கு பிடிச்ச பெண்ணைக்
கல்யாணம் பண்ணிக்கிறது ஒன்னும் தப்பு
இல்லைன்னு இப்ப தான் புரிஞ்சது.” அஷ்வினும்
சூடாகப் பதில் கொடுக்க.... ரங்கநாயகி கோபத்தில்
முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

“ஒரு பெண்ணைப் பற்றி நல்லா தெரியாம... என்
வாழ்க்கையைப் பகிர்ந்துக்கும் முடிவை எடுக்க
நான் ஒன்னும் முட்டாள் இல்லை. வினோதா தான்
என் மனைவி அதுல எந்த மாற்றமும் இல்லை.
நாளைக்குச் சாயங்காலம் அவளை நம்ம வீட்டுக்கு
கூடிட்டு வரேன்.” என்ற அஷ்வின் விடுவிடுவென்று
அவன் அறைக்குச் சென்றுவிட.... எல்லோரும் அவன்
செல்வதையே பார்த்துக்கொண்டு இருந்தனர்.

அறைக்கு வந்த அஷ்வின் படபடப்பு அடங்க....
ஜக்கில் இருந்த நீரை முழுவதும் வாய்க்குள்
கவிழ்த்துக்கொண்டான். என்ன பேசினோம், எது

பேசினோம், சரியாகத்தான் பேசினோமா என்று அவனுக்கே குழப்பம்.

அப்போது வினோதா அவனைச் செல்லில் அழைக்க.... அவள் அழைப்பை துண்டித்துவிட்டு இவன் அழைத்தான்.

“என்ன அஷ்வின் போன் பண்ணவே இல்லை.... அது தான் நான் பண்ணேன்.”

“இல்லை மாமா அத்தை வந்திருந்தாங்க, அவங்களோட பேசிட்டு இருந்தேன். அதுதான் லேட்.” என்ற அஷ்வின் இன்று வீட்டில் நடந்த வாக்குவாதத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை.

“வினு நாளைக்கு ஆபீஸ்க்கு புடவை கட்டிட்டு வரியா....”

“ஏன் அஷ்வின்? வெளிய எங்காவது போறோமா....”

“ஆமாம் வினு, சாயங்காலம் கொஞ்சம் வெளிய போகணும். நாளைக்கு நீ வீட்டுக்கு வர நேரம் ஆகும்ன்னு சொல்லிட்டு வந்திடு. சரி நாளைக்குப் பார்போம். எனக்குத் தூக்கம் வருது.”

எந்த இடத்திற்குப் போகிறோம் என்று சொல்லாமலே அஷ்வின் போன்னை வைத்து விட்டான். அவனுக்குத் தெரியும் இன்றே வினோவிடம் சொன்னால்.... அவள் பயத்தில் இரவெல்லாம் தூங்கவே மாட்டாள் என்று.

திடிர்ன்னு எதுக்குப் புடவை கட்டிட்டு வர சொல்றாங்க? ஒருவேளை நாளைக்குக் கோவிலுக்குப் போறோமா... இல்லை என்னைப் புடவையில் பார்க்க ஆசைப்பட்டுச் சொல்றாங்களோ என்று விதவிதமாகக் கற்பனை செய்து மகிழ்ந்த வினோதா... அப்போதே அவள் அலமாரியை திறந்து அவளிடம் இருக்கும் புடவைகளில்... நாளை எதைக் கட்டுவது என்ற ஆராய்ச்சியில் இறங்கி விட்டாள்.

மறுநாள் காலை ஷாம்பூ போட்டு கூந்தலை அலசியவள், ஆரஞ்சு வண்ணத்தில் கருப்பு நிற பார்டர் வைத்த காட்டன் சேலையைக் கட்டிக்கொண்டு அதற்குப் பொருத்தமான அணிகலன்களை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்க்க... அவளுக்கு அந்தச் சேலை மிகவும் எடுப்பாக இருந்தது.

மகளைப் பார்த்த மஞ்சு "அழகா இருக்கடி ராஜாத்தி..." என்றவர், உள்ளே சென்று உப்பும் மிளகாயும் கொண்டு வந்து மகளுக்குத் திர்ஷ்டி கழித்தார்.

"அம்மா ப்ரண்ட்ஸ் கூட வெளிய போறேன். சாயங்காலம் வர லேட் ஆகும்." சொல்லிவிட்டு வினோதா அங்கிருந்து சிட்டாகப் பறந்தாள். அவளுக்குத் தாயின் முகத்தைப் பார்த்து பொய் சொல்ல கஷ்ட்டமாக இருந்தது. சீக்கிரம் அஷ்வின் தங்கள் திருமணத்தைப் பற்றி அவன் வீட்டில் சொல்லிவிட வேண்டும் என்று வேண்டியபடி சென்றாள்.

அஷ்வின் வழக்கமான நேரத்திற்கு அலுவலகம் வந்த போது.... அவர்கள் காலை எப்போதும் சந்திக்கும் இடத்தில் வினோதா இல்லை.... இன்னும் வரவில்லையோ என்று நினைத்த அஷ்வின், அவளைச் செல்லில் அழைத்தான்.

"ஹாய் அஷ்வின் வந்துடீங்களா..."

"ம்ம்... நீ இன்னும் வரலையா..."

"நான் ஒரு மணி நேரம் முன்னாடியே வந்துட்டேன். சாயங்காலம் வெளிய போகலாம்ன்னு சொன்னீங்களே.... அதுதான் சீக்கிரம் வந்து வேலைய முடிச்சிடலாம்ன்னு நினைச்சேன். நீங்க அங்கயே இருங்க. இப்ப வரேன்." என வினோ செல்லை அணைக்க... அஷ்வின் அவளுக்காகக் காத்திருந்தான்.

அவன் முகத்தில் சுரத்தே இல்லை.... அவன் வீட்டில் விடிய விடிய விவாதம் நடந்து கொண்டிருந்தது. அது காதில் விழுந்தாலும், அவன் கீழே இறங்கி செல்லவில்லை.... காலை அவன் கீழே வந்த போது... யாரும் அவனோடு பேசவில்லை.
அவனே அவன் தந்தையிடம் சென்று "அப்பா, சாயங்காலம் வினோதாவை அழைச்சிட்டு வரேன். ஆபீஸ்ல இருந்து கொஞ்சம் சீக்கிரம் வந்திடுங்க. அவ வீடு இங்க இருந்து ரொம்பத் தூரம். அவ திரும்பி போக லேட் ஆகிடும்." என்றான்.

வரதராஜன் சரி என்பதாகத் தலையசைக்க.... அஷ்வின் தன் தாயின் பக்கம் திரும்ப.... ரங்கநாயகி முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே சென்றுவிட்டார்.

வீட்டினர் நினைப்பிலேயே மனம் சுற்றிக்கொண்டு இருந்ததால்... வினோதா வந்ததை அஷ்வின் கவனிக்கவில்லை... அவன் எதிரில் வந்து நின்றவள், முகத்திற்கு நேராகக் கையை அசைக்கவும் தான், அஷ்வின் திடுக்கிட்டுக் களைந்தான்.

"ஹாய், என்ன நின்னுட்டே கனவா...."
வினோதாவின் உற்சாகமான பேச்சை கேட்டு அஷ்வின் புன்னகைக்க....

"இன்னைக்கு எங்க போறோம் அஷ்வின்?"
வினோதா அவனை ஆர்வமாகப் பார்த்துக் கேட்க...
"அது சஸ்பென்ஸ்.... இப்பவே கேட்க கூடாது."
அஷ்வின் எதோ சொல்லி சமாளித்தான். இப்பவே சொன்னால்... அவள் மாலை வரை பயத்துடனே இருப்பாள் என்பதால் சொல்லவில்லை.
அஷ்வினுக்கு இருந்த மன குழப்பத்தில் அவன் வினோதாவை புடவை கட்டிக்கொண்டு வர சொன்னதை மறந்திருந்தான். அவன் அவளை இன்னும் சரியாகக் கூடப் பார்க்கவில்லை....

"நான் எப்படி இருக்கேன்." என்று கேட்ட பிறகே அவளைச் சரியாகப் பார்த்தான்.

அப்போது தான் அவளைப் புடவை கட்டிக்கொண்டு வர சொன்னது நினைவு வந்தது. அப்போதும் அவளை அவன் ஆர்வமாக எல்லாம் பார்க்கவில்லை.... நல்ல புடவை கட்டிக்கொண்டு வந்திருக்கிறாளா என்பது போல் தான் பார்த்தான்.

“என்ன அஷ்வின் ஒண்ணுமே சொல்ல மாட்றீங்க, நல்லா இல்லையா...” வினோதா இப்படியும் அப்படியும் திரும்பி காண்பிக்க.... சுடிதாரில் தெரியாத அவள் வளைவு நெளிவுகள் அழகாகத் தெரிய... அஷ்வினின் பார்வை மாறியது.

அவன் நிதானமாக அவளைப் பார்வையிட.... அவனின் பார்வை மாற்றத்தை உணர்ந்த வினோதா நெளிய ஆரம்பித்தாள். அவன் சும்மா தான் இருந்தான். நாம் தான் தேவையில்லாமல் அவனைக் கிளப்பி விட்டோம் என்று தன்னையே நொந்தவள் “அஷ்வின், டைம் ஆகிடுச்சு போகட்டுமா....” என்றாள்.

“ம்ம்... போகலாம்... என்ன அவசரம் என்றவன், இன்னும் அவளைப் பார்வையிட்டு முடிக்கவில்லை. வினோதா முகம் சிவக்க.... வேறு எங்கோ பார்க்க... அஷ்வின் அவளை மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தான்.

“புடவை கட்டினா பொண்ணுங்க ஒரு தனி அழகு தான் இல்லை.... இதுநாள் வரை தோணாதது எல்லாம் இப்ப தோணுது. ஒரு தடவை உன்னோட இடுப்பை பிடிச்சிக்கணும் போலிருக்கு...”

அஷ்வின் பேசியதை கேட்ட வினோதாவின் முகம் ரத்த நிறமே கொண்டு விட.... அவன் எதாவது எசக்கு பிசக்காக நடந்து கொள்வானோ என்று பயந்தவள் போல்... அவன் கைகளைப் பிடித்துக்கொண்டாள். அதைப் புரிந்து கொண்டவன் வந்த சிரிப்பை வாய்க்குள் விழுங்கினான்.

“போகலாம் அஷ்வின், சாயங்காலம் வேற வெளிய போகணும்ன்னு சொன்னீங்க. எனக்கு நிறைய வேலை இருக்கு...ப்ளீஸ்...” வினோதா கெஞ்சவே

ஆரம்பித்து விட்டாள்.
அவளைப் பார்க்க அஷ்வினுக்குப் பரிதாமாக இருந்தது. “சரி போ...” என்றான். வினோதா விட்டாள் போதும் என்று அங்கிருந்து ஓட்டமும் நடையுமாகச் சென்றாள். செல்லும் போது திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே சென்றாள். அவளுக்கு எங்கே அஷ்வின் சொன்னதைச் செய்து விடுவானோ என்று பயம்.

ராதிகா வழக்கம் போல் கணவனையும், பெண்ணையும் அலுவலகத்திற்கும், பள்ளிக்கும் அனுப்பிவிட்டு, தன் மகனோடு பிறந்த வீடு வந்த போது.... எப்போதும் இருக்கும் கலகலப்பு இல்லாமல் வீடு அமைதியாக இருந்தது.

அவளைப்பார்த்ததும் ரங்கநாயகி எல்லாவற்றையும் கொட்டி தீர்க்க... கேட்ட ராதிகாவுக்கு ரத்தம் கொதித்தது.

“எவ்வவளவு தைரியம் இருந்தா.... அவளை வீட்டுக்கே கூடிட்டு வரேன்னு சொல்லி இருப்பான். பெரிய மகாராணியா அவ.... யாருமா அவ...” இருக்கிற தீயில் ராதிகா வேறு எண்ணெய் ஊற்ற... ரங்கநாயகியின் வயிறு எரிந்தது.

“யாருன்னு கேட்ட தானே தெரியும். அஷ்வின் அந்தப் பொண்ணைப் பத்தி சொல்லும் போது... அந்தப் பொண்ணைப் பத்தி விசாரிக்காம.... எடுத்தோம் கவுத்தோம்னு உங்க அம்மா பேசினா... பதிலுக்கு அவனும் பேசிட்டு போய்ட்டான்.”

தன் கணவர் வரதராஜனின் பேச்சில் ஆத்திரம் கொண்ட ரங்கநாயகி “ஆமாம், அவன் சொன்னதும் ஆரத்தி கரைச்சு வரவேற்கனுமா... அந்தப் பொண்ணு சரியான கைகாரியா இருக்கணும், அது தான் பேசி பேசியே அஷ்வின் மனசை கரைச்சிருப்பா...” என்றார்.

“ஆளு ரொம்ப அழகா இருப்பாளோ.... அந்த ஐஸ்வர்யாவோட அழகோ... அது தான் அஷ்வின்

கவுந்துட்டானோ....” ராதிகா வேறு அவள் இஷ்ட்டத்திற்குக் கற்பனை செய்து பேச....

அவர்கள் பேசுவதைக் கேட்டு சகிக்க முடியாத வரதராஜன் “அவன் தான் அந்தப் பெண்ணைக் கூடிட்டு வரேன்னு சொல்லி இருக்கான் இல்லையா... பேசி பார்போம், அப்புறம் முடிவு செய்வோம். அந்தப் பொண்ணு நம்ம குடும்பத்துக்கு ஒத்துவர மாட்டான்னு சொன்னா அஷ்வின் புரிஞ்சிப்பான்.” என்றார்.

“நீங்க இன்னைக்குப் பேங்க் போகலையா...” ரங்கநாயகி கேட்க, இல்லை என்று தலையசைத்து விட்டு சென்றார்.

“வரட்டும் மா அவ.... நாம அவளுக்கு யாருன்னு காட்டுவோம். இன்னைக்கு நாம நடந்துகிறதுல இருந்தே... அவ அஷ்வினும் வேண்டாம், இந்த வீடும் வேண்டாம்ன்னு ஓடனும்.” ராதிகா வருவதை எதிர்கொள்ளத் தயாராக.... ரங்கநாயகியும் ஒரு முடிவோடு இருந்தார்.

மதியம் வினோதாவை செல்லில் அழைத்த அஷ்வின் “நீ அங்கயே லஞ்ச் சாப்பிடு.... எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு. சாயங்காலம் நாலு மணிக்கு கீழ வந்திடு...” என்று சொல்லி போன்னை வைக்க....

“ஏன் டா? ரெண்டு பேரும் எப்பவும் ஒண்ணா தான லஞ்ச் சாப்பிடுவீங்க... இன்னைக்கு என்ன?” விக்னேஷ் வியக்க...

“சாயங்காலம் கொஞ்சம் வெளிய போறோம் டா... அதனால தான்.” என்றான் அஷ்வின் வேலையில் கவனமாக...

“எங்கப் போறீங்க?” என்ற விக்னேஷின் கேள்விக்கு “என்னோட வீட்டுக்குத்தான்...” என்றான்.

அவனை அதிர்ச்சியாகப் பார்த்த விக்னேஷ் “உன்னோட வீட்டுக்கா.... அப்ப வினோவை பத்தி

உங்க வீட்ல சொல்லிட்டியா...” என்றதும், அஷ்வின் நேற்று வீட்டில் நடந்த அனைத்தையும் சொன்னான்.

“அது சரி வினோவை எதுக்கு டா இப்ப கூடிட்டு போற?....

“ம்ம்... நானும் ஒரு பெண்ணைத் தான் காதலிக்கிறேன். அவ வேற கிரகத்தைச் சேர்ந்த ஜந்து இல்லை.... மனுஷி தான், நல்லா பார்த்துக்கோங்கன்னு காட்டத்தான்.” என்றான் அஷ்வின் கடுப்புடன்.

இப்போதும் அவன் என்ன சொல்ல வருகிறான் என்று விக்னேஷுக்கு புரியவில்லை... அவன் குழப்பத்துடன் பார்க்க....

“பின்ன என்ன டா? லவ் பன்றோம்ன்னு சொன்னா எதோ குற்றவாளிய போலப் பார்க்கிறாங்க. காதலிக்கிறது என்ன அவ்வளவு பெரிய தப்பா? யாரு என்னன்னே விசாரிக்காம.... தப்பா பேசினா கோபம் வராதா...அது தான் நேர்லயே பார்த்து, என்ன கேட்கணுமோ? கேட்டுகட்டும்ன்னு தான் கூடிட்டு போறேன்.” அஷ்வின் பட்டாசாகப் பொறிய...
அவன் சொன்னதைக் கேட்ட விக்னேஷிற்கு வினோதாவை நினைத்துப் பாவமாக இருந்தது. புலி குகைக்குள் புள்ளி மானா.... என்று தான் தோன்றியது. அவன் கூட அர்ச்சனாவை அவனது வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கிறான். இருதரப்பிலும் பேசி ஒருவரை ஒருவர் பார்க்க விரும்பியதால் அழைத்துச் சென்றான். ஆனால் இங்கே கதையே வேறு....

இப்போது இருக்கும் நிலையில் வினோதா அஷ்வினின் வீட்டிற்குச் சென்றால்.... அவளைக் குதறி எடுத்து விடுவார்களே என்று அவனுக்குக் கவலையாக இருந்தது. அஷ்வினை பார்த்தாலும், அவன் முடிவில் இருந்து மாறுபவன் போல் தெரியவில்லை.

மாலை அஷ்வினோடு விக்னேஷும் கீழே சென்றான். தூரத்தில் வினோதா துள்ளி குதித்து வருவது தெரிந்தது.

“டேய், நீ கண்டிப்பா இன்னைக்கு வினோவை உங்க வீட்டுக்கு கூடிட்டு போகனுமா....” விக்னேஷ்க்கு இன்னும் வினோ அங்கே செல்வதில் விருப்பம் இல்லை.

“எங்க அம்மா வினுவை கண்டிப்பா பார்க்க வர மாட்டங்க. எப்படி இருந்தாலும் ஒருநாள் இந்தச் சூழ்நிலையைச் சந்திச்சு தான் ஆகணும். அது இன்னைக்கா இருக்கட்டுமே...” அஷ்வின் சொல்லிக்கொண்டிருந்த போதே... வினோ அவர்கள் இருவரின் அருகில் வந்துவிட்டாள்.

“மேடம், வெளிய போறோம்ன்னு சொன்னதும், பளிச்சுன்னு கிளம்பி வந்துடீங்க. எங்க போறீங்கன்னு தெரியுமா?....” விக்னேஷ் விளையாட்டாகப் பேசுவது போலவே பேச...

“தெரியாது... அஷ்வின் சொல்லவே மாட்றாங்க.” என வினோதா புன்னகைக்க...

“அதெல்லாம் தெரிஞ்சிட்டு வர்றது இல்லையா....” விக்னேஷ் மறைமுகமாக அவளை எச்சரிக்க...

“எதுக்கு? அது தான் அஷ்வின் கூட இருக்காங்களே.... அஷ்வின் இருந்தா எங்கனாலும் ஓகே தான்.” வினோதாவின் பேச்சை கேட்டு விக்னேஷ் திகைக்க... அஷ்வினுக்கு இந்த நம்பிக்கையைக் காப்பாற்ற முடியுமா என்று தெரியவில்லை.

பகுதி – 11

விக்னேஷ் மறைமுகமாகச் சொன்னதை வினோதா புரிந்து கொள்ளவில்லை என்றதும் “எல்லா இடத்திலையும் மருமகளைப் பார்க்க மாமியார் தான் வருவாங்க. ஆனா நீ உன் மாமியாரை பார்க்க கிளம்பிட்ட... சூப்பர்.” என அவன் உண்மையைப்

போட்டு உடைக்க... அதுவரை சிரித்த முகமாக இருந்த வினோதாவின் முகம் வெளுத்தது.

அவள் உண்மையா என்பது போல் அஷ்வினை பார்க்க... அவன் ஆமாம் என்றான். திடிரென்று அங்கே போய் நின்றால்... அவளுக்கு ஒருமாதிரி இருக்கும் என்று தான், விக்னேஷ் உண்மையைச் சொன்னது. அவளும் தன்னைத் தயார் செய்துகொள்ள நேரம் வேண்டும் அல்லவா...

ஆனால் வினோதா பயந்து நடுங்குவதைப் பார்த்தவனுக்கோ... ஏன் சொன்னோம்? என்று ஆகிவிட்டது.

“ஏன் அஷ்வின் சொல்லவே இல்லை? உங்க வீட்ல நம்ம விஷயம் தெரியுமா?”

“சொன்னா... இப்படிப் பயப்படுவேன்னு தான் சொல்லலை.... கிளம்பு டைம் ஆகுது.” அஷ்வின் கிளம்புவதிலேயே குறியாக இருக்க...

“எனக்குப் பயமா இருக்கு... நான் வரலை...” வினோதா சொல்லிவிட்டு திரும்பி செல்ல... அதை எதிர்ப்பார்த்திருந்த அஷ்வின், எட்டி அவளைப்பிடித்து இழுத்து நிறுத்தினான்.

“ஹே... நான் இருக்கேன் இல்ல... பிறகு என்ன பயம் உனக்கு?” அஷ்வின் கோபப்பட... வினோதா அவனையே பயத்தோடு பார்த்தாள்.

“உனக்கு நம்ம கல்யாணம் நடக்கணுமா வேண்டாமா.... யாரோ வந்து பேசி எல்லாம் நம்ம கல்யாணம் நடக்காது. நாம தான் பேசணும். நீ இப்படிப் பயந்தா ஒன்னும் நடக்காது. உனக்கு நான் வேண்டுமா வேண்டாமா?”

“வேணும்...” அஷ்வினின் கேள்விக்கு வினோதா பட்டென்று பதில் சொல்ல... “அப்ப வா...” என்றான் அஷ்வின்.

“இருங்க வரேன்....” என்ற வினோதா அங்கிருந்த கண்ணாடி ஜன்னலில் தன்னைப்

பார்த்துக்கொள்ள.... இந்த ரணகளத்திலையும் ஒரு கிளுகிளுப்பா என்று நினைத்துச் சிரித்தான் விக்னேஷ்.
அவனைத் திரும்பி பார்த்த வினோ “விக்னேஷ் அண்ணா... நான் நல்லா தான இருக்கேன். இந்தப் புடவை நல்லா இருக்கா....முன்னாடியே தெரிஞ்சிருந்தா இன்னும் நல்ல புடவையா கட்டிட்டு வந்திருப்பேன்.” என்றவள், அஷ்வினின் அருகில் வந்து நின்று “எங்க ஜோடி பொருத்தம் நல்லா தான இருக்கு.... உயரம் ரொம்ப வித்தியாசமா தெரியுதா....” எனக் கவலையாகக் கேட்க...

“நல்லா தான் இருக்க... உயரம் ஒன்னும் வித்யாசமா தெரியலை... ஆனா அஷ்வின் வீட்ல செருப்பை வெளிய கழட்டி வச்சிட்டு தான் உள்ள போகணும். உனக்கு எப்படி வசதி?” அவளின் காலைப்பார்த்தபடி விக்னேஷ் கிண்டலாகக் கேட்க.... வினோதா முகம் வாடியவள் “உயரம் கம்மின்னு என்னை வேண்டாம்ன்னு சொல்லப்போறாங்க.” என்றாள்.

“நீ உயரமாவே இருந்தாலும்... எங்க அம்மா உன்னை வேண்டாம்ன்னு தான் சொல்வாங்க... அதனால வா பரவாயில்லை....” என்றான் அஷ்வின். மறுப்பை எதிர்ப்பார்த்தே தான் அவன் தன்னை அழைத்துச் செல்கிறான் எனும்போது... தான் மட்டும் போய் என்ன செய்யப்போகிறோம் என்று புரியாமலே அவனுடன் வினோதா சென்றாள்.

பயத்தில் கால்கள் பின்ன வினோதாவிற்கு நடக்கவே வரவில்லை... அஷ்வின் அவள் கைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றான்.

“அஷ்வின் கையை விடுங்க, வயிறு கலக்கிற மாதிரி இருக்கு... நான் ரெஸ்ட் ரூம் போயிட்டு வரேன்.” வினோ சொன்ன காரணத்தைக் கேட்டு விக்னேஷ் சிரிக்க... அஷ்வின் முறைத்தான்.

“பொய் சொன்னா கொன்னுடுவேன். அப்பா வேற வெயிட் பண்ணுவாங்க.” அஷ்வின் மேலே நடக்க...

வினோதாவும் வேறு வழி இல்லாமல் அவன் பின்னே சென்றாள்.

“டேய் அஷ்வின், எதுக்கும் போற வழியில அடிக்கடி திரும்பி பார்த்துக்கோ... வண்டியில இருந்து குதிச்சு ஓடிட போறா....” விக்னேஷ் நண்பனை எச்சரிக்க....

“தெரிஞ்சு தான் கார் கொண்டு வந்திருக்கேன். எங்கையும் ஓட முடியாது.” என்ற அஷ்வின் காரின் கதவை திறந்து வினோதாவை பிடித்து உள்ளே தள்ளியவன், மறுபுறம் சென்று தானும் ஏறினான்.

வினோதா விக்னேஷை கெஞ்சலாகப் பார்க்க.... “அஷ்வின் தான் இருக்கான் இல்லை.... அவன் பார்த்துப்பன் தைரியமா போ. உன் மனசுல என்ன தோணுதோ அதைத் தைரியமா பேசு....” என்றான்.

“நீங்களும் வரீங்களா விக்னேஷ் அண்ணா....” வினோதா பாவமாகக் கேட்க... விக்னேஷ் அஷ்வினை பார்த்தான்.

விக்னேஷ் வந்தால் வினோதாவிற்குத் தைரியமாக இருக்கும் என்று நினைத்த அஷ்வின் “உனக்கு எதுவும் வேலை இருக்கா டா...” என்றான்.

“வேலை இருந்திட்டே தான் இருக்கும்... அதுக்காகப் பார்க்கிற வேலையைப் பார்க்காம இருக்க முடியுமா....” என்றவன், காரின் பின் பக்க கதவை திறந்து கொண்டு ஏற.... வினோதாவின் முகத்தில் இருந்த கலக்கம் மறைந்து புன்னகை வந்தது.

அவள் முகத்தில் இருந்த சிரிப்பை பார்த்த அஷ்வின் “அவன் சும்மா துணைக்குத் தான் வரான். அவன் அங்க வந்து எதுவும் பேசமாட்டான்.” என்றதும், வினோதாவின் சிரிப்பு மறைய...

“ஆமாம் வினோ, நான் உங்களோட வரேன். ஆனா அங்க வந்து நான் எதுவும் பேசமாட்டேன்.” விக்னேஷும் அவன் தரப்பை தெளிவுபடுத்திவிட.... வினோதா மனதை திடமாக வைத்திக்கொள்ள முயன்றாள்.

வழியெல்லாம் விக்னேஷ் எதோ பேசிக்கொண்டே வந்ததால்.... வினோதாவிற்கு அதிகம் யோசிக்க முடியவில்லை ...அதனால் அவள் அதிகம் பயப்படவும் இல்லை.

அஷ்வின் ஒரு பெரிய வீட்டின் முன் காரை ஓரமாக நிறுத்தியவன், வினோவை பார்த்து இறங்கு என்று சொல்லிவிட்டு தானும் இறங்கினான்.

வினோதா மெதுவாகக் கதவை திறந்து கொண்டு இறங்கினாள். அவளின் வெளுத்த முகத்தையும், உடலின் நடுக்கத்தையும் பார்த்த விக்னேஷ், இவ நல்லா சுதப்ப போறா என்றே முடிவு செய்துவிட்டான்.

கம்பி கேட்டை திறந்து சிறிது தூரம் உள்ளே சென்ற பிறகுதான் வீடு வரும். அந்த நேரத்தில் வினோதா கொஞ்சம் தன்னைச் சமாளித்துக்கொண்டாள். வினோதா வீட்டை நிமிர்ந்து பார்க்க... முன்னால் பெரிய கார் பார்கிங்கும் அடுத்து தேக்கு மரத்தில் பெரிய கதவும் இருந்தது.

எப்பவும் திறந்தே இருக்கும் கதவு, இன்று மூடி இருந்தது. அதுவே வீட்டின் நிலவரத்தை சொல்லியது. அஷ்வின் அழைப்பு மணியை அடிக்க... வீட்டின் வேலை செய்யும் பெண் தான் வந்து கதவை திறந்தாள்.
இவர்கள் உள்ளே சென்ற போது ஹாலில் யாரும் இல்லை. வினோதா விக்னேஷ் இருவரையும் சோபாவில் உட்கார சொன்ன அஷ்வின், அவனே உள்ளே சென்று அவர்களுக்குக் குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தவன், தன் பெற்றோர்களைத் தேடி உள்ளே சென்றான்.
அருணை தவிர மற்ற எல்லோரும் ரங்கநாயகியின் அறையில் தான் இருந்தனர். எதோ அவர்கள் வந்தது தெரியாது போல் ரங்கநாயகியும் ராதிகாவும் இருக்க.... ராகவனும் சுபத்ராவும் அவர்களை மீறி செல்ல முடியாமல் இருந்தனர்.

அஷ்வினை பார்த்ததும் வந்தாச்சா... என்றபடி வரதராஜன் எழுந்துகொள்ள... “இப்ப நீங்க எங்கப் போறீங்க?” ரங்கநாயகி அவரை அதட்ட... அவர் மீண்டும் அமர்ந்தார்.

தன் அன்னையைப் பார்த்த அஷ்வின் “அம்மா, வினோதா வந்திருக்கா வாங்க.” என்றான்.

“நான் யாரையும் வர சொல்லலை....” ரங்கநாயகி திமிராகச் சொல்ல...

“நீங்க சொல்லலை... நானா தான் கூடிட்டு வந்தேன். நான் விரும்புற பொண்ணை நீங்க பார்க்க வேண்டாமா.....” அஷ்வின் சமாதானமாகவே பேச முயன்றான்.

“நான் வந்து பார்த்து என்ன செய்யப்போறேன்? நீ என்கிட்டே சம்மதமா கேட்ட.... தகவல் தான் சொன்ன.... அதுக்கு எதுக்கு நான் பார்க்க வரணும்?”

ரங்கநாயகியின் பேச்சில் இருந்த உள் குத்து அஷ்வினுக்குப் புரியாமல் இல்லை. அவர் சம்மதம் வேண்டி நின்றால்... அவர் எதாவது ஒரு காரணம் கண்டுபிடித்து வினோதாவை நிராகரிப்பார். அவர் சம்மதம் முக்கியம் இல்லை என்று சொன்னால்... அவர் வினோதாவை பார்க்கவே வரமாட்டார்.

என்ன செய்வது? என்பது போல் யோசித்த அஷ்வின் “நீங்க வந்து வினோதாவை பாருங்க. அவளை நிராகரிக்க... நீங்க சொல்லும் காரணம் நியாயமா இருந்தா... நான் அவளை விட்டுடுறேன்.” என்று வாக்கு கொடுக்க... தான் நினைத்ததைச் சாதித்த திருப்தி ரங்கநாயகியின் முகத்தில் இருந்தது.

அஷ்வின் உள்ளே சென்று இருபது நிமிடங்களுக்கு மேல் இருக்கும். வினோதாவும் விக்னேஷும் மட்டுமே ஹாலில் இருந்தனர். அவளும் எவ்வளவு நேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருப்பாள். தன்னைப் பார்க்காமலே திரும்ப அனுப்பி விடுவார்களோ என்று பயம் அதிகரித்தது.

அவள் இறுகி போய் அமர்ந்திருப்பதைப் பார்த்த விக்னேஷுக்குக் கோபமாக வந்தது. எவ்வளவு நேரம் காக்க வைப்பாங்க. நல்ல வேளை நாமாவது கூட வந்தோம் என்று நினைத்தான்.

நல்லவேளையாக அருண் அப்போது வெளியில் இருந்து வந்தவன், இருவரையும் பார்த்து விட்டு, அவர்கள் முகத்தில் இருந்தே எதோ சரியில்லை என்பதை உணர்ந்து, உள்ளே சென்றால் தன்னையும் பிடித்து வைத்துக்கொல்வார்களோ என்ற அச்சத்தில், உள்ளே செல்லாமல் அவர்களோடு ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தான்.

அவன் வினோதாவிடம் சாதாரணமாகப் பேசிக்கொண்டிருக்க... அவளும் சற்று தளர்ந்தாள்.

வினோதா பற்றிய எல்லா விவரங்களையும் அஷ்வினிடம் கேட்டு தெரிந்து கொண்டனர். ஒருவழியாக எல்லோரையும் சமாளிக்க மேலும் பத்து நிமிடம் ஆனது.

“அவ பெரிய மகாராணி அவளைப் பார்க்க நாங்க வரணுமா...” ராதிகா வேறு திரும்ப ஆரம்பிக்க... அதற்கு அவள் கணவன் வேறு ஒத்து ஊதினான். உங்கள் விருப்பத்தை யார் கேட்டது? என்று சொல்லிவிட அஷ்வினுக்கு ஒரு நொடி ஆகாது. ஆனால் அதன் பிறகு உறவுக்குள் விரிசல் வந்துவிடும் என்பதுனாலேயே பொறுமையாக இருந்தான்.

“நீங்க எல்லாம் போங்க... நான் கொஞ்சம் நேரம் கழிச்சு வரேன்.” ரங்கநாயகி அப்போதும் தன் கெத்தை விடத் தயாராக இல்லை.

அஷ்வின் தான் முதலில் அறையில் இருந்து வெளியே வந்தான். வந்ததும் அவன் பார்வை வினோதாவிடம் தான் சென்றது. விட்டால் அழுது விடுபவள் போல் இருந்தவளைப் பார்த்தும் அவன் மனம் வருந்த, சாரி... என்று அவன் கண்களால் கெஞ்ச... வினோதா அவன் பார்வையைத் தவிர்த்தாள்.

அஷ்வின் வந்து வினோதாவின் அருகே அமர்ந்து கொண்டே, அருணை பார்த்து “நீ எப்போடா வந்த...” என்றான்.

“இப்ப தான் வந்தேன்.” என்ற அருண் தன் தந்தை வருவதைப் பார்த்து அவருக்கு உட்கார இடம் விட்டு எழுந்து சென்று ஓரமாக நின்றான்.

ராகவனும், சுபத்ராவும் ஒரு சிறுபுன்னகையோடு வினோவின் எதிரில் வந்து அமர.... வினோவும் அவர்களைப் பார்த்து புன்னகைக்க முயன்றாள். ராதிகா வேண்டுமென்றே கால்மேல் கால் போட்டுக்கொண்டு திமிராக உட்கார... அவள் அருகில் அவன் கணவன் உட்கார்ந்தான். அங்கிருந்த எல்லோரின் பார்வையும் வினோதாவின் மீது தான்.

“வாடா விக்னேஷ், நீயும் வந்திருக்கியா.... அஷ்வின் சொல்லவே இல்லை...” வினோவை கண்டுகொள்ளாத ராதிகா விக்னேஷிடம் மட்டும் பேச... அதிலேயே அவளது நாகரிகத்தைப் பற்றி வினோ புரிந்து கொண்டாள்.

அஷ்வின் ஒவ்வொருவரையும் வினோதாவிற்கு அறிமுகம் செய்தான். “அப்பா வரதராஜன் பேங்க்ல மேனேஜர், இவர் அம்மாவோட தம்பி ராகவன், சொந்தமா பிசினஸ் பண்றார். அவங்க சுபத்ரா மாமி, இவங்க என்னோட அக்கா ராதிகா, அவர் அத்திம்பேர்.” என்றவன், கடைசியாக அருணை அறிமுகம் செய்ய... வினோ எல்லோரையும் பார்த்துக் கரம் குவித்து வணங்கினாள்.

அவளைப்பார்த்து புன்னகைத்த வரதராஜன் “டிபன் காபி சாப்டிங்களா...” கண்டிப்பாக வீட்டில் கொடுத்திருப்பார்கள் என்ற நம்பிக்கையில் அவர் கேட்க.... வினோ மௌனமாக இருந்தாள்.

“என்ன அங்கிள்? எல்லோரும் உள்ள இருந்து இப்ப தான் வர்றீங்க. அப்புறம் டிபன் காபி மட்டும் என்ன தானாவா பறந்து வரும்.” விக்னேஷ் நக்கலாகக்

கேட்க...அவன் சொன்னதைக் கேட்டு எல்லோருக்கும் ஒருமாதிரி ஆகிவிட்டது.

“நாங்க பெரியவங்க உள்ள பேசிட்டு இருந்தோம், நீ என்ன பண்ண ராதிகா? வந்தவங்களைக் கவனிக்காம.... போ, போய் டிபன் காபி கொண்டு வா...” வரதராஜன் மகளைக் கடிந்துகொள்ள.... வினோதாவின் முன்பு தன் தந்தை தன்னை அப்படிப் பேசியது ராதிகாவுக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை... இவளுக்கு நான் வேலை பண்ணனுமா என்று நினைத்தவள், உட்கார்ந்த இடத்தில இருந்தே வேலை செய்யும் அம்மாவிற்குக் குரல் கொடுத்தாள்.

அவர் ஒரு தட்டில் சிறிது இனிப்பும் காரமும் பெயருக்குக் கொண்டு வந்து வினோதாவிற்கும் விக்னேஷிற்கும் கொடுக்க.... விக்னேஷ் அதை வேண்டா வெறுப்பாகச் சாப்பிட்டான் என்றால்.... வினோவை சாப்பிடவே விடாமல் ராதிகா கேள்விமேல் கேள்வி கேட்டாள்.

“உன் பேர் என்ன? என்ன படிச்சிருக்க? எங்க வேலை பார்க்கிற?” என்று வரிசையாக அவள் கேள்விகளாக அடுக்க....

“இரு ராது அவ சாப்பிட்டு முடிக்கட்டும்.” எனச் சுபத்ரா புன்னகைக்க.... ராதிகா ஒரு முறைப்புடன் எழுந்து சமையல் அறைக்குள் சென்றாள். அவள் அங்குச் சென்று சமையல் வேலை செய்யும் அம்மாவிடம் எதோ மெதுவான குரலில் பேசிவிட்டு வந்தாள்.

வினோ சாப்பிட்டு முடிக்கும் வேளையில் எல்லோருக்கும் காபி வந்தது. வரிசையாக எல்லோரிடம் கொடுத்துக் கொண்டே வந்தவர், வினோ காபி எடுக்கக் கை நீட்டும் போது... உங்களுக்குக் கப் என்றாள்.

வினோதாவிற்கு முதலில் புரியவில்லை.... பிறகு தான் மற்ற எல்லோரின் கைகளிலும் வெள்ளி டம்ளர் இருப்பதைக் கவனித்தாள். விக்னேஷ் கையில் கூட

வெள்ளி டம்ளர் தான். அவளுக்கு மட்டும் தான் பீங்கான் கப்.

அவள் பார்ப்பதை கவனித்து ராதிகா “விக்னேஷ் எங்க வீட்ல ஒருத்தன் போல...” எனச் சமாளிக்க.... அவளை அடி அல்ப்பமே என்பது போல் ஒரு பார்வை பார்த்தாள் வினோதா. இதைத்தான் ராதிகா உள்ளே சென்று சொல்லிவிட்டு வந்தாள் போல....

வெள்ளி டம்ளரில் குடிச்சா மாட்டும் ராஜபரம்பரை ஆகிடுவோமா என்று மனதில் கேலியாக நினைத்தவள், கப்பை கையில் எடுக்க... “வினு நீ டம்ளர் எடுத்துக்கோ... நான் கப்பை எடுத்துக்கிறேன்.” அஷ்வின் வினோதாவிற்காகத் தன்னுடையதை விட்டுக்கொடுக்க... அதைப் பார்த்து ராதிகாவின் முகம் ஒளி இழந்தது.

“இருக்கட்டும் அஷ்வின், காபி சூடா இருக்கு, பிடிச்சிட்டுக் குடிக்கக் கப் தான் வசதி.” என்றபடி ஓரக்கண்ணில் ராதிகாவை பார்த்த வினோதாவிற்கு அவளின் அலட்சியமே ஒரு தைரியத்தைத் தந்தது. அதுவரை சோபாவின் நுனியில் உட்கார்ந்து இருந்தவள், நன்றாகச் சாய்ந்து வசதியாக உட்கார்ந்து கொண்டு, காபீயை மெதுவாக ரசித்துக் குடிக்க ஆரம்பித்தாள்.

எல்லோரும் குடித்து முடித்த பின்னரும் வினோதா முடிக்கவில்லை. அவள் குடித்து முடித்ததும் பேசுவோம் என்று எல்லோரும் காத்திருக்க.... அவள் காபீயை ஒரு சொட்டு விடாமல் பொறுமையாக ரசித்துக் குடித்தாள்.

அப்போது தான் ரங்கநாயகி பொறுமையாக உள்ளே இருந்து வந்தார். அவரைப் பார்த்ததும் வினோவிற்கு உள்ளுக்குள் குளிரெடுக்க... பயம் வர ஆரம்பித்தது. இவ்வளவு நேரம் தன்னைக் காக்க வைத்து அலட்சியபடுத்தியவர் என்பதை நினைவுக்குக் கொண்டு வந்தவள், அவரைப்பார்த்து தைரியமாகவே புன்னகைத்தாள்.

அவளைக் கண்டுகொள்ளாமல் ரங்கநாயகி வரதராஜனின் அருகே உட்கார... அஷ்வின் அவருக்கு வினோவை அறிமுகப்படுத்தினான்... வினோதா கையில் இருந்த கப்பை வைத்து விட்டு, அவரைப் பார்த்து வணங்க.... அவர் போனால் போகிறதென்று தலையசைத்தார்.

சற்றுநேரம் பார்வையாலேயே வினோதாவை எடை போட்டவர், ராகவனையும் சுபத்ராவையும் பார்க்க.... அவர்கள் வினோவை கேள்வி கேட்க ஆரம்பித்தனர்.

தான் இவர்களை விட எந்த விதத்திலேயும் தாழ்ந்து போகவில்லை... இவர்களுக்கு இருக்கும் அளவிற்குப் பணம் மட்டுமே இல்லை என்பதை மனதிற்குள் கொண்டு வந்தவள், அவர்கள் கேட்ட எல்லாக் கேள்விக்கும் தயக்கம் இல்லாமல் சற்று மிடுக்குடனே பதில் அளித்தாள். அஷ்வின் அவளையே பார்த்துக்கொண்டிருக்க.... விக்னேஷிற்கு அவளின் இந்தத் திடீர் மாற்றம் வியப்பை அளித்தது.

“உங்க வீட்ல தெரியுமா...” ரங்கநாயகி திடிரென்று குறுக்கே புகுந்து கேட்க... அவர் என்ன கேட்கிறார் என்று புரிந்து கொண்ட வினோதா “தெரியாது, இனிமே தான் சொல்லணும்.” என்றாள்.

“உங்க வீட்ல ஒத்துப்பாங்களா....” ரங்கநாயகி விடாமல் அடுத்தக் கேள்வி கேட்க...

“தெரியலை... ஆனா அஷ்வின் பத்தி எதுவும் குறை இருக்கிறதா தோணலை.... அதனால ஒத்துக்கலாம்.” வினோதா சொல்லிவிட்டு புன்னகைக்க...

“ஆமாம் கரெக்ட் தான். நல்ல படிப்பு, வேலை, அதோட வசதியான குடும்பமும் வேற... மறுக்க யாருக்கும் மனசு வராது தான்.” எனச் சொல்லிவிட்டு ரங்கநாயகி மிதப்பாக ஒரு பார்வை பார்க்க....

“இதெல்லாம் இருந்தும் அஷ்வின் கேரக்டர் சரியில்லைன்னா வேண்டாம்ன்னு தான் சொல்வாங்க. எங்க வீட்ல பணத்தைப் பார்க்க

மாட்டாங்க குணத்தைத் தான் பார்ப்பாங்க.” வினோதாவும் பதிலுக்குக் குத்தினாள். அவளின் பேச்சு ரங்கநாயகியின் கோபத்தை இன்னும் அதிகமாக்கியது.

“எங்க வீட்ல சம்பந்தம் பண்ணிகிறதை பத்தி நீங்க பெருமையா சொல்லிக்கலாம், அதே மாதிரி நாங்க உங்களைப் பத்தி பெருமையா சொல்ல என்ன இருக்கு?” அவர் கேட்ட ஆணவமான கேள்விக்கு...

“எங்க குடும்பமும் கௌரமான குடும்பம் தான். எங்க குடும்பத்தில யாரும் கிரிமினல்ஸ் இல்லை... அதனால நீங்க தைரியமா வெளிய சொல்லிக்கலாம்.”

“எங்க அப்பாகிட்டயும் அதிகமா பணம் இருந்திருக்கும், அவர் தன்னோட கடமையில இருந்து தவறியிருந்தா...” என்ற வினோதா ஒருநொடி நிறுத்த... என்ன சொல்லவருகிறாள் என்று எல்லோரும் அவளை ஆர்வமாகப் பார்த்தனர். “அவர் நினைச்சா நிறைய லஞ்சம் வாங்கி இருக்கலாம். தன் கூடப் பிறந்தவங்களுக்கு, நான் ஏன் செய்யணும்? அது பெத்தவங்களோட கடமைன்னு விலகி இருந்தா... அவரும் பணக்காரரா தான் இருந்திருப்பார். ஆனா.. அவர் அப்படி எல்லாம் செய்யலை... அவர் தன்னோட கடமைகளை சரியா செஞ்சார். அது தான் ஏழையாவே இருக்கார்.” “அதனால நாங்க என்ன குறைஞ்சிட்டோம்? என்னையும் எங்க அண்ணாவையும் நல்லா தான் படிக்க வச்சிருக்கார். இனி நாங்க சம்பாதிக்க மாட்டோமா...” வினோதாவின் பதிலில் ரங்கநாயகிக்கு சர்வமும் ஆடியது என்றால்.... தன் கடமையில் இருந்து தவறிய வரதராஜனுக்கோ குற்ற உணர்ச்சியைத் தந்தது.

அஷ்வின் தான் அவளிடம் தங்கள் வீட்டை பற்றிச் சொல்லிவிட்டனோ என்று நினைத்து, ரங்கநாயகி தன் மகனை முறைக்க... அவனுக்கு அதெல்லாம் நினைவில் இல்லை. அவன் வினோதாவின்

முகத்தைப் பெருமையாகப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ரங்கநாயகி வினோதாவை சாதாரணமாக எடை பொட்டு விட்டார். வசதி இல்லாத வீட்டுப் பெண், மட்டம் தட்டி பேசினால்... பயந்து ஓடி விடுவாள் என்று நினைத்தார். ஆனால் அவர்களின் ஆணவமே வினோதாவிற்கு நிமிர்வை கொடுத்தது. அவள் வீட்டில் ஏற்கனவே அண்ணி என்ற பெயரில் இப்படி ஒருத்தி இருக்கும் போது... அவளுக்கு இவர்களைச் சமாளிக்கத் தெரியாதா என்ன?

ராதிகா எதோ கேட்க வர.... “போதும் அவங்களை விடுங்க... எல்லாரும் ரவுண்டு கட்டி கேள்வியா கேட்டு, பாவம் அவங்க களச்சு போய்டாங்க.” என்ற அருண் “வாங்க வினோ வீட்டை சுத்தி பார்க்கலாம்.” என்று அழைக்க.... சுபத்ராவும் “போ வினோ ரொம்ப நேரமா ஒரே இடத்தில உட்கார்ந்திருக்க....” என்றார்.

நம்மை மட்டும் யாரும் இந்த வீட்ல பேச விட மாட்டங்க என்ற கொதிப்பில் ராதிகா இருந்தாள். வினோதா எதாவது உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள்.... பதிலுக்கு அவளிடம் சண்டை வளர்க்கலாம். ஆனால் அவள் நெத்தி அடி அடிக்கும் போது... என்ன பேசுவது? என்று அவளுக்குமே தெரியவில்லை.

வினோதா மெதுவாகத் திரும்பி அஷ்வினை பார்க்க.... அவனும் போ என்றவுடன், அவள் எழுந்து செல்ல... அவளோடு விக்னேஷும் எழுந்து சென்றான். அருண் நேராக அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்றான்.

மாடியில் அவன் அறை மற்றும் அங்கிருந்த மற்ற அறைகளுக்கு அழைத்துச் சென்று காட்டியவன், அஷ்வின் அறைக்கு மட்டும் அழைத்துச் செல்லவில்லை... “அண்ணாவோட பார்த்துக்கோங்க.” என்று சொல்லிவிட்டு உடனிருந்த ரகுவிடம் எதோ பேசியபடி அங்கிருந்து செல்ல...

மாடி பால்கனியில் விக்னேஷும் வினோதாவும் மட்டுமே இருந்தனர். விக்னேஷ் வினோவிற்குக் கை கொடுத்தவன் “நீ சுதப்ப போறேன்னு நினைச்சேன். ஆனா சூப்பர் வினோ....” என்றான்.
“நான் நல்லா பேசினேனா.... எங்க கல்யாணத்துக்கு ஒத்துப்பாங்க தான....” வினோதா ஆர்வமாகக் கேட்க....

“கண்டிப்பா ஒத்துக்க மாட்டாங்க.” விக்னேஷ் சொல்ல... வினோவின் முகம் நொடியில் வாடிவிட்டது.

“அதிகமா பேசிட்டேனா....” என்ற வினோவிற்குக் கண்கள் கலங்கியது, தன் பேச்சால் ஆஷ்வினை இழந்து விடுவோமோ என்ற பயம் வந்துவிட்டது.

“நீ அவங்க கிட்ட பவ்யமா பேசி இருந்தாலும், அவங்க ஒத்துக்கமாட்டாங்க.” என்றான் விக்னேஷ், அவர்களைப் பற்றி நன்றாகத் தெரிந்தவனாக.

அஷ்வின் வந்து என்ன சொல்லப்போகிறானோ? என்ற கலக்கத்தில் வினோதா இருந்தாள்.

பகுதி – 12

“எனக்கு இதெல்லாம் ஒன்னும் பிடிக்கலை.... நீ இருந்து பார்த்துக்கோ...நான் கொஞ்சம் வெளிய போயிட்டு வரேன்.” என்றபடி ராதிகாவின் கணவன் மகேஷ் அங்கிருந்து நழுவினான்.

வினோதா மாடியில் காத்திருந்த வேளையில்... ராதிகா சுஷ்மிதாவோடு அங்கே வந்தவள், வேண்டுமென்றே வினோ காதில் விழ வேண்டும் என்று சத்தமாகப் பேசிக்கொண்டு சென்றாள்.

“உங்களுக்குப் பிடிக்கலைன்னா விட்டுடுவேன்னு அம்மாகிட்ட அஷ்வின் சொல்லி இருக்கான். அதனால நாம பயப்பட வேண்டாம்.”

மறுப்பதற்கு நியாயமான காரணம் இருந்தால்... விட்டு விடுவதாகத் தான் அஷ்வின் சொன்னான்.

ஆனால் அதில் பாதியை முழுங்கிவிட்டு மீதியை தான் ராதிகா சொல்லி சென்றது.

அதைக் கேட்ட வினோ மேலும் கலங்க... அவளைபார்த்த விக்னேஷ் “சும்மா சொல்றா... பயப்படாத.” என்றான்.

கீழே ஹாலில் எல்லோரும் ஆளுக்கொரு சிந்தனையில் இருந்தனர். அஷ்வின் அவர்களின் பதிலுக்காகக் காத்திருக்க....

“அஷ்வின், நீ போய் அவளை அனுப்பிட்டு வா... உடனே முடிவு சொல்ல கல்யாணம் ஒன்னும் விளையாட்டு இல்லை.... கொஞ்சம் யோசிக்கணும்.” என்றார் ரங்கநாயகி.

அஷ்வினும் எதிர்த்துப் பேசாமல் எழுந்து சென்றான். அவனைப் பார்த்ததும் வினோதா புன்னகைக்க.... பதிலுக்கு அஷ்வின் புன்னகைத்தாலும், அதில் உயிர்ப்பே இல்லை. அது அவளை மேலும் கலங்க செய்தது.

“விக்னேஷ், நீயும் வினோவும் என்னோட பைக்ல போக முடியுமா.... நீ பைக்கை நம்ம ஆபீஸ்ல விட்டுடு. நான் நாளைக்கு வந்து எடுத்துக்கிறேன். நான் உங்களை விட வந்திட்டா... பேச்சு அப்படியே தள்ளி போய்டும். எனக்குச் சீக்கிரம் முடிவு தெரியனும். அதனால தான்...” அஷ்வின் சொல்வது சரி என்பதால்.... விக்னேஷ் சம்மதமாகத் தலையசைக்க... அவனிடம் பேச வேண்டும் என்று நினைத்திருந்த வினோதாவிற்கு ஏமாற்றமாக இருந்தது.
அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த அருண் “அதுக்குள்ள கிளம்புறாங்களா.... நான் உன்னுடைய ரூமை வினோதாவுக்குக் காட்டலை.... நீ காட்டுவேன்னு நினைச்சேன்.” என்றான்.

“அவ அப்புறம் பார்த்துப்பா....” அஷ்வின் வினோதாவை கிளப்புவதிலேயே குறியாக இருக்க.... எல்லாம் இவன் இஷ்டம் தான். வரும் போது இப்படித்தான் இழுத்திட்டு வந்தான். இப்ப போன்னு

பிடிச்சுத் தள்ளுறான். வினோதா மனதிற்குள் பொருமியபடி செல்ல.... அவள் நினைப்பது அஷ்வினுக்குப் புரிந்தே இருந்தது.

எல்லோரிடமும் பொதுவாகச் சொல்லிக்கொண்டு வினோதாவும் விக்னேஷும் கிளம்பி விட்டனர். அஷ்வின் அவர்களை வாசல் வரை சென்று வழி அனுப்பினான்.

விக்னேஷ் வண்டியோடு சற்று தள்ளி நிற்க... அஷ்வினின் அருகில் நின்ற வினோதா "என்னை விட்டுட மாட்ட இல்ல அஷ்வின்." என்றபோது அவள் குரல் உள்ளே சென்றுவிட்டது.

"ஷ்.... எதுக்கு இப்படி எல்லாம் பேசுற? உன்னை விட்டுட்டு என்னால மட்டும் இருக்க முடியுமா... கவலைப்படாம போ வினு." என்று அஷ்வின் அவளை வழி அனுப்பிவிட்டு வந்தான்.

அந்த இடைப்பட்ட நேரத்தில் மற்றவர்கள் வேகமாக ஆலோசனை நடத்தினர்.

"கண்டிப்பா இந்தப் பொண்ணு வேண்டாம். படிப்பு அந்தஸ்த்து எதுலையும் நம்மோட ஒத்து வரலை.... ஆனா வாய் மட்டும் ரொம்ப அதிகம். இப்பவே எப்படிப் பேசுறா.... இன்னும் கல்யாணம் பண்ணி வந்தா எவ்வளவு பேசுவா..." என்றார் ரங்கநாயகி.

"வேற ஜாதியா இருந்தா அதைக் காரணம் காட்டியாவது எதாவது சொல்லலாம். ஆனா அவங்களும் நம்ம ஆளுங்க தான். அஷ்வின் கேட்டா என்ன காரணம் சொல்றது?" ராகவன் யோசிக்க...

"பெரிய காரணம் வேற சொல்லனுமா... பார்த்தாலே தெரியலை... ரொம்பத் திமிர் பிடிச்சவ. ஆளு பார்க்க கத்திரிகாவுக்குக் கை கால் முளைச்ச மாதிரி இருந்திட்டு.... பேச்சை பாரு..." ராதிகாவும் ஒத்து ஊத...

"ச்ச... அப்படியெல்லாம் இல்லை... கொஞ்சம் உயரம் குறைவு தான். ஆனா பார்க்க பளிச்சுன்னு அழகா தான் இருக்கா... சின்னப் பொண்ணா வேற

தெரியுறா... அஷ்வின் இதெல்லாம் யோசிக்காமலா இருந்திருப்பான்.” சுபத்ரா பேசியது அங்கிருந்த யாருக்கும் பிடிக்கவில்லை... உனக்கு இது தேவையா என்பது போல் ராகவன் பார்த்தார்.
ராகவன் நல்ல மனிதர் தான். ஆனால் தன் சகோதரியா மற்றவர்களா என்று வரும் போது... அவர் தன் அக்காவுக்குத் தான் எப்போதும் பரிந்து பேசுவார். அந்த மற்றவர் சுபத்ராவாக இருந்தாலும். எல்லாப் பெண்களும் தன் கணவரிடம் தனக்குத் தான் அதிக உரிமை இருக்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆனால் ராகவனின் விஷயத்தில், அவர் தன் அக்கா ரங்கநாயகிக்கு தான் முதல் உரிமை தருவார். சுபத்ரா மனதில் அது நெருஞ்சி முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தாலும், அதை அவர் வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்.

அவர்களை வழி அனுப்பிவிட்டு உள்ளே வந்த அஷ்வின், தன் அம்மாவிடம் “என்னம்மா முடிவு பண்ணி இருக்கீங்க?” என்று கேட்க...

“எங்க முடிவை பத்தி உனக்கு அக்கறை இருக்கா.... பெரிசா கேட்கிற...” ரங்கநாயகி சொல்ல...

“ஏன் உங்களுக்கு வினோதாவை பிடிக்கலையா.... என்ன காரணம் சொல்லுங்க?” என்ற அஷ்வின் தன் தாயின் எதிரே வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

“வெறும் B.sc., படிச்சிருக்கா.... நீ M.E., அஷ்வின்.” ராதிகா ஆரம்பிக்க....

“இது ஒரு காரணமா... அவ மேல M.sc படிச்சிட்டு இருக்கா.... அதோட அவ வேலையில ரொம்பக் கெட்டிக்காரி. இன்னும் ஒரு வருஷத்தில நல்ல இடத்துக்கு வந்திடுவா...ஆனா இது இப்ப ரொம்ப முக்கியமா... நான் வேலைக்கு ஆள் எடுகிறேன்னா இல்லை கல்யாணம் பண்ணிக்கவா....” என்றான் அஷ்வின்.

“படிப்பை விடு, குடும்பம் ரொம்பச் சாதாரணம். அவங்க பெரிசா பொண்ணுக்கு என்ன செய்யப்போறாங்க? நமக்குத் தான் உறவுக்காரங்க

முன்னாடி கவுரவக் குறைச்சலா இருக்கும்.” ராதிகா அடுத்தக் காரணத்தைச் சொல்ல...

“நம்ம கிட்ட இல்லாத பணமா.... அவ கொண்டு வந்து தான் இங்க நிறையனுமா என்ன? அளவுக்கு அதிகமா பணம் சேர்த்தும், அதை வச்சு என்ன செய்யப்போறோம்?”

“ஏன் உன்னையே எடுத்துக்கோ? உன்கிட்ட நூறு சவரன் நகையாவது இருக்கும். அம்மா கிட்ட முந்நூறு சவரனாவது இருக்கும். நீங்க எல்லாத்தையும் மாட்டிகிறீங்களா என்ன? ஒன்னு பீரோவுல வச்சு பூட்டுவீங்க.. .. இல்லை பாங்க லாக்கர்ல வைப்பீங்க. இதுக்கு ஏன் இவ்வளவு அலம்பல் பண்ணனும்.”

“உறவுக்காரங்களுக்கு நாம சொன்னா தான... வினு எவ்வளவு நகை கொண்டு வந்தான்னு தெரியும். நீ நூறு சவரன்னு சொல்லு.... யாரும் வந்து காமிங்கன்னு கேட்கவா போறாங்க.”

“அதோட நான் யாருக்குச் சம்பாதிக்கிறேன்? என்னோட வருமானத்தை நம்பி இந்தக் குடும்பம் இல்லை... நான் ஒரே வருஷத்தில வினுவுக்குத் தேவையான நகை வாங்கிக் கொடுத்திடுறேன்.” என்றான் அஷ்வின் எளிதாக...

அஷ்வின் சொன்னதைக் கேட்டு ராதிகாவுக்கு எரிந்தது. அவன் நகை வாங்கிக் கொடுப்பேன் என்று சொன்னதை விட... வினோதாவை வினு என்று செல்லமாக அவன் அழைப்பது தான் அதிக எரிச்சலை தந்தது.

அந்தக் கோபத்தில் “அம்மா உன் பையன் நாம என்ன சொன்னாலும், அதுக்கு ஒரு காரணம் கண்டுபிடிச்சு வச்சிருக்கான். இவன் யாரை கல்யாணம் பண்ணா எனக்கு என்ன? நீயாச்சு உன் பையன் ஆச்சு... நான் என் பசங்களுக்குச் சாப்பாடு கொடுக்கப் போறேன்.” என ராதிகா அங்கிருந்து

நழுவ.... “ஹப்பா ஒரு விக்கெட் விழுந்தாச்சு....” என்று அஷ்வின் நிம்மதி அடைந்தான்.

“நீங்க என்ன அப்பா சொல்றீங்க?” அஷ்வின் வரதராஜனை பார்த்து கேட்க....
“நானே ஒரு சாதரணக் குடும்பத்தைச் சேர்ந்தவன் தான். ஆனா என் மகன் அப்படின்னு பார்க்கும் போது... அவனுக்கு வர்ற மனைவி பெரிய இடத்தில இருந்து வரணும்ன்னு ஆசை இல்லைன்னு... நான் பொய் சொல்ல மாட்டேன். அதே சமயம் வினோதாவை வேண்டாம்ன்னு மறுக்கவும் என்கிட்டே காரணம் இல்லை. அந்தப் பொண்ணைப் பார்த்தா நல்லவளா தான் தெரியுறா...” என்றார்.

தன் கணவர் சொன்னதைக் கேட்டதும், ரங்கநாயகியின் ரத்தம் கொதிக்க.... அதுவரை அமைதியாக இருந்தவர் “ஓ உங்களுக்குப் பார்த்ததும் தெரிஞ்சிடுச்சா....” என்றார் நக்கலாக....

எப்போதும் ரங்கநாயகி எதாவது பேசினால்... அதற்கு ரங்கராஜன் மறுத்து எதுவும் சொல்லமாட்டார். வீண் விவாதம் எதற்கு என்று நினைப்பார். ஆனால் இன்று அது போல் அவரால் இருக்க முடியவில்லை.

“அஷ்வின் அவளை நம்ம கிட்ட காட்டி கல்யாணத்திற்குச் சம்மதம் கேட்க வந்திருக்கான்னு... அந்தப் பொண்ணுக்கு தெரியும். அப்படி இருந்தும், அவ தன் மனசில பட்டதைத் தான் பேசினா... இங்க இருக்கிற யாரையும் காக்கா பிடிக்கவோ... இல்லை ஐஸ் வச்சு பேசவோ இல்லை...”

“அதோட அந்தப்பொண்ணு அவளைப் பத்தி உயர்வா காட்டிக்க முயச்சி செய்யவே இல்லை... நான் இப்படித் தான். இதனால எனக்கு எந்தக் கவுரவக் குறைச்சலும் இல்லை. அப்படிங்கிற மாதிரி தான் இருந்தாள். எனக்கு அந்த நிமிர்வு பிடிச்சிருக்கு.” என்றார் அவர்.

“எனக்கு அது திமிர் மாதிரி தெரியுது.... அவ வேணும்ன்னே நம்மளை குத்தி காட்டி பேசின மாதிரி இருந்தது.” என்ற ரங்கநாயகி அஷ்வினை பார்த்து “அவகிட்ட நம்ம வீட்டு விஷயம் எல்லாத்தையும் சொல்லிட்டியா நீ...” என்றார் கோபமாக.

“இல்லைம்மா... அவ சாதாரணமா தான் சொன்னா... அவங்க அப்பா லஞ்சம் கூடத்தான் வாங்கலைன்னு சொன்னா... அப்ப நம்ம அப்பா லஞ்சம் வாங்கிறாருன்னு அர்த்தமா...”

“உண்மையிலேயே அவ அப்பாவோட கூடப்பிறந்த அக்கா தங்கைங்க மூன்னு பேர்... அவங்களுக்குக் கல்யாணம் செஞ்சே அவர் நொடிச்சு போய்ட்டார் போலிருக்கு... அதைத் தான் சொல்றா...” என்றான் அஷ்வின் சமாதானமாக.

அவன் என்ன சொன்ன போதிலும் ரங்கநாயகியால் ஏற்க முடியவில்லை... அவர் மௌனமாக இருந்தார்.

“அம்மா ப்ளீஸ் ஒத்துக்கோங்க மா.... வினு நல்ல பொண்ணுமா...” அஷ்வின் பாவமாகக் கேட்க....

“என்னால முடியாது அஷ்வின். உனக்கு இதை விட நல்ல இடம் எல்லாம் வரும் போது... நான் ஏன் இதுக்கு ஒத்துக்கணும்? நான் உன் நல்லதுக்குத் தான் சொல்வேன். வேண்டாம் இதை இதோட விட்டுடு.” ரங்கநாயகி சொல்லிவிட்டு எழுந்துகொள்ள...

“அம்மா.... நான் சொல்றதையும் கொஞ்சம் கேட்டுட்டு போங்க. எனக்கு வினோதாவை ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் கல்யாணம் பண்ணா அவளைத்தான் பண்ணுவேன். நான் வீட்டை விட்டுப் போய்க் கல்யாணம் பண்ணனும்ன்னு நினைக்கவே இல்லை.... ஆனா நீங்க இவ்வளவு பிடிவாதமா இருந்தா... எனக்கும் வேற வழி இல்லை.” அஷ்வின் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல.... அவன் சொன்னதைக் கேட்டு ரங்கநாயகி வாயடைத்துப் போனார்.

“நீங்க எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கலைன்னா.... நான் தாத்தா பாட்டிகிட்ட போய் எங்களுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கச் சொல்வேன்.” ரங்கநாயகியை எங்கே அடித்தால்.... அவர் வழிக்கு வருவார் என்று அஷ்வினுக்கு நன்றாகவே தெரியும்.

தன் மகனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்க அவர்கள் யார்? என்ற கொந்தளிப்பில் இருந்த ரங்கநாயகி “வேண்டாம், நீ அவங்க கிட்ட போக வேண்டாம். நான் உன் கல்யாணத்துக்குச் சம்மதிக்கிறேன். ஆனா நான் எந்த வேலையும் செய்ய மாட்டேன். நீ மத்தவங்களை வச்சு பார்த்துக்கோ.” என்று சொல்லிவிட்டு சென்றார்.

ரங்கநாயகி சொன்னதைக் கேட்ட ராதிகா முகத்தைச் சுளிக்க... அருணும் ரகுவும் அஷ்வினுக்குக் கை கொடுத்தனர். ராகவன் தன் அக்கா சொல்லிவிட்டால்... சரி என்பது போல் எழுந்து கொள்ள.... சுபத்ராவும் எழுந்து கொண்டார். அவருக்கு மகிழ்ச்சி தான். ஆனால் அதை வெளியில் காட்டிக்கொண்டால்... அவ்வளவு தான் என்று நினைத்தவர், ஜாடையாகத் தன் மகள் ஷுஷ்மிதாவை பார்க்க... அவளும் சிரிப்பை அடக்கி கொண்டு தான் இருந்தாள்.

அஷ்வினுக்குத் தன் அம்மா சம்மதித்து விட்டார் என்ற சந்தோஷமே இல்லை.... தான் அவரை மிரட்டி சம்மதிக்க வைத்தோம் என்ற வருத்தமே இருந்தது.

வினோதா பஸ் பிடித்து வீட்டிற்கு வந்து சேர இரவு எட்டு மணி ஆகி விட்டது. அஷ்வின் வீட்டில் என்ன ஆனதோ என்று தெரியாமல்.... உணவு அவள் தொண்டையில் இறங்க மறுத்தது. கஷ்டப்பட்டு உணவை விழுங்கி வைத்தாள்.

இரவு வெகுநேரம் வரை அஷ்வினின் அழைப்பிற்காகக் காத்திருந்தவள், பின் தன்னையுமறியாமல் உறங்கினாள். காலை எழுந்த பிறகும் அஷ்வின் அழைக்கவில்லை என்பதால்...

அவன் வீட்டில் ஒத்துக்கொள்ளவில்லை என்று நினைத்துக்கொண்டாள்.

மறுநாள் அஷ்வின் தாமதமாக அலுவலகம் வந்ததால்... காலையில் வழக்கம் போல் இருவரும் சந்தித்துக்கொள்ளவில்லை. பதினோரு மணி வரை அஷ்வினாக அழைக்கக் காணோம் என்றதும், வினோதா அவளே அவனைச் செல்லில் அழைத்தாள்.

“ம்ம்... சொல்லு வினு.”

“என்ன அஷ்வின் போன்னே பண்ணலை... நேத்து ரொம்பப் பிரச்சனை ஆகிடுச்சா....”

“இல்லை... மதியம் சாப்பிடும் போது பேசலாம்.” என அஷ்வின் சொன்னதும், வினோவிற்கு ஒரு மாதிரி ஆகிவிட.....

“சரி அஷ்வின்...” என்றவளின் குரலே சரி இல்லை... அதை உணர்ந்த அஷ்வினுக்கு அப்போது தான் அவளின் நிலை புரிந்தது. நேற்றில் இருந்து தன் அழைப்பை எதிர்பார்த்திருப்பாள்.... தான் அவளிடம் ஒன்றுமே சொல்லவில்லை என்பது அப்போது தான் நினைவு வந்தது.

“வினு, அம்மா நம்ம கல்யாணத்துக்கு ஓகே சொல்லிட்டாங்க.” என்றான். அவன் சொன்னதைக் கேட்டு வினோவிற்கு மிகவும் சந்தோஷம்
“அப்படியா ஏன் என் கிட்ட முன்னாடியே சொல்லலை...” என்றவளுக்குத் திடிரென்று அஷ்வின் பொய் சொல்கிறானோ என்ற சந்தேகம் வர...

“அஷ்வின் உண்மை தான... நிஜமாவே நம்ம கல்யாணத்துக்குச் சம்மதிச்சிடாங்க தான....” என்று அவனிடமே கேட்டு விட....

“நிஜம் தான். சரி மதியம் பார்ப்போம்.” என அஷ்வின் போன்னை வைத்துவிட....
வினோதாவிற்கு இன்ப படபடப்பாக இருந்தது. அதன்பிறகு அவளுக்கு வேலையே ஓடவில்லை....

எப்போது மணி ஒன்றாக ஆகும் என்று அடிக்கடி நேரத்தை பார்த்துக் கொண்டிருந்தாள்.

மதியம் அஷ்வின் வந்த போது... தூரத்திலேயே அவனுக்காகக் காத்திருக்கும் வினோவை பார்த்துக் கொண்டே வந்தான். அவள் முகம் பல உணர்ச்சிகளைக் காட்டியது. தனியாக நின்று சிரித்துக்கொண்டிருந்தாள். அவளைக் கடந்து சென்றவர்கள் ஒரு மாதிரி அவளைப் பார்த்துவிட்டு செல்வதைக் கூட அவள் கவனிக்கவில்லை. அந்த அளவிற்கு அவள் தன்னிலேயே முழ்கி இருந்தாள்.

அவளைப் பார்த்ததும் அஷ்வினுக்கும் உற்சாகம் தொற்றிக்கொள்ள.... புன்னகையுடனே அவளிடம் சென்றான்.

“ஹே... என்ன தனியா நின்னு சிரிச்சிட்டு இருக்க....” அவன் சிரிப்பை வாய்க்குள் அடக்கியபடி கேட்க.... அவனைப்பார்த்து ஒன்றுமில்லை என்று தலையசைத்தவள், அவளாக அவன் கைக்குள் தன் கையைக் கோர்த்துக்கொண்டு நடக்க...அஷ்வினும் அவளுடன் சென்றான்.

அஷ்வின் அங்கேயே அவனுக்கு உணவு வாங்கிக்கொண்டு வர... வினோதா அவள் வீட்டில் இருந்து கொண்டு வந்த உணவை எடுத்தாள். அஷ்வின் வேகமாகச் சாப்பிட... வினோதா உணவை கிளறியபடி இருந்தாள்.

சிறிது நேரம் சென்று தான் அஷ்வின் அவளைக் கவனித்தான். “சீக்கிரம் சாப்பிடு வினு...” என்றதும், அவனை நிமிர்ந்து பார்த்தவள் “பசிக்கவே இல்லை....” என்றாள்.

“அப்ப உன்னோடதும் நான் சாப்பிடட்டுமா .... எனக்குச் செம பசி.” அஷ்வின் சொன்னதும், வினோதா சட்டென்று தன் உணவு டப்பாவை அவனிடம் கொடுக்க.... அவனும் அதை வாங்கிச் சாப்பிட்டான். உண்மையிலேயே அவனுக்கு நல்ல பசி.... ரங்கநாயகி அவனிடம் முகம் கொடுத்து

பேசாததால்... காலை உணவை சாப்பிடாமலே வந்திருந்தான்.

வினோவிற்குச் சந்தோஷத்தில் பசிக்கவில்லை... அவள் அவன் சாப்பிடுவதையே ஆசையாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்ன சொன்னாங்க அஷ்வின்? எப்படி நம்ம கல்யாணத்துக்கு ஒத்துகிட்டாங்க?” வினோ ஆர்வமாகக் கேட்க.... அஷ்வின் முகம் மாறினான்.

“எப்படியோ ஒத்துகிட்டாங்க இல்ல.... பிறகு ஏன் திரும்ப அதைப் பத்தி பேசுற....” என அஷ்வின் எரிச்சல் பட.... அதிலிருந்தே அவர்கள் அவ்வளவு சுலபத்தில் ஒத்துக்கொள்ளவில்லை... என்பது வினோதாவிற்குப் புரிந்தது. கோபப்படுபவனிடம் மேற்கொண்டு பேச பயந்து கொண்டு அமைதியாக இருந்தாள். அப்போது அங்கே விக்னேஷ் வந்தான்.

“டேய்... எங்க டா உன்னைக் காலையில இருந்து ஆளைக் காணோம்?” அஷ்வின் கேட்க....

“ம்ம்... நேத்து நைட் ஆபீஸ்ல கொஞ்சம் வேலை இருந்தது. அதை முடிச்சிட்டு கிளம்ப ரொம்ப நேரம் ஆகிடுச்சு. அது தான் நல்லா தூங்கிட்டு... வீட்லயே மதியம் சாப்பிட்டு கிளம்பி வந்தேன்.” என்றான் விக்னேஷ்.

“ஓ அப்படியா...” அஷ்வின் சொல்ல.... “சாரி விக்னேஷ் அண்ணா..... எங்களால தான உங்களுக்குக் கஷ்ட்டம்.” வினோதா வருத்தப்பட...

“ஐயோ ! இதெல்லாம் பெரிய விஷயமா வினோ... ப்ராஜெக்ட் ரிலீஸ் நேரத்தில சில நாள் வீட்டுக்கே போகாம கூட இருந்திருக்கேன்.” என்றவன், அப்போது தான் நினைவு வந்தவனாக “உங்க கதை என்ன ஆச்சு?” என்றான்.

“வீட்ல கல்யாணத்துக்கு ஓகே சொல்லிட்டாங்க.” என்ற அஷ்வினை விக்னேஷ் நம்பாமல் பார்க்க.... “நிஜமா தான் டா....” என்றான் அவன்.

“உங்க வீட்ல ஓகே சொன்னதை என்னால இன்னும் நம்ப முடியலை.... ஒழுங்கா உண்மைய சொல்லு...” விக்னேஷ் மிரட்ட....

“முதல்ல ஒத்துக்க மாட்டேன்னு தான் சொன்னாங்க. நான் எப்படியும் எங்க கல்யாணம் நடக்கத் தான் போகுதுன்னு சொன்னதும் ஒத்துகிட்டாங்க.” அஷ்வின் ஓரளவு உண்மையைச் சொல்ல.... இதை எதிர்பார்த்திருந்ததால்... விக்னேஷும், வினோவும் அதோடு அந்தப் பேச்சை விட்டு விட்டனர்.

“வினோ, இனி நீ உங்க வீட்ல நம்ம விஷயத்தைச் சொல்லிடு... நான் அடுத்த வாரம் சண்டே உங்க வீட்டுக்கு வரேன்.” என்ற அஷ்வினிடம் வினோ தலையை நன்றாக உருட்டி விட்டு தான் சென்றாள். ஆனால் வீட்டில் தங்கள் காதல் விஷயம் சொல்லத்தான் வாய் வரவில்லை....

இன்று எப்படியும் பேச்சை ஆரம்பித்து விட வேண்டும் என்று நினைத்து தினமும் வீட்டிற்குச் செல்பவள், சொல்லாமலே மறுநாள் அலுவலகம் வருவாள்.

நான்கு நாட்கள் பொறுத்த அஷ்வின் “நீ உங்க வீட்ல சொல்றியா... இல்லை நான் வந்து சொல்லட்டுமா....” என்றதும்,

“இன்னைக்குக் கண்டிப்பா சொல்லிடுறேன் அஷ்வின்.” என்று உறுதியாகச் சொல்லிவிட்டு வினோதா சென்றாள்.

அன்று இரவு உணவை குடும்பத்துடன் உட்கார்ந்து சாப்பிடும் போது.... வினோ மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தாள்.

“அப்பா.... இந்த வாரம் சண்டே என்னோட ப்ரண்ட் வராங்க.”

“ஓ... சரி...” என்ற பார்த்திபன் டிவியில் கவனம் வைக்க... வினோதாவிற்கு ஐயோ என்று இருந்தது.

“யாரு வராங்க?” மஞ்சு கேட்க....

“அஷ்வின், என் ஆபீஸ்ல வேலை பார்கிறாங்க மா....” வினோதா மெல்ல சொல்ல.... அவர்கள் வீட்டில் ஆண் நண்பர்களை அழைத்து வரக் கூடாது என்ற கட்டுப்பாடு எல்லாம் இல்லை.... ஆனால் அதைச் சொல்லும் போது வினோவின் முகத்தில் தெரிந்த தவிப்பை கவனிக்க மஞ்சு தவறவில்லை.

“நாங்க இந்த வாரம் வெளிய போறோம்.” மாலதி தன் கணவனுக்கும் சேர்த்து அவளே பதில் சொல்ல....

“அண்ணா... அஷ்வின் வரும் போது நீ இருக்கணும். அவங்க முக்கியமான விஷயம் பேச வராங்க. ப்ளீஸ் நீ அடுத்த வாரம் போயேன்.” வினோ விமலிடம் சொல்ல....

அப்படி என்ன முக்கியமான விஷயம் என்ற யோசனையில் எல்லோரும் வினோதாவை பார்க்க... பார்த்திபன் கூட டிவியை மறந்து தன் மகளைப் பார்த்தார்.

“நானும் அஷ்வினும் லவ் பண்றோம். அதைப் பத்தி பேசத்தான் அவங்க இங்க வராங்க.” ஒருவழியாக வினோ சொல்லியே விட.... எல்லோரும் சிறிது நேரம் அதிர்ச்சியில் இருந்தனர்.

“உனக்கு இருபது வயசு தான் முடிஞ்சிருக்கு அதுக்குள்ள காதல் கேட்குதா....” மஞ்சு தன் மகளின் கன்னத்தில் இடிக்க...

“உன் இஷ்ட்டத்துக்கு நீயே மாப்பிள்ளை பார்த்துகிட்டா.... உன் கல்யாணத்துக்கு நாங்க ஒரு பைசா கொடுக்க மாட்டோம்.” மாலதி அப்போதும் தன் காரியத்தில் கண்ணாக இருக்க... விமலுக்குக் கோபம் வந்துவிட்டது.

“இப்ப இது ரொம்ப முக்கியம்.” என்று மாலதியிடம் எரிந்து விழுந்தவன், வினோவிடம் அஷ்வினை பற்றி விசாரிக்க.... அதற்குத் தானே வினோவும் காத்திருந்தாள். அவள் அவனைப்பற்றி

மடமடவென்று ஒப்பிக்க.... கேட்ட விமலுக்குத் திருப்தி தான்.

தன் தங்கை யாரை விரும்புகிறாளோ என்ற பயத்தில் இருந்தவனுக்கு அஷ்வினை பற்றிக் கேட்டதும், பரவாயில்லை நல்ல இடம் தான் என்று நினைத்தான். ஆனால் அவளின் பெற்றோர் அப்படி நினைக்கவில்லை.... அதனால் வினோதாவிடம் துருவித்துருவி விசாரித்தனர்.

வினோ அஷ்வினின் வீட்டிற்குச் சென்றது வரை சொல்ல.... "உனக்கு ரொம்பத் தைரியம்...." என்ற மஞ்சு அவளை மேலும் இடித்தார்.

ஏப்பை சாப்பையாக யாரையாவது விரும்பி இருப்பாள் என்ற எண்ணத்தில் இருந்த மாலதிக்கு, அஷ்வினை பற்றிக் கேட்டதும் பொறாமையில் வெந்து விட்டாள். திருமணத்திற்காகத் தன் காலடியில் வினோ விழ வேண்டும் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு, அவள் தன்னை விட வசதியான வீட்டிற்கு மருமகளாகச் செல்வதைச் சுத்தமாகத் தாங்க முடியவில்லை.

பகுதி - 13

அஷ்வின் சொன்னது போல் ஞாயிறு மாலை வினோதா வீட்டிற்கு வந்தான். அவனை வரவேற்பதிலோ.... உபசரிப்பதிலோ.... யாரும் அலட்சியம் காட்டவில்லை. பார்த்திபனும் விமலும் அஷ்வினோடு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். மஞ்சு அவனுக்கு இனிப்புக் காரம் பழங்கள் என்று எதாவது ஒன்று கொண்டு வந்து உபசரித்தார். வினோ சமையல் அறைக்குச் செல்வதும், ஹாலில் சிறிது நேரம் நிற்பதுமாக இருந்தாள்.

தங்கள் திருமணத்திற்கு வினோவின் வீட்டில் எதிர்ப்பு இருக்காது என்றே அஷ்வின் நினைத்தான். வினோதாவும் அப்படி நினைத்து தான் சந்தோஷமாக இருந்தாள்.

சிறிது நேரம் சென்று, அஷ்வின் அவர்களின் காதலை பற்றியும், அவன் வீட்டில் திருமணத்திற்குச் சம்மதித்ததைப் பற்றியும் சொல்ல.... வினோ வீட்டினர் அமைதியாகக் கேட்டு கொண்டிருந்தனர்.

“அஷ்வின், சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. எங்களுக்கு நீங்க ரொம்பப் பெரிய இடம். உங்க வசதிக்கு எங்களால செய்ய முடியாது. சம அந்தஸ்த்து உள்ள இடத்தில கல்யாணம் பண்றது தான் பிற்கால வாழ்க்கைக்கு நல்லது.” பார்த்திபன் சொல்ல.... அதைக் கேட்ட அஷ்வின் முகம் மாற... வினோவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது.

“கல்யாணம் ஒன்னும் விளையாட்டு விஷயம் இல்லை. வினோ சின்னப் பொண்ணு... அவளுக்கு என்ன தெரியும்? அவ நாங்க சொன்னா கேட்டுப்பா....நாங்க அவளுக்கு இப்ப கல்யாணம் பண்றதாவே இல்லை.... இன்னும் ரெண்டு வருஷம் போகட்டும் பார்க்கலாம்.” மஞ்சுவும் இப்படிப் பேச.... அஷ்வின் ஏமாற்றத்துடன் வினோதாவை பார்த்தான்.

வினோ நெஞ்சு கொதிக்க நின்றிருந்தாள். அழுகையில் மூக்கு விடைக்க.... முகம் சிவந்து கண்களில் இருந்து கண்ணீர் வழிய....

“எப்பவும் எனக்கு ஒரு ஆசை இருக்கும்ன்னு இந்த வீட்ல யாருமே நினைக்க மாட்டாங்க. இவங்க சொல்றதை படிக்கணும், இவங்க சொல்றதை நான் கேட்கனும். கல்யாண விஷயத்திலும் நான் அப்படியே இருக்க மாட்டேன்.”

“இதுவரை நான் ஆசை பட்டதை விடக் கிடச்சதை வச்ச தான் வாழ்ந்தேன். என் கல்யாணத்திலேயும் இதையே எதிர்பார்த்தா... நான் சொல்றது ஒன்னே ஒன்னு தான். அஷ்வினை தவிர நான் யாரையும் கல்யாணம் பண்ணிக்க மாட்டேன். அஷ்வின் இல்லைன்னா எனக்கு எப்பவும் கல்யாணம் கிடையாது.” வினோ ஆவேசம் வந்தது போல்

கத்தியவள், வெளியே சென்று செருப்பைப் போட்டுக்கொண்டு தெருவில் இறங்கி நடக்க....

வினோதா பேச்சை கேட்டு எல்லோரும் திகைத்து இருக்க.... அஷ்வின் அவர்களிடம் சொல்லிக்கொண்டு வினோதாவை தேடி சென்றான். தூரத்தில் அவள் செல்வதைப் பார்த்து, தன் பைக்கில் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

அவன் அவள் அருகில் சென்று அழைத்தும் கூட வினோதா நிற்கவே இல்லை... வண்டியை ஓரமாக நிறுத்திய அஷ்வின், வேகமாக நடந்து சென்று அவளைப் பிடித்து நிறுத்தினான்.
கண் சிவந்து அழுகையில் அவள் உடல் குலுங்க... பார்க்கவே பரிதாபமாக இருந்தாள். அவள் விழி நீரை துடைத்தவன், அங்கிருந்த கிளைசாலை வழியே அவளை அழைத்துக்கொண்டு சென்றான். வினோதாவின் வீடே ஊருக்கு வெளியில் தான் இருக்கும். அதுவும் அந்தத் தெருவில் அதிகமாக வீடுகள் இல்லை..... இருட்ட வேறு ஆரம்பித்திருந்ததால்.... தெருவில் யாரும் இல்லை.

ஒரு மரத்தடியில் வைத்து அவன் வினோதாவை சமாதானம் செய்ய... வினோதாவின் அழுகை நின்றாலும் அவளது விசும்பல் நிற்கவில்லை....

“எனக்கு எல்லாம் எப்பவுமே விடியாது அஷ்வின். என்னோட சேர்ந்து நீங்க உங்க வாழ்க்கையையும் வீணாக்காதீங்க. நீங்க உங்க அம்மா சொல்ற பொண்ணையே கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா இருங்க. என்னை விட்டுடுங்க அஷ்வின்.” என்றவளுக்கு வெடித்துக்கொண்டு மீண்டும் அழுகை வர... அஷ்வின் அவளை அனைத்து அவளின் முதுகை வருடி சமாதானம் செய்தான்.

வினோவின் அழுகை அவனை ரொம்பவே பாதித்தது. அவள் அவன் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும். அன்று அவள் தானே அவனிடம் என்னை

விட்டுடாதே என்றாள். இன்று அவளே தன்னை விட்டு விடும் படி சொல்வதைப் பார்த்து அவனுக்கு வேதனையாக இருந்தது.

“இவங்க பையனுக்கு ஒரு நியாயம் எனக்கு ஒரு நியாயம். அவங்க பையன் லவ் பண்ணா மட்டும் சேர்த்து வைப்பாங்க. நான் மட்டும் கிடச்சதை வச்சு வாழனுமாம். இப்படி இருக்கவங்க எதுக்கு என்னைப் பெத்தாங்க? நான் எல்லாம் உயிரோடவே இருக்கக் கூடாது.”

வினோவின் மனதில் இருக்கும் வேதனை குறையட்டும் என்று தான் அஷ்வின் அவளைப் பேச விட்டது. ஆனால் கடைசியில் அவள் சொன்ன வார்த்தையைக் கேட்டு திடுக்கிட்டவன், அவளின் வாயை பொத்த... அவன் கையை எடுத்துவிட்டு வினோ மீண்டும் அதே போலப் பேச... அஷ்வின் அவளின் இதழ்களைப் பேசவிடாமல் தன் உதட்டால் சிறை செய்தான்.

என்ன நடக்கிறது என்று உணரவே வினோவிற்குச் சிறிது நேரம் ஆனது. அதற்குள் அவளை விட்டு அஷ்வின் விலக.... அதிர்ச்சியில் வினோவின் அழுகை சுத்தமாக நின்றுவிட்டது. அவள் முழிப்பதை பார்த்து அஷ்வினுக்குச் சிரிப்பு வர... அவன் உயரத்திற்கு அவள் இடையில் கைகொடுத்து வாரி தூக்கியவன், இந்த முறை அழுத்தமாகத் தன் முத்திரையை அவளின் இதழில் பதிக்க... வினோவும் அவன் முத்தத்தில் நெகிழ்ந்தாள்.

தூரத்தில் கேட்ட வாகனத்தின் சத்தத்தில் இருவரும் விலகினர். பின்னர் இருவரும் திரும்பி நடக்க ஆரம்பித்தனர். வண்டி இருக்கும் இடத்திற்கு வந்ததும், அஷ்வின் வண்டியை தள்ளிக்கொண்டு வர.... வினோ அமைதியாக வந்தாள்.

வீட்டின் அருகே வந்ததும், அஷ்வின் நிற்க... வினோவும் நின்று அவன் முகத்தைப் பார்க்க.... “உணர்ச்சி வசப்பட்டு எந்த முடிவும் எடுக்காத வினு. யாருக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ... நம்ம

கல்யாணம் கண்டிப்பா நடக்கும். நீ இப்படி டென்ஷன் பட்டா... எனக்கு ஒன்னும் ஓடாது. உன் மனசுக்கு எதாவது கஷ்ட்டமா இருந்தா..... உடனே எனக்குக் கால் பண்ணு." என்றவன், அவளை வீட்டின் உள்ளே வரை சென்று விட்டுவிட்டே கிளம்பினான்.

அஷ்வின் வினோதாவின் பின்னே சென்றதால் தான், அவர்கள் வீட்டில் இருந்து யாரும் அவளைத் தேடி செல்லவில்லை. வினோவின் முகத்தில் இருந்தே அவள் அழுதிருக்கிறாள் என்று எல்லோருக்கும் புரிந்தது. வினோ யாரின் முகத்தையும் பார்க்க பிடிக்காமல்... அவள் அறைக்குள் சென்று விட.... அஷ்வின் அவர்களிடம் விடைபெற்று வெளியே வந்தவன், விமலை மட்டும் அழைத்து "உங்க சம்மதம் கிடைக்குதோ இல்லையோ... ஆனா எங்க கல்யாணம் நடக்கும்." என்று சொல்லிவிட்டே சென்றான்.

மறுநாள் காலை எழுந்த வினோ யாரிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை... காலை உணவை அருந்தாமலே... அலுவலகம் கிளம்பி சென்றாள். மதிய உணவும் எடுத்துக்கொள்ளவில்லை.... ஏன் அந்த வீட்டில் தண்ணீர் கூட அவள் குடிக்கவில்லை.

மதியம் அஷ்வினோடு ஹோட்டலில் சாப்பிட்டவள், இரவு உணவு சாப்பிடாமலே படுத்துக்கொண்டாள். இதே தொடர் கதை ஆனது. மஞ்சுவிற்கு அவள் மேல் அவ்வளவு கோபம். உனக்கு அவ்வளவு கொழுப்புன்னா சாப்பிடாம இரு என்று விட்டுவிட்டார்.

ஒரு வாரம் சென்ற பிறகும் வினோதா அப்படியே இருக்க... ஒரு நாள் ஒரு வேளை மட்டுமே உணவு அருந்துவதால்... அவள் உடல் மெலிய ஆரம்பிக்க.... அதைப் பார்த்து மஞ்சு கலங்கினார். அவள் வீட்டில் சாப்பிடாமல் இருப்பது அஷ்வினுக்குத் தெரியாது.

கொஞ்ச நாளில் சரி ஆகி விடுவாள் என்று நினைத்ததற்கு மாறாக வினோதா அவள் காதலில் உறுதியாக இருக்க.... "நல்ல இடம்... நாமலே

பார்த்திருந்தாலும் இப்படி அமையறது கஷ்ட்டம்.” விமல் வேறு தன் தங்கைக்குப் பரிந்து பேச.... கடைசியில் வினோதாவின் பெற்றோரும் திருமணதிற்குச் சம்மதித்தனர்.

மாலதி தான் கொதித்துப் போய் இருந்தாள். “அவ தான அவ இஷ்டத்துக்கு மாப்பிள்ளை பார்த்துகிட்டா.... அப்ப அவ கல்யாணத்தையும் அவளே பண்ணிக்கட்டும்.” என விமலிடம் அவள் சொல்ல... அவளை நிதானமாகப் பார்த்த விமல் “நீ ஏன் இப்படிச் சொல்றன்னு எனக்குப் புரியாம இல்லை.” என்றதும், திடுகிட்ட மாலதி தன் கணவனை நிமிர்ந்து பார்க்க....

“என் தங்கை யாரை? எப்ப? கல்யாணம் பண்ணாலும்... அவளுக்காக நான் செய்ய வேண்டியதை, நீயே தடுத்தாலும் நான் கண்டிப்பா செய்வேன். ஏன் இப்படிப் பணம் பணம்ன்னு அலையற? உனக்கும் ஒரு பொண்ணு இருக்கா நியாபகம் வச்சுக்கோ.... நாளைக்கு அவளுக்குக் கல்யாணம் பண்ணும் போதும்... இப்படித் தான் பண்ணுவியா....”

“ஏற்கனவே வினோவோட படிப்பை கெடுத்த.... அதுக்கே அவ மனசுக்குள்ள குமுறிகிட்டு இருக்கா... இன்னும் அவ கல்யாணத்தில வேற இடைஞ்சல் பண்ணி... அவ வாய்ல நிக்காத. அது நாளைக்கு நம்ம பொண்ணு தலையில தான் விடியும். நான் ஒன்னும் என்கிட்டே இருக்கிறது எல்லாம் வழிச்சு அவளுக்குச் செய்யப்போறது இல்ல.... என்னால முடிஞ்சது தான் செய்வேன். அதனால கவலைப்படாம இரு.” என்றான் விமல்.

அவர்களைச் சாப்பிட அழைக்க வந்த மஞ்சு, படியில் நின்று இதையெல்லாம் கேட்டவருக்குத் தன் மகனை நினைத்து பெருமையாகவே இருந்தது. அவன் வினோவின் திருமணச் செலவை தட்டி கழிப்பான் என்று பயந்து கொண்டிருந்தார். இப்போது தான் அவருக்கு நிம்மதியாக இருந்தது. அன்று இரவு

வினோதா திருமணதிற்குத் திட்டமிட்டனர்.

“விமல், இந்த வீடு என்னோட சுய சம்பாத்தியம். அதனால அதுல வினோவிற்கும் பங்கு இருக்கு. ஆனா நான் வீட்டை உன் பேருக்கு எழுதி தந்திடுறேன். நான் ரிடையர் ஆகும் போது.... கொஞ்சம் பணம் வரும், அதோட எனக்குப் பென்ஷனும் வரும். பென்ஷன் எனக்கும் உங்க அம்மா செலவுக்கும் போதும். மொத்தமா வர்ற பணத்தை எங்க காலத்திற்குப் பிறகு உனக்கே குடுத்திடுறோம். அதனால வினோதாவோட கல்யாணத்தை எந்தக் குறையும் இல்லாம நீ நடத்தி குடுத்திடு.” எனப் பார்த்திபன் விமலிடம் சொல்ல....

“சரிப்பா நீங்க சொல்றபடியே செஞ்சிடலாம். என் பங்குக்கு என்ன செய்ய முடியுமோ அதையும் நான் வினோவுக்குக் கண்டிப்பா செய்றேன். அஷ்வின் வீடு பெரிய இடம். அதனால நாம அவங்களுக்கு ஓரளவாவது செஞ்சா தான் வினோவுக்கு அங்கே மரியாதையா இருக்கும்.”

தன் அண்ணன் சொன்னது மகிழ்ச்சியாக இருந்தாலும், இதில் தன் அன்னிக்கு விருப்பம் இருக்காது என்பதை உணர்ந்த வினோதா “அண்ணா, அஷ்வின் வீட்ல நம்ம குடும்பத்தைப் பத்தி நல்லா தெரியும். அதனால எனக்குக் கஷ்ட்டப்பட்டு எல்லாம் யாரும் செய்ய வேண்டாம். உங்களுக்கு முடிஞ்சது செய்ங்க போதும்.” என்றாள்.

“ஆஷ்வின் வீடுன்னு இல்லை... நீ யாரை கல்யாணம் பண்ணாலும்.. நாங்க செய்ய வேண்டியது செஞ்சு தான் ஆகணும். அதனால இதுல நீ தலையிடாத.” என்று விட்டான் விமல்.

வினோதா வீட்டில் திருமணதிற்குச் சம்மதித்ததும், அஷ்வின் அவர்கள் வீட்டிற்குத் திரும்ப ஒருநாள் வந்தான். தங்கள் திருமணத்தில் இரு பக்க வீட்டினரும் எந்தச் சங்கடத்தையும் ஏற்கும் படி ஆகிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தான்.

வினோதா வீட்டினரும் அவனிடம் வெளிப்படையாகப் பேசியதால்.... அவனுக்குத் தான் நினைத்ததை அவர்களிடத்தில் பேசவும் முடிந்தது.

வினோவிற்கு அவர்கள் வீட்டில் நாற்பது பவுன் நகையும், கல்யாண செலவும் செய்வது என்று முடிவு செய்திருந்தனர். உறவினர்கள் முன்பு தன் அம்மாவிற்குக் கவரவக் குறைச்சல் ஆகிவிடக்கூடாது என்பதிலும் அஷ்வின் உறுதியாக இருந்தான். அதனால் பெரிய மண்டபமும், பெயர் பெற்ற சமையல்காரர்களை வைத்து திருமண விருந்தும் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டவன், அதற்கான பணத்தை அவனே கொடுக்க முன் வர... அது எல்லோருக்கும் ஆச்சர்யமாக இருந்தது.

வினோதா வீட்டில் அவன் பணத்தை ஏற்க மறுக்க.... “என்னால தான் உங்களுக்கு இந்த அதிகபடி செலவு, அதனால அதை நானே ஏத்துக்கிறது தான் முறை.” என்றான்.

இருபக்கமும் சில பல வாக்குவாதங்களுக்குப் பிறகு ஆளுக்குப் பாதிச் செலவை ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

வினோதாவிற்கு இதில் சுத்தமாக விருப்பம் இல்லை. மறுநாள் அஷ்வினை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினாள்.

“எங்க வீட்டு நிலவரம் தான் உங்க வீட்ல எல்லோருக்கும் தெரியுமே அஷ்வின், பிறகு நாம ஏன் நம்ம கல்யாணத்தைக் கிராண்டா பண்ணனும்.”

“அம்மா என்னோட கல்யாணத்தைப் பத்தி எக்கச்சக்கமா கனவு கண்டிருந்தாங்க வினு. எதுவுமே இல்லாம நம்ம கல்யாணம் ரொம்ப எளிமையா நடந்தா... அவங்க அதை நினைச்சே வருத்தப்பட்டுட்டு இருப்பாங்க. நம்ம கல்யாணம் அவங்க நினைச்சபடி நடந்தா... அவங்க மனசும் சந்தோஷப்படும்.”

அஷ்வின் சொன்னதை வினோதாவால் ஏற்க முடியவில்லை.... வேண்டாம் என்று உறுதியாக மறுக்கவும் முடியவில்லை. அதனால் “சரி இப்ப உங்ககிட்ட பணம் இருக்கு நீங்க குடுங்க. ஆனா ஒருநாள் அதை நான் திரும்பக் குடுத்திடுவேன்.” என்றாள்.

அவள் சொன்னதைக் கேட்டு புன்னகைத்த அஷ்வின் “இந்தச் சின்னத் தலைக்குள்ள பெரிய விஷயம் எல்லாம் போட்டு குழப்பிக்காத.... அதை நான் பார்த்துகிறேன்.” என்றவன் “எனக்கு இந்தக் கவலை எல்லாம் இல்லை... வேற கவலை...” என அவன் பெருமூச்சு விட....

“என்ன கவலை அஷ்வின்? என்கிட்டே சொல்லுங்க.” வினோதா அவனுக்காகப் பதற....

“அன்னைக்குக் கிடைச்ச சான்ஸ் திரும்ப எப்ப வருமோ....” என்றவன், வினோவின் இதழ்களை விரலால் வருட.... அவன் சொன்னது புரிந்ததும், வினோதா அவனைப்பார்த்து முறைத்தவள் “இது ஆபீஸ் நியாபகம் இருக்கட்டும்.” என்று அவன் கையைத் தட்டிவிட... “நியாபகம் இருக்கிறதுனால தான் ஒன்னும் பண்ணலை...” என்றான் அஷ்வின் கண்சிமிட்டி.

ரங்கநாயகி திருமண விஷயத்தில் வெளிப்படையாகக் கலந்து கொள்ளவில்லை. ஆனால் வரதராஜன் தங்களுக்குத் தெரிந்தவர்கள் மூலம் வினோதாவின் குடும்பத்தைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டார். ஒருநாள் வரதராஜன் ராகவன் சுபத்ரா மற்றும் ராதிகா வினோதா வீட்டிற்குச் சம்பரதாயமாகப் பெண் பார்க்க வந்தனர். ராதிகா மிகவும் அலட்டிக்கொண்டாள்.

சம்பந்தியம்மாள் வராதது மஞ்சுவிற்கு மிகவும் வருத்தம். நல்லபடியா கல்யணம் பண்ணிட்டு போற மருமகளையே சில மாமியார்கள் வந்து பாரும்பாங்க. இந்தப் பொண்ணு பிடிக்காத

மாமியார் வீட்ல போய் எப்படி இருக்கப் போறாளோ.... என்று மிகவும் கவலைப்பட்டார்.

“அம்மா, அவங்க வீடு ரொம்பச் சுமார் மா.... கல்யாணத்தை எப்படித் தான் நடத்த போறாங்களோ.... ஆனா உன் பையன் இருக்க அவங்களுக்கு என்ன கவலை.... இவனே அவங்களுக்கும் சேர்த்துச் செலவு செய்வானோ என்னவோ.” வினோதா வீட்டிற்குச் சென்று வந்த ராதிகா போட்டு கொடுக்க.... ரங்கநாயகி யோசிக்க ஆரம்பித்தார்.

அன்று இரவு உணவு அருந்தும் போது.... திருமணத்திற்கு அது இது வாங்க வேண்டும் என்று ரங்கநாயகி ஆரம்பித்த போது... அஷ்வினுக்குத் தன் அம்மா திருமண வேலையில் ஆர்வமாகப் பங்கெடுப்பது குறித்து மகிழ்ச்சியாக இருந்தது.

“அஷ்வின், நம்ம சொந்தகாரங்களுக்கு எல்லாம் டிரஸ் எடுத்து குடுக்கணும். அப்புறம் ராதிகாவுக்கும், சுபத்ராவுகும் மத்தவங்களை விட அதிக விலையில புடவை வாங்கணும். அப்புறம் நாமும் வினோதாவுக்கு எதாவது நகை வாங்கணுமே. உன்னோட அக்கௌன்ட்ல எவ்வளவு பணம் இருக்கு. நீ ஒரு செக் போட்டு குடுத்திடு.” என்று அசராமல் ரங்கநாயகி ஒரு குண்டை தூக்கி அஷ்வினின் தலையில் போட்டு அவனை அதிர வைத்தார்.

அஷ்வின் முகம் மாறாமல் இருக்க மிகவும் சிரமபட்டான். தன்னிடம் பணம் வாங்கிச் செலவு செய்யும் நிலையில் தன் அம்மா இல்லை என்று அவனுக்கு நன்றாகவே தெரியும். ரங்கநாயகி அவருடைய பணத்தை நிறைய நிறுவனங்களில் பங்குகளாக வைத்திருக்கிறார். அதோடு நிறைய இடத்தில் அவருக்கு அசையா சொத்துக்கள் உண்டு. அதிலிருந்து அவருக்கு வாடகையே ஒரு பெரிய தொகை வருகிறது என்பதும் அவனுக்குத் தெரியும். அதோடு வரதராஜனின் வருமானம் வேறு வரும்.

தன்னிடம் பணம் இருந்தால்... வினோதா வீட்டினருக்கு கொடுத்து விடப் போகிறோம் என்றுதான் கேட்கிறார், என அவனுக்கு நன்றாகப் புரிந்தபோதிலும்.... அவனால் எதுவும் சொல்ல முடியவில்லை. இவன் பணம் கொடுப்பதாகச் சொன்னதை நம்பி வினோ வீட்டினர் வேறு பெரிய திருமண மண்டபத்திற்கும், சமையல்காரருக்கும் முன் பணம் கொடுத்து இருந்தனர்.

அஷ்வின் உணவு அருந்திவிட்டு மாடிக்கு செல்ல கிளம்பும் போது.... “இப்பவே செக் கொண்டு வந்து குடுத்திடு அஷ்வின்.” ரங்கநாயகி நினைவுபடுத்த.... அஷ்வின் செக் எழுதி கொண்டு வந்தான். அதை வாங்கிப் பார்த்த ரங்கநாயகி புருவத்தை உயர்த்த “அம்மா, ஒரு லட்சம் மட்டும் எதுக்கும் அவசர தேவைக்கு இருக்கட்டும். மீதிக்கு செக் போட்டுக் கொண்டு வந்திருக்கேன்.” என அஷ்வின் சொல்ல....

“சரி இருக்கட்டும் தேவைபட்டா கேட்கிறேன்.” என்றார் ரங்கநாயகி. அதற்கும் கணக்கு கேட்பார் என்பதால்.... அஷ்வினால் அதை எடுத்துச் செலவு பண்ண முடியாது. அஷ்வினுக்கு எப்படி இந்தத் திருமணம் நடக்கப் போகிறது என்று மலைப்பாக இருந்தது.

பகுதி – 14

மறுநாள் அலுவலகம் வந்த அஷ்வின், பர்சனல் லோன் ஒன்று எடுக்க ஏற்பாடு செய்தான். கவனமாக அதில் வீட்டு முகவரியை கொடுக்காமல் அலுவலக முகவரியை கொடுத்தான். அதன் பிறகு தான் அவனுக்கு மூச்சு விடவே முடிந்தது. இதை அவன் விக்னேஷிடம் சொல்ல.... அதைக் கேட்ட அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

“பரவாயில்லை டா.... உங்க வீட்ல ஒருத்தரை ஒருத்தர் நல்லா சுத்தவிட்டு விளையாடுறீங்க.”

“என் நிலைமை உனக்குச் சிரிப்பா இருக்கா....”

“சும்மா சொன்னேன் டா....” விக்னேஷ் சொன்னதும், நண்பர்கள் இருவரும் சிறிது நேரம் கல்யாண வேலைகளைப் பற்றிப் பேசியவர்கள், பிறகு அவர்கள் வேலையைப் பார்க்க சென்றனர்.

நிச்சயத்திற்கு ஒரு வாரம் முன்பு வினோதா வீட்டிற்கு வந்த அஷ்வின், அவளிடம் ஒரு நகை பெட்டியை கொடுக்க.... அதை அவள் திறந்து பார்த்த போது... அதில் ஒரு செயின், மோதிரம் மற்றும் பிரேஸ்லெட் ஆண்கள் அணியும் மாடலில் இருந்தது. வினோதா அவனைப் புரியாமல் பார்க்க...

“இது நீங்க எனக்குப் போட வேண்டிய நகை.... அதை நானே வாங்கிட்டு வந்துட்டேன். அதனால எனக்கு வாங்கிறதும் சேர்த்து உனக்கே வாங்கிக்கோ...” என்றான் அஷ்வின் விளக்கமாக....

“ஏன் நாங்க வாங்க மாட்டோமா....நாங்க வாங்கிறதை நீங்க போட மாட்டீங்களா...” வினோதா ஒரு மாதிரி குரலில் வினவ.... அவள் வீட்டினரும் அப்படித்தான் நினைக்கின்றனர் என்று அவர்களது முகத்தில் இருந்தே தெரிந்தது.

“அப்படியெல்லாம் இல்லை வினு.... எனக்கு நகை போடவே பிடிக்காது. ஒருநாள் கூத்துக்கு ஏன் வீணா செலவு பண்ணனும். வேண்டாம்ன்னு சொன்னா யாரும் கேட்க போறது இல்லை.... அதனால தான் நானே வாங்கிட்டேன். செயின் நீயும் போடுற மாடல் தான் வாங்கி இருக்கேன்.”
அஷ்வின் அவனுக்காகச் சொல்வதைப் போல் இருந்தாலும், அவன் அவர்களின் சுமையைக் குறைக்கவே முயல்கிறான் என்று அங்கிருப்பவர்களுக்குப் புரியாமல் இல்லை. யாருக்கு கிடைக்கும் இது போல் மாப்பிள்ளை.... பெண் வீட்டில் இருந்து எவ்வளவு பிடிங்க முடியும் என்று தானே பார்ப்பார்கள்.

அவன் நல்ல எண்ணத்தோடு தான் செய்கிறான். ஆனால் அவனை ரொம்பச் சிரமப்படுத்துகிறோமோ என்று நினைத்து

வினோதா வீட்டினர் கவலைப்பட்டனர். அஷ்வின் அவர்களை ஒருவாறு சமாளித்து வைத்தான்.

அஷ்வின் ஒவ்வொன்றையும் யோசித்துச் செய்வதைப் பார்த்து... வினோதா வீட்டினருக்கு அவனை மிகவும் பிடித்தது. அவன் எல்லாவற்றையும் திட்டமிட்டு செய்வதால்.... வினோதாவிற்கு நகை தேர்வு செய்யும் பொறுப்பை அவனிடமே விட்டனர். அவனுக்குத்தான் அவன் வீட்டினரின் விருப்பம் தெரியும். அவர்களுக்கு ஏற்றது போல் அவனே தேர்வு செய்யட்டும் என்று நினைத்தனர்.

அஷ்வின் மஞ்சுவையும் மாலதியையும் உடன் அழைக்க... இல்லை நீங்களே பார்த்து வாங்கிடுங்க என்று இவர்கள் இருவரை மட்டும் அனுப்பி வைத்தனர்.

நகை கடையில் அஷ்வின் வினோதவிற்கு அழகான வேலைப்பாடுகள் கொண்ட ஆரம், நெக்லஸ், வளையல்கள் மற்றும் காதணி தேர்வு செய்தான். அதற்கே இருபது பவுன் ஆகிவிட்டது. பிறகு வெள்ளை நிற பொடி கற்கள் பதித்த வேலைப்பாடுகள் அமைத்த அழகான பெரிய நெக்லஸ் மற்றும் அதற்குப் பொருத்தமான காதணியை அவன் எடுக்க...

“அஷ்வின், இவ்வளவு பெரிசுக்குப் பதில் சின்னதா வாங்கலாமா.... அப்ப இன்னும் ஒரு ஆரம் கூட வாங்கலாம்.” வினோதா யோசனை சொல்ல... “அம்மா அக்காவெல்லாம் வைர நெக்லஸ் வச்சிருக்காங்க வினு. அவங்க போடும் போது.... நீயும் இதைப் போட்டா ரொம்ப வித்தியாசம் தெரியாது அதுக்குத்தான்.”

அஷ்வின் சொன்னது போல் அவன் கையில் வைத்திருந்த நெக்லஸ் ஜொலிக்க.... நாம எங்க போறது வைர நகைக்கு? பேசாம இதையே வாங்கிக்கலாம் என நினைத்த வினோதா மேற்கொண்டு பேசவில்லை....

பின் கல் வைத்த வளையல் ஒரு ஜோடி, சுடிதாருக்கு ஏற்றதாக ஒரு சின்ன நெக்லஸ், சாதாரணமாக வீட்டில் அணிய காதணி, வளையல்.... என்று சரியாக நாற்பது பவுனுக்கு வாங்கிவிட்டே அங்கிருந்து கிளம்பினார்கள்.
இந்த நாற்பது பவுனில் அஷ்வினுக்கும் வாங்கி இருந்தால்... வினோதாவிற்கு இவ்வளவு வாங்கி இருக்கவே முடியாது. அவன் தனக்காகத் தானே இவ்வளவு யோசித்துச் செய்கிறான் என்பதே.... வினோவிற்கு அஷ்வின் மீது இருந்த அன்பை மேலும் அதிகம் ஆகியது.

இவர்கள் இருவரும் வீடு சென்று நகை எல்லாம் எடுத்துக் காட்டிய போது... இதெல்லாம் வெறும் நாற்பது பவுன் தானா.... என்று அனைவரும் ஆச்சயர்ப்பட்டனர். அவன் சொன்னது போல்... மண்டபத்துக்கும், சமையலுக்கும் பாதிப்பணம் அஷ்வின் கொடுக்க..... அவன் நகை வேறு வாங்கி இருப்பதால்... அதை வாங்க பார்த்திபன் விமல் இருவருமே தயங்க... அஷ்வின் அவர்களிடம் வற்புறுத்தி கொடுத்தான்.

மஞ்சு கொடுத்த டிபன் காபியை சாப்பிட்டு விட்டு, கிளம்பும் முன் அஷ்வின் தான் பணம் கொடுத்தது, அவன் வீட்டில் தெரியக் கூடாது என்று மீண்டும் கேட்டுக்கொண்டான்.

அவன் வீட்டில் சொல்லி விட வேண்டும் என்ற எண்ணம் மாலதிக்கு இருந்தாலும், அவர்களுக்குத் தெரிந்தால்... எங்கே அதற்கும் சேர்த்து தன் கணவன் செலவு செய்யும்படி ஆகிவிடுமோ என்ற அச்சத்தில், அவளும் கமுக்கமாக இருந்து கொண்டாள்.

நிச்சயம் அஷ்வினின் வீட்டிலேயே நடந்தது. இருபக்கம் நெருங்கிய உறவினர்களை மட்டும் அழைத்திருந்தனர். நிச்சயத்தன்று காலை ஒன்பது மணி போல் வினோதா வீட்டினர், அவர்கள் நெருங்கிய உறவினர்களோடு ஒரு வேனில் வந்து இறங்க... வரதராஜனும், ராகவனும் அவர்களை வரவேற்றனர்.

அவர்கள் எல்லாம் ஹாலில் வந்து உட்கார்ந்து, சுபத்ரா கொடுத்த காபீயை குடித்து முடித்த பிறகு நிதானமாக ரங்கநாயகி வந்தார். அவர் எல்லோருக்கும் பொதுவாக ஒரு 'வாங்க...' என்றபடி எதோ வேலை இருப்பது போல் அங்கிருந்து சென்றுவிட்டார். அவள் வீட்டு சொத்தை கொள்ளை அடிக்க வந்தது போல்... ராதிகாவும் முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு இங்கும் அங்கும் நடந்தபடி இருந்தாள்.

இதையெல்லாம் பார்த்த மஞ்சுவிற்கு ஒருமாதிரி ஆகிவிட்டது. அவர் வினோதாவை பார்க்க... இதெல்லாம் அவளிடம் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

அவள் முகம் நிறையப் புன்னகையுடன், அஷ்வினுடன் பேசிக்கொண்டு இருந்தாள். அவர்களுடன் விக்னேஷ், அர்ச்சனா, அருண், ரகு, சுஷ்மிதா இருந்தனர்.

மஞ்சுவின் ஒன்றுவிட்ட சகோதரி வத்சலா "விடு ஆரம்பத்தில இப்படித் தான் இருக்கும். கொஞ்சநாள் போனா சரி ஆகிடும். எங்க பாரதி கல்யாணமும் இப்படித்தான்." என்று சமாதானம் செய்தார்.

அஷ்வினின் தாத்தா, பாட்டி, சித்தப்பாக்கள், சித்திகள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் என்று வந்ததும், அந்த இடமே கலகலவென்று இருந்தது. அவர்கள் யாரும்... வினோதாவை முன்பே தெரியும் என்பது போல் காட்டிக்கொள்ளவில்லை.

வாத்தியார் செய்யவேண்டிய சடங்குளை ஆரம்பித்ததும், எல்லோரும் அதைக் கவனிக்க ஆரம்பித்தனர். அஷ்வினும் வினோதாவும் அவர்களுக்கு எடுத்த நிச்சய உடைகளை மாற்றிக்கொண்டு வர சென்றனர். வினோதா அஷ்வினின் அறையில் தான் உடை மாற்றினாள்.

கண்ணாடியின் முன்பு நின்று சரி பார்த்தவளுக்கு, அப்போது தான் இது அஷ்வினின் அறை என்பது நினைவு வர.... அந்த அறையை ஒரு ஆர்வத்துடன்

பார்த்தவள், தன்னிடம் இருந்த லிப்ஸ்டிக்கை கொண்டு அவன் கண்ணாடியில் ஒரு ஸ்மைலி பொம்மை வரைந்து “smile please…” என்று எழுதிவிட்டு சென்றாள்.

அதிகப் பேச்சுவார்த்தை இல்லாமல்... நிச்சயம் நல்லபடியாக முடிந்து, உணவையும் அருந்திவிட்டு வினோதா வீட்டினர் கிளம்பவும், வரதராஜனின் குடும்பத்தினரும் உடனே கிளம்பிவிட்டனர். அவர்களும் அந்த வீட்டில் விருந்தினர் போலத்தான்.

அஷ்வின் மாலை அவன் அறைக்கு வந்த போது.... அங்கே கட்டிலில் வினோதா வரும் போது கட்டிக்கொண்டு வந்து புடவை கிடந்தது. புதிது கட்டியதும் பழையதை எடுக்க மறந்துவிட்டு சென்றிருந்தாள்.

அஷ்வின் அவளின் புடவையை எடுத்து மடித்து வைத்தவன், இதை மட்டும் அம்மா பார்க்கணும், வினுவை உண்டு இல்லைன்னு பண்ணி இருப்பாங்க என்று நினைத்தபடி புடவையை அவனின் அலமாரியில் வைத்துவிட்டு, முகம் கழுவி விட்டு வந்து கண்ணாடியில் பார்க்க.... அங்கே வினோ எழுதியிருந்ததைப் பார்த்ததும், அவன் முகம் புன்னகையில் விரிந்தது.

நாட்கள் வேகமாகச் செல்ல... நகை தேர்வு செய்யும் போது... அஷ்வின் வாங்கியதை அருகில் இருந்து பார்த்ததால்.... வினோதா உடைகள் வாங்கும் போதும் கவனமாக இருந்தாள். வீட்டில் அவள் சேர்த்து வைத்த பணத்தில் உடைகள் வாங்கிக் கொள்வதாகச் சொல்லிவிட்டாள்.

குறைந்த விலையில் நிறைய வாங்குவதை விட... உயர்ந்த தரமாகக் கொஞ்சம் வாங்கினாலும் நல்லதாக வாங்கிக்கொள்ளலாம் என்று நினைத்து, அதே போல் தேர்வு செய்தாள்.

திருமணத்திற்கு மூன்று நாட்கள் இருக்கும் போது... மஞ்சு ஹாலில் அமர்ந்து எதையோ தீவிரமாக யோசித்துக்கொண்டு இருந்தார். அப்போது வீட்டில்

வேறு யாரும் இல்லை. வினோதா மட்டுமே இருந்தாள்.

“ஏன்மா ஒரு மாதிரியா இருக்கீங்க? உங்களுக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கலையா....” வினோதா கேட்க... அவளை நிமிர்ந்து பார்த்த மஞ்சு “நிச்சயம் நடந்த அன்னைக்கு உன் மாமியார் முகம் குடுத்தே பேசலை.... நீ கல்யாணத்துக்கு அப்புறம் அந்த வீட்ல எப்படி வாழ போறேன்னு நினைச்சா தான் கவலையா இருக்கு.” என்றார்.

“அஷ்வின் இருக்காங்க மா..... அவங்க என்னை நல்லா பார்த்துப்பாங்க.” வினோதா புரியாமல் பேச... “கல்யாணத்துக்கு முன்னாடி இருக்கிறது வேற... கல்யாணத்துக்குப் பின்னாடியும் ஆம்பளைங்க அப்படியே இருப்பாங்கன்னு எதிர்பார்க்காத வினோ.”

“அந்த வீட்ல நீயும் அஷ்வினும் மட்டும் இருக்கப் போறது இல்லை... உன் மாமியார் மாமனாரும் இருப்பாங்க. அதோட உனக்கு நாத்தனார், கொழுந்தனும் இருக்காங்க. அதனால அவங்க எப்படி நடந்துகிட்டாலும் நீ தான் பொறுத்து போகணும்.”

“நீ விரும்பி கல்யாணம் பண்ணிக்கிற... பின்னாடி அது சரியில்லை... இது சரியில்லைன்னு எங்களைக் குறை சொல்லக்கூடாது. உனக்கு நாங்க சக்திக்கு மீறி தான் கல்யாணம் பண்ணி வைக்கிறோம். அங்க நல்லபடியா இருந்து பொழைக்கிற வழிய பாரு....”

“நான் வாழும் இந்த வாழ்க்கையில பெரிசா எதையும் அனுபவிக்களை.... எனக்கு இருக்கிற ஒரே ஆசை... கடைசிவரை உங்க அப்பாவோட என் மகன், மருமக, பேரக்குழந்தைகளோட சேர்ந்து சந்தோஷமா இருக்கணும் அவ்வளவு தான்.”

தன் தாய் என்ன சொல்லவருகிறார் என்று வினோதவிற்கு இன்னும் சரியாகப் புரியவில்லை.... “என்னம்மா சொல்ல வரீங்க? என்னால

உங்களுக்குக் கஷ்ட்டம் வரும்ன்னு நினைக்கிறீங்களா....”

“உன் கல்யாணத்துக்கு இவ்வளவு செலவு பண்றது உன் அண்ணிக்குக் கோபமாத்தான் இருக்கும். ஆனா உன் சந்தோஷதுக்காகத் தான் இதை நாங்க செய்றோம். நீ போற இடத்தில ஒழுங்கா இருக்காம சண்டைய வழிச்சிட்டு வந்திடாத.... அப்புறம் உன் அண்ணி உன்னோட சேர்த்து எங்களையும் வெளிய துரத்திடுவா....அதை தான் சொல்ல வரேன்.” என்றார் மஞ்சு தெளிவாகவே.

தன் தாய் சொன்னதைக் கேட்டதும் வினோதாவிற்குக் கோபமாக வந்தது. அவள் முறைத்தபடி இருக்க.... அவள் முகத்தைப் பற்றித் தன் பக்கம் திருப்பிய மஞ்சு “கோபப்படாத வினோ.... நாங்களே பார்த்துக் கல்யாணம் பண்ணியிருந்தா அது வேற.... இது காதல் கல்யாணம். அதுவும் அவங்க வீட்ல உங்க கல்யாணத்தில இஷ்ட்டம் இல்லாத மாதிரி தெரியுது. அதனால முதல்ல கொஞ்சம் கோபமா தான் இருப்பாங்க. அவங்க எதாவது சொன்னா நீ பொசுக்குன்னு கோபிச்சிட்டு வந்துடாத.... நீ இங்க வந்தாலும் உன்னை வச்சு சீராட்ட உன் பெத்தவங்களுக்கு வசதி இல்லை.... அது புரிஞ்சு பொறுப்பா இருந்துக்கோன்னு தான் சொல்றேன்.” என்றார்.

தன் தாயின் கண்ணீரை துடைத்த வினோதா “நான் ஒழுங்கா நடந்துப்பேன் மா.... நீங்க கவலைப்படாதீங்க.” என்றாள்.

“சரி உன் பெரியம்மா வீட்டுக்கு போன் பண்ணி அவங்க எப்ப இங்க வராங்கன்னு கேளு....” மஞ்சு சொல்ல வினோதாவும் சரி என்று தன் செல்லை எடுத்தாள்.

“ஹலோ..”

“ஹலோ பெரியம்மா நான் வினோ பேசுறேன்.”

“வினோ நல்லா இருக்கியா.... கல்யாண வேலையெல்லாம் நல்லபடியா நடக்குதா....”

“ம்ம்... நடக்குது பெரியம்மா.... தான்யா அக்காவும் பாரதி அக்காவும் வந்துட்டாங்களா....”

“அவளுங்க தான.... கல்யாணம் பண்ணி போன பிறகு அவளுங்க பண்ற அலும்பு இருக்கே.... நாளைக்கு அவங்க பசங்களுக்குப் பரிட்சை இருக்காம். அது முடிஞ்சா பிறகு தான் ரெண்டு பேரும் கிளம்பி வருவாங்களாம்.” வத்சலா சொல்ல வினோ சிரித்தாள்.

“எப்படியும் நாளைக்கு ராத்திரி தான் வருவாங்க. அதனால நாளைக்குக் காலையில நான் மட்டும் வரேன். அவளுங்க ரெண்டு பேரும் நேரா மண்டபத்துக்கு வரட்டும். நீ அம்மா கிட்ட சொல்லிடு...” என்றபடி வத்சலா போன்னை வைத்தார்.

யாருக்கு இஷ்ட்டம் இருக்கு... இல்லை என்று பாராமல் ... திருமண நாளும் அழகாக விடிந்தது. சடங்கு சம்பரதயம் என்று பார்த்தால்... தான் முன்னின்று எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பதால்... மாங்கல்ய தானம் மட்டும் போதும் என்றுவிட்டார் ரங்கநாயகி. அதனால் எல்லோரும் அதிகாலையில் தான் மண்டபம் வந்தனர். காலையில் திருமணம், மாலையில் அதே மண்டபத்தில் வரவேற்பு. நலங்கு, காசியாத்திரை, ஊஞ்சல் எதுவும் இல்லாமல் நேராகத் திருமணமே நடந்தது.

இதெல்லாம் வினோதாவின் உற்சாகத்தைச் சற்றும் குறைக்கவில்லை... அவளுக்கு அஷ்வினோடு திருமணம் நடப்பதே போதும், அவள் சந்தோஷமாகத்தான் இருந்தாள். அஷ்வினும் மகிழ்ச்சியாக இருந்தான். போதாததற்கு விக்னேஷ் வேறு அவர்கள் இருவரையும் கேலி செய்து ஓட்டிக்கொண்டு இருந்தான்.

தாலி கட்டும் நேரத்திற்குத் தான்யாவும் பாரதியும் அவசர அவசரமாக அவர்கள் குடும்பத்துடன் உள்ளே நுழைந்தனர். நல்லபடியாகத் திருமணம் முடிந்து, மாலை மாற்றி, மணவறையில் அஷ்வினின் கைபிடித்து அக்னியை வலம்வரும் போதுதான், வினோ அவர்களைக் கவனித்தாள்.

தன் மொச்சைக் கொட்டை கண்ணை மேலும் விரித்தவள், மேடையிலிருந்தே அவர்களைப் பார்த்து கையசைக்க.... பதிலுக்கு அவர்களும் கையசைத்து.... நீ அங்க கவனி என்றனர் ஜாடையில்.

மேலும் இருந்த மற்ற சடங்குகள் முடிந்து, வீட்டினர் மேடையை விட்டு கீழே இறங்க.... விருந்தினர்கள் பரிசை கொடுக்க மேடை ஏறினர். கூட்டம் குறைந்ததும் தான்யாவும் பாரதியும் வினோதாவிடம் சென்றனர்.
வினோ அவர்களை அஷ்வினுக்கு அறிமுகப்படுத்தினாள்.

“இவங்க ரெண்டு பேரும் எங்க பெரியம்மா பொண்ணுங்க. இவங்க தான்யா அக்கா அவங்க பாரதி அக்கா.” அவள் சொல்லிக் கொண்டிருந்த போதே... ஷக்தியும், சஞ்சீவும் தங்கள் பெண்ணரசிகளைத் தூக்கிக் கொண்டு மேடை ஏறினர்.

வினோ அறிமுகபடுத்துவதற்கு முன் அவர்களே தங்களை அறிமுகம் செய்து கொண்டனர்.

“நான் ஷக்தி தான்யாவோட ஹஸ்பன்ட்.... இவ தேஜஸ்வினி எங்களோட பொண்ணு...”

“நான் சஞ்சீவ் பாரதியோட ஹஸ்பன்ட்... இவங்க ஷிவானி.” அஷ்வின் புன்னகையுடன் அவர்கள் இருவரிடமும் கைகொடுத்தவன், மேலும் அவர்களைப் பற்றி விசாரிக்க... ஷக்தி மருத்துவன், சஞ்சீவ் போலீஸ் அதிகாரி என்று தெரிந்ததும், “ரெண்டு பேரும் பப்ளிக் சர்வீஸ் பண்றீங்க. கிரேட்.” அவன் மனம்திறந்து பாராட்ட.... அதேநேரம் கீழே

அமர்ந்திருந்த ரங்கநாயகியின் பார்வையும் மேடையில் தான் இருந்தது.

“தான்யாவுக்கு டாக்டர் மாப்பிள்ளை... பாரதிக்கு IPS ஆபீசர். வினோதாவுக்குக் கம்ப்யூட்டர் இன்ஜினியர். இந்த வீட்டுப் பொண்ணுங்களுக்கு மட்டும் லட்டு லட்டா மாப்பிள்ளை அமையுதுங்க. நாம கைநிறைய பணம் வச்சிக்கிட்டு மாப்பிள்ளை தேடினாலும், நமக்கு இப்படியெல்லாம் அமையலையே...” பக்கத்தில் இருந்த யாரோ யாரிடமோ பேசிக்கொண்டிருக்க... அதைக் கேட்டு ரங்கநாயகிக்கு மேலும் கொதித்தது.

அதற்குள் அவர்களைப் பற்றி மாலதியிடம் விசரித்திருந்த ராதிகா “உங்க வீடு பொண்ணுங்களுக்குத் திறமை அதிகம் தான்.” என்று நொடிக்க... அதைக் கேட்ட தான்யாவின் முகமும் வினோதாவின் முகமும் சுருங்க.... பாரதி நிமிர்ந்தாள்.

“அது எங்க திறமை இல்லை.... இவங்களோடது.” என்று சக்தி, சஞ்சீவ் மற்றும் அஷ்வினை காட்டிய பாரதி “எங்க பின்னாடி இருக்கிற ஒளிவட்டத்தை சரியா புரிஞ்சிகிட்டு, கல்யாணம் பண்ணா எங்களைத் தான் பன்னுவோம்ன்னு இவங்க தான் வந்தாங்க.” என்று இல்லாத காலரை அவள் பெருமையாகத் தூக்கிவிட...

“இந்த வீட்ல எல்லாத்துக்குமே வாய் அதிகம் தான் போலிருக்கு...” ராதிகா முனங்க....மற்றவர்கள் பாரதி சொன்னதைக் கேட்டு வாய்விட்டு சிரித்தனர்.

“உங்க பெரிய சிஸ்டர் வேணா அப்படி இருக்கலாம். ஆனா உங்க சின்னச் சிஸ்டர் கதையே வேற.... அவங்க தான் அப்பாவியான எங்க அஷ்வினை மாங்காயில அடிச்சே கவுத்தாங்க.” விக்னேஷ் வினோதாவின் குட்டை உடைக்க.... அவள் அவனைப் பார்த்து முறைக்க.... ‘இவ வேலை தானா இது’ என்ற கொந்தளிப்புடன் அங்கிருந்து சென்ற ராதிகா....

அதைத் தன் அம்மாவிடமும் உடனே போட்டுக்கொடுத்தாள்.

“பார்த்தியா மா.... இவ தான்மா நம்ம அஷ்வின் மனசை கலச்சிருக்கா.... இல்லைனா நம்ம அஷ்வின் இப்படிப் பண்றவனே இல்லை....” அவள் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகி மேலும் இருகினார்.

“யாரு யாரை கவுத்தாங்கன்னு சாப்பிட்டு வந்து மேலும் விசாரணையை வச்சிக்கலாம்.” பாரதி தோரணையாகச் சொல்ல....

“போலிஸ் ஆபீசர் உங்க ஹஸ்பண்டா இல்லை நீங்களா... உங்களைப் பார்த்தாதான் கொஞ்சம் பயமா இருக்கு....” விக்னேஷ் கிண்டலாகக் கேட்க....

“நான் போலீஸ் இல்லை டீச்சர்.” கெத்தாகப் பதில் சொன்ன பாரதி “பாரு உன்னைப் போலீஸ்ன்னு சொன்னா நம்ப மாட்றாங்க. அதுக்குத்தான் கொஞ்சம் தொப்பை இருக்கனும்ன்னு சொல்றது.” என அவள் தன் கணவன் சஞ்சீவிடம் ரகசியம் பேச....

“அப்படியா.... ஆனா எனக்குப் பதில் தான் உனக்கு இருக்கே...” சஞ்சீவ் பாரதியின் மேடிட்டிருந்த வயிற்றைக் காட்ட... “அது பாப்பா....உன்னால தான்.” பாரதி முகம் சிவக்க...சஞ்சீவ் அவளை ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

“பப்ளிக்... பப்ளிக்....” ஷக்தி சஞ்சீவை ஜாடையாகப் பார்த்து கிண்டல் செய்ய.... “நீங்க ஏன் ஷக்தி எங்களைப் பார்கிறீங்க? அவங்களைப் பாருங்க.” சஞ்சீவ், அஷ்வினையும் வினோதாவையும் காட்ட.... ஷக்தி புன்னகையுடன் தலையசைத்தான். எல்லோரும் சேர்ந்தே காலை உணவு அருந்த சென்றனர்.

“எனக்குக் கமிஷனர் ஆபீஸ் வரை போகணும்.” உணவு அருந்திவிட்டு வந்தபின் சஞ்சீவ் சொல்ல.... “நானும் என்னோட ப்ரண்ட்ஸ் பார்க்க

போகலாம்ன்னு இருக்கேன்.” என்றான் ஷக்தி. தான்யாவையும், பாரதியையும் அங்கேயே தங்கி ஓய்வு எடுக்கச் சொல்லிவிட்டு சஞ்சீவும், ஷக்தியும் கிளம்பினர்.

“சாயங்காலம் அஞ்சு மணிக்கு இங்க வந்திடனும். ரிஷப்ஷன் முடிஞ்சதும் வந்தீங்க... அவ்வளவு தான்.” பாரதி சஞ்சீவை மிரட்டி வழியனுப்ப.... அதைப் பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷ் “ஷப்பா.... போலீசையே ஒருத்தங்க மிரட்டுறாங்கப்பா.” எனக் கேலி செய்ய....

“உனக்குத் தெரியாது அவரைப்பத்தி, கல்யாணத்துக்கு வர சொன்னா வளைகாப்புக்தான் வருவார். அவ்வளவு கடமை உணர்ச்சி. நீ வேனாப் பாரு.... அவரு எட்டு மணிக்கு முன்னாடி வந்துட்டா.... நான் என் பேரை மாத்திக்கிறேன்.” பாரதி சவால்விட்டு செல்ல... விக்னேஷ் அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

பகுதி – 15

காலை உணவு அருந்திவிட்டு வந்ததும் “நான் வீட்டுக்கு போயிட்டுச் சாயந்தரம் வரேன்.” என ரங்கநாயகி கிளம்ப....

“ரங்கநாயகி என்னதிது? நீ வீட்டுக்கு போனா.... இங்க இருக்கிற சொந்தகாரங்களை யார் கவனிக்கிறது? அப்புறம் ஆளாளுக்கு எதாவது பேச ஆரம்பிப்பாங்க.” வரதராஜன் பதற...

“இப்ப மட்டும் பேசாமலா இருக்காங்க. காலையில இருந்து எத்தனை பேர் என்கிட்டே வந்து அஷ்வினுக்கு நீங்க இன்னும் பெரிய இடமா பார்ப்பீங்கன்னு நினைச்சோம். ஏன் இப்படி? என்ன ஆச்சுன்னு? கேள்வி மேல கேள்வி கேட்டுட்டு தான் இருக்காங்க. இதுக்கு மேல பேச என்ன இருக்கு? பேசினா பேசிக்கட்டும் நான் வீட்டுக்குப் போகத்தான் போறேன்.”

ரங்கநாயகி பிடிவாதம் பிடிக்க... அப்போது அங்கே வந்த அஷ்வினிடம் வரதராஜன் விஷயத்தைச் சொல்ல...

“அம்மா, மேல ஏசி ரூம் எல்லாம் இருக்கு. நீங்க போய் ஒரு ரூம்ல ரெஸ்ட் எடுக்க. மதியம் சாப்பாடு ரெடி ஆனதும், நான் வந்து உங்களைக் கூப்பிடுறேன். உங்களை யாரும் தொந்தரவு பண்ணாம நான் பார்த்துகிறேன்.” அஷ்வின் சமாதனம் செய்து தன் அம்மாவை அழைத்துக்கொண்டு மாடிக்குச் சென்றான்.

ரங்கநாயகி அந்தப் பக்கம் சென்றதும், உறவினர்கள் தங்களுக்குள் அஷ்வின் வினோதா திருமணம் குறித்து அலசி ஆராய்ந்தனர். அதில் நிறைய பேர் நினைத்தது ‘இவளுக்கு இது வேண்டியது தான்.’ என்று. ரங்கநாயகி எல்லோரிடமும் கெத்தாக நடந்து கொள்வார். அதனால் அவர் மேல் இருந்த பொறாமையை இப்படி பேசி தீர்த்துக்கொண்டனர்.

வரதராஜன் குடும்பத்தினர் வினோதாவுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். “அண்ணி, நீங்க வந்த அன்னைக்கு நான் வீட்ல இல்லை.... இன்னொரு நாள் கூடிட்டு வரேன்னு சொல்லிட்டு அஷ்வின் அண்ணா கூடிட்டே வரலை....” அகல்யா வினோதாவிடம் புகார் சொல்ல...

“இப்பத்தான் கல்யாணம் ஆகிடுச்சே... இனிமே அடிக்கடி வரோம்.” வினோதா அவளைச் சமாதானம் செய்தாள். அஷ்வின் வந்ததும் அவர்கள் எல்லோரும் சேர்ந்து குடும்பப்படம் எடுத்துக்கொண்டனர். ராதிகா இதையெல்லாம் கவனித்துக் கொண்டே இருந்தாள். பிறகு அவள் அம்மாவிடம் போட்டுக்கொடுக்க.....

அவள் புகுந்த வீட்டினரும் வந்திருந்தனர். அவர்களிடம் பேருக்கு வாங்க என்று கேட்டுவிட்டு ஒதுங்கிக் கொண்டாள். அவர்கள் வெகு நாட்கள்

கழித்துச் சந்தித்த தங்கள் பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ்ந்தனர்.

தங்கள் அறைக்குச் சென்று உடை மாற்றிவிட்டு வந்த தான்யாவும் பாரதியும் மணடபத்தில் கலகலப்பே இல்லாமல் இருப்பதைப் பார்த்து குழம்பினர்.

“என்ன விளையாடல் எல்லாம் இல்லையா....” பாரதி விக்னேஷை பார்த்துக்கேட்க, அவன் இல்லை என்று உதடு பிதுக்கினான்.

“சரி எல்லோரும் அந்தாக்ஷரி விளையாடுவோமா....” பாரதி அழைக்க... அதைக் கேட்ட அங்கிருந்தவர்கள் எல்லோரும் சரி என்றனர்.

அங்கிருந்தவர்களைப் பாரதி மூன்று அணியினராகப் பிரித்தாள். குட்டீஸ் எல்லாம் ஒரு அணி, இளையவர்கள் எல்லாம் ஒரு அணி மற்றும் பெரியவர்கள் எல்லாம் ஒரு அணி.

கல்யாணம் ஆகாதவங்க எல்லாம் குட்டீஸ் தான் என்று விக்னேஷும் அர்ச்சனாவும் அங்கே செல்ல.... அவர்களோடு அகல்யா அருந்ததி, அருண் ரகு எல்லோரும் சேர்ந்து கொண்டனர். எருமைங்க எல்லாம் குட்டீஸ்ஸாம் என்று முனங்கிய போதும், பாரதி அவர்களைத் தடுக்கவில்லை..... முதலில் அவளும் தான்யாவுமே பாடி அந்தக்ஷரியை ஆரம்பித்து வைத்தனர்.

“மனம் விரும்புதே உன்னை... உன்னை... மனம் விரும்புதே....

உறங்காமலே கண்ணும்.... கண்ணும் சண்டை போடுதே....

நினைத்தாலே சுகம் தானடா நெஞ்சில் உன் முகம் தானடா....

அச்சச்சோ மறந்தேனடா உன் பேரா தெரியாதடா....” அவர்கள் இருவரும் பாடி முடித்ததும், அடுத்துப் பெரியவர்கள் அணியில் இருந்து ஒருவர்

ஆரம்பிக்க... பிறகு குட்டீஸ் அணி என்று அந்தாக்ஷரி களை கட்டியது.

வினோதவிற்குப் பாட வராது என்பதால்... அவள் பார்வையாளராக மட்டும் இருக்க... அஷ்வின் பாரதி தான்யாவோடு சேர்ந்து பாடி அசத்தினான்.

தூரத்தில் இருந்து மஞ்சு, தன் சகோதரியின் மகளைகளை நன்றியுடன் பார்த்துக் கொண்டிருந்தார். இவர்கள் வரும்வரை கல்யாணம் போலவா இருந்தது. ஆளுக்கு ஒரு பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு.... எதையும் ரங்கநாயகியிடம் கேட்க பயந்து கொண்டு, அவரே பலமுறை ராகவன் சுபத்ராவிடம் தான் கேட்டுச் செய்தார்.

மதிய உணவு வரை பாடிக்களைத்தவர்கள் பிறகு உணவு அருந்த சென்றனர். உண்ட களைப்பில் உறவினர்கள் ஒய்வு எடுக்க.... பாரதியும் தான்யாவும் தாங்கள் தங்கி இருந்த அறைக்கு வினோதாவை அழைத்துக்கொண்டு சென்றனர். மூவரும் கட்டிலில் ஆளுக்கொரு பக்கம் சாய்ந்து கதை பேசிக்கொண்டிருந்தனர்.

வினோதா தன் காதல் கதையை விளக்க.... அதைக் கேட்டுக்கொண்டே படுத்திருந்த பாரதி அசதியில் உறங்கிவிட.... தான்யா அதை வினோதாவிடம் காட்டி சிரித்தாள்.

“எனக்கு ரொம்பப் பயமா இருக்கு கா.... அவங்க அம்மா அக்காவெல்லாம் கோபமா இருக்காங்க. என்னையும் அந்தக் குடும்பத்தில ஒருத்தியா ஏத்துப்பாங்களா...” வினோதா வருத்தப்பட....

“எல்லார் வீட்லயும் இப்படி யாரவது இருக்கத் தான் செய்வாங்க வினோ... பாரதியோட ஓரகத்தி அவளோட பேசவே மாட்டா... என் நாத்தனார் வீட்டுகாரர் எப்பவும் எக்குதப்பா எதாவது பேசி வைப்பார். இவங்களை எல்லாம் மாத்தனும்ன்னு நினைச்சா... அது அந்தக் கடவுளால கூட முடியாது. அவங்களா மாறினாத்தான் உண்டு.”

“அவங்க எப்படி இருந்தாலும், நீ சரியா நடந்துக்கோ.... உன் நடத்தையே கூட அவங்களை மாத்தலாம். அவங்க கோபத்தில எதாவது செஞ்சா... நீயும் பதிலுக்கு எக்குதப்பா எதாவது செஞ்சு வைக்காத.... பொறுமையா இரு. தன் வீட்டை எதிர்த்து அஷ்வின் உன்னைக் கல்யாணம் பண்ணிருக்கார். அவர் எப்பவும் உன்னால சந்தோஷமா இருக்கணும். அதை மட்டும் நினைவு வச்சுக்கோ.” தான்யா பேசப்பேச வினோதாவிற்கு ஒரு தெளிவு வந்தது.

மாலை வரவேற்பு வெகு விமர்சையாக நடந்தது. யாருக்கும் எதையும் யோசிக்கவே நேரம் இல்லை.... மண்டபத்தில் அவ்வளவு கூட்டம். இரு பக்க உறவினர்கள், அலுவலக நண்பர்கள், அக்கம் பக்கம் இருப்பவர்கள் என்று கூட்டம் அள்ளியது. அஷ்வின் வினோதா திருமணம் வார நாட்களில் நடந்ததால்.... திருமணத்தை விட வரவேற்புக்கு தான் அதிகம் பேர் வந்திருந்தனர்.”

அவ்வளவு பேர் வந்தும், யாருக்கும் உணவு இல்லை என்று இல்லாமல் எல்லோருக்கும் காணும் விதமாகவே அறுசுவை விருந்து பரிமாறப்பட.... அதோடு மண்டபமும் உயர்ந்த தரத்துடன் இருந்ததால்.... விருந்தினர் இதமான மனநிலையிலேயே விடைபெற்று சென்றனர்.

ஷக்தி சரியாக ஆறு மணிக்கெல்லாம் வந்துவிட... எட்டரை மணிக்கு வந்த சஞ்சீவை பார்த்து பாரதி விக்னேஷிடம் ‘நான் சொன்னேன் பார்த்தியா...’ என்பது போல் ஜாடை செய்ய.... அவன் அடக்கமுடியாமல் வாய்விட்டுச் சிரித்தான்.

கடைசிப் பந்தியில் அமர்ந்து அஷ்வினும் வினோதாவும் சாப்பிடும் போது... அவர்களிடம் விடைபெற வந்த பாரதி “நாங்க கிளம்புறோம் வினோ....” என்றவள், அஷ்வினை பார்த்து “என் தங்கச்சியை நல்லா பார்த்துக்கோங்க...அப்படியில்லைன்னா என்

வீட்டுக்காரர் போலீஸ் தான் ஞாபகம் இருக்கட்டும்.” என்று பொய்யாக மிரட்ட...

“என்னங்க இப்படி மிரட்டுறீங்க?” என அஷ்வின் புன்னகைக்க...

“நீங்க பயப்படாதீங்க அஷ்வின், என் வீட்டுகாரர் போலீஸ்காரர் அப்படின்னு... ஒரு நாளைக்குக் குறைஞ்சது ஒருத்தர் கிட்டயாவது பாரதிக்கு சொல்லிடனும். இல்லைனா... அவளுக்குத் தலை வெடிச்சிடும்.” ஷக்தி கேலி செய்ய.... பாரதி அவனை முறைத்தாள்.

“நாங்க கோயம்புத்தூர்ல இருக்கோம். ஷக்தி பொள்ளாச்சி... பக்கத்தில தான் ஊட்டி. அதனால ஒரு ட்ரிப் ப்ளான் பண்ணி ரெண்டு பேர் வீட்டுக்கும் வாங்க.” சஞ்சீவ் அழைக்க.... அஷ்வின் “கண்டிப்பா வரோம்.” என்றதும், அவர்கள் அனைவரும் விடைபெற்று சென்றனர்.

விருந்தினர் எல்லாம் சென்ற பிறகு வீட்டினர் கிளம்பும் சமயம் “மாப்பிள்ளையையும், பொண்ணையும் எங்க வீட்டுக்கு அழைச்சிட்டு போகட்டுமா...” பார்த்திபன் ரங்கநாயகியிடம் அனுமதி வேண்ட....
“இல்ல இருக்கட்டும் பரவாயில்லை.... நாங்க எங்க வீட்டுக்கே அழைச்சிட்டு போறோம். அஷ்வினுக்கு உங்க வீட்ல தங்க வசதிபடாது.” என்று தயவுதாட்சணியம் இன்றி முகத்திற்கு நேராக மறுப்பு சொன்ன ரங்கநாயகி, முதல் ஆளாகச் சென்று காரில் ஏற... மற்றவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர்.

“நான் இதுவரை யார் வீட்லயும் நைட் தங்கினது இல்லை... அதனால தான் அம்மா அப்படிச் சொல்றாங்க. நீங்க எதுவும் மனசுல நினைச்சு வருத்தபடதீங்க மாமா... நாங்க நாளைக்குக் கண்டிப்பா வரோம்.”

அவன் அம்மாவையும் விட்டுக்கொடுக்காமல்... அதே சமயம் மாமனாரின் மனம் நோகாதபடியும் பேசி

சமாளித்து அஷ்வின் கிளம்ப.... பிறந்த வீட்டை விட்டு புகுந்த வீட்டிற்குச் செல்லும் ஒவ்வொரு பெண்ணும் கண்ணீரில் கரைவது போல்... வினோதாவும் கண்களில் கண்ணீருடன் தன் புகுந்த வீட்டிற்குக் கிளம்பினாள்.

எப்போதும் பாசத்தை வெளிப்படையாகக் கட்டிக்கொள்ளாத விமல் கூட அவன் தங்கை கிளம்பியதும் கண்கலங்க.... மஞ்சுவை பற்றிக் கேட்கவே வேண்டாம். அவருக்கு ஏற்கனவே தன் பெண்ணை நினைத்து கவலை... இப்போது அவள் கிளம்புவதைப் பார்த்து மேலும் கண்ணீர் விட்டார்.

வினோதா காரில் ஏறியதும், இரண்டு பெட்டிகளைக் கொண்டு வந்து விமல் காரின் டிக்கியில் வைத்தான். கார் கிளம்பும் வரை பார்த்திபன் தன் மகளின் கைகளைப் பிடித்துக்கொண்டே இருந்தார். கார் கிளம்பி அவர்கள் கண்ணை விட்டு மறையும் வரை... வினோதா எட்டி பார்த்துக்கொண்டே வந்தாள்.

சிறிது நேரம் சென்று தான் வினோதா காரில் அவர்களோடு இன்னும் வேறு யார் இருக்கிறார்கள் என்று பார்க்க.... அருண் காரை ஓட்ட... அவன் அருகில் ரகு இருந்தான்.

வரவேற்பு முடிய இரவு நெடுநேரம் ஆனதால்... ஊரில் இருந்து வந்த உறவினர் சிலர் மட்டும் தங்கி இருக்க... அவர்கள் முன்பு ஒன்றும் காட்டிக்கொள்ளாமல் ரங்கநாயகி நடந்து கொண்டார். மணமக்கள் வந்ததும் அவர்களுக்கு முறையாகச் சுமங்கலி பெண்கள் சேர்ந்து ஆலம் சுற்றினர்.

வீட்டில் இருந்த உறவினர்களை.... அவர்கள் வீட்டில் தங்க வைத்துக் கொள்வதாகச் சொல்லி சுபத்ரா அழைத்துச் சென்றார். அவர்கள் ரங்கநாயகியின் பக்க உறவினர்கள். அதனால் ராகவனுக்கும் சொந்தம் தான். அதோடு புதுமணமக்களுக்கு இன்று முதல் இரவு வேறு... அவர்களுக்குத் தொந்தரவாக

இருக்க வேண்டாம் என்ற எண்ணத்திலும் அந்த இரவு நேரத்தில் அலுப்புப் பார்க்காமல் கிளம்பி சென்றனர்.

வரதராஜன் கீழே இருந்த ஒரு அறைக்குள் சென்று விட.... ரங்கநாயகியும், ராதிகாவும் இன்னொரு அறையில் சென்று கதவை மூடிக்கொண்டனர். அருணும் அவன் அறைக்குச் சென்றுவிட்டான். மகேஷ் மண்டபத்தில் இருந்தே அவன் வீட்டிற்குச் சென்றுவிட்டான்.

உறவினர்கள் தங்க அறை எல்லாம் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு, சுபத்ரா மீண்டும் வந்து பார்த்த போது... ஹாலில் அஷ்வினும் வினோதாவும் மட்டுமே இருந்தனர். சுபத்ரா ரங்கநாயகியை தேடி அவர் அறைக்குள் செல்ல.... அங்கே அவரும் ராதிகாவும் உடைகள் மாற்றிவிட்டு நகைகளைக் கழட்டிக்கொண்டு இருந்தனர்.

“அக்கா, அஷ்வினும் வினோதாவும் ஹால்ல இருக்காங்க.” சுபத்ரா சொல்ல...

“ஏன் அவங்க இஷ்ட்டத்துக்குக் கல்யாணம் பண்ணவங்களுக்கு அடுத்து என்ன பண்ணனும்ன்னு தெரியாதா....” ராதிகா அலட்சியமாக பேச...

அவள் சொன்னதைக் கேட்டபடி உள்ளே வந்த வரதராஜன் “ராது, உனக்கு இந்தப் பேச்சு அழகில்லை. அவங்க யாரோ இல்லை... உன் தம்பி, தம்பி பொண்டாட்டி தான். ஒழுங்கா பேசிப் பழகு. உங்களோட கோபத்தைக் காட்ட இது நேரம் இல்லை....மேற்கொண்டு ஆகவேண்டியதை பாருங்க.” அவர் அதட்டி பேச.... இதுவரை தன்னைத் திட்டாத தந்தை திட்டியதும், ராதிகாவுக்குக் கண்கலங்க தொடங்கியது.
“மங்களத்தைப் பால் காய்ச்சு வைக்கச் சொன்னேன். காயச்சுட்டாளா பாரு... ரெடியா இருந்தா.. வெள்ளி சொம்புல ஊத்தி, ரெண்டு வெள்ளி டம்ளர் கொடுத்து, உன் தம்பி பொண்டாட்டியை அஷ்வின் ரூமுக்குப் போகச்

சொல்லு....” என ரங்கநாயகி ராதிகாவை அனுப்ப... அவளோடு சுபத்ராவும் சென்றார்.

சுபத்ரா வெள்ளி சொம்பையும் டம்ளரையும் வினோதாவிடம் கொடுத்தவர், இருவரையும் மாடிக்குப் போகச் சொல்ல.... ஒரு நிமிஷம் என்ற அஷ்வின் வினோதாவிடம் இருந்து சொம்பை வாங்கி அங்கிருந்த மேஜையில் வைத்தவன், அவளை அழைத்துக்கொண்டு அவன் பெற்றோர் அறைக்குச் சென்றான்.

அஷ்வின் கதவை தட்டிவிட்டு உள்ளே செல்ல... அவர்களைப் பார்த்ததும் வரதராஜனும் ரங்கநாயகியும் திடுக்கிட்டு எழுந்து நிற்க.... “எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க....” என்றவன், வினோதாவுடன் அவர்கள் காலில் விழ.... வரதராஜன் “நல்லா இருங்க...” என்றவர், ராதிகாவிடம் திருநீறு கொண்டு வர சொல்லி இருவருக்கும் வைத்து விட்டார்.

பிறகு சுபத்ராவிடமும் ஆசிர்வாதம் வாங்கிகொண்டு அவர்கள் அறைக்குச் சென்றனர். பகலிலும் ஓய்வு எடுக்காததால் இருவரும் மிகவும் கலைத்து போய் இருந்தனர். அவர்களுக்குப் பேச கூடத் தெம்பு இல்லை. உள்ளே வந்ததும் கட்டிலில் ஆளுக்கொரு பக்கம் உட்கார்ந்து விட்டனர்.

“நான் இப்படியே தூங்கட்டுமா...” வினோதா கண் நிறையத் தூக்கத்துடன் கேட்க.... அவளைப் பார்க்க அஷ்வினுக்குப் பாவமாகத்தான் இருந்தது. ஆனால் வரவேற்பில் இருந்து நேராக வந்ததால்... இன்னும் ஆடை அலங்காரம் எதுவுமே மாற்றாமல் இருந்தனர்.

“டிரஸ் மாத்திட்டு தூங்குடா...” அஷ்வின் சொன்னதும் தான், தன் உடையைப் பார்த்த வினோ... இவ்வளவு பெரிய புடவையைக் கட்டிக்கொண்டு தூங்க முடியாது என்பதால்.... எழுந்து கண்ணாடியின் முன்பு சென்று நின்றவள், தலை அலங்காரத்தைப் பார்த்ததும், இதை வேற கழட்டனுமா... இன்னைக்குத் தூங்கினா மாதிரி

தான் என்று சலித்தபடி..... நகைகளை ஒவ்வொன்றாகக் கழட்ட ஆரம்பித்தாள். அப்போதே நேரம் நள்ளிரவு....

அதற்குள் அஷ்வின் தன் உடைகளை மாற்றிவிட்டு முகம் கழுவி வந்தவன், இன்னும் வினோதா அப்படியே இருப்பதைப் பார்த்து, அவள் அருகில் செல்ல.... அவள் அழுது கொண்டிருந்தாள். அதைப் பார்த்து அஷ்வின் பதறி விட்டான்.

“என்ன ஆச்சு வினு? ஏன்டா அழற?”

“ம்ம்... இந்தக் கொண்டை கழட்டவே வரலை.... நான் எப்ப அவுத்து? எப்ப தூங்கிறது? எங்க வீட்டுக்கே போய் இருக்கலாம், எங்க அம்மா ஹெல்ப் பண்ணி இருப்பாங்க.”

வினோதா சொன்னதைக் கேட்டு அஷ்வின் சிரித்து விட்டான்.

“இதுக்குத்தான் அழுகையா.... நான் ஹெல்ப் பண்றேன்.” என்றவனுக்கு முதலில் எதை எடுப்பது என்று தெரியவில்லை.... பிறகு வினோ சொன்னது போல் ....அவள் கொண்டையில் இருந்த ஹேர்ப்பின்களை ஒவ்வொன்றாக எடுக்க.... வினோ பிறகு எளிதாகக் கொண்டையைப் பிரித்துவிட்டு, தலைவாரி பின்னளிட்டாள்.

“அடுத்து உனக்கு டிரஸ் மாத்த ஹெல்ப் பண்றேன்.” என்ற அஷ்வின் அவளின் புடவையில் கைவைக்க... “ஒன்னும் தேவையில்லை.... நானே பார்த்துகிறேன்.” என்ற வினோ... அப்போது தான் அறையில் அவள் பெட்டி இல்லை என்பதைக் கவனித்தாள்.

“அஷ்வின், என் பெட்டிங்க கார் டிக்கியில் இருக்கு... அதுல நகையெல்லாம் இருக்கு...கொஞ்சம் சீக்கிரம் போய் எடுத்திட்டு வாங்களேன். ப்ளீஸ்....”

“சரி நான் போய் எடுத்தது வரேன்.” என்ற அஷ்வின் கீழே இறங்கி சென்றதும், இப்போது முகம் கழுவினால் புடவை நனைந்து விடும் என்பதால்... அப்படியே உட்கார்ந்து இருந்தாள்.

அஷ்வின் கீழே சென்ற போது, எல்லோரும் இன்னும் உறங்காமல் தான் இருந்தனர். ராகவன் வேறு இருந்தார். இவனைப் பார்த்ததும் என்ன எது என்று விசாரிக்க... அவர்களிடம் சொல்லிவிட்டுக் கார் சாவியை எடுத்துக்கொண்டு வெளியில் சென்றவன், இரண்டு பெட்டிகளையும் உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

அவர்கள் எல்லோரும் பேசிக்கொண்டிருக்கும் போது... தான் மட்டும் எப்படிப் போவது என்று அஷ்வினும் அவர்களோடு உட்கார்ந்து பேச.... அங்கே அவர்கள் அறையில் உட்கார்ந்த படியே உறங்கிவிட்ட வினோ... தூக்கத்தில் விழ.... கண்திறந்து பார்த்தவள், இன்னும் அஷ்வின் வரவில்லை என்றதும், அவளுக்கு எரிச்சலாக இருந்தது.

கீழே போய்ப் பார்க்கவும் அவளுக்கு விருப்பம் இல்லை... அதனால் அஷ்வினின் அலமாரியை திறந்து அதிலிருந்து அவளுக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு உடைமாற்றி முகம் கழுவி வந்தாள். அப்போதும் அஷ்வின் வந்திருக்கவில்லை.... இப்போது என்ன செய்வது? உறங்குவதா விழித்திருப்பதா.... இன்னைக்கு எதாவது நடக்குமா... நடக்காதா.... என்று யோசித்தவள், அஷ்வின் வந்து எழுப்புவான் என்ற நம்பிக்கையில் உறங்கி போனாள்.

அஷ்வின் அறைக்கு வந்து பார்த்த போது... ஏசியின் குளிருக்குச் சுகமாக இழுத்து போர்த்தியபடி வினோதா தூங்கிக் கொண்டிருந்தாள்.

பாவம் புடவை மாத்தாமலே தூங்கிட்டா போலிருக்கு... என்று நினைத்தவனின் பார்வையில் மேஜையில் இருந்த அவளின் புடவை கண்ணில் பட.... அப்ப இவ என்ன போட்டுட்டு தூங்கிறா? என்ற ஆராய்ச்சியில் இறங்கினான்.

இவளுக்கு இதே வேலையா போச்சு என்றபடி அவளின் புடவையை எடுத்து மடித்து வைத்தவன்,

கீழே கிடந்த ஜாக்கெட்டையும் மடித்து வைத்தான். அவள் நகைகளைக் கழட்டி கண்ணாடி முன்பு அப்படியே போட்டிருப்பதைப் பார்த்து, அதை எடுத்து அலமாரியில் வைத்துப் பூட்டினான்.

கொடுத்த பாலை வீணாக்க வேண்டாம் என்று மொத்த பாலையும் அவனே குடித்து முடித்து, செம்பை கழுவி வைத்துவிட்டு, வழக்கமாக இரவில் ஒரு தரம் பல் துலக்குவதையும் முடித்துக்கொண்டு, கட்டிலில் வந்து படுத்தவனுக்குத் தூக்கமே வரவில்லை.

அவள் என்ன போட்டிருக்கிறாள்? அவனின் கற்பனை சென்ற திசையில்... ஏசியின் குளிரையும் மீறி அவன் உடல் குப்பென்று வியர்க்க.... 'டேய் அடங்குடா...' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். போர்வையை எடுத்து பார்க்கவும் தயக்கமாக இருந்தது.

தூக்கத்தில் வினோதா புரண்டு படுக்க... அவளின் போர்வை நழுவ... அவள் அணிந்திருந்த உள்பாவடையும், அவனது டி- ஷர்ட்டையும் பார்த்து அஷ்வின் சிரித்துக்கொண்டான்.

இப்பவே எழுப்பி என்னோட சட்டையைக் கழட்டி குடுன்னு கேட்போமா... என்று ஒரு நொடி யோசித்தவன், நேரத்தை பார்த்துவிட்டு மனதில் வேறு திட்டத்துடன் தானும் உறங்க கண் மூடினான்.

பகுதி – 16

அதிகாலை நேரம் ஏசியின் குளிர் உடலை தாக்க... இன்னும் நன்றாக மூடிக்கொள்ள எண்ணி, நழுவி இருந்த போர்வையைப் பிடித்து வினோதா இழுக்க.... அதே போர்வையை அஷ்வினும் மூடி இருந்ததால்.... அவனின் உறக்கம் கலைந்தது.

நேற்றுவரை அவ்வளவு பெரிய கட்டிலில் தான் மட்டுமே படுத்திருந்த நினைவில்.... உடலில் இருந்த போர்வையை யாரோ உருவவும், கண்திறந்த அஷ்வின், தன் பக்கத்தில் படுத்திருந்த வினோவை

பார்த்ததும், அவன் தூக்கம் இருந்த இடம் தெரியாமல் விலகி ஓட.... அவளையே கண் இமைக்காமல் பார்த்திருந்தான்.

வினோதா எப்போதும் எழுந்து கொள்ளும் நேரம் என்பதால்... அவளுக்கும் அசந்த உறக்கம் இல்லை.... தூங்குவதும் விழிப்பதுமாக இருந்தவள் கண்திறக்க... தன்னையே பார்த்துக்கொண்டிருந்த அஷ்வினின் முகத்தில் விழித்தவள், அவளும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

பார்வை ஒன்றை ஒன்று தழுவ.... வினோதா தன் கையை அஷ்வினின் பக்கம் நீட்டி, அவனை அருகில் அழைக்க.... ஆனால் அஷ்வினோ அவளின் கையைப் பற்றி இழுத்த இழுப்பில்.... இவள் சென்று அவன் மார்பின் மீது விழுந்தாள்.

தன் மார்பில் விழுந்தவளின் தோளை இருபக்கமும் வருடிய அஷ்வின் “யாரை கேட்டு என்னோட டீஷர்ட் எடுத்து போட்ட?” என்றான்.

அவன் முகத்தில் புன்னகையோ கேலியோ இல்லாததைப் பார்த்து, உண்மையிலேயே அவனுக்குக் கோபமோ என்று வினோதா பயந்து விட்டாள்.

“ஏன் நான் உங்களோடது போடக் கூடாதா...”

“அப்படியில்லை... நான் வேற எதோ எதிர்பார்த்து ஏமாந்து போயிட்டேன்.”

“என்னது?” என்ற வினோவின் காதில் அஷ்வின் எதோ சொல்ல.... முகம் சிவந்தவள் “ச்சீ.... இப்படியெல்லாமா நினைப்பீங்க.” அவள் சிணுங்க....

“வேற எப்படி நினைப்பாங்க?” அஷ்வின் கண் சிமிட்டி சிரிக்க...

“என்னால இன்னும் நம்பவே முடியலை அஷ்வின், நமக்கு நிஜமாவே கல்யாணம் ஆகிடுச்சா....”

“உனக்கு ரொம்பச் சந்தேகமா இருந்தா... கீழ போய் அம்மா கிட்ட வேணா கேட்போமா...” அஷ்வின் சொல்லிவிட்டு எழுவது போல் நடிக்க.... “ஐயோ ! வேண்டாம்.” வினோ பதற.... “அந்தப் பயம் இருக்கட்டும்.” என்ற அஷ்வின், திரும்ப அவளைத் தன் மார்பு மீது போட்டுக்கொண்டு கட்டிலில் சாய்ந்தான்.

வினோதா அஷ்வினின் தலையைக் களைத்தவள், அவனின் அகலமான நெற்றில் தன் முதல் முத்தத்தைப் பதித்துவிட்டு அடுத்து அவனின் கண்கள், கன்னம் என்று முத்தமிட்டவள், இதழ்களுக்கு வந்ததும் தயங்க, அஷ்வின் அவளைப்பார்த்து புன்னகையுடன் தன் புருவத்தை உயர்த்த.... அவன் இதழிலும் பட்டும் படாமல்... இதழ் ஒற்றிவிட்டு நிமிர்ந்தாள்.

“உங்க ஊர்ல இதுக்குப் பேர் தான் முத்தமா...” என்ற அஷ்வின் வினோதாவை கட்டிலில் சாய்த்து, அவள் மீது கவிழ்ந்தவன், அவளின் இதழில் அழுத்தமாக முத்தம் வைத்து, மேலும் தொடர.... ஒரு முத்தம் இருவருக்கு இடையே இவ்வளவு உணர்ச்சிகளைத் தூண்ட முடியும் என்று இருவருமே அன்று தான் தெரிந்துகொண்டனர்.

அஷ்வின் தான் போட்டு வைத்திருந்த திட்டத்தையெல்லாம் மறந்து... அப்போதே அவளுடன் கலந்துவிடத் துடித்தவன் போல்... ஆவேசமாக அவளின் முகமெங்கும் முத்தமிட... அவனின் தாக்குதலில் திணறினாலும், வினோதாவும் எதோ ஒரு பரவச நிலையில் தான் இருந்தாள்.

காதலித்து மனம் முடித்த தம்பதியர்கள் மோக வெள்ளத்தில முழ்க தயாரான போது.... கீழே இருந்து கேட்ட பூஜை மணியோசை இருவரையும் பதறியடித்து விலக வைத்தது. அப்போது தான் இருவரும் பொழுது புலர்ந்து விட்டதை உணர்ந்தனர்.

“நான் போய்க் குளிக்கிறேன் அஷ்வின்.” வினோதா அவளின் பெட்டியை திறந்து உடைகளை எடுத்துக்கொண்டு குளிக்கச் சென்றாள்.

அவள் குளித்துவிட்டு வரும் வரையில் படுத்திருப்போமா.... அல்லது நாமும் எழுந்துகொள்வோமா என்று யோசித்துக்கொண்டிருந்த அஷ்வின், வினோதா அவளின் பெட்டியை அப்படியே திறந்து போட்டுவிட்டு சென்றிருப்பதைப் பார்த்து, எழுந்து அதிலிருந்த அவளின் உடைகளை எடுத்து அங்கிருந்த இன்னொரு அலமாரியில் அடுக்கி வைத்தான்.

அவள் உடைகளை அடுக்கிமுடித்து, அந்த அறையை ஒதுங்க வைத்தவன், துடைப்பத்தால் அந்த அறையைக் கூட்டிக்கொண்டு இருந்த போது தான் வினோ குளியல் அறையில் இருந்து வெளியே வந்தாள்.

“ஏன் அஷ்வின் இதெல்லாம் நீங்க பண்றீங்க? குடுங்க நான் பண்றேன்.” வினோதா கையை நீட்ட....

“இருக்கட்டும் வினோ, நீ குளிச்சிட்ட அதனால துடைப்பத்தைத் தொட வேண்டாம். வீட்ல பொதுவான இடத்தில தான் வேலை செய்றவங்க சுத்தம் செய்வாங்க. ரூம் உள்ள நாமலே தான் செஞ்சிக்கனும்.” என்ற அஷ்வின் குப்பையைக் கூட்டி அள்ளியவன், வீடு துடைக்கும் குச்சியைக் குளியறை அறையில் இருந்தே நீரில் நனைத்துக் கொண்டு வந்து அறையைத் துடைத்து எடுத்தான்.

அவன் லாவகமாக வேலை செய்வதைப் பார்த்த வினோதாவிற்கு வியப்பாக இருந்தது. ராணி வீட்டு கன்றுக்குட்டி என்று நினைத்திருந்தவன், வீட்டு வேலை பார்த்தால் ஆச்சர்யமாக இருக்காதா.... பரவாயில்லை நம்ம மாமியார் பசங்களை நல்லாவே வளர்த்திருக்காங்க என்று வினோதா பெருமையாக நினைத்தாள்.

ரங்கநாயகிக்குப் படுக்கை அறைக்குள் வெளி ஆட்கள் வருவது பிடிக்காது. அதனால் அவரே தான் அறைகளைச் சுத்தம் செய்வார். மகன்களின் அறையையும் அவரே தான் சுத்தம் செய்து வந்தார். பிள்ளைகள் பெரியவர்கள் ஆனதும், தாங்களே செய்துகொள்வதாகச் சொல்லிவிட்டனர்.

“அம்மாவுக்கு வீடு எப்பவும் சுத்தமா இருக்கணும். வீட்ல இருக்கப் பொருட்கள் ஒழுங்கா அந்தந்த இடத்தில இருக்கணும். இல்லைனா ரொம்பக் கோபம் வரும். சின்னதுல இருந்து அப்படியே பழகினதுனால எனக்கும் அப்படி இருக்கிறது தான் பிடிக்கும்.”

“அம்மா எப்ப வேணா நம்ம ரூம்க்கு வருவாங்க. அதனால ரூமை எப்பவும் நீட்டா வச்சுக்கோ வினு...” அஷ்வின் சொன்னதும் வினோவின் முகம் மாறியது.

“எனக்குமே ரூம் நீட்டா இருந்தா தான் பிடிக்கும்.” பட்டென்று சொன்னவள், அவள் உடைகள் இருந்த அலமாரியை திறக்க.... அவள் கோபித்துக்கொண்டாள் என்று அஷ்வினுக்குப் புரிந்தது.

அவளின் அருகே சென்ற அஷ்வின் “கோபமா வினு, நேத்து நீ புடவையைக் கழட்டி அப்படியே போட்டு வச்சிருந்த...அதனால தான் சொன்னேன்.” என்றவன், அவள் நிச்சயத்தன்று விட்டுவிட்டு சென்ற புடவையையும், தன் அலமாரியில் இருந்து எடுத்துக்கொடுத்தான்.

நேற்று தான் அசதியில் புடவையை மடிக்கவில்லை அதனால் பரவாயில்லை.... ஆனால் நிச்சயத்தன்று தான் செய்தது தவறு தான் என்பதை உணர்ந்தவள், அஷ்வினை பார்த்து “சாரி....” என்றதும்,

அவளைப் பார்த்து புன்னகைத்த அஷ்வின் “வந்த முதல் நாளே மூட் அவுட் பண்ணிட்டேனா.... உன்னை யாரும் குறை சொல்லிட கூடாதுன்னு தான்.” அவன் சொன்னது புரிந்ததாகத் தலையசைத்த வினோ “என்ன டிரஸ் போட அஷ்வின்?” என்று அவனையே

கேட்க... அவன் குறும்பாகப் புன்னகைக்க.... அதைப் பார்த்த வினோதாவிற்கும் சிரிப்பு வந்தது.

“புடவையே கட்டு வினு...” என்றவன் குளிக்கத் தயாரக... அதைப் பார்த்த வினோ... உள்ளே துவைத்து வைத்திருந்த அவளின் ஆடைகளை எடுத்துக்கொண்டு வந்தவள், அதை எங்கே போட வேண்டும் என்று அஷ்வினை கேட்டு, அவன் சொன்ன இடத்தில் சென்று துணியைக் காய வைத்து விட்டு வந்தாள்.

அஷ்வின் குளித்து வருவதற்குள் வினோதா புடவை கட்டி லேசான ஒப்பனையில் தயாராக இருக்க... அவளை மெச்சுதலாகப் பார்த்தவன் “முதல்ல நீ கீழ போ.... நான் கொஞ்ச நேரம் கழிச்சு வரேன்.” என்றான்.

“நான் மட்டுமா... முடியாது, நீங்களும் வாங்க சேர்ந்து போகலாம்.” வினோதா அடம் பிடிக்க....

“நான் கிளம்ப இன்னும் லேட் ஆகும் வினு... நீ தான் ரெடி ஆகிட்ட இல்ல... போ...” அஷ்வின் அவளை வற்புறுத்தி அனுப்பி வைக்க... வினோதா பயந்து கொண்டே கீழே சென்றாள்.

தேக்கு மர வாசல் கதவின் முன்பு இருந்த கருப்பு நிற கிரானைட் கல்லில் பளிச்சென்று தெரிந்த மாக் கோலமும், அந்தக் காலை நேரத்திலேயே துடைத்துச் சுத்தமாக இருந்த வீடும், வீடெங்கும் கமழ்ந்த அகர்பத்தியின் நறுமனமும் சேர்ந்து, அந்த வீட்டிற்கு ஒரு தெய்வீக கலையைத் தந்தது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

வினோதா கீழே சென்றபோது சமையல் அறையில் ரங்கநாயகியும், சமையல் மாமி மங்களமும் பேசிக்கொண்டு இருந்தனர். வேறு யாரும் இல்லை. வினோதா தயங்கி ஹாலிலேயே நிற்க.... அப்போது அவளுடைய மாமனார் வரதராஜன் வெளியே வந்தவர், வினோதாவை பார்த்து புன்னகைத்தவர் “உட்காருமா பேப்பர் படிக்கிறியா...” என்றவர்,

அவள் கையில் பேப்பரை கொடுத்துவிட்டு சென்றார்.

வினோதா உட்கார்ந்து பேப்பர் படிக்க... அந்தப் பக்கம் வந்த ரங்கநாயகி அவளைப் பார்த்துக்கொண்டே அறைக்குள் சென்றார். வினோதா அவரைக் கவனிக்கவில்லை.

ராதிகா இருந்த அறைக்குள் வந்த ரங்கநாயகி "ராது, நாழியாச்சு எழுந்துக்கோ.... நேத்துக் கல்யாணம் ஆன உன் தம்பி பொண்டாட்டி கூடக் குளிச்சு ரெடி ஆகி வந்திட்டா... உனக்கு என்ன?" என்றதும், ராதிகா பதறி அடித்து எழுந்தவள், வந்த முதல் நாளே வினோதா தன் அம்மாவிடம் நல்ல பேர் வாங்கி விடுவாள் போலிருக்கே என்று நினைத்தபடி குளிக்கத் தயாரானாள்.

அஷ்வின் கீழே வந்த போது வினோதா மட்டும் ஹாலில் உடார்ந்திருப்பதைப் பார்த்தவன், அவள் அருகில் சென்று அமர்ந்து "அம்மா காபி..." என்று குரல் கொடுத்தான்.

சமையல் வேலை செய்யும் மங்களம் அஷ்வினுக்கு மட்டும் காபி கொண்டு வர... அவர் பின்னே ரங்கநாயகியும் ஹாலுக்கு வந்தார். காபீயை கையில் எடுத்த அஷ்வின் "நீ குடிச்சிட்டியா வினு..." என்றபடி வினோதாவை பார்க்க.... அவள் பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தாள்.

அவள் காபி குடித்திருப்பாள் என்று தான் அஷ்வின் நினைத்திருந்தான். ஆனால் அவள் குடிக்கவில்லை போல... "அப்பவே வந்த இன்னுமா காபி குடிக்கலை...." அவன் வினோதாவை கேட்க.... ரங்கநாயகி வேறு அங்கிருந்ததால்.... பதில் சொல்ல முடியாமல் அவள் திணற.... ரங்கநாயகியின் முகம் கடுத்தது.

"மங்களம் இன்னொரு காபி கொண்டு வா...." எனக் குரல் கொடுத்த ரங்கநாயகி, மங்களம் காபியோடு வந்ததும் "ஹால்ல எத்தனை பேரு இருக்காங்கன்னு பார்த்திட்டு காபி கொண்டு வரமாட்டியா....

ஒவ்வொருத்தருக்கா நீ காபி கலந்திட்டே இருந்தா.... மத்த வேலை எப்படிப் பார்ப்ப?" என்றார் அதட்டலாக.

மங்களம் வேண்டும் என்றே தான் வினோதாவிற்குக் காபி கொண்டு வரவில்லை... ரங்கநாயகிக்கு பிடிக்காத மருமகள் தானே என்ற அலட்சியம். ஆனால் ரங்கநாயகி வினோதா முன்பே இப்படித் திட்டிவிடுவார் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

மங்களம் உள்ளே சென்றதும், அஷ்வினையும் வினோதாவையும் பார்த்த ரங்கநாயகி "நான் எனக்கு முடியலைன்னு தான் ஒத்தாசைக்கு ஆள் வச்சிருக்கேன். இங்க அவங்கவங்க வேலையை அவங்கவங்க தான் பார்க்கணும்." என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டு எழுந்து உள்ளே சென்றார்.

எல்லாம் இவனால என்று நினைத்த வினோதா அஷ்வினை முறைத்தாள். "நான் உங்ககிட்ட இப்ப காபி கேட்டேனா...." என்று அவள் பார்வையாலையே கேட்டாள்.

இவங்க வீட்ல எது எப்படிச் செய்வாங்கன்னு எனக்குத் தெரியுமா என்ன? இப்படிப் பண்ணுன்னு சொன்னா செய்யப்போறேன். அதைச் சொல்லாம வேற என்னவோ சொல்லிட்டு போறாங்க என வினோதா மனதிற்குள் முனங்கிக்கொண்டு இருந்தாள்.

அவள் காபி குடித்ததும், அஷ்வினின் டம்ளரையும் சேர்த்து எடுத்துக்கொண்டு சமையல் அறைக்குச் சென்றவள், அதற்குள் இன்னொரு அறை இருப்பதைப் பார்த்தாள். அந்த அறையில் பாத்திரம் தேய்ப்பதற்கு வசதியாக இடம் இருந்தது. அங்கே சலவை இயந்திரமும், பாத்திரம் தேய்க்கும் இயந்திரம் கூட இருந்தது. அது தான் ஸ்டோர் ரூமும் போல.... ஒரு பக்க அலமாரியில் மளிகை சாமான்கள் இருந்தது.

வினு டம்ளரை கழுவி வைத்து விட்டு வந்தாள். அப்போது முன் தினம் ராகவன் வீட்டில் தங்கியிருந்த உறவினர்களும் வந்துவிட... வீடே கலகலவென்று இருந்தது.

அஷ்வின் அவளிடம் “எதாவது வேலை செய்யட்டுமான்னு அம்மா கிட்ட போய்க் கேளு.” என்றான். வினோதாவிடம் இன்னும் ரங்கநாயகி பேசவேயில்லை.... இதில் தான் போய் அவரிடம் பேசுவதா என்ற எண்ணத்தில், வினோதாவும் போய்க் கேட்க மறுத்தாள். ராதிகா வந்தவளும் முகத்தைத் திருப்பிக்கொள்ள.... அதைப் பார்த்து வினோதா இன்னும் ஒடுங்கினாள்.

ரங்கநாயகியின் அத்தை வேறு “என்ன உன் மருமக தலையில பூ கூட இல்லாம இருக்கா.... இதெல்லாம் நீ கவனிக்க மாட்டியா...” என்று அவரிடமே கேட்டு வைக்க... அதற்கு வேறு தன்னிடம் கோபிப்பாரோ என்று வினோதவிற்குக் கலக்கமாக இருந்தது.

நல்லவேளை ரங்கநாயகி அவர்களிடம் ஒன்றும் காட்டிக்கொள்ளவில்லை.... “ராது, சாமி ரூம்ல பூ இருக்கு. எடுத்து எல்லோருக்கும் கொடு.” என்றவர், சமையல் அறைக்குச் சென்றுவிட்டார்.

ராதிகா எல்லோருக்கும் கொடுத்த அளவே வினோவிற்கும் பூ கொடுக்க.... “புதுசா கல்யாணம் ஆன பொண்ணு, நிறையக் குடு...” என்ற ரங்கநாயகியின் அத்தை, அவரே ராதிகாவிடம் இருந்து வாங்கி வினோதாவின் தலைநிறைய பூ வைத்துவிட்டார். கருநீள கூந்தாள் அவள் இடையைத் தாண்டி இருந்தது.

வீட்டில் வேலை செய்யும் ஆள் இருப்பதால்....ரங்கநாயகி எதுவும் செய்ய மாட்டார் என்று தான் வினோதா நினைத்தாள். ஆனால் அப்படி இல்லை. வீட்டில் சமையல் வேலை செய்யும் மங்களம், நறுக்க வேண்டிய காய்கறிகளை நறுக்கி, அரைக்க வேண்டியவற்றை அரைத்து தர... ரங்கநாயகி தான் நின்று சமைத்தார்.

சிறிது நேரம் இதையெல்லாம் கவனித்த வினு அவளாகவே சென்று “நான் எதாவது செய்யட்டுமா....” என ரங்கநாயகியிடம் கேட்டாள். அவர் வேண்டாம் என்றுதான் சொல்லுவார், இருந்தாலும் நாம் கேட்கும் கடமைக்குக் கேட்டு விடுவோம் என்று வினோதா நினைக்க....

“இப்ப வேலையெல்லாம் முடிஞ்சது. மதியம் நீ சமையல் பண்ணு.” ரங்கநாயகி அவள் தலையில் குண்டை தூக்கி போட.... அப்போது அவள் முகத்தைப் பார்க்க வேண்டுமே....

“எல்லாத்தையும் கொண்டு வந்து டேபிள்ள வச்சிட்டு வடை போட ஆரம்பி .” என்று மங்களத்திடம் சொன்ன ரங்கநாயகி வினோதாவிடம் ஒரு கேலியான பார்வையைச் செலுத்திவிட்டு அங்கிருந்து செல்ல.... வினோதாவும் ஹாலுக்கு வந்தாள்.

கொஞ்சம் வடை போட்டு வந்ததும், முதலில் ஆண்கள் பந்தி ஆரம்பித்தது. பரிமாற வந்த ரங்கநாயகியிடம் “அம்மா, நீங்க இருங்க நாங்க பார்த்துக்கிறோம்.” என்ற அஷ்வின் அவனோடு வினோதாவையும் அழைத்துக்கொண்டு பரிமாற.... அவர்களோடு அருணும் சேர்ந்து கொண்டான்.

விருந்தினர் உண்டு முடித்து வீட்டினர் சாப்பிடும் போது.... பொண்ணு மாப்பிள்ளை சேர்ந்து சாப்பிடுங்க என்றதும், அஷ்வினும், வினோதாவும் சாப்பிட அமர்ந்தனர்.

கற்கண்டு சாதம், வெண்பொங்கல், இட்லி, வடையில் இரண்டு வகை என்று காலை உணவிற்கே இத்தனை சமைத்திருக்க.... மதிய உணவை நினைத்தால் வினோதாவிற்குக் கலக்கமாக இருந்தது. அவளுக்குச் சமையல் கொஞ்சம் தெரியும் தான். மஞ்சுவிற்குக் கூடமாட உதவுவாள், அதனால் தெரியும். மற்றபடி அவளே முழுச் சமையல் செய்ததெல்லாம் கிடையாது.

“சும்மா சொல்றாங்க, நம்மை எல்லாம் சமைக்க விட மாட்டங்க. அதுவும் இன்னைக்கு அம்மா வீட்டுக்கு வேற போகணுமே அதனால தப்பிச்சிடலாம்.” வினோதா இப்படி நினைத்துக்கொண்டு இருக்க....

“அஷ்வின், இன்னைக்கு நாள் நல்லா இல்லை.... அதனால நீங்க ரெண்டு பேரும் நாளைக்கு வினோதா வீட்டிற்குப் போங்க. சாப்பிட்டதும் அவங்க வீட்டுக்கு போன் செஞ்சி சொல்லிடு. இல்லைன்னா வீணா அவங்க வேற எதிர்பார்த்திட்டு இருப்பாங்க.” வரதராஜன் சொல்ல... அஷ்வினும் சரி என்றான்.

இருந்த கொஞ்ச நம்பிக்கையும் தகர... ஐயோ ! நல்லா மாட்டினோம் என்ற கவலையில் வினோதா இருந்தாள். காலை உணவு முடிந்ததும், இருந்த உறவினர்களில் பாதிப் பேர் காரில் ஊருக்கு கிளம்பிவிட... மீதி இருந்த ஆறு பேர் இரவு ரயிலில் கிளம்புவதாக இருந்தது. கிட்டத்தட்ட இருபது பேருக்கு மதியம் சமைக்க வேண்டும். வினோதாவிற்குத் தலையே சுற்றியது.

காலை உணவு முடிந்து அடுக்களையை ஒதுங்க வைத்ததும், மங்களத்தை அழைத்த ரங்கநாயகி “நீ சாப்ட்டுப் பாத்திரம் தேச்சிட்டு, சாதம் மட்டும் வச்சிடு.” என்று அரிசி அளவையும் சொன்னவர் “எந்தக் காய் நறுக்கனும்ன்னு வினோதா கிட்ட கேட்டு நறுக்கி கொடுத்திட்டு நீ போகலாம். அவ சமையலை பார்த்துப்பா.... நீயும் காலையில இருந்து வேலை பார்த்திருக்க ரெஸ்ட் எடு.” என்றார்.

அவர் பேசியதை கேட்டதும் தான், வினோதா ஏன் பேய் அறைந்த மாதிரி இருக்கிறாள் என்று அஷ்வினுக்குப் புரிந்தது. வினோதா ஏற்கனவே அவர்கள் அறைக்குச் சென்றுவிட்டாள். அஷ்வின் அங்கே சென்ற போது வினோதா அவனின் மடி கணினியில் எதோ பார்த்துக்கொண்டிருந்தாள்.

அருகில் போய்ப் பார்த்ததும் தான் தெரிந்தது, அவள் எதோ சமையல் குறிப்பு பார்த்துக்

கொண்டிருக்கிறாள் என்று. அப்போது அவள் அம்மா செல்லில் அழைக்க.... அவர்கள் கேட்டதுக்குப் பதில் சொன்னவள், இன்று மதியம் தன்னுடைய சமையல் என்றதும், மஞ்சுவிற்குச் சந்தோஷமாகத்தான் இருந்தது.

தன் பெண்ணை ஒதுக்கி வைத்து விடுவார்களோ என்று நினைத்ததற்கு மாறாக... அவளைத் தானே சமைக்கச் சொல்லி இருக்கிறார்கள். இதுவும் நல்லதிற்குத் தான் என்று நினைத்தவர், மகளுக்குச் சில குறிப்புகள் சொன்னார்.

“உப்பு முதல் தடவையே ரொம்பப் போட்டுடாத.... கொஞ்சமா போடு அப்புறம் உப்பு பார்த்திட்டுத் தேவைபட்டா போட்டுக்கலாம்... அவசரப்படாம பொறுமையா பண்ணு நல்லா வரும். நான் திரும்பச் சாயந்தரம் போன் பண்றேன்.” என மஞ்சு வைத்துவிட.... அதுவரையில் நன்றாக இருந்த வினோதா திடிரென்று அழ ஆரம்பித்தாள்.

“ஹே என்ன ஆச்சு வினு?” அஷ்வின் பதற... முதலில் சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் அழுதவள், “உங்க அம்மா என்னைப் பழிவாங்குறாங்க இல்ல.... வந்திருக்கச் சொந்தகாரங்க முன்னாடி என்னோட மானம் போகட்டும்ன்னு தானே இப்படிப் பண்றாங்க.” என்றாள் அழுகைக்கு நடுவில்.

“பழிவாங்கிறது இதெல்லாம் பெரிய வார்த்தை வினு.... அவங்க உன்னைச் சமைக்கத் தான சொன்னாங்க வேற என்ன சொன்னாங்க?”

“சமைக்கிறது ரொம்ப ஈஸியா.... கொஞ்சமா பண்றது வேற.... முதல் தடவையே இவ்வளவு பேருக்கு பண்ண சொன்னா எப்படிப் பண்றது?”

வினோதா சொல்வது அஷ்வினுக்கும் புரியாமல் இல்லை.... “அவங்க நம்ம கல்யாணத்துக்கு ஒத்துகிட்டதே பெரிய விஷயம் வினு.... கொஞ்ச நாள் கோபமா தான் இருப்பாங்க. நீ தான் பொறுமையா இருக்கணும்.” அஷ்வின் சொன்னதைக் கேட்ட வினோதா அவனை முறைத்தாள்.

“உன்னை என்ன அவங்க கொடுமையா பண்ணிட்டாங்க? சமைக்கத் தான சொன்னாங்க. குடும்பம்னா இதெல்லாம் இருக்கத் தான் செய்யும்.” என்றவன், வினோதாவின் கண்ணீரை பார்த்து “சரி நான் போய்ப் பேசிப்பார்க்கிறேன். நீ டென்ஷன் ஆகாத....” என்றுவிட்டு கீழே இறங்கி சென்றான். திருமணம் ஆன முதல் நாளே தாய்க்கும் மனைவிக்கும் இடையில் மாட்டிக்கொண்டு முழிக்கும் நிலை அவனுக்கு.

ரங்கநாயகி அவரது அறையில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தார். அவருடன் ராதிகாவும் சுபத்ராவும் இருந்தனர். அஷ்வினை பார்த்ததும் அவனையும் உட்கார வைத்து பேசிக்கொண்டிருந்தனர்.

“அம்மா, இன்னைக்கு வினுவை சமைக்கச் சொன்னீங்களா... ஏன் மா இந்தக் கொலைவெறி உங்களுக்கு?” அஷ்வின் விளையாட்டாகப் பேசுவது போலவே ஆரம்பிக்க....

“இதுல என்ன டா இருக்கு? அவளும் எப்படிச் சமைக்கிறான்னு பார்க்கலாமே...” என்றார் ரங்கநாயகி சாதாரணமாக....

“நீங்க உங்க டெஸ்ட் எல்லாம் இன்னொரு நாளைக்கு வச்சுக்கக் கூடாதா.... வீட்டுக்கு வந்திருக்க விருந்தாளிங்க வேற கஷ்டப்படனுமா...மதியம் யாருமே சமைக்க வேண்டாம், எல்லோரும் ரெஸ்ட் எடுங்க. நான் நல்ல ஹோட்டல்ல ஆர்டர் பண்றேன்.”

அஷ்வின் கிண்டலாகப் பேசினாலும் காரியத்தில் கண்ணாக இருப்பதைப் பார்த்த ரங்கநாயகி “மூன்னு நாளா வெளி சாப்பாடு தான். இன்னைக்கும் சாப்பிட்டா உடம்புக்கு சேராது. வெளியில வாங்கிற அளவுக்கு அப்படி ஒன்னும் நிறையப் பேர் கிடையாது.” என்றார்.

“முதல் தடவையே இவ்வளவு பேருக்கு சமைக்கனும்மா வினுக்குக் கஷ்ட்டமா இருக்கும்.” அஷ்வின் நேரடியாகவே சொல்ல...

“என்ன கஷ்ட்டம்? அதுவும் உன் பொண்டாட்டிக்கு.” என்ற ரங்கநாயகியின் பேச்சில் இருந்தே... அவர் மேலும் எதோ குதர்க்கமாகச் சொல்லப்போகிறார் என்று அஷ்வின் நினைத்ததற்கு ஏற்ப “யாருன்னே தெரியாத ஒரு பையனை வளைச்சு, காதல் பண்ண வச்சு, கல்யாணமும் பண்ணிகிட்ட உன் பொண்டாட்டிக்கு, சமையல் மட்டும் வராதா.... இது அதை விட ரொம்ப ஈஸின்னு போய்ச் சொல்லு.” என்றார் கிண்டலாக.

அவர் பேசியதை கேட்ட அஷ்வினுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. நல்லவேளை இங்கே வினு இல்லை என்று நினைத்துக்கொண்டவன் “என்னை வளைச்சுப் பிடிக்க... நான் ஒன்னும் விடலைப் பையன் இல்லை. என்ன நடந்ததோ அது என் முழு விருப்பத்தோட தான் நடந்தது. இதைச் சொன்னா நீங்க நம்பப் போறது இல்லை.....அதுவும் எனக்குத் தெரியும்.”

“இன்னைக்கு வினு சமைப்பா.... அவளுக்கு என்ன தெரியுதோ.... அதை அவ செய்வா.... யாரவது குறை மட்டும் சொல்லிப்பாருங்க அப்புறம் தெரியும்.” என்ற அஷ்வின் ராதிகாவை பார்த்து முறைத்து விட்டுச் சென்றான். அவனுக்குத் தெரியும் அவள் தான் எதாவது சொல்வாள் என்று.

“பாருமா இப்பவே இவன் பொண்டாடிக்கு பரிஞ்சு பேசுறதை.....” ராதிகா இன்னும் ரங்கநாயகியை ஏத்தி விட்டாள். அவளுக்கு ஒரு விஷயம் புரியவேயில்லை.... மாமியார் மருமகளுக்கு இடையே பிரச்சனை நடந்தாளும், அவர்கள் ஒரே குடும்பம். இன்னைக்கு அடித்து நாளைக்குச் சேர்ந்து விடுவார்கள். ஆனால் ராதிகா வேறு வீட்டுப் பெண். அவள் பேசும் வார்த்தையோ.... செய்யும் செயலோ அவ்வளவு எளிதில் யாராலும் மறக்க முடியாது.

தம்பி மனைவியிடம் நல்லுறவை வளர்ப்பதை விட்டு, முறைத்துக்கொண்டு நின்றால்.... தன் தம்பியின் மனதில் இருந்தும் தான் விலகி போய் விடுவோம் என்று அவளுக்குப் புரியவில்லை.

வினோதாவிடம் என்ன சொல்வது என்று யோசித்துக்கொண்டே அஷ்வின் வர.... அவள் எதோ தாளில் குறிப்பு எடுத்துக் கொண்டிருந்தாள்.

அவள் அஷ்வினை பார்த்தும் எதுவும் கேட்கவில்லை... அலமாரியை திறந்து அவள் போட்டிருந்த ஜாக்கெட்டுக்கு பொருத்தமாக வேறு ஒரு சாதாரணப் புடவையை எடுத்தவள், உடுத்தியிருந்த புடவையைக் கழட்டிவிட்டு இதை மாற்றிக்கொண்டாள்.

அவள் அஷ்வின் இருக்கிறான் என்று எல்லாம் பார்க்கவில்லை.... உண்மையில் இருவருக்கும் இப்போது வேறு எதையும் பற்றியும் நினைக்கக் கூட முடியவில்லை. அழுதது தெரியாமல் இருக்க முகம் கழுவி லேசாக ஒப்பனை செய்து கொண்டு கீழே இறங்கி சென்றாள்.

பகுதி – 17

வினோதா கீழே சென்ற போது மங்களம் இன்னும் பாத்திரம் தேய்த்து முடித்திருக்கவில்லை..... வினோதா என்ன சமைப்பது என்று அங்கிருந்த காய்கறிகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவள் சென்ற பிறகு அறையை விட்டு வெளியே வந்த அஷ்வின் அருணின் அறையை எட்டிப்பார்க்க... அவன் எதிர்பார்த்தது போல் அருணும் ரகுவும் அங்குத் தான் இருந்தனர்.

“டேய்.... ரெண்டு பேரும் என்ன பண்றீங்க?”

“என்ன பண்றதுன்னு தெரியாம தான் இருக்கோம்.” ரகு பதில் கொடுக்க..... அருண் தன் தமயனை பார்த்துப் புன்னகைத்தான். அவன் சொன்னதைக் கேட்டதும் அஷ்வினுக்கு ஒரு யோசனை தோன்றியது.

“ரெண்டு பேரும் என்னோட கல்யாணத்துக்கு நிறைய வேலை பார்த்தீங்க, அதுக்கு உங்களுக்கு நான் ட்ரீட் தரேன்.” என்றவன், தன் பர்சை திறந்து அதிலிருந்து பணத்தை எடுத்துக் கொடுத்து “மதியம்

வெளிய சாப்டிட்டு அப்படியே எதாவது படத்துக்குப் போயிட்டு வாங்க.” என்றான்.

ரகு சின்னப் பையன் அவன் அஷ்வின் சொன்னதைக் கேட்டதும் சந்தோஷமாகக் குதித்தான். ஆனால் அருண் M.C.A., முடித்து இப்போது ஒரு நிறுவனத்தில் வேலையும் பார்க்கிறான். அதனால் அவனுக்கா தன் தமயனின் எண்ணம் புரியாது..... நன்றாகவே புரிந்தது. ஆனால் ஒன்னும் சொல்லாமல் அவன் பணத்தை வாங்கிக்கொண்டு கிளம்பினான்.

“சுஷ்மிதாவையும் கூடிட்டு போங்க.... அப்படியே ராதிகா வராளான்னு கேட்டுக்கோங்க.” என்றான் அஷ்வின்.

“பணத்தையும் குடுத்து கூடவே ரெண்டு இம்சைகளையும் கூடிட்டுப் போகச் சொல்றியே....” ரகு சொல்ல.... “வா டா பார்த்துக்கலாம்.” என்று அவனைத் தள்ளிக்கொண்டு அருண் சென்றான்.

அவர்கள் சென்று அழைத்ததும், சுஷ்மிதா வரேன் என்று சொல்ல... ராதிகா தயங்கினாள். தன் தம்பி மனைவி சமைப்பதை சாப்பிட்டு கருத்து சொல்லும் முக்கியப் பணி தனக்கு இருப்பதை எண்ணி தான் அந்தத் தயக்கம்.

அவளது தயக்கத்தைப் பார்த்த அருண் “நான் சொன்னேன் இல்ல ரகு ராதிகா வர மாட்டான்னு. அவளுக்கு வயசாகிடுச்சு இப்படி வெளியவெல்லாம் போக அவளுக்குப் பிடிக்காது.” என வேண்டுமென்றே அவன் சீண்ட....

“நான் வரமாட்டேன்னு எப்ப சொன்னேன்? நேத்து தான அஷ்வினுக்குக் கல்யாணம் ஆச்சு... வீட்ல நிறைய வேலை இருக்குமே.... அதுதான் எப்படிப் போறதுன்னு தான் யோசிச்சேன்.” ராதிகா சமாளிக்க....

“ஆமாம் நீங்க மட்டும் போயிட்டு வாங்க ராதிகா இருக்கட்டும். அவ வினுவுக்கு ஹெல்ப் பண்ணுவா....” அஷ்வின் சொன்னதைக் கேட்டதும், திடுகிட்ட ராதிகா.... இவன் பொண்டாட்டிக்கு நாம

எடுபிடியா என்று கொதித்தவள், தானும் அவர்களோடு கிளம்பினாள்.

ராதிகா அவள் மட்டும் தான் கிளம்பினாள். அவள் குழந்தைகளை ரங்கநாயகியிடம் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு சென்றாள். மகேஷ் இன்று அலுவலகத்தில் முக்கிய வேலை இருக்கிறது என்று காலையிலேயே சென்றுவிட்டான். ராகவனும் தன் அலுவல் காரணமாக வெளியே சென்றுவிட அவர்கள் வீட்டில் சுபத்ரா மட்டுமே இருந்தார்.

சமையல் அறையில் இருந்த வினோதாவை தேடி சென்ற அஷ்வின் “வினு, இப்ப ஆள் கம்மி ஆகிடுச்சு. இனி உனக்குச் சமைக்கக் கஷ்ட்டமா இருக்காதே...” என்று அவன் கேட்டுக் கொண்டிருக்கும் போதே ... அங்கே வந்த மங்களம் “மாமி பன்னண்டு பேருக்கு தான் சாதம் வைக்கச் சொன்னாங்க. உங்களையும் அத்தனை பேருக்கு வர மாதிரி குழம்பு கறிகாய்ச் செய்யச் சொன்னாங்க.” என்றாள்.

ஹப்பா.... தப்பிச்சேன் என்று நினைத்த வினோதா அஷ்வினை பார்த்து புன்னகைக்க.... இனி சமாளித்துக்கொள்வாள் என்ற எண்ணத்தில், அவன் நிம்மதியாக அங்கிருந்து சென்றான்.

முதல் தடவை தெரியாததைச் செய்வதை விட.... நல்லா தெரிஞ்சதையே செய்வோம் என்று நினைத்த வினோதா... பருப்புக் குழம்பு, தக்காளி மிளகு ரசம், வத்தகுழம்பு, உருளை வறுவல், பீன்ஸ் கூட்டு, சேமியா பாயசம் என்று திட்டமிட்டாள்.

மங்களம், சாதம் வைத்துவிட்டு வினோதாவிற்குத் தேவையான காய்கறிகளை நறுக்கி கொடுத்துவிட்டு செல்ல.... வினோதா சமைக்க ஆரம்பித்தாள். அவளுக்கு அளவு குழப்பமாக இருக்க..... ரங்கநாயகியை சென்று கேட்க பயமாக இருந்ததால்..... தன் தாய்க்கு அழைத்துக் கேட்டாள்.

அவள் வேலை பார்த்துக்கொண்டே செல்லை வைத்து பேச சிரமப்படுவதைக் கவனித்த அஷ்வின், ஹெட்செட் கொண்டு வந்து அவள் காதில்

மாட்டியவன், அதைச் செல்லில் இணைத்து, புடவை கட்டி இருந்ததால்.... செல்லை அவள் இடையில் சொருகிவிட.... “தேங்க்ஸ்...” என்ற வினோதா தன் தாயிடம் பேசிக்கொண்டே சமைத்தாள்.

மஞ்சுவுடன் பேசிக்கொண்டே சமைத்ததில் வினோதா சீக்கிரமே சமையலை முடித்துவிட்டாள். அதனால் இன்னும் ஒரு காய்ச் செய்வோம் என்று காலிபிளவரை எடுத்து பொடிப் பொடியாக உதிர்த்து அதைச் சுடுநீரில் சிறிது நேரம் போட்டுவிட்டு பிறகு நன்றாக நீரை வடித்து விட்டு அதில் கடலைமாவு அரிசிமாவு மிளகாய் தூள் உப்பு சேர்த்து கிளறி வறுவல் செய்தாள்.

ஞாயிறு கிழமை அவள் வீட்டில் எப்போதும் இந்த வறுவல் வாடிக்கையாக அவள் செய்வது தான் என்பதால்.... எளிதாகச் செய்துவிட்டாள். அஷ்வினை அழைத்து எல்லாவற்றையும் சுவை பார்க்க சொல்ல... சுவை பார்த்தவன் பதற்றமாகி விட்டான்.

“நல்லா வாசனையா இருக்கு வினு. ஆனா... என்னவோ குறையுது. டேஸ்டே இல்லை....” அவன் சொன்னதைக் கேட்ட வினுவிற்கு அழுகையே வந்துவிட்டது. நல்லவேளையாக அப்போது சுபத்ரா அவர்கள் வீட்டில் இருந்து வந்தார்.

அவரை அழைத்து வந்து அஷ்வின் சுவை பார்க்க சொல்ல.... அவர் சுவை பார்த்துவிட்டு “ஒன்னும் இல்லை உப்பு தான் கம்மியா இருக்கு.” என்றவர், அவரே தேவையான அளவு உப்பு சேர்க்க.....

அஷ்வின் மீண்டும் சுவை பார்த்துவிட்டு “இப்போ நல்லா இருக்கு.” என்றதும் தான் வினோதாவிற்கு மூச்சே வந்தது.

மதியம் முதலில் விருந்தினர் உட்கார்ந்து சாப்பிட.... அவர்களுக்கு வினோதாவும் சுபத்ராவும் பரிமாறினர். ரங்கநாயகி ராதிகாவின் குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டிக்கொண்டு இருந்தார். அவர் அவர்களுக்குத் தயிர் சாதம் தான் கொடுத்தார்.

“நீயா வினோ சமையல் பண்ண.... முதல் தடவைக்கே நல்லா பண்ணி இருக்கியே..... ரங்கநாயகி உனக்கு இனிமே கவலை இல்லை... உன் மருமகளே நல்லா சமைக்கிறா... இனி நீ ரெஸ்ட் எடுக்கலாம்.” ரங்கநாயகியின் அத்தை சொல்ல.... அதைக் கேட்டு ரங்கநாயகி புன்னகைத்தார்.

உணவு முடியும் தருவாயில் பாயசம் கொண்டு வந்த வினோதாவிற்கு, அதன் மூடியை திறந்ததும் பகீரென்றது. பாயசம் கெட்டியாகக் கேசரி போல் இருந்ததே காரணம். இப்போது ஒன்றும் செய்ய முடியாத நிலை... அவள் சுபத்ராவை கவலையாகப் பார்க்க.... சும்மா வை என்று அவர் ஜாடை காட்டினார்.

“சாரி பாயசம் தான் கொஞ்சம் கெட்டி ஆகிடுச்சு.” என்று மன்னிப்பு வேண்டியபடியே வினோதா பரிமாற..... அதை எடுத்து சுவை பார்த்த ஒரு பெரியவர் “டேஸ்ட் நல்லா இருக்கு.” என்றதும், அவரின் மனைவி “இவரு எதுல சக்கரை கலந்து கொடுத்தாலும். நல்லா வக்கனையா சாப்பிடுவார்.” என்றார். அதைக் கேட்டு அனைவரும் சிரித்தனர். பிறகு இதற்கு முன்பு அவர்கள் சமையலில் சொத்தப்பிய கதை எல்லாம் அரங்கேற.... அந்த இடமே சிரிப்பு சத்தத்தால் அதிர்ந்தது.

விருந்தினர் உண்டு முடித்ததும் வீட்டினர் உட்கார்ந்து சாப்பிட.... ரங்கநாயகி வினோதாவையும் உட்கார்ந்து சாப்பிட சொன்னார்.

“நீங்க அத்தை....” வினோதா தயக்கமாக ரங்கநாயகியை பார்க்க....

“நான் சாப்பிட இன்னும் நேரம் ஆகும். நீங்க சாப்பிடுங்க.” என்றார். அதிகபடியான வேலை செய்ததால் வினோதாவுக்கும் பயங்கரப் பசி.... அவள் அஷ்வினோடு உட்கார்ந்து சாப்பிட்டாள்.

முதல் தடவைக்குத் தேவையான அளவு பரிமாறிக்கொண்டு அஷ்வின் வினோதா மற்றும் சுபத்ரா சாப்பிட்ட போது.... குழம்பு ரசம் காய் எல்லாம் குறைவாக இருப்பதைப் பார்த்து

ரங்கநாயகிக்கு வேண்டும் என்று வினோதாவும் சுபத்ராவும் தங்களுக்குக் கொஞ்சமாகவே எடுத்திருந்தனர்.

சாப்பிடும் போது அஷ்வின் ஒரு பத்து தடவையாவது “ரொம்ப நல்லா இருக்கு வினு...” எனப் பாராட்டியிருப்பான். சுபத்ராவும் பாராட்டினார். வினோதாவிற்குச் சந்தோஷமாக இருந்தது. நமக்கு இவ்வளவு நல்லா சமைக்க வருமா என்று அவளுக்கே ஆச்சரியாமாக இருந்தது. கடைசியாகப் பாயசம் சாப்பிடும் போது.... அஷ்வின் வேண்டுமென்றே கிண்ணத்தைக் கவிழ்த்து காட்ட... பாயசம் கொட்டவில்லை.... அதை வைத்து அவளைக் கேலி செய்து ஓட்டினான். வினோ அதைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

சாப்பிட்டு முடித்து எல்லோரும் ஹாலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது..... ரங்கநாயகி சாப்பிட அமர்ந்தார் . என்னதான் எல்லோரும் நன்றாக இருக்கு என்று சொன்னபோதும், ரங்கநாயகி என்ன சொல்லப்போகிறார் என்பதைத் தெரிந்துகொள்ள வினோதா மிகவும் ஆவலாக இருந்தாள். அதே ஆர்வம் அஷ்வினுக்கும் இருந்தது. அதனால் தன் அம்மாவின் மீது ஒரு கண் வைத்திருந்தான்.

ரங்கநாயகி சாதத்தைப் போட்டு தயிர் விட்டு ஊறுகாய் வைத்துக்கொண்டு சாப்பிட.... அதைப் பார்த்த அஷ்வினுக்குச் சொத்தென்று ஆகிவிட்டது. “என்னம்மா நேரா தயிருக்கு போய்டீங்க.” என வாய்விட்டே கேட்டுவிட்டான். வினோவுக்கும் முகம் சுருங்கிவிட்டது.

“ரெண்டு நாளா வெளி சாப்பாடு இல்லையா.... அது தான் வயிறு ஒருமாதிரி இருக்கு. குளிர தயிர் போட்டு சாப்பிட்டா நல்லா இருக்கும்ன்னு நினைச்சேன்.” என்றபடி ரங்கநாயகி சாப்பிட்டார்.

சாப்பிட்டு பார்த்து எதாவது குறையாவது சொல்லி இருக்கலாம் என்று வினோதாவுக்குத் தோன்றியது. தான் சமைத்ததைச் சாப்பிடாமல் தன்னை ஒதுக்கிவைத்துவிட்டாரே என்று நினைக்கும் போதே அவளுக்கு அழுகையாக வந்தது.

என்ன முயன்றும் அழுகையை அடக்க முடியாமல் எழுந்து மாடிக்கு சென்றுவிட்டாள். அஷ்வின் அதுவரை அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கும் தன் அம்மாவின் மீது வருத்தம் தான். வீம்புக்கு செய்பவரை என்ன சொல்லமுடியும்.

சிறிது நேரம் சென்று அஷ்வின் அவன் அறைக்கு வந்த போது.... வினோதா கட்டிலில் கண்ணை மூடி படுத்து இருந்தாள். இவனும் சென்று அவளின் அருகில் படுத்துக்கொண்டான். அவள் உறங்குகிறாளா அல்லது வெறுமனே படுத்திருக்கிறாளா என்று அவனுக்குத் தெரியவில்லை.... இப்போது அவளுக்கு ஓய்வு தேவை என்பதால் அமைதியாக இருந்தான்.

நேற்று தான் திருமணம் ஆனது என்பதை அவனால் நம்ப முடியவில்லை.... ஒருநாளுக்குள் எவ்வளவு பிரச்சனை. எப்படித்தான் இனி வரும் நாட்களைச் சமாளிக்கப் போகிறோமோ என்று அவனுக்கு மலைப்பாக இருந்தது. இதே மாதிரி வினுவும் நினைத்தால்.... தங்கள் திருமண வாழ்க்கை என்னாகுமோ என்ற கவலையும் அவனுக்கு வந்தது. இப்படி ஏதேதோ யோசித்துக்கொண்டே உறங்கிவிட்டான்.

நன்றாகத் தூங்கி எழுந்ததும் அஷ்வின் கொஞ்சம் தெளிவாக யோசித்தான். தன் அம்மாவை சமாதானம் செய்வது எல்லாம் பிறகு முதலில் தங்கள் வாழ்க்கையை ஒழுங்காக ஆரம்பிப்போம் என்று நினைத்தான். அவன் வினோதாவை பார்க்க.... அவள் சோகமே வடிவாகப் படுத்திருந்தாள். ஆனால் உறங்கவில்லை.... கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு எதோ யோசித்தபடி இருந்தாள்.

இவளை இப்படியே விட்டாள் நல்லது இல்லை என்று உணர்ந்தவன், அவளைத் தன் பக்கம் இழுத்து “நல்ல தூக்கமா செல்லத்துக்கு..... புருஷனை கூடக் கவனிக்கலையே...” அவன் சரசமாகக் கேட்க.....

“என்ன கவனிக்கணும்?” என வினோதாவும் புன்னகைக்க....

“ம்ம்.... நிறையக் கவனிக்கலாம். அது என்னன்னு ராத்திரி சொல்றேன்.”

“நேத்து ராத்திரி மாதிரியா....”

வினோ கேட்டது அஷ்வினுக்குப் புரியாமல் இல்லை. நேத்தே நீ ஒன்னும் கிழிக்களை... இன்னைக்கு என்ன கிழிக்கப் போற?.... இப்படித்தான் வினோதா நினைக்கிறாள் என்று அவனுக்குத் தெரியும்.

“ஹே.... அப்போ நேத்து நீ எதிர்பார்த்தியா.... இந்தப் பையன் ஒன்னும் பண்ணலையேன்னு நீ பீல் பண்ணி இருக்க....அச்சச்சோ உன்னை ஏமாத்திட்டேனா...” அஷ்வின் அவளை வம்பு இழுக்க....

“அப்படியில்லை.....” வினோ சமாளிக்க....

“நம்ம ரெண்டு பேருக்குள்ள எந்த ஒளிவு மறைவும் வேண்டாம். அதனால உண்மையா நீ என்ன நினைச்சேன்னு சொல்லு....” அஷ்வின் கேட்டதும்,

“பெரிசா ஒன்னும் எதிர்ப்பார்க்களை.... ஆனா ஒரு ஹக் கிஸ் இதெல்லாம் எதிர்பார்த்தேன்.” என்றாள் அவளும் மறைக்காமல்.

“பெரிசா ஒன்னும் எதிர்ப்பார்க்கலைன்னு சொன்னியே.... அப்போ பெரிசா எதோ இருக்கா... என்ன அது?” அஷ்வின் எதுவும் தெரியாதது போல் கேட்டதும், இவன் பொல்லாதவன் நம்ம வாய்ல இருந்தே எல்லாத்தையும் வாங்க பார்க்கிறான் என்று நினைத்த வினோதா எழுந்துகொள்ள முயல... அது அவளால் முடியவில்லை.... அஷ்வின் தான் அவள் மீது ஒரு கையையும் காலையும் போட்டிருந்தானே.....

“எங்க ஓடுற... ஒழுங்கா சொல்லிட்டு போ....”

“எனக்குத் தெரியாது...”

“பொய் சொல்லாத.... இப்ப நீ தான பெரிசா எதோ இருக்குன்னு சொன்ன.... அப்ப அது என்னன்னு உனக்குத் தெரியும்.”

இவன் சொல்லாமல் விடப்போவதில்லை என்பதை உணர்த்த வினோதா “ரொம்பத் தெரியாது அஷ்வின், உங்களுக்குத் தெரியுமா....” எனப் பேச்சை மாற்ற...

“தெரியும்.” அஷ்வின் உடனே ஒத்துக்கொள்ள.....

“உங்களுக்கு மட்டும் எப்படித் தெரியும்?” வினோதா அவனைச் சந்தேகமாகப் பார்க்க....

“அப்படிச் சந்தேகமா பார்க்காதடி.... சொந்த அனுபவம் இல்ல.... சும்மா ப்ரண்ட்ஸ் கூடப் படம் பார்த்து தெரிஞ்சிகிட்டது தான்.”

“ச்சீ.... தூ..... இதெல்லாமா பார்ப்பீங்க.”

“என்ன ச்சீ தூ... உனக்குத் தெரியுமா....”

“தெரியாது....”

“உனக்கும் தெரியாம எனக்கும் தெரியாம.... நாம ரெண்டு பேரும் சேர்ந்து என்ன சாமியா கும்பிடுறது. இதெல்லாம் அறிவை வளர்த்துக்கப் பார்த்தது தான். தப்பான எண்ணத்துல இல்லை....”

“அப்ப அந்த வயசுல வர்ற ஆர்வம், கல்யாணம் ஆன பின்னாடி எதுவும் தெரியாம முழிக்கக் கூடாது இல்லை.... அப்புறம் நீ தான் பாவம்.” அஷ்வின் சொன்ன விளக்கத்தைக் கேட்டு வினோதாவுக்குச் சிரிப்பு வந்தது.

“ஓ... எனக்காகவா.... ரொம்பத் தான் அக்கரை.” வினோதா உதடை சுழிக்க.... அதில் கவரப்பட்ட அஷ்வின், மெதுவாக அவள் இதழ் நோக்கி குனிந்தவன் “இன்னைக்கு ப்ராக்டிகல் கிளாஸ் வச்சுப்போமா...” எனக் கிசுகிசுப்பாகக் கேட்டுக்கொண்டே அவள் இதழில் முத்தமிட்டான்.

அப்போது சரியாகக் கீழே இருந்து பூஜை மணியோசை கேட்க.... பதறியடித்து விலகிய அஷ்வின் “முதல்ல இந்த மணியை எங்காவது தூக்கி ஒளிச்சு வைக்கணும்.” என்றான் கடுப்பாக.... அவன் சொன்ன விதத்தில் வினோதா விழுந்து விழுந்து சிரித்தாள்.

“போதும் சிரிச்சது. எந்திரிச்சுக் கிளம்பு, பீச் வரை போயிட்டு வரலாம்.” என்றான்.

வினோதா புதுச் சுடிதார் அணிந்து தயாராக... அஷ்வினும் கிளம்பியதும் இருவரும் கீழே சென்றனர். ரங்கநாயகி அப்போது தான் பூஜையை முடித்துவிட்டு வெளியே வந்தார். அவர் காலை ஆறு மணிக்கு முன்பும் மாலை ஆறு மணிக்கு முன்பும் தினமும் பூஜை செய்வார்.

காலையில் ஏற்பட்ட அனுபவத்தில் வினோதா அவளே சமையல் அறைக்குச் சென்று இருவருக்கும் காபி கலந்து வந்தாள். ஹாலில் இருந்த மாமனாரை பார்த்தும் “உங்களுக்கும் காபி கொண்டு வரட்டா....” என்றதற்கு, அவர் “ஏற்கனவே ஆச்சு.” என்றார்.

காபி குடித்ததும் அஷ்வின் தன் பெற்றோர் இருவரையும் பொதுவாகப் பார்த்து “நானும் வினுவும் வெளிய போயிட்டு வரோம்.” என்றான். ரங்கநாயகி எதுவும் சொல்லவில்லை.... வரதராஜன் மட்டும் “நேத்து தான் கல்யாணம் ஆகி இருக்கு.... அதனால பார்த்துப் பத்திரமா போயிட்டு வாங்க.” என்றார்.

விட்டால் போதுமென்று இருவரும் உடனே கிளம்பிவிட்டனர். செல்வதற்கு முன் அஷ்வின் “அம்மா, நைட் வெளிய சாப்டிட்டு வந்திடுறோம்.” என்றவன், அவர் மறுத்து எதுவும் சொல்ல இடம் கொடுக்காமல்.... வெளியே சென்றுவிட்டான்.

இருவரும் காரில் தான் சென்றனர். கடற்கரைக்குச் சென்றதும் கூட்டம் அதிகமில்லாத அதே சமயம் ஆட்கள் நடமாட்டம் இருக்கும் இடமாகப் பார்த்து அமர்ந்தனர். மாலை நேர குளிர்ந்த கடல் காற்று இருவரின் மன இறுக்கத்தையும் தளர்த்திப் புத்துணர்ச்சியை அளித்தது.

அஷ்வின் அவளிடம் மனம் விட்டுப் பேசிக்கொண்டிருந்தான். அவனுக்குத் திருமணத்தைப் பற்றி ஏகபட்ட கற்பனைகள் இருந்தது. “வினு கல்யாணம் ஆகறதுக்கு முன்னாடி நான் இதெல்லாம் உன்கிட்ட பேசினா தான் தப்பு,

இப்ப பேசலாம்.” என்றவன், தங்கள் தாம்பத்தியத்தை எப்படி ஆரம்பிக்க வேண்டும் என்று அவனுக்கிருந்த ஆசையையும் பகிர்ந்து கொண்டான். முகம் சிவக்க வினோதா அமைதியாக அவன் சொல்வதைக் கேட்டிக்கொண்டிருந்தாள்.

“நேத்து வேற நீ தூக்கம் வருதுன்னு சொன்னியா.... எனக்கும் அசதியா இருந்தது. அவசரமா நம்ம தாம்பத்தியம் ஆரம்பிக்க வேண்டாம்ன்னு நினைச்சேன். நம்ம வாழ்க்கையில வர்ற ஸ்பெஷ்லான விஷயம்.... அது எப்பவும் நமக்கு மறக்காமஇருக்கணும். ரொம்ப ரொமாண்டிக்கா இருக்கணும்.” என்றான் கண்கள் மின்ன....

இரவு உணவை வெளியேவே முடித்துக்கொண்டு வீட்டிற்கு நேரத்தோடு வந்தனர். கீழே அதிக நேரம் இல்லாமல் வினோதாவை அழைத்துக்கொண்டு அஷ்வின் சீக்கிரமே அவர்கள் அறைக்கு வந்துவிட்டான்.

முதலில் அஷ்வின் சென்று குளித்துவிட்டு வர அடுத்து வினோதா சென்றாள். அஷ்வின் அவளுக்காக எடுத்து வைத்திருந்த இரவு உடையை அவளிடம் கொடுக்க.... அதைப் பார்த்து வினோதா முகம் சிவந்தாலும் அதை வாங்கிக்கொண்டு குளிக்கச் சென்றாள்.

குளித்து விட்டு வந்தவள் தங்கள் அறையைப் பார்க்க....பெரிய விளக்கை அணைத்துவிட்டு இரவு விளக்கு மட்டும் ஒளிர்ந்தது. அந்த மிதமான வெளிச்சத்தில், அறையில் இருந்த இதமான நறுமணம் வேறு மேலும் அவளைக் கிறங்க செய்தது.

கட்டிலின் அருகே நின்றிருந்த அஷ்வின் வினோதாவை இருகரம் விரித்து அழைக்க.... மனதில் ஆசையும் ஆர்வமும் இருந்தாலும் அதே அளவு தயக்கமும் பயமும் இருந்ததால்.... மெதுவாகவே நடந்து சென்றவள், அவன் கைகளுக்குள் விருப்பமாகவே சரண் புகுந்தாள்.

காலையில் சோம்பலாகக் கண்திறந்த வினோதா அஷ்வினை பார்க்க.... அவன் அசந்து உறங்கி கொண்டிருந்தான். நேற்று இரவு அவன் அடித்த கொட்டம் நினைவுக்கு வந்ததும், இனிமையான நினைவுகளை எண்ணி அவள் முகம் சிவந்தாள்.

இந்த ஆறடி உயர மனிதன் நேற்று தன்னிடம் காரியம் சாதிக்க எப்படியெல்லாம் கொஞ்சினான். இப்போது ஒன்றும் தெரியாதது போல் முகத்தை வைத்துக்கொண்டு தூங்குவதைப் பார்..... சரியான வாலு... எனத் தன் கணவனை மனதிற்குள் செல்லமாகச் சீராட்டினாள்.

அப்போது கீழே இருந்து பூஜை மணி ஓசை கேட்க.... இப்போது அஷ்வின் அலறி அடித்து எழுவான் என்று நினைத்ததற்கு மாறாக.... அவன் அவளை இன்னும் இறுக்கமாக அனைத்துக் கொண்டு உறங்க..... ஒரே நாளில் உலகம் மாறிவிட்டதை எண்ணி வியந்தபடி அவளும் உறங்கினாள்.

சிறிது நேரம் சென்று கண் விழித்தவள், இதற்கு மேலும் உறங்குவது நல்லதில்லை என்று எழுந்துகொள்ள முயல..... அவள் அசைவில் அஷ்வினின் உறக்கமும் கலைந்தது.

அவன் அவளை ஆசையாக அனைத்து முத்தமிட... “ அஷ்வின் ப்ளீஸ் எனக்குக் குளிக்கணும்.” வினோதா சங்கடமாக அவனைப் பார்க்க.... அவனும் புரிந்துகொண்டு உடனே அவளை விட்டு விலகி “ஓகே போ....” என்றான்.

வினோதா குளியல் அறைக்குள் சென்று பல் துலக்கி முகம் கழுவியவள், நேற்று அஷ்வின் சொன்னது நினைவுக்கு வர.... அவர்கள் அறையைச் சுத்தம் செய்துவிட்டு குளிப்போம் என்று வெளியில் வந்தாள்.

அவள் அறையை ஒதுங்க வைக்க..... அஷ்வின் அவளுக்கு உதவினான். இருவருமாகச் சேர்ந்து பேசிக்கொண்டே வேலை செய்தனர். முதலில்

வினோதா சென்று குளித்துவிட்டு வர.... அடுத்து அஷ்வின் சென்றான்.

நேற்று போல் இல்லாமல்... இன்று இருவரும் சேர்ந்தே கிளம்பினர். அஷ்வின் அவளை முதலில் கீழே போ என்று சொல்லவில்லை. இன்று அவள் அம்மா வீட்டுக்கு செல்வதால்... வினோதா நல்ல புடவையே கட்டிக்கொண்டாள்.

“ரெடியா போலாமா.... ரொம்பப் பசிக்குது. சினிமாவுல முதல் ராத்திரி அன்னைக்கு நிறையப் பழம் ஸ்வீட் எல்லாம் வச்சிருப்பாங்க. அதைப் பார்த்து நான் கிண்டல் எல்லாம் பண்ணி இருக்கேன். ஆனா இப்ப தான் காரணம் தெரியுது..... நேத்து நீ என்னைப் படுத்தின பாடு இருக்கே.... உன்னைச் சரி கட்டுறதுக்குள்ள என் தெம்பெல்லாம் போச்சு....” அஷ்வின் வினோதாவை கேலி செய்ய.... அவள் பதில் பேசாமல் அமைதியாக இருந்தாள். ஆனால் அவள் முகம் வெட்கத்தில் சிவந்தது.

அவளை ஆசையாகப் பார்த்த அஷ்வின் “இப்ப ஒன்னும் வலி இல்லையில்லை வினு.... Are you ok?” என்றவன், அவள் இல்லை என்று தலை அசைத்ததும், அவள் இதழில் முத்தமிட்டு “ரொம்பத் தேங்க்ஸ் வினு.....” என்றான் மனமார.
இதுக்கெல்லாமா தேங்க்ஸ் சொல்வாங்க என்று வினோதா நினைத்த போதும், வெளியில் ஒன்றும் சொல்லவில்லை.

இருவரும் அறையை விட்டு வெளியே வந்த போது... அங்கு அருணும் ரகுவும் இருந்தனர். அவர்கள் இருவரும் இவர்களுக்காகவே காத்திருந்து போல் இருந்தது.
“நேத்து எப்படி நல்லா என்ஜாய் பண்ணீங்களா?” அஷ்வின் கேட்க... அதற்கு ரகு “ம்ம்... நல்லாவே...” என்றான்.

அருண் வினோதாவை பார்த்துக்கொண்டே “நேத்து நைட் கேசரி சாப்பிட்டோம்.” என்றான். வினோதா புரியாமல் அவனைப் பார்த்தவள், அவன் முகத்தில்

இருந்த அடக்கப்பட்ட சிரிப்பை பார்த்ததும், அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவள் செய்த பாயசத்தைத் தான் அவன் கேலி செய்கிறான் என்று. ஐயோ மானம் போகுதே என்று நினைத்த வினோதா தவிப்பாக அஷ்வினை பார்க்க.... அவன் வாய்விட்டே சிரித்தான்.

“அது டூ இன் ஒன் டா அருண். நீ பாயசம் மட்டும் சாப்டிட்டு எந்த முடிவுக்கும் வந்துடாத..... மத்த ஐடம் எல்லாம் சூப்பரா இருந்தது.” அவன் தன் மனைவிக்குப் பரிந்து பேச..... “அதையும் சாப்பிட்டோம், நிஜமா சூப்பரா இருந்தது. நீங்க நல்லா சமைகிறீங்க அண்ணி.” என அருண் புன்னகைக்க.... “அந்தக் காலிபிளவர் வறுவல் சூப்பரா இருந்தது. இன்னொரு நாள் எனக்கு நிறையப் பண்ணி தரீங்களா.... நேத்து டேஸ்ட் பார்க்கத்தான் இருந்தது.” ரகு வினோதாவிடம் கேட்க... அவள் சரி என்றாள்.

நல்லா வராத பாயசத்தை மட்டும் காட்டி, தன்னை மற்றவர்களின் கிண்டலுக்கு ஆளாக்கி இருப்பாரோ என ரங்கநாயகி பற்றி முதலில் வினோதா தவறாகத்தான் நினைத்தாள். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை என்றதும், அவளுக்கு அவர் மீது நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. சீக்கிரம் தன் மாமியார் மனதில் இடம் பிடித்து விட வேண்டும் என்று நினைத்தாள்.

ஆனால் நடந்தது வேறு.... இதில் ரங்கநாயகியின் பங்கு எதுவும் இல்லை. மாலை வீட்டுக்கு வந்த ராதிகா... வினோதா அப்படி என்ன சமைத்தாள் என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தில்... எல்லாப் பாத்திரத்தையும் திறந்து பார்க்க... பொரியல் குழம்பு எல்லாம் கொஞ்சம் தான் இருந்தது. ஆனால் பாயசம் மட்டும் நிறைய மீதம் இருந்தது.

இதை வைத்தே வினோதாவை மட்டம் தட்ட எண்ணி, அதைக் கிணத்தில் கொண்டு வந்து எல்லோரிடமும் காட்டி கேலி செய்து கொண்டிருந்தாள். அப்போது சுபத்ரா “பாயசம் தான் கெட்டி ஆகிடுச்சு.

மத்ததெல்லாம் நல்லா தான் பண்ணி இருந்தா.....” என்றார். இரவு உணவு சாப்பிடும் போது அருணும் ரகுவும் வினோதா சமைத்ததைக் கேட்டு வாங்கி ருசி பார்த்தனர். அவர்கள் வினோதாவின் சமையலை புகழ்ந்த போது.... ராதிகாவுக்குத் தான் எரிச்சலாக இருந்தது.

அருண் ரகுவுடன் அரட்டை அடித்து முடித்து அஸ்வினும் வினோதாவும் கீழே சென்ற போது... காலை சமையல் முடிந்து மங்களம் எல்லாவற்றையும் உணவு மேஜையில் அடுக்கிக் கொண்டு இருந்தார். ரங்கநாயகி வினோதாவையும் அங்கிருந்த சுவர் கடிகாரத்தையும் குறிப்பாக ஒரு முறை பார்த்துவிட்டு சென்றார்.

‘நீ கீழ வரும் நேரமா இது...’ என்று சொல்லாமல் சொன்னது அந்தப் பார்வை. அது வினோதாவிற்கும் புரிந்தது. ரொம்பப் பசித்ததால் அஷ்வின் நேராகச் சென்று சாப்பிட அமர்ந்தவன், வினோதாவையும் அழைக்க.....

“நீங்க சாப்பிடுங்க நான் அப்புறம் சாப்பிடுறேன்.” என்றபடி வினோதா அவனுக்குப் பரிமாற ஆரம்பித்தாள். இவன் என்ன இவ்வளவு சீக்கிரம் சாப்பிடுறான்...” என நினைத்த ரங்கநாயகி, இருவரையும் ஆராய்வது போல் பார்த்தவருக்கு என்ன புரிந்ததோ..... மேற்கொண்டு அவர் எதுவும் பேசவில்லை.

காலை உணவு முடிந்து எல்லோரும் ஹாலில் இருக்கும் போது, வினோதாவின் அண்ணன் விமலும் அண்ணி மாலதியும் இவர்களை மறுவீட்டுக்கு அழைக்க வந்தனர். அஷ்வின் அவர்களைச் சாப்பிட அழைக்க..... வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டு வந்ததாகச் சொல்லி அவர்கள் உணவை மறுத்தனர்.

வினோதா அவர்களை அழைத்துக்கொண்டு தனது அறைக்குச் சென்றவள், அவர்களை அங்கே உட்கார சொல்லிவிட்டு, கீழே வந்து அவர்களுக்கு நொறுக்கு

தீனியோடு மங்களம் போட்டு வைத்திருந்த காப்பியையும் கொண்டு சென்றாள்.

அவள் சென்றதும் அங்கிருந்த அஷ்வினிடம் ரங்கநாயகி “மதியம் சாப்டிட்டுச் சாயங்காலம் கிளம்பி வந்திடு.” என்றார்.

“அது எப்படிமா உடனே வர முடியும். அவங்க தப்பா நினைச்சுப்பாங்க. நான் ஒருநாள் தங்கிட்டு வரேன்.”

அஷ்வின் சொன்னதற்கு ரங்கநாயகி எதோ மறுத்து சொல்ல வர “விடு, இந்த ஒரு தடவை அவன் அங்க தங்கிட்டே வரட்டும். அடுத்தத் தடவை போயிட்டு தங்களைனாலும் யாரும் ஒன்னும் நினைச்சுக்கப் போறது இல்லை.....முறைன்னு ஒன்னு இருக்கு இல்ல...” என்றார் வரதராஜன்.

“என்ன முறையோ?..... எல்லாம் முறைப்படிதான் நடந்துச்சா....ஆனா அஷ்வின் ஒன்னு சொல்றேன் கேட்டுக்கோ.... உன் மாமியார் வீட்ல இருந்து சீர்ன்னு எதாவது கொண்டு வந்த.... அப்புறம் நான் என்ன செய்வேன்னு எனக்கே தெரியாது. அவங்க செய்ற சீரை இங்க கொண்டு வந்து, எங்களை அவமானப்படுத்தாத சொல்லிட்டேன்.” என ரங்கநாயகி பொங்கி விட்டு எழுந்து செல்ல.... அஷ்வின் வரதராஜனை பார்க்க.... அவருக்கும் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

சிறிது நேரத்தில் புதுமணத்தம்பதிகள் மறுவீடு கிளம்பினர். ராதிகாவை அவர்களுடன் செல்லும்படி வரதராஜன் சொல்ல அவள் மறுத்துவிட்டாள்.

விமல் வந்த வாடகை காரை அனுப்பிவிட்டு, அஷ்வின் அவர்கள் வீட்டில் இருக்கும் இரண்டு கார்களில் ஒன்றை எடுத்துக்கொண்டான். வினோதா தன் அம்மா வீட்டிற்குச் செல்லும் பரபரப்பில் இருந்தாள்.

“நீ அங்க இருந்து வந்து ரெண்டு நாள் தான் ஆகுது. ரொம்பப் பில்ட்அப் கொடுக்காத.....” செல்லும்

வழியில் அஷ்வின் அவளைக் கேலி செய்ய..... விமலும் அவனுடன் சேர்ந்து கொண்டான்.

“ஆமாம் இந்தப் பொண்ணுங்க எல்லாம் அம்மா வீட்டுக்கு போகணும்ன்னா ஏன் தான் பறக்கிறாங்கங்னே தெரியலை....”
“ஏன் சொல்லமாட்டீங்க? ஒரு வீட்ல இருந்து இன்னொரு வீட்ல போய்த் தங்கிறது அவ்வளவு சுலபமா....” மாலதி கேட்க....

“இதுல என்ன இருக்கு? அங்க இருக்கிறதுக்குப் பதில் இங்க....” அஷ்வின் எளிதாகப் பதில் சொல்ல.....

“எதோ வீடு மாத்துற மாதிரி ஈஸியா சொல்றீங்க. இத்தனை வருஷமா வாழ்ந்த வீட்டை விட்டுட்டு வர்றது அவ்வளவு சுலபமா.... வீடுங்கிறது வெறும் சுவரும் கட்டடமும் மட்டும் இல்லை.... அங்க இருக்கிற பெத்தவங்க, கூடப்பிறந்தவங்க இத்தனை நாள் பழகின வழக்கங்கள் எல்லாத்தையும் தான் விட்டுட்டு வரோம்.”

“எங்களோட கஷ்ட்டம் உங்களை மாதிரி ஆம்பிளைங்களுக்குப் புரியாது. நீங்க போய் இருந்து பாருங்க அப்பத்தான் தெரியும்...” வினோதா கோபத்தில் படபடவென்று பேச....

“வினு, நோ டென்ஷன் கூல். சும்மா விளையாட்டுக்கு தானே....” அஷ்வின் வினோதாவை சமாதானம் செய்தான்.

சென்னை வாகன நெரிசலில் இவர்கள் வீடு போய்ச் சேர்ந்த போது மதிய நேரம் ஆகிவிட்டது. வாசலில் ஒரு கண்ணை வைத்துக்கொண்டே விருந்து தயார் செய்து கொண்டிருந்த மஞ்சு, இவர்கள் வருவதைப் பார்த்ததும் வாசலுக்கு ஆரத்தியோடு வந்தார். அவரும் மாலதியும் சேர்ந்து ஆலம் சுற்றினர்.

வினோதா வீட்டிற்குள் சென்றதும், அவள் தந்தையைக் கட்டிக்கொண்டு சிறிது நேரம் செல்லம் கொஞ்சினாள். அவளையே சிறிது நேரம்

பார்த்துக்கொண்டிருந்த மஞ்சு மனதில் ஒரு திருப்தியுடன் சமையல் அறைக்குச் சென்றார்.

மஞ்சு அஷ்வினுக்கு ஒரு பெரிய டம்ளர் நிறைய இளநீர் கொண்டு வந்து கொடுக்க.... அது அந்த வெயிலுக்குக் குடிக்க இதமாக இருந்தது. மஞ்சுவோடு சமையல் அறைக்குச் சென்ற வினோதா “சமையல் முடிச்சிடீங்களா அம்மா...” என்றவுடன் மகளுக்குப் பசிக்குதோ என்று மஞ்சு நினைக்க.... ஆனால் வினோதா அவரிடம் ஒவ்வொரு பதார்த்தத்தையும் காட்டி எப்படிச் செய்வது என்று கேட்டவள், அவளும் அவள் அம்மாவோடு நின்று சமைக்க ஆரம்பித்தாள்.

ஒருநாள் சமைத்ததுடன் தன் சமையல் வேலை மாமியார் வீட்டில் முடிந்துவிடவில்லையே... இனி தினமும் செய்ய வேண்டியது வரலாம். அதனால் அவள் ஆர்வத்துடன் ஒவ்வொன்றையும் பற்றிக்கேட்டுக் கொண்டிருந்தாள். அப்போது கூட மாலதி சமைக்க வரவில்லை... அவள் குழந்தைக்குச் சாதம் ஊட்டுவது போல்... அங்கயே நின்று தாயும் மகளும் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

அஷ்வின் ஹாலில் அமர்ந்து பார்த்திபனோடும் விமலுடனும் பேசிக்கொண்டிருந்தான். டிவி வேறு ஓடிக்கொண்டிருந்தது. சிறிது நேரம் சென்றதும் அவனுக்குப் போர் அடித்தது. அவனுக்கு வினோதா சமையல் அறையில் பேசுவது நன்றாகவே கேட்டது. புதுசா கல்யாணம் ஆனவங்க வேறு எது ஏதோ ஆராய்ச்சி பண்ணுவாங்க... இவ என்னடான்னா சமையலை ஆராய்ச்சி பண்றாளே..... நேற்று தன் வீட்டில் ஏற்பட்ட அனுபவமே இதற்குக் காரணம் என அவனுக்குப் புரிந்து தான் இருந்தது.

மதிய உணவு தரையில் பந்திப்பாய் விரித்து, தழைவாழை இலை போட்டு பரிமாறினர். அஷ்வினுக்கு இப்படிச் சாப்பிட மிகவும் பிடிக்கும் அவன் தாத்தா வீட்டில் இப்படி அனைவரும் கீழே உட்கார்ந்து தான் சாப்பிடுவார்கள். மஞ்சு

விதவிதமாக நிறையப் பதார்த்தங்கள் செய்திருந்தார்.

“ஏன் அத்தை இவ்வளவு செஞ்சீங்க? நமக்குள்ள எதுக்குப் பார்மாலிடீஸ்?” அஷ்வின் சொல்ல.... மஞ்சு புன்னகைத்தார். மதிய விருந்து முடிந்ததும் அஷ்வினையும், வினோதாவையும் மாடியில் இருந்த விமலின் அறையில் சென்று ஓய்வு எடுக்க அனுப்பி வைத்தனர்.

தனிமையில் இருவர் மட்டும் இருந்தாலும், முன் தின இரவு தூங்காதது அதோடு மதிய உணவு வேறு சற்று அதிகபடி ஆனதால்.... இருவருக்குமே களைப்பாக இருந்தது. அதனால் மற்றவற்றை ஒதுக்கிவிட்டு இருவரும் தூங்க முயன்றனர்.

அஷ்வினும் வினோதாவும் படுத்ததும் உறங்கி விட்டனர். அறையில் ஏசி ஓடிக்கொண்டிருந்தாலும் அடித்த வெயிலுக்குக் குளிர்ச்சியை மீறி வெக்கை தெரிய.... அஷ்வினின் உறக்கம் கலைந்தது. மாடி அறை என்பதால் அதிக வெக்கை.... அவன் ஆடை எல்லாம் வியர்வையில் நனைந்திருந்தது. அவன் மீண்டும் தூங்க முயன்றும் முடியவில்லை.
அவனுக்கு அந்த வெக்கையில் தலை வேறு வலிக்க ஆரம்பித்தது. அவன் வினோதாவை பார்க்க அவள் அசந்து உறங்கிக்கொண்டு இருந்தாள்.
அவளுக்காகச் சிறிது நேரம் பொறுத்தவன், மேலும் முடியாமல்.... எழுந்து வினோதா இருந்த அறையின் கதவை சாற்றிவிட்டு கீழே வந்தான்.
வாசல் கதவு திறந்தே இருந்தது. கீழே இருந்த இரு அறைகளில் ஒன்றில் பார்த்திபனும் மற்றொன்றில் விமலும் மாலதியும் படுத்திருந்தனர். கட்டில் இல்லாததால் தரையில் தான் மெத்தை விரித்துப் படுத்திருந்தனர். மஞ்சு சமையல் அறையில் இருந்தார்.

அஷ்வின் சென்று ஹால் சோபாவில் அமர்ந்தான். மேலே வீடு இருப்பதால்.... ஹால் குளிர்ச்சியாகத்தான் இருந்தது. குஷன் வைத்த

சோபா என்பதால்.... அதிலேயே சாய்ந்து படுத்து உறங்க ஆரம்பித்தான்.

சமையல் அறையில் இருந்து வெளியே வந்த மஞ்சு, அங்கு அஷ்வின் படுத்திருப்பதைப் பார்த்ததும் திடுக்கிட்டார். அவன் அசந்து உறங்கியதால்.... சத்தம் செய்யாமல் வெளியே வந்தவர், மாடிக்கு சென்று வினோதாவை எழுப்பினார். அப்போது அந்த அறையில் இருந்த வெக்கையை அவரும் உணர்ந்ததால்.... அவருக்கு அஷ்வின் கீழே வந்து படுத்ததன் காரணமும் புரிந்தது. அவர் உலுக்கிய உலுக்கலில் வினோதா கஷ்ட்டப்பட்டுக் கண் திறந்தாள்.

“உன் புருஷன் கீழ வந்து படுத்திருக்கார்.... நீ அது கூடத் தெரியாம தூங்கிற...” மஞ்சு மகளைக் கடிந்துகொள்ள.... அவள் பதறி அடித்து எழுந்து வந்து பார்த்த போது.... அஷ்வின் ஹால் சோபாவில் காலை குறுக்கிக்கொண்டு படுத்திருந்தான்.

இதை மட்டும் நம்ம மாமியார் பார்க்கணும். பார்வையாலையே நம்மை எரிச்சிருப்பாங்க என மனதிற்குள் நினைத்தவளுக்கு, தங்கள் வீட்டு சுழல் அஷ்வினுக்குக் கஷ்ட்டமாக இருப்பதை எண்ணி வருந்தினாள்.

அவள் அஷ்வினை எழுப்பும் நோக்கத்தோடு செல்ல... அவளைத் தடுத்து சமையல் அறைக்கு மஞ்சு அழைத்துச் சென்றார்.

“இப்ப எழுப்பாத.... அரைகுறை தூக்கத்தில எழுந்தா தலை வலி வரும். அவரா எழுந்துக்கும் போது எழுந்துகட்டும்.”

வினோதாவிற்கும் அவர் சொன்னது சரி என்று பட்டதால்.... ஹாலில் வந்து அமர்ந்தவள், அஷ்வின் எழுவதற்காகக் காத்திருந்த நேரத்தில், அவள் தூங்கி விழு.... அதைப் பார்த்த மஞ்சு, அவளிடம் ஒரு தலையணையைக் கொடுக்க.... அதைத் தரையில் போட்டுக்கொண்டு படுத்தாள்.

மஞ்சுவிற்கு நன்றாகப் புரிந்துவிட்டது. அஷ்வின் இரவில் மாடியில் படுக்க மாட்டான் என்று... அதனால் அவர் கணவர் படுத்திருந்த அறைக்குச் சென்றவர், உறங்கிக்கொண்டு இருந்தவரை எழுப்பிச் சத்தம் செய்யவேண்டாம் என்று ஜாடை காட்டி, அவரை வெளியே அனுப்பிவிட்டு.... மருமகனுக்காக அந்த அறையைத் தயார் செய்தார்.

மாலை கண்விழித்த அஷ்வினுக்குத் தலைவலி பெரிதும் குறைந்திருந்தது. மஞ்சு அவனுக்குச் சிற்றுண்டியும் காபியும் தர.... அதைச் சாப்பிட்டதும் அவன் களைப்பெல்லாம் தீர்ந்துவிட்டது. மாலை வினோதாவோடு சிறிது தூரம் நடந்துவிட்டு வந்தான். அவர்கள் இருவரும் முதல்தடவை முத்தமிட்ட இடம் வந்ததும், முன்பு நடந்ததை நினைத்து இருவருக்குமே சிரிப்பு வந்தது.

வீட்டிற்கு வந்ததும் அஷ்வின் குளிக்க வேண்டும் என்றான். வினோதா வீட்டில் இன்னும் பழைய காலம் மாதிரி வீட்டிற்கு வெளியே தான் குளியல் அறை இருந்தது. இரவு அவசரத்திற்கு மட்டும் உபயோகிக்க ஒன்று வீட்டின் உள்ளே இருந்தது. அதற்குள் சென்ற அஷ்வின் சிறிது நேரத்தில் வெளியே வந்தவன், “வினு தண்ணி ரொம்பச் சுடுது.” என்றான்.
இருக்கும் வெக்கையில் சுடுநீரில் குளித்தால் அவ்வளவு தான். தான் இன்று குளிக்க முடியாதோ என்று அவனுக்குக் கவலை வந்துவிட்டது. வெயில் நேரம் என்பதால் டாங்கில் தண்ணி சூடாக இருந்தது.

வினோ அவனை அழைத்துக்கொண்டு வீட்டின் பின்புறம் சென்றவள், அவனை அங்கிருந்த துவைக்கும் கல்லில் உட்கார வைத்து விட்டு ஒரு இரும்பு மூடியை திறந்தவள், அதற்குள் வாளியை விட்டு நீர் இறைத்து அஷ்வினின் தலையில் ஊற்ற.... குளிர்ச்சியான நீர் பட்டு அவன் உடல் சிலிர்த்தது.

“ஹே சூப்பரா இருக்கு..... கீழ டாங்க் இருக்கா.....”

“இல்லை.... இது கிணறு.... எங்க ஏரியாவுல இன்னும் நிறைய இடத்தில கிணறு இருக்கு..... மழை நேரத்தில் மேல வர தண்ணி வந்திடும்.... இன்னும் ஈஸியா எடுக்கலாம்.” என்றபடி அவனுக்கு நீர் இறைத்து ஊற்றினாள்.

“சாரி உன்னை ரொம்பக் கஷ்ட்டபடுத்திறேன்.” என்றவன், அவளிடம் இருந்து வாளியை வாங்கி அவனே நீர் இறைத்து குளித்தவன், அடுத்த வாளி நீரை வினோதாவின் மீது ஊற்ற.... எதிர்பாராமல் நீரில் நனைந்ததால் திடுகிட்ட வினோதா.... அஷ்வினை அடிக்க.... அவன் கலகலவென்று சிரித்தான்.

வினோதாவின் வீடு தனி வீடு. அக்கம் பக்கமும் அதுமாதிரி வீடுகள் தான். அதுவும் தள்ளித் தள்ளித்தான் இருக்கும். அதோடு அப்போது இரவு நேரம் என்பதால்.... யாரும் பார்ப்பார்கள் என்ற கவலையின்றி இருவரும் ஒருவரின் மீது ஒருவர் தண்ணீரை ஊற்றிக்கொண்டு விளையாடியபடி குளித்து முடித்தனர்.

அஷ்வின் அங்கருந்த குளியல் அறைக்குள் சென்று, கட்டி இருந்த துண்டையே அவிழ்த்து பிழிந்து தன் உடம்பை துடைத்தவன், மீண்டும் அதையே கட்டிக்கொண்டு வெளியே வர.....வினோதா அப்படியே நின்று கொண்டிருந்தாள்.

தன் ஈரமான உடையைக் காட்டி, தான் இப்போது எப்படி உள்ளே போவது என வினோ சிணுங்க. “நீ இங்கயே இரு...” என உள்ளே சென்ற அஷ்வின் மஞ்சுவை அனுப்பி வைத்தான்.

தன் தாயை பார்த்ததும் “பாருங்கம்மா என்னையும் நனைச்சிட்டாங்க.” என்று அவள் தன் கணவனைக் குறை சொல்ல.... மஞ்சு சிரித்தபடி உள்ளே சென்றவர், அவளுக்கு வேறு ஆடைகள் கொண்டு வந்து கொடுத்தார்.

வினோதா புடவை கட்டி கொண்டு வர... மஞ்சு அவளை உட்கார வைத்து தலை வாரிவிட்டார்.

வினோதாவிற்கு நல்ல நீளமான கூந்தள். அதைத் தழைய பின்னி தலை நிறையப் பூ வைக்க..... அவளின் அழகு மேலும் மெருகேறியது. இது கூட நல்லாத்தான் இருக்கு என அஷ்வின் நினைத்தான்.

அவனின் கண்கள் வினோதாவையே சுற்றி வர... அதைக் கவனித்த மஞ்சு வேகமாக இரவு உணவு செய்யக் கிளம்பினார்.

காய்கறி குருமா ஏற்கனவே செய்து விட்டதால்.... சப்பாத்தியை சுட்டு அதற்குத் தொட்டுக்கொள்ளத் தயிர் பச்சடியும் தயார் செய்தார். உதவ வந்த வினோதாவை அடுப்படியில நிக்காத வேர்க்கும் என்று விரட்டிவிட்டார்.

முதலில் அஷ்வினுக்கும் வினோதாவிற்கும் பரிமாறியவர், அடுத்து விமலையும் மஞ்சுவையும் சாப்பிட வைத்து அவர்கள் அறைக்குப் போகச் சொல்ல.... அவர்களும் நிலைமையைப் புரிந்து கொண்டு உடனே கிளம்ப.... மீதம் இருந்த மதிய உணவை அவரும் பார்த்திபனும் உண்டுவிட்டு வேகமாக வேலையை முடித்துக்கொண்டு, அவர்களும் மாடிக்குப் படுக்கச் சென்றனர்.

மாடிக்குச் செல்வதற்கு முன் வினோதாவை அழைத்த மஞ்சு “உள்ள பால் இருக்கு, அவருக்குக் குடுத்திட்டு நீயும் குடி.... உங்க ரூம்ல பழங்கள், ஸ்வீட், தண்ணி எல்லாம் வச்சிருக்கேன். பசிச்சா சாப்பிடுங்க. நான் சாவி எடுத்திட்டு தான் போறேன். அதனால நானே காலையில கதவை திறந்து வந்துப்பேன். நீ முழிச்சிக்க வேண்டாம்.” எனச் சொல்லிவிட்டு செல்ல.... வினோதா சரி என்றாள்.

கதவை சாத்திவிட்டு வந்த வினோதா அஷ்வினின் அருகில் சென்று உட்கார.... “சாரி வினு, என்னால தான் அவங்க மாடிக்கு போறாங்களா....” என அவன் வருந்த..... அது பிடிக்காத வினோதா “ஒரு நாள் தான.... அவங்களுக்கும் நீங்க ஒரு மாப்பிள்ளை... உங்களுக்குச் செய்யாம யாருக்கு

செய்யப்போறாங்க. பரவாயில்லை விடுங்க.” என்றாள்.

“அப்படியா சொல்ற....” என அஷ்வின் அவளை ஆசையாக அணைக்க.... அவனைத்தடுத்த வினோதா அவனை அழைத்துக்கொண்டு அறைக்குள் சென்றாள். அந்த இரவு அவர்களுக்கு மீண்டும் ஒரு இனிய இரவாக அமைந்தது.

பின் இரவு வரை உறவாடியவர்கள், அதற்குப் பின்பும் உடனே உறங்காமல் பேசிக்கொண்டு இருந்தனர். வீட்டில் யாரும் இல்லாததால்... இருவராலும் மனம் விட்டு பேச முடிந்தது. அவர்கள் சிறு வயது கதை... கல்லூரி கதை எல்லாம் பேசிக்கொண்டு இருந்தனர். இதில் நடு நடுவில் பழங்கள் இனிப்புகள் வேறு காலியாகிக்கொண்டு இருந்தது.

இன்று தான் அவர்கள் இருவரும் புதிதாகத் திருமணமான தம்பதியர் போல் இருந்தனர். அஷ்வினின் வீட்டில் ஆளாளுக்கு முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டே இருந்ததால்..... மனதில் ஒரு மகிழ்ச்சி இல்லை. இங்குத் தான் இருவரும் நிறைவாக உணர்ந்தனர். நாளையே இந்த நிலை மாறப்போவது தெரியாமல்.

பகுதி – 19

மறுநாள் காலை தாமதமாக எழுந்த வினோதா அந்த அறையில் இருந்த குளியல் அறையிலேயே குளித்துத் தயாரக.... அதுவரை கூட அஷ்வின் எழுந்து கொள்ளவில்லை. அவன் அசந்து உறங்கியதால் எழுப்பவும் மனம் வராமல் கதவை சாற்றிக்கொண்டு வெளியே சென்றாள்.

அங்கே மஞ்சு காலை உணவு தயாரித்துக் கொண்டிருந்தார். நெய் வாசம் மூக்கை துளைத்தது. தலை குளித்துப் புத்தம் புது மலராக வந்த மகளைப் பார்த்ததும் மஞ்சுவுக்கு நிறைவாக இருந்தது.

பெரிய வாணலியில் நிறையக் கேசரி செய்திருந்தார். நாக்கில் உமிழ்நீர் சுரக்க கட்டுபடுத்த முடியாமல் வினோதா ஒரு தட்டில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு.... சமையல் அறை மேடை மீது சாய்ந்து நின்று ரசித்துச் சாப்பிட.... பூரிக்கு மாவு பிசைந்து கொண்டே மஞ்சு அவளிடம் பேச்சுக்கொடுத்தார்.

“அப்புறம் எப்படி இருக்கு புகுந்த வீடு?”

தன் அம்மா கேட்டது காதில் விழுந்தாலும் வினோதா உடனே பதில் சொல்லவில்லை.... அங்கே எப்படி என்று கேட்டால்... இன்னும் அவளுக்கே சரியாகப் புரியவில்லை.... ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இங்கே உரிமையாகச் செய்வது போல்.... அங்கே அவளால் செய்யமுடியாது. மனம் விட்டுப் பேசினால் தானே நம் வீடு நம் உறவினர் என்ற எண்ணம் வரும். அங்குத் தான் யாரும் பேசவே தயாராக இல்லையே.... எல்லோரும் என்று சொல்ல முடியாது ரங்கநாயகியும் ராதிகாவும் தான்.

“வீட்டு வேலைக்கு எல்லாம் ஆள் இருக்கு, அடுப்பில வச்சு இறக்க வேண்டியது தான். அது தவிர வீட்ல எல்லா வசதியும் இருக்கு....வேற என்ன வேணும் சொல்லுங்க.” வினோதா தன் அன்னைக்கு நிம்மதி தரும் விதத்திலேயே பதில் சொல்ல... இல்லை அப்படிச் சொன்னதாக நினைத்தாள்.

“நான் என்ன கேட்கிறேன்? நீ என்ன சொல்ற? நான் உன் வீட்டு வசதியை பத்தி கேட்கலை... அங்க இருக்கிற மனுஷங்களைப் பத்தி கேட்கிறேன்.” மஞ்சு அழுத்தி சொல்ல..... அந்த வீட்டு மனுஷங்களைப் பத்தி சொல்ற மாதிரி இருந்தா சொல்லமாட்டேனா என மனதிற்குள் நினைத்த வினோதா “அவங்களுக்கு என்ன எல்லோரும் நல்லா தான் இருக்காங்க.” என்றாள் பொத்தம்பொதுவாக.

மாமியாரும் நாத்தனாரும் தன்னிடம் முகம் குடுத்தே பேசவில்லை என்று தெரிந்தால்..... தன் அம்மா வருத்தபடுவார்கள் என்று நினைத்து வினோதா

எதோ சொல்லி சமாளிக்க.... இந்நேரம் அவர்கள் வீட்டில் எல்லாம் சுமுகமாக இருந்திருந்தால்..... வினோதாவே எல்லாவற்றையும் ஒப்பித்திருப்பாள் என்பது மஞ்சுவுக்குத் தெரியும்.

“அவங்க பையன் கல்யாணத்தைப் பத்தி அவங்களுக்கு ஆயிரம் கனவு இருந்திருக்கும். அதனால அவர் உன்னை விரும்பி கல்யாணம் பண்ணினது அவங்களுக்கு ஏமாற்றமா தான் இருக்கும். அந்தக் கோபத்தில எதாவது கூடக் குறையப் பேசினா நீ தான் பொறுத்து போகணும்.”

“ஏன் அவங்களுக்குக் கோபம் வரணும்? அவங்களும் அவங்க பையனுக்கு ஒரு பெண்ணைத் தான பார்த்திருப்பாங்க. நானும் பொண்ணு தான... நான் மட்டும் என்ன பையனா?” வினோதா வேண்டுமென்றே விதண்டாவாதம் செய்ய....

“வினோ, சும்மா பேசனும்ன்னு எதாவது பேசக் கூடாது. உங்க அண்ணன் மாலதியை விரும்புறேன்னு சொன்ன போது.... அவ நம்ம குடும்பத்துக்கு ஒத்துவருவாளான்னு நான் கூடத் தான் யோசிச்சேன். அப்புறம் நம்ம குடும்பத்திற்கு ஏத்த பொண்ணுன்னு தெரிஞ்சதும் தான் சரின்னு சொன்னேன்.”

“பையனுக்குத் தானே பொண்ணு பார்த்துக் கல்யாணம் பண்ணி வைக்கிற.... அம்மாக்களே மருமக வந்ததும் பையனை தன் கிட்ட இருந்து பிரிச்சிடுவாளோ அப்படின்னு நினைப்பாங்க. இதுல மாப்பிள்ளை உன்னை வீட்டை எதிர்த்துக் கல்யாணம் பண்ணி இருக்கார். அதனால அவங்க சமாதானம் ஆகக் கொஞ்ச நாள் ஆகும். அதுவரை பொறுத்து போ...”

“நல்லா பேசுற மா நீ.... நீ மட்டும் வக்கீலுக்குப் படிச்சிருந்தேன்னு வை.... நிறையச் சம்பாதியம் வந்திருக்கும். இப்படி மிஸ் பண்ணிட்டியே...” வினோதா பொய்யாக வருந்த....

“நீயும் ஒரு அம்மாவாகும் போது.... நான் சொல்றது உனக்குப் புரியும். அதனால இப்ப நான் சொல்றது கேளு....” மஞ்சு மீண்டும் ஆரம்பிக்க.... “ஐயோ... போதும்மா விடு... காதுல இருந்து ரத்தம் வந்திடும் போலிருக்கு.... நீ சொல்ற மாதிரியே நடந்துக்கிறேன் போதுமா.... ஆள விடு.” என்ற வினோதா கையைக் கழுவிக்கொண்டு வெளியே வர.... அங்கே ஹால் சோபாவில் அஷ்வின் அமர்ந்து பேப்பர் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவன் காதிலும் இவர்கள் பேசியது விழத்தான் செய்தது. ஆனால் அவன் எதுவும் தெரிந்த மாதிரி காட்டிக்கொள்ளவில்லை. வினோதாவை பார்த்து புன்னகைத்தவன் காபி என்று ஜாடை செய்ய.... வினோதா அவனுக்குக் காபி கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டுக் குளிக்கச் சென்றுவிட்டான்.

அஷ்வின் காலையே கிளம்ப வேண்டும் என்றதால்... வினோதா சென்று தயாராக..... அப்போது தான் மாலதி மாடியில் இருந்து ஆடி அசைந்து கீழே வந்தாள். வந்ததும் தன் பெண்ணுக்கு டிபன் எடுத்து ஊட்ட ஆரம்பித்தாள். வேறு வேலை பார்க்கவில்லை என்றாலும் அவள் குழந்தையையாவது கவனித்திக்கொள்கிறாளே.... அதுவே பெரிய விஷயம். மற்ற நாட்களில் மஞ்சு தான் அவள் குழந்தையையும் கவனிப்பார்.

இதையெல்லாம் அஷ்வின் கவனித்துக்கொண்டே இருந்தான். காலை உணவு முடிந்ததும் வினோதா அவள் அம்மாவை உட்கார வைத்து சமையல் குறிப்புக்களை எழுதி வாங்கிக்கொண்டாள். “இப்பவே கிளம்பனுமா... மதியம் சாப்பிட்டு கிளம்பலாமே....” மஞ்சு அஷ்வினிடம் கேட்க... “இருக்கட்டும் அத்தை இனி தான் அடிக்கடி வருவோமே.... அதோட இன்னைக்கு மதியம் தாத்தா பாட்டி வீட்டுக்கு வர்றதா சொல்லி இருக்கேன். நீங்களும் நேத்துல இருந்து ஓயாம வேலை பார்த்து இருக்கீங்க. இனியாவது கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க.”

அஷ்வின் தன் மாமியாரிடம் அக்கறையாகச் சொல்ல... அதைக் கேட்ட மாலதியின் முகம் கருத்தது.

அஷ்வினும் வினோதாவும் அறைக்குள் தங்கள் பொருட்களை எடுத்துக்கொண்டு இருந்த போது... அங்கே வந்த மஞ்சு சில வெள்ளி சாமான்களைக் கொடுக்க.... அஷ்வின் வேண்டாம் என்று மறுத்தான். பெரிதாக ஒன்றும் இல்லை.... விளக்கு தட்டு குங்கும சிமிழ் இது போலத்தான்.

“இதெல்லாம் நாங்க வாங்கலை... கல்யாணத்துக்கு வந்தது தான். சீர்ன்னு பெரிசா செய்யலைனாலும்.... எதோ எங்களால முடிஞ்சது. நீங்க மறுக்காம வாங்கிக்கணும்.” மஞ்சு சொல்ல இதற்கு மேல் மறுத்தால்.... அவர் வருத்தப்படுவார் என அஷ்வின் அமைதியாக இருக்க.... மஞ்சு அவற்றை வினோதாவின் பையில் வைத்துவிட்டு சென்றார்.

கிளம்பும் போது இரண்டு பெரிய ஸ்டீல் பாத்திரத்தில் மிக்ஸ்ஷரும் லட்டும் கொண்டு வந்து காரில் ஏற்றினர். அஷ்வினுக்கு அவன் அம்மா சொல்லிவிட்டது நியாபகம் இருந்தாலும்.... மறுத்தால் இவர்கள் மனம் வருத்தப்படும் என அமைதியாக இருந்துவிட்டான்.

தன் பிறந்த வீட்டை விட்டு வரும் சோகத்தில் வினோதா வழியெல்லாம் அழுதபடி வர.... அஷ்வின் அதைக் கூடக் கவனிக்காமல் எதோ யோசனையில் இருந்தவன், பிறகே அவளைக் கவனித்துவிட்டு ஓரமாக வண்டியை நிறுத்தினான்.

“ஹே.... வினு, எதுக்குடா இப்படி அழற..... பக்கத்தில தான இருக்கோம். அடிக்கடி வரலாம். இப்ப கண்ணைத் துடைச்சிக்கோ... போற வழியில ஆபீஸ் போயிட்டுப் போகலாம். ஒரு சின்ன வேலை இருக்கு.” என்றான்.

வினோதாவும் அழுகையை நிறுத்திவிட்டு முகத்தைச் சீர் படுத்த.... அஷ்வின் காரை எடுத்தான். வழியில் ஒரு இடத்தில் காரை நிறுத்திவிட்டு சென்று

எதோ வாங்கிக்கொண்டு வந்தான். அவன் தாத்தா பாட்டி வீட்டுக்குக் கொண்டு செல்ல எதாவது வாங்கி இருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்.

அலுவலகத்தில் சென்று காரை நிறுத்திய அஷ்வின் “நான் என் ஆபீஸ் போய்ப் பார்த்து பேசிட்டு வர எப்படியும் அரைமணிநேரம் ஆகும். நீயும் போய் உன் ப்ரண்ட்ஸ் பார்த்திட்டு வா....” என்றான். அவன் சொல்வது சரி என்று பட்டதால் வினோதாவும் காரில் இருந்து இறங்கினாள்.

“இப்பத்தான் கல்யாணம் முடிஞ்சு முதல் தடவை ஆபீஸ் வரோம். வெறுங்கையோடு போனா நல்லா இருக்காது.” என அஷ்வின் சொல்ல.... ஆமாம் நல்லாத்தான் இருக்காது. ஆனா இப்ப இனிப்புக்கு என்ன செய்வது என்று வினோதா யோசிக்கும் போதே.... காரின் டிக்கியை திறந்த அஷ்வின், தான் வாங்கி வந்த சின்னப் பைகளில் வினோதா வீட்டில் கொடுத்த லட்டுவை எடுத்து வைக்க.... அதைப் பார்த்து வினோதாவும் மிச்ஷரை எடுத்து ஒவ்வொரு கவரில் போட ஆரம்பித்தாள்.

என்ன இதுல இருந்து எடுத்துக் கொடுக்கிறான். அவங்க அம்மா எதுவும் சொல்ல மாட்டாங்களா... என யோசித்த போதும், கொஞ்சம் தானே என்று அவளே சமாதானமும் சொல்லிக்கொண்டாள். அவரவர் நண்பர்களுக்குக் கொடுக்கத் தேவையான அளவு எடுத்துக்கொண்டு இருவரும் தங்கள் அலுவலகம் நோக்கி சென்றனர். இருவரின் கையிலும் அடையாளை அட்டை இல்லாததால்.... தங்கள் நண்பர்களை வெளியே வரவழைத்து அவர்கள் முலம் உள்ளே சென்றனர். அலுவலகத்தில் இருவருக்கும் பலமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

அஷ்வின் சிறிது நேரம் தன் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தவன், தன் மேனேஜரை சென்று சந்தித்து விட்டு வந்தான். திரும்பி வரும் போது அவனோடு விக்னேஷும் வந்தான். அவர்கள் காரின் அருகே வந்த போது வினோதா இன்னும்

வந்திருக்கவில்லை.... அஷ்வின் அவளைச் செல்லில் அழைத்த பிறகே.... தன் நண்பர்கள் படை சூழ வந்தாள்.

அவர்கள் நண்பர்கள் அஷ்வினை பார்க்க விரும்பியதால்.... அழைத்துக்கொண்டு வந்தாள். “கல்யாணத்துக்கு அப்புறம் வினோ கொஞ்சம் வளர்ந்த மாதிரி இருக்கே....”அவளைப் பார்த்ததும் விக்னேஷ் கேலியில் இறங்க.... வினோதா அவனை முறைத்தாள்.

சிறிது நேரம் எல்லோரும் சேர்ந்து அரட்டை அடித்தனர். அடுத்த வாரத்தில் இருந்து வேலைக்கு வருவதாகச் சொல்லி நண்பர்களிடம் விடைபெற்று கிளம்பினர்.

அஷ்வின் நேராக அவன் தாத்தா பாட்டி வீட்டிற்குச் சென்றான். ஏற்கனவே அவர்கள் வருவது தெரியும் என்பதலால்.... இளையவர்கள் கூட வீட்டில் தான் இருந்தனர். அஷ்வின் வீட்டிற்கு மூத்த பேரப்பிள்ளை என்பதால் அவர்களை ஆலம் சுற்றி வரவேற்றனர்.

பெரிய ஹாலில் அஷ்வின் அவன் தம்பிகள் தங்கைகளோடு அமர்ந்து அரட்டை அடித்தபடி உணவருந்த.... வினோ அவள் சின்ன மாமியார்களோடு சேர்ந்து பரிமாறினாள். வினோ சாப்பிட்டுக்கொண்டிருந்த போது.... அஷ்வினும் அவன் பாட்டியும் எதோ தீவிரமாகப் பேசிக்கொண்டு இருந்தனர்.

சிறிது நேரம் சென்று அஷ்வினும் அவன் தம்பிகளும் சென்று காரில் இருந்த பக்ஷணங்களைக் கொண்டு வந்தனர். இதை அந்த வீட்டுக்கு அல்லவா கொண்டு செல்ல வேண்டும். இங்க ஏன்? வினோவுக்கு ஒன்றும் புரியவில்லை.... தன் மாமியாருக்கு தெரிந்தால் என்னவாகுமோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது. மற்றவர்கள் முன்பு எதையும் கேட்க முடியாமல் அமைதியாக இருந்தாள்.

மாலை வீட்டுக்கு கிளம்பும் போது.... அவளிடம் வந்த பாட்டி ஒரு பெரிய பையைக் கொடுத்து “இதுல

பக்ஷணம் வச்சிருக்கேன். உன்னோட ரூம்ல வச்சு நீயும் அஷ்வினும் சாப்பிடுங்க. உன் பாத்திரத்தை நான் பத்திரமா வச்சிருப்பேன். உனக்குத் தேவை படும் போது எடுத்துக்கோ....” என்றார். வினோதா புரிந்தும் புரியாமலும் தலையாட்டி வைத்தாள்.

காரில் செல்லும் போது அஷ்வின் எதுவும் பேசவில்லை அமைதியாக இருந்தான். வினோதாவாக அவனிடம் பேச்சை ஆரம்பித்தாள்.

“நீங்க பாட்டுக்கு சீர் வந்த பலகாரம் எல்லாம் இங்கயே கொடுத்துட்டு வந்துடீங்க. உங்க அம்மாகிட்ட என்ன சொல்றது?”

“அவங்க கிட்ட கொண்டு போய்க் கொடுத்தாலும் எல்லாருக்கும் பிரிச்சு தான் குடுக்கப் போறாங்க. அதை நாமே செஞ்சாச்சு. இதுல என்ன இருக்கு அஷ்வின் சாதாரணமாகச் சொல்ல....”

“அதுக்காக எல்லாத்தையுமா....” என்ற வினோதாவுக்கு அப்போது தான் புரிந்தது.

“உங்க அம்மா சொன்னாங்களா.... எங்க வீட்ல இருந்து எதுவும் கொண்டு வரக் கூடாதுன்னு.” என்றாள். அதற்கு அஷ்வின் பதில் சொல்லவில்லை அமைதியாக இருந்தான். அவன் மௌனமே அவளுக்கு வேண்டிய பதில் தந்தது.

“ஏன் எங்க வீட்ல இருந்து வாங்கிகிட்டா உங்க தரம் குறைஞ்சிடுமா.... இல்லன்னா உங்களுக்குக் குடுக்கிற அளவு எங்களுக்குத் தகுதி இல்லையா....” வினோதா ஆத்திரமாகக் கேட்க....

“அவங்க கோபமா இருக்காங்கன்னு உனக்குத் தெரியும். அவங்க கிட்ட போய் என்னைச் சண்டை போட சொல்றியா.... உங்க வீட்ல கொடுத்ததைக் கொண்டு போனா எங்க அம்மா சண்டை தான் போடுவாங்க. பிரச்சனை பெரிசாகும். அதோட அவங்க யாருக்கும் குடுக்கவும் மாட்டாங்க. அப்படியே வீணா போறதுக்கு, நாமே எல்லோருக்கும் குடுத்தாச்சுன்னு நினைச்சிக்கோ

வினு ப்ளீஸ் ....” அஷ்வின் கோபத்தில் ஆரம்பித்துக் கெஞ்சலில் முடிக்க....

வினோதா பதில் பேசாமல் அமைதியாக இருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் நிரம்பி வழிய.... அதைப் பார்த்து வருந்திய அஷ்வின் “கொஞ்ச நாள் போனா சரி ஆகிடும் வினு...” என்றான்.

இவர்கள் வீடு போய்ச் சேர இரவு எழு மணி ஆகி விட்டது. கீழே இருந்த விருந்தினர் அறையில் வழக்கம் போல் பெண்கள் அமர்ந்து அரட்டை அடித்துக்கொண்டு இருந்தனர். இவர்கள் வந்துவிட்டது தெரிந்தும் கூட ரங்கநாயகியும் ராதிகாவும் வெளியே வரவில்லை. வரதராஜன் தான் அவர்களோடு அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார். சிறிது நேரம் உட்கார்ந்திருந்த வினோதா அவர்கள் பையை எடுத்துக்கொண்டு மாடிக்கு சென்றாள். அஷ்வின் தானாக அவன் அம்மா இருந்த இடம் நோக்கி சென்றான்.

அவனைப்பார்ததும் எல்லோரும் வரவேற்பாகப் புன்னகைக்க... ரங்கநாயகி மட்டும் தன் மகனின் முகத்தைத் தீவிரமாக ஆராய்ந்தார். சிறிது நேரம் அவர்களோடு பேசிக்கொண்டு இருந்துவிட்டு அஷ்வின் மாடிக்கு வந்த போது... வினோதா கட்டிலில் படுத்திருந்தாள்.

“வினு வா சாப்ட்டுட்டு வந்து படுத்துக்கோ...” அஷ்வின் அழைக்க....

“நான் சமைச்சதை உங்க அம்மா சாப்பிடலையே.... அப்ப நான் மட்டும் உங்க அம்மா பண்ணதை சாப்பிடலாமா....” வினோதா குதர்க்கமாகக் கேட்க....

“ஹேய் நீ ஏன் பிரச்சனையைப் பெரிசாகிட்டே போற... இதை நீ விடவே மாட்டியா....” அஷ்வின் கோபப்பட...

வினோதா கட்டிலில் இருந்து எழுந்து கொண்டே “என்னை மட்டும் சொல்லுங்க. உங்க அம்மாவை ஒன்னும் சொல்லாதீங்க.” என்றாள்.

“அவங்க ஆரம்பத்தில இருந்தே அப்படித்தான இருக்காங்க. நீ வந்த முதல் நாள், அவங்க உன்னை உடனே பார்க்க வந்தாங்களா.... உனக்கு அப்ப தெரியலையா அவங்க கோபத்தைப் பத்தி. இப்ப தான் எதோ புதுசா நடக்கிற மாதிரி பேசுற....இன்னைக்குக் கோபப்படுறவ அன்னைக்கே கோபப்பட்டுப் போய் இருக்க வேண்டியது தான....”

“அவங்க கோபம் புரிஞ்சு அப்ப அமைதியா தான இருந்த.... இப்ப மட்டும் என்ன?” அஷ்வினும் கோபத்தில் வாயை விட.... வினோதா அதைப் பிடித்துக்கொண்டாள்.

“அப்ப நான் உங்க அம்மாவை பார்த்து பயந்து, உங்களை வேண்டாம்ன்னு போய்டுவேன்னு நினைச்சு தான், நீங்க என்னை இங்க கூடிட்டு வந்தீங்களா.....”
அவளின் அழுத்தம் திருத்தமான கேள்வியில் ஒரு நிமிடம் அஷ்வினே அரண்டு விட்டான். நாம எந்த அர்த்தத்தில சொன்னா..... இவ என்ன அர்த்தம் எடுக்கிறா....

“ஹே வினு.... ஏன் இப்படியெல்லாம் பேசுற... இங்க வா...” என்றவன், தானே அவள் அருகில் சென்று அவள் கைபிடித்து அழைத்து வந்து கட்டிலில் அமர்ந்தவன் “முதல்ல இருந்தே அவங்க கோபம் தெரிஞ்சது தானே டா.... அதைச் சொல்ல வந்தா.... நீ வேற எதோ புரிஞ்சிக்கிற....”

“நீ நம்ம கல்யாணத்துக்கு என்னைப் போர்ஸ் பண்ணியா என்ன? இல்லையே... நானா தான உன்னைத் தேடி வந்தேன். அப்புறம் நீ போனா போகட்டும்ன்னு நினைப்பேனா....” அஷ்வின் எடுத்து சொல்ல... வினோதா அப்போதைக்கு மலை இறங்கினாள்.

“அப்ப நீங்க என்னைப் பிடிச்சு தான கல்யாணம் பண்ணீங்க.” அவள் தன் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளக் கேட்க.... “ரொம்பப் பிடிச்சு...” என

அஷ்வின் அவளை முத்தமிட.... இருவரும் நல்ல மன நிலையிலேயே கீழே சென்றனர்.

அங்கே எல்லோரும் டைனிங் ஹாலில் இருந்தனர். அன்று இரவு உணவு சப்பாத்தி என்பதால்.... மங்களம் அவரே தேய்த்து போட நேரம் எடுப்பதைப் பார்த்த வினோதா தானே வழிய சென்று சப்பாத்தி சுட்டு எடுத்தாள். ரங்கநாயகி எல்லோருக்கும் பரிமாறினார்.

“அப்புறம் உன் மாமியார் வீடு எப்படி இருந்தது?” ராதிகா வேண்டும் என்றே வம்பிழுக்க....

“ரொம்ப நல்லா இருந்தது. இன்னும் ரெண்டு நாள் இருந்திட்டு வந்திருப்பேன். நாளைக்கு ஹனி மூன் போறோமா... அது தான் வந்துட்டேன்.” அஷ்வின் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு, தாங்கள் ஹனிமூன் செல்லும் செய்தியை அங்கிருப்பவர்களுக்குச் சேர்த்துவிட்டான். வினோதாவிற்கே இது புதுச் செய்தி. அதைக் கேட்டதும் அவள் முகம் மலர்ந்தது.

மற்றவர்களுக்குப் பரிமாறியதும் ரங்கநாயகி அவருக்குத் தட்டு வைத்துக்கொண்டு சாப்பிட அமர்ந்தவர் “உன் மாமானார் வீட்ல சீர் எதுவும் குடுத்தாங்களா இல்லை குடுக்கலையா....” என்றார் கிண்டலாக.

அஷ்வின் பதில் சொல்லாமல் சாப்பிடுவதில் கவனம் செலுத்த.... “குடுக்கலை போலிருக்கு... குடுத்த தான் சொல்லி இருப்பானே....” ராதிகா வேறு அவள் பங்குக்கு ஊதி விட.... உள்ளே சமையல் அறையில் இருந்து இவர்கள் பேசுவதைக் கேட்ட வினோதாவிற்குக் கொதித்தது.

“சீர் எதுவும் வேண்டாம்ன்னு சொன்னவங்களுக்கு இப்ப சீரை பாத்தி என்ன அக்கரை? அவங்க குடுத்தா உங்களுக்கு என்ன? குடுக்கலைனா உங்களுக்கு என்ன? நீங்க தான் வேண்டாம்ன்னு சொல்லிட்டீங்க இல்லை.... அப்புறம் அதைப் பத்தி எதுக்குப் பேசணும்?” ஏற்கனவே இதனால்

பிரச்சனையைச் சந்தித்த அஷ்வின் சூடாகப் பதில் கொடுக்க... ரங்கநாயகியின் முகம் கருத்தது.

எதாவது அவல் கிடைக்குமா என்று ஆர்வமாகக் காத்திருந்த ராதிகாவுக்குச் சொத்தென்று ஆனது. நல்லவேளை சீரை இங்க கொண்டு வரலை.... அதை வச்சே இன்னும் கிண்டல் பண்ணி இருப்பாங்க என நினைத்த வினோதா அவளுக்குத் தட்டில் சப்பாத்தி எடுத்துக்கொண்டு வந்து உட்கார்ந்து சாப்பிட்டாள். அன்று அருண் இல்லாததால்.... ராதிகாவை கொண்டு விட அஷ்வினே செல்ல வேண்டியது இருந்தது.

அஷ்வின் அவனுடன் வினோதாவையும் அழைத்தான். ராதிகா அழைக்காமல் எப்படிச் செல்வது என்று அவள் நினைக்க.... அஷ்வின் அழைத்த பின் தான் அழைக்கா விட்டால் நன்றாக இருக்காது என நினைத்த ராதிகா “நீயும் வா...” என்றாள். வழக்கம் போல் தன் கணவனுக்கும் இங்கிருந்தே உணவு எடுத்துக்கொண்டாள். அஷ்வின் காரை எடுக்க... அதில் எல்லோரும் சென்றனர்.

ராதிகாவின் வீடு அழகாகப் பளிச்சென்று இருந்தது. அவள் இவர்களுக்குக் குடிக்கப் பால் குடுத்தாள். அவளின் குழந்தைகள் வினோதாவை அழைத்துக்கொண்டு சென்று அவர்கள் விளையாட்டுச் சாமான்களைக் கடை பரப்ப..... வினோதாவும் அவர்களுடன் உட்கார்ந்து விளையாட ஆரம்பித்தாள்.

ஹாலில் இருந்த அஷ்வின் நேரத்தை பார்த்து விட்டு “என்ன இவ்வளவு நேரம் ஆச்சு... ஆனா உன் வீட்டுக்கார் இன்னும் வரலை.....எப்பவும் இப்படித்தான் லேட்டா வருவாரா....” எனக் கேட்க...

“முன்னாடி இல்லை... இப்ப தான் கொஞ்ச நாளா....” என ஆரம்பித்த ராதிகாவுக்குத் தன் கணவன் சொன்ன காரணம் நினைவு வர... “அவங்க ஆபீஸ்ல எதோ புதுசா கொண்டு வராங்களாம். அதனால

இவர் தான் பொறுப்பா நின்னு பார்க்க வேண்டியது இருக்காம்.” என்றாள்.

“இவருக்குக் கவர்மென்ட் ஆபீஸ்ல தான வேலை....” என அஷ்வின் குழம்பிய போதும், அப்போதைக்கு அவன் வேறு எதுவும் கேட்கவில்லை.
கேட்டிருக்கலாம் என்று தான் பின்னால் வருத்தப்படப் போவது அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

அஷ்வின் வினோதாவை தேடி சென்றவன், அவள் குழந்தைகளுடன் பொம்மையை வைத்துக்கொண்டு விளையாடுவதைப் பார்த்து கேலி செய்தவன், அவளை அழைத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

அவர்கள் அறைக்கு வந்ததும் “ஹப்பா எவ்வளவு பொம்மை அவங்க வீட்ல.... நாம கூட நம்ம குழந்தைக்கு இவ்வளவு பொம்மை வாங்கணும்.” வினோதா கை இரண்டையும் அகலாமாக விரித்துக் கண்களில் கனவுடன் சொல்ல.... அஷ்வின் பதில் சொல்லாமல் சிரித்தான்.

அவனைக் கட்டிலில் தள்ளிவிட்டு அவன் மேல் விழுந்த வினோதா “அஷ்வின் நமக்கு எப்ப பாப்பா வரும்?” என்றவள், ஆர்வமாக அவனின் முகம் பார்க்க...

“நீயே ஒரு குட்டி பாப்பா மாதிரி தான் இருக்க... அதுக்குள்ள உனக்கு ஒரு குட்டி பாப்பா வேணுமா.....” அஷ்வின் அவளைக் கேலி செய்தான்.

“ஒழுங்கா பதில் சொல்லுங்க அஷ்வின்....”

“இன்னும் கொஞ்ச நாள் போகட்டும். நாம கொஞ்ச நாள் என்ஜாய் பண்ணலாமே....” அஷ்வின் கண் சிமிட்டி சொல்ல...

“கொஞ்ச நாள்னா இன்னும் எவ்வளவு நாள்? கரெக்டா சொல்லுங்க.” வினோதா அதிலேயே நிற்க....

“ நீ உன்னோட M.Sc., பரிட்ச்சை முடிச்ச பிறகு.” என்றான் அஷ்வின். வினோதாவும் சரி என்றாள். இன்னும் பரீட்சைக்கு ஆறு மாதங்கள் இருந்தது. இருவரும் பேசியபடி மறுநாள் ஹனிமூன் செல்ல தேவையானவற்றை எடுத்து வைத்தனர்.

வினோதா மாலையில் நடந்த சண்டையைப் பற்றி மீண்டும் ஆரம்பிக்கவில்லை. அவள் அதைப் பற்றித் திரும்பப் பேசுவாளோ என அஷ்வின் பயந்து கொண்டே இருக்க.... வினோதா அதைப் பற்றி மறந்தே இருந்தாள்.

தன் மனைவி உள்ளத்தால் இன்னும் குழந்தை தான் என அஷ்வின் நினைத்தான். குழந்தைகள் தான் போட்ட சண்டையை மறந்துவிட்டு சிறிது நேரத்திலயே வந்து தானாகப் பேசும். அதே சமயம் குழந்தைகள் பிடிவாதம் பிடித்தால் எப்படி இருக்கும்? என்பதைப் பற்றி நினைக்க மறந்து விட்டான்.

பகுதி – 20

மறுநாள் மதியம் அஷ்வினுக்கும் வினோதாவிற்கும் ராகவன் வீட்டில் விருந்து. சுபத்ரா அவர்கள் வீட்டில் எல்லோரையுமே அழைத்திருந்தார். வினோதா அன்று தான் முதல் தடவை அவர்கள் வீட்டிற்குள் வருகிறாள். வீடு மிகப் பெரிதாக அழகாக இருந்தது. விருந்தும் அருமையாக இருந்தது.

விருந்து முடிந்து கிளம்பும் போது ராகவன் சுபத்ரா தம்பதியினர் ஒரு வெள்ளி தட்டில் அஷ்வினுக்கும் வினோதாவிற்கும் புது உடைகளை வைத்துக் கொடுத்தனர். அதோடு அஷ்வினுக்கு மோதிரமும், வினோதவிற்குப் பெரிய காதணியும் இருந்தது. வினோதவிற்குக் கொடுத்த சேலை இள ரோஜா நிறத்தில் ஆரஞ்சு வண்ண பார்டர் வைத்த பட்டுப்புடவை. மிக அழகாக இருந்தது. விலையும் அதிகம் இருக்கும்.

விருந்துக்கே இவ்வளவா என வினோதவிற்கு ஆச்சர்யமாக இருந்தது. இது போல் எல்லாம் செய்ய அவள் பிறந்த வீட்டினரால் முடியாது. இது தெரிந்ததால் தான் ரங்கநாயகி தங்கள் வீட்டு சீரை வேண்டாம் எனச் சொல்லிவிட்டார் என இப்போது அவளுக்குப் புரிந்தது.

அன்று தான் இருவரும் தேன்நிலவுக்குச் செல்வதால்.... வீட்டிற்கு வந்ததும், ரயில் நிலையம் கிளம்பத்தான் நேரம் சரியாக இருந்தது. அவர்கள் அறைக்குச் சென்று உடைகளை மாற்றிவிட்டு, தங்கள் பெட்டியோடு கீழே வந்தவர்கள், வீட்டினரிடம் சொல்லிக்கொண்டு உடனே கிளம்பியும் விட்டனர்.

மாலை ஆறு மணிக்கே ரயில் என்பதால்.... ரயில்நிலையத்தில் இருந்த உயர்தரச் சைவ உணவகத்தில் இரவுக்குத் தேவையான உணவும் வாங்கிக்கொண்டு ரயிலில் ஏறினர். அஷ்வினோடு தனியான பயணம் என்பதால் வினோதா மகிழ்ச்சியாக இருந்தாள். கையோடு கைகோர்த்து, அவனின் தோளில் சாய்ந்து பேசி சிரித்தபடி செல்ல... பயணம் இனிமையாகச் சென்றது.

மறுநாள் அதிகாலை குருவாயூரில் இறங்கியவர்கள். அங்கிருந்த விடுதியில் குளித்து உடை மாற்றிக்கொண்டு கோவிலுக்குச் சென்றனர். அஷ்வின் வேட்டியிலும் வினோதா புடவையும் கட்டிக்கொண்டு தம்பதிகளாகச் சென்று ஸ்வாமியை வணங்கினர். அதிகாலை என்பதால் அதிகக் கூட்டம் இல்லை. தரிசனம் முடிந்து வந்தும், காலை உணவை அருந்திவிட்டு.... திரும்ப விடுதிக்கு சென்று உடை மாற்றிக்கொண்டு அங்கிருந்து ஆலப்புழா படகு வீட்டிற்குச் சென்றனர்.

இவர்கள் சென்று படகில் ஏறிய போது... முன் மதிய நேரம். படகு செல்ல செல்ல... வினோதா பரவச நிலை தான். அவர்கள் மட்டுமே அந்தப் படகில் இருந்ததால்.... யாரும் பார்ப்பார்களோ என்ற கவலையின்றிச் சுதந்திரமாக இருந்தனர். அஷ்வின்

வினோதாவை நிற்க வைத்து வித விதமாகப் புகைப்படங்கள் எடுக்க.... பிறகு இருவரும் சேர்ந்து எடுத்துக்கொண்டனர். மதிய உணவை அங்கேயே அருந்திவிட்டு, மாலை கரை ஏறினர்.

இரவு கொச்சினில் தங்குவதால் அங்கு வந்து சேர எழு மணி ஆகிவிட்டது. இருவரும் குளித்து முடித்து அறைக்கே உணவு வரவழைத்து, கட்டிலில் அமர்ந்து ஒரே தட்டில் ஆளுக்கொரு ஸ்பூன் வைத்துக்கொண்டு பேசியபடி சாப்பிட்டனர்.

இவர்கள் தங்கி இருந்தது பத்தாவது மாடியில் என்பதால்... அங்கிருந்து பார்க்க கொச்சின் நகரம் மின்சார விளக்கில் ஒளிர்ந்தது. அதிகாலையில் இருந்து அலைந்ததால்... வினோதா படுக்கத் தயாராக..... இவ விட்டா இப்பவே தூங்கிடுவா போலிருக்கே என நினைத்த அஷ்வின் தன் மனைவியிடம் சென்றான்.

“ஹலோ மேடம் ! நீங்க வந்தது ஹனிமூனுக்கு நியாபகம் இருக்கா....”

“நான் எப்ப அஷ்வின் இல்லன்னு சொன்னேன்.”

“இல்லை உன்னைப் பார்த்தா அப்படித் தெரியலை.... இப்ப நீ என்ன பண்ணப்போற?”

“இதுக்ககூடவா தெரியலை..... தூங்கப்போறேன்.” வினோதா கட்டிலில் படுத்துக் கண் மூடியவள், பிறகு ஒரு கண்ணை மட்டும் திறந்து அஷ்வினை பார்க்க... அவன் அவளையே பார்த்துக்கொண்டு நின்றிருந்தான். அவன் முகத்தில் ஏமாற்றம் வெளிப்படையாகத் தெரிந்தது.

வினோதாவிற்குச் சிரிப்பு தாங்கவில்லை.... அவள் அஷ்வினை பார்த்து வா என்று கை நீட்ட.... அஷ்வின் அவளின் கையைப் பற்றியபடி கட்டிலில் அமர... வினோ எழுந்து அவன் தோளில் வாகாகச் சாய்ந்து கொண்டாள்.

“கோபமா அஷ்வின்....”

“ம்ம்... பின்ன இருக்காதா....நான் எவ்வளவு ஆசையா இருந்தேன். ஆனா நீ தூங்கிற.... ”

“காலையில இருந்து ஊர் சுத்தினோமா அதோட நல்ல சாப்பாடு வேற.... அது தான் தூக்கமா வருது.” வினோதா சோம்பல் முறிக்க....

“ஓ அப்படியா.. சரி நாளைக்கு ப்ளான் எல்லாம் கான்செல் ரூம்லயே இருக்கலாம்.” அஷ்வின் சொன்னதும், துள்ளி எழுந்த வினோதா “ஐயோ ப்ளீஸ் வேண்டாம். நான் வேற எங்கையும் போனதே இல்லை....” என்றாள் பாவமாக.

அவளைத் திரும்ப இழுத்து தன் மேல் போட்டுக்கொண்ட அஷ்வின் “அப்ப இன்னைக்கு நைட் நான் சொல்றபடி கேளு...” என்றவன், அதற்கு மேல் அவளைப் பேசவும் விடவில்லை.... உறங்கவும் விடவில்லை.

மறுநாள் தாமதமாக எழுந்து காலை உணவை முடித்ததும் அறையைக் காலி செய்துவிட்டு, வாடகை காரை எடுத்துக்கொண்டு மூனார் சென்றனர். செல்லும் வழியில் ஒரு நீர்வீழ்ச்சி இருந்ததால்... அங்கேயும் சிறிது நேரம் இருந்தனர்.

நீரில் நன்றாக ஆட்டம் போட்டு விட்டு.... மதிய உணவையும் அங்கே இருந்த உணவகத்தில் உண்டுவிட்டுக் காரில் சென்று ஏறியது தான் தெரியும் வினோதா நன்றாக அஷ்வின் மடியில் படுத்து உறங்க ஆரம்பித்தாள்.

மலை ஏற ஆரம்பித்ததும், சுற்றிலும் இருந்த இயற்கை எழில் கண்ணைப் பறிக்க... அஷ்வின் வினோதாவை எழுப்பினான். நன்றாக உறங்கியிருந்ததால்... அவன் எழுப்பியதும் எழுந்த வினோவுக்கு, சில்லென்ற காற்று முகத்தில் பட்டதும், உற்சாகம் தானாகவே வந்தது. அஷ்வினின் மீது சாய்ந்துகொண்டு ஒவ்வொன்றையும் பார்த்து ஆச்சர்யபட்டபடி வந்தாள்.

மூனாரில் மாலையே இருள் சூழ ஆரம்பிக்க.... அன்று வெளியில் எங்கும் செல்லாமல் அறையிலேயே இருந்தனர். வினோதா மதியம் நன்றாக உறங்கி இருந்ததால்.... அவளுக்கு உறக்கமே வரவில்லை... அஷ்வின் அன்று படுத்ததும் உறங்கி விட்டான். நடு இரவு வரை உறக்கம் வராமல் விழித்திருந்தவள், அதற்கு மேல் முடியாமல் அஷ்வினை எழுப்பினாள்.

அவள் அவனைத் தட்டி எழுப்பவில்லை.... முத்தத்தால் எழுப்பினாள். இப்படி மனைவி எழுப்பினால்.... அஷ்வினால் எழுந்துகொள்ளாமல் இருக்க முடியுமா.... அவன் எழுந்த நொடியே அவளை ஆக்ரமிக்க.... விடியும் வரை பொழுது இனிமையாகச் சென்றது.

மறுநாள் காலை எழுந்து இருவரும் ஊர் சுற்ற சென்றனர். பெரிதாகச் சுற்றி பார்க்க எல்லாம் ஒன்றும் இல்லை. சுற்றிலும் இயற்கை எழில் பொழியும் காட்சிகளும், குளிரான சீதோஷணமும் தான் அங்கே சிறப்பு. அதை அனுபவித்தபடி வலம் வந்தனர். எதாவது ஒரு இடத்தில் அமர்ந்து மணிகணக்கில் பேசிக்கொண்டு இருந்தனர்.

இருவருக்குமே சுவாரசியமாக மற்றவர் ரசிக்கும் படி பேச தெரிந்தது. சிறு வயதில் அவர்களுக்கு நியாபகம் இருந்த காலத்தில் இருந்து முக்கியமாக நடந்த நிகழ்வுகளை ஒருவருக்கு ஒருவர் பரிமாறிக்கொண்டனர். தேன்நிலவுக்கு வருவது வெறும் தாம்பத்திய சந்தோஷத்திற்கு மட்டும் இல்லை. தம்பதிகள் ஒருவரோடு ஒருவர் நன்றாகப் பேசி புரிந்துகொள்ளவும் தான்.

மூன்று நாட்கள் வேகமாகச் சென்றுவிட... நான்காம் நாள் மதியம் திரும்பக் கொச்சின் செல்வதாக இருந்தது. அன்று மட்டும் எங்கும் செல்லாமல் அறையிலேயே இருந்தனர். ஐந்து நாட்கள் இருவர் மட்டுமே தனி உலகில் இருந்துவிட்டு இப்போது மாமியார் வீட்டிற்குச் செல்வதை நினைத்தாலே வினோதாவுக்குக் கண்கள் கலங்க ஆரம்பித்தது.

இங்கயே எதாவது ஒரு வேலையை வாங்கிக்கொண்டு இருந்துவிட மாட்டோமா என்று நினைத்தாள். மாமியார் வீடு போல் பெரிய வீடு எல்லாம் வேண்டாம். சின்ன வீடு அதில் தன் கணவனோடு சந்தோஷமாக இருந்தால் போதும் என்று நினைத்தாள். அதை அவள் அஷ்வினிடமும் சொல்ல... அவனுக்கு அவளின் எண்ணம் புரியாமல் இல்லை.

“அங்கயும் போய் நாம சேர்ந்தே இருக்கலாம் சரியா.... அதோட மூன்னு மாசத்துக்கு ஒரு தடவை இப்படி எங்காவது போகலாம் வினு....” என அஷ்வின் அவளைச் சமாதானம் செய்தான். மதிய உணவு முடிந்ததும் பஸ்சில் கொச்சின் திரும்பினர். ரயில் நிலையம் செல்லாமல் விமான நிலையத்திற்கு வந்ததும் தான் வினோவுக்குச் சென்னைக்கு விமானத்தில் செல்லப்போவது தெரியும்.

முதல் விமானப்பயணம் கணவனுடன் செல்வது இனிமையாக இருந்தாலும், இதே ரயிலில் என்றால் இன்னும் அதிக நேரம் அஷ்வினோடு தனியாக இருந்திருக்கலாமே.... என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இவனை யாரு விமானத்தில் டிக்கெட் எடுக்கச் சொன்னது என மனதிற்குள் புலம்பியபடி இருந்தாள்.

இவர்கள் வீடு போய்ச் சேர்ந்த போது நேரம் இரவு பதினோரு மணியையும் தாண்டிவிட்டதால்.... வீட்டில் எல்லோரும் உறங்க சென்று இருந்தனர். இவர்களுக்குக் கதவை திறந்தி விட அருண் மட்டும் விழித்திருந்தான். வாங்கி வந்த பழங்களைப் பத்திரப்படுத்திவிட்டு உறங்க சென்றனர்.

மறுநாள் அஷ்வினுக்கு முன்பு எழுந்த வினோதா தங்கள் பெட்டியை திறந்து துணிகளைப் பிரித்து எடுத்தவள், கையால் துவைக்க வேண்டியவற்றைத் துவைத்து விட்டு, அறையைச் சுத்தம் செய்த பின் குளித்துவிட்டு வெளியே வந்த போது அஷ்வின் விழித்திருந்தான்.

அவள் எல்லா வேலைகளையும் முடித்து வைத்திருப்பதைப் பார்த்து “நீயே ஏன் எல்லாம் பண்ண? எழுப்ப வேண்டியது தான....இப்போ எனக்கு வேலையே இல்லை நான் என்ன பண்றது?” எனப் பொய்யாக வருந்தியவன், “விட்ட ஹனிமூன்னை தொடரலாம்.” என அவளை அணைக்க.... வினோதா திமிறி விலகப் பார்த்தும் முடியவில்லை.

திரும்பக் குளிக்க வைத்துவிட்டானே என்ற கடுப்பில் வினோதா முறைக்க... அஷ்வின் உல்லாசமாகச் சிரித்தான். வினோதா அவனைத் தலையணையால் அடிக்க... அவன் பதிலுக்கு அடிக்க என்று நிறைய நேரம் சென்றுவிட... வினோதா மீண்டும் குளித்துவிட்டு வந்தாள்.

இவள் குளியல் அறையில் இருந்து வந்ததும் அஷ்வின் சென்றான். அவன் வருவதற்குள் தயாரான வினோதா... அவன் வெளியே வருவதைப் பார்த்ததும் சலவை இயந்திரத்தில் போட வேண்டிய துணிகளை அள்ளிக்கொண்டு வேகமாக வெளியே செல்ல.... தன்னைப் பார்த்து தான் பயந்து ஓடுகிறாள் எனப் புரிந்து அஷ்வின் சிரித்தான்.

முகம் மலர்ந்து புன்னகையுடன் படி இறங்கியவளை பார்த்ததும் ரங்கநாயகியின் முகம் கடு கடுத்தது. நினைச்சதை சாத்தித்துவிட்டாளே பிறகு சந்தோஷத்திற்கு என்ன குறை? என மனதிற்குள் வினோதாவை திட்டிக்கொண்டு இருந்தார்.

இது தெரியாத வினோதா சலவை இயந்திரத்தில் துணியைப் போட்டுவிட்டு அஷ்வினுக்கும் அவளுக்கும் காபி கலந்தாள்.

“இது என்ன வீடா இல்ல ஹோட்டலா.... நேரத்துக்கு வந்து சாப்பிட மட்டும் செஞ்சா... எல்லோருக்கும் வேலை பார்க்க நான் என்ன வேலைக்காரியா?” ரங்கநாயகி வினோதாவை பார்த்து நேரடியாகவே கேட்க... வினோதாவிற்குப் பயத்தில் வியர்த்து கொட்டவே ஆரம்பித்து விட்டது.

“நான் மத்தவங்களைப் போல வெறுங்கையை வீசிட்டு வரலை.... கல்யாணம் ஆகும் போது... எங்க அப்பா எனக்கு வீட்ல வைக்க இடம் இல்லாத அளவு சீர் செஞ்சார்... எதுக்கு? பொண்ணு கஷ்ட்டப்படக் கூடாதுன்னு. ஆனா என் தலையெழுத்து யார் யாருக்கோ நான் வடிச்சு கொட்ட வேண்டியதா இருக்கு...” என அவர் மேலும் புலம்ப... வினோவுக்குக் காபி ஆற்றிக்கொண்டிருந்த கைகள் நடுங்கியது. அதோடு கண்கள் வேறு கண்ணீரை கொட்ட தயாராக இருந்தது.

நல்லவேளை ரங்கநாயகி அதோடு அங்கிருந்து சென்றுவிட்டார். வினோதா திரும்பி அடுப்பை பார்க்க... அங்கே வாணலியில் எண்ணெய் காய்ந்து கொண்டிருந்தது. மங்களம் கீழே உட்கார்ந்து பூரிக்குத் தேய்த்துக்கொண்டு இருந்தார்.

வினோதா கலந்த காபியை ஓரமாக வைத்துவிட்டுக் கண்களைத் துடைத்துக்கொண்டு மங்களம் தேய்த்து வைத்திருந்ததை எடுத்து பூரி போட ஆரம்பித்தாள்.

அபோது கீழே வந்த அஷ்வின் ஹாலில் இருந்தே “வினு காபி...” எனக் குரல் கொடுக்க.... தான் இப்போது சென்றால்... தன் முகத்தை வைத்தே எதோ நடந்திருக்கிறது எனக் கண்டுபிடித்துக் கேள்வி கேட்பான் என்பதால்... இது வேற எதுக்கு வம்பு? என நினைத்தவள், மங்களத்திடம் காபி கொடுத்து அனுப்பினாள்.

மங்களம் காபி கொண்டு வருவதைப் பார்த்த அஷ்வின் சமையல் அறையை எட்டி பார்க்க... அங்கே வினோதா பூரி போட்டு எடுப்பதைப் பார்த்ததும் அமைதியாகச் சென்றவன், பேப்பர் படித்துக்கொண்டே காபி குடித்தான்.

சிறிது நேரத்தில் எல்லோரும் சாப்பிட அமர்ந்தனர். ரங்கநாயகி எல்லோருக்கும் பரிமாறிவிட்டு அவரும் உட்கார்ந்து சாப்பிட்டார். எல்லோரும் சாப்பிட்டதும்

வினோதா பேருக்கு ரெண்டு பூரிகளை எடுத்துக்கொண்டு வந்து சாப்பிட அமர்ந்தாள்.

ஹாலில் இருந்த அஷ்வின் வினோதாவை திரும்பி பார்க்க.... அவள் குனிந்த தலை நிமிராமல் சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள். அவள் முகத்தையும் தட்டையும் பார்த்தவனுக்கு என்ன தோன்றியதோ.... எழுந்து சென்று வினோதாவின் அருகே அமர்ந்து பேப்பர் படித்தான்.
அவள் இரண்டு பூரியோடு எழுந்துகொள்வதைப் பார்த்ததும் “எங்க போற நீ? உட்காரு...” என்றவன், அவள் தட்டில் மேலும் மூன்று பூரியை வைத்து “ஒழுங்கா சாப்பிடு...” என மிரட்ட... அவளும் உட்கார்ந்து சாப்பிட்டாள்.

அவள் சாப்பிடுவதை வைத்தே அவள் நல்ல பசியில் இருக்கிறாள் என அவனுக்குப் புரிந்தது. இவ்வளவு பசியை வைத்துக்கொண்டு ஏன் சாப்பிடாமல் சென்றாள்? என்று தான் புரியவில்லை... புது இடம் என்பதால் சாப்பிட கூச்சமாக இருக்கும் என நினைத்து இனி அவளோடு சேர்ந்து சாப்பிட வேண்டும் என நினைத்துக்கொண்டான்.
இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ரங்கநாயகிக்கு உள்ளுக்குள் மேலும் கொந்தளித்தது.

அன்று அதோடு முடியவில்லை.... காலையில் ரங்கநாயகி பேசியதை வைத்து, மதிய உணவுக்கு என்ன சமைக்கட்டும் என வினோதா அவளே சென்று ரங்கநாயகியிடம் கேட்க.... அவர் அவளைச் சமைக்கவெல்லாம் சொல்லவில்லை... மாறாகக் காய்கறிகளை நறுக்கி வைக்கச் சொன்னவர், அவர் வேலை செய்யும் போது புளியை கரை, தேங்காய்யை அரை என எடுபிடி வேலை மட்டும் வாங்கிக்கொண்டார்.

மதியம் சாப்பிட்டதும் வினோதா மாடிக்கு சென்றுவிட்டாள். அஷ்வின் மட்டும் கீழே இருந்தவன், மறுநாளில் இருந்து இருவரும் வேலைக்குப் போகப் போவதாகச் சொன்னான்.

வரதராஜன் அப்படியா என்பது போல் கேட்டுக்கொண்டார்.

“உன் பொண்டாட்டிக்கு என்ன சம்பளம்?” ரங்கநாயகி தெரியாதது போல் அஷ்வினிடம் கேட்க....

“என்ன இருபது வாங்குவா....” என்றான்.

“இதுக்கு அவ வேலைக்குப் போகனுமா... பேசாம அவளை வீட்ல இருக்கச் சொல்லு....” என்றார் ரங்கநாயகி அலட்சியமாக.

“அம்மா, பணத்துக்காக இல்லை... அவ நாள் முழுக்க வீட்ல இருந்து என்ன செய்வா? நீங்க சமையல் காலையிலேயே முடிச்சிடுவீங்க. ராதிகாவுக்கே பொழுது போகமா தான் நம்ம வீட்ல வந்து இருக்கா.... இதுல வினுவும் வீட்ல இருந்தா அவளுக்குப் போர் அடிக்கும்.”

“வேலைக்குப் போனா அவளுக்கு நல்ல அனுபவம் கிடைக்கும். அவ மேல் படிப்பு முடிச்சதும், அவளுக்கு இன்னும் நல்ல சம்பளத்தில வேலை கிடைக்கும். அதனால அவ போகட்டும்மா... எப்ப அவளுக்கு வேலைக்குப் போகக் கஷ்ட்டமா இருக்கோ... அப்ப அவ போகமா இருந்துகட்டும்.” என்றான் அஷ்வின். அதற்கு மேல் மறுத்து பேச முடியாமல் ரங்கநாயகி அமைதியாக இருந்தார்.

வினோதாவிற்கு வேலைக்குச் செல்வதில் மிகவும் விருப்பம் என்பது அவனுக்குத் தெரியும். அதனால் தான் எதோ சொல்லி சமாளித்து வைத்தான். அதோடு ராதிகா வேறு தினமும் இங்கே வருவாள், இதில் வினோதாவும் வீட்டில் இருந்தால்... இருவருக்குள்ளும் தேவையில்லாத பிரச்சனை தான் வரும் என்பதும் இன்னொரு காரணம்.

அறையில் போர் அடித்ததால் அஷ்வினை தேடி வந்த வினோதா இவர்கள் பேசுவதை மாடிப்படி வளைவில் நின்று கேட்டாள். ஏற்கனவே காலையில் ரங்கநாயகி பேசியதில் எரிச்சலில் இருந்தவளுக்கு

இன்னும் இதை வேறு கேட்டதும், எரிகிற தீயில் எண்ணெய் விட்டது போல் ஆனது. வேலைக்குப் போறதும் போகாததும் என்னோட இஷ்ட்டம், இதுல தலையிட இவங்க யார்? என்ற எண்ணம் அவளுக்கு. அஷ்வின் அறைக்கு வந்ததும் பிடிபிடியென்று பிடித்துக்கொண்டாள்.

“நான் என்ன உங்க வீட்டு அடிமையா? நீங்க நில்லுன்னா நிக்கவும் உட்கருன்னா உட்காரவும். வேலைக்குப் போறது என்னோட இஷ்ட்டம் அதுல எப்படி உங்க அம்மா தலையிடலாம்.” வினோதா கேட்டதில் ஒன்றும் தப்பில்லை... ஆனால் அவள் கேட்ட விதம் அஷ்வினின் கோபத்தைத் தூண்டியது.

“எங்க அம்மா தலையிடாம யார் தலையிடுவா.... அவங்க என்ன நீ வேலைக்கே போகக் கூடாதுன்னு சொல்லிட்டாங்களா... இல்லையே. நான் சொன்னதும் கேட்டுகிட்டாங்க தான... வீட்ல பெரியவங்கன்னா அப்படித்தான் எதாவது சொல்வாங்க.”

“வேலைக்குன்னு அலையனுமா..... வீட்லையே ரெஸ்டா இருக்கட்டும்ன்னு நினைச்சிருக்கலாம்.” அஷ்வின் தன் தாயிக்கு பரிந்து பேச....

“ஓ... உங்க அம்மா தான... என்னைப் பத்தி கவலைப்பட்டுட்டு தான் முதல் வேலை பார்ப்பாங்க.” என்ற வினோதாவின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட.... அதைப் பார்த்ததும் அஷ்வினுக்கு உருகி விட்டது.

“ஹே... குட்டிமா சின்ன விஷயத்துக்குப் போய் அழுவாங்களா....” அஷ்வின் அவளின் கண்ணீரை துடைக்க... வினோதா காலையில் ரங்கநாயகி திட்டியதை சொல்லி மேலும் அழுதாள்.

“நான் என்ன உங்க வீட்ல வருஷ கணக்காவா இருக்கேன். இங்க எப்படி ஏதுன்னு தெரிஞ்சிக்க நாள் ஆகாதா.... அதுக்குள்ளே உங்க அம்மா திட்றாங்க. உங்க அம்மா என்னை மருமகளாவே நினைக்கலை.... இன்னொரு மங்களம்மா தான்

நினைக்கிறாங்க. அதாவது வேலைக்காரியா....” வினோதா அழுத்தம் திருத்தமாகச் சொல்ல.... அதைக் கேட்ட அஷ்வினுக்குத் தான் ஒருமாதிரி ஆகிவிட்டது.

ஓ... இதனால தான் காலையில ஒருமாதிரி இருந்தாளா.... என நினைத்தவன் “வினு, அம்மாவுக்கு உன் மேல இல்லை என் மேல தான் கோபம். அவங்க பேச்சை கேட்காம கல்யாணம் பண்ணிகிட்டேன்னு.... ஆனா அவங்க கோபத்தை என்கிட்டே காட்ட முடியாம உன்கிட்ட காட்றாங்க. இன்னும் அவங்களால நம்ம கல்யாணத்தை ஏத்துக்க முடியலை... கொஞ்ச நாள் போனா சரி ஆகிடும். ப்ளீஸ் அதுவரை கொஞ்சம் பொறுமையா இரு....” என அஷ்வின் சொன்னதற்கு,

“வேற வழி....” எனக் கோபமாகச் சொன்னவள், கட்டிலில் அஷ்வினுக்கு முதுகு காட்டி படுத்துக்கொண்டாள். அதன் பிறகு இருவரும் பேசவில்லை.... சிறிது நேரத்தில் உறங்கியும் விட்டனர்.

மாலை எழுந்த அஷ்வின், ராகவன் வீட்டிற்குச் சென்று தாங்கள் வாங்கி வந்த பழங்களைக் கொடுத்துவிட்டு வருவோமா என அழைத்ததும், வினோதா உடனே சரி என்று கிளம்பிவிட்டாள். அவள் மதியம் நடந்த சண்டையைத் தொடரவில்லை... அதை அதோடு விட்டுவிட்டாள். அந்தக் குணம் உண்மையிலேயே அஷ்வினுக்கு அவளிடத்தில் மிகவும் பிடித்தது. முன்பு நடந்ததைப் பிடித்துக்கொண்டு தொங்காமல் அதை அதோடு விட்டுவிடுவது.

மறுநாளில் இருந்து எல்லாம் சுமுகமாகவே சென்றது. வினோதா அதிகாலையிலேயே எழுந்து குளித்துவிட்டு கீழே சென்று விடுவாள். அங்கே ரங்கநாயகிக்கு வேலையில் உதவிவிட்டு, திரும்பத் தங்கள் அறைக்கு வந்து அலுவலகத்திற்குச் செல்ல கிளம்புபவள், அஷ்வினோடு கீழே சென்று சாப்பிட்டு விட்டு அவனுடனே அலுவலகம்

செல்வாள். திரும்ப வரும் போது மட்டும் வினோதா அலுவலகக் காரில் மாலையே வந்துவிடுவாள்... அஷ்வின் அவன் வேலையைப் பொறுத்து ஒவ்வொரு நாள் ஒவ்வொரு நேரத்திற்கு வருவான்.

அலுவலக நாட்களில் அவர்கள் வீட்டில் காலையிலும் சாப்பாடு தான். அஷ்வினுக்கும் அருணுக்கு மட்டும் தான் தோசை வார்ப்பது. வரதராஜன் அலுவலகத்திற்கு உணவு கொண்டு செல்வார். அனால் அஷ்வினும் அருணும் கொண்டு செல்ல மாட்டார்கள். வெளியே சாப்பிடுவார்கள்.

ஏன் கொண்டு செல்வது இல்லை என்று கேட்டால்... உணவு டப்பாவை தூக்கிக்கொண்டு கொண்டு போகப் பிடிக்காது என அஷ்வின் காரணம் சொல்ல... மறுநாளில் இருந்து அவனுக்கும் சேர்த்து வினோதாவே மதிய உணவும் கொண்டு சென்றாள்.

காலையில் அவனுக்குத் தோசை வார்த்துவிட்டு அவசரமாக அவள் சாப்பிடுவதைப் பார்த்து விட்டு, அஷ்வின் அவனுக்கும் இனி காலையில் சாதமே வைக்கச் சொல்ல....

“அம்மா செய்யும் போது எல்லாம் தெரியலை.... ஒரு நாள் அட்ஜஸ்ட் பண்ணுன்னா கூட முடியாது. காலையில சாதமான்னு கத்துவ.... இன்னைக்குப் பொண்டாட்டி வேலை செய்யும் போது மட்டும் கஷ்ட்டமா இருக்கா....” என ரங்கநாயகி அஷ்வினை பார்த்து முறைக்க....

“அம்மா, அவளுக்கு உங்களை மாதிரி நல்லாவே தோசை வார்க்க வரலைம்மா அதனால தான்.” அஷ்வின் சமாளிக்க... இப்போது வினோதா அவனை முறைத்தாள்.

ரங்கநாயகி வினோதாவை பற்றி அஷ்வினிடம் பகலில் குறை சொல்வார் என்றால்... வினோதா இரவில் அவர்கள் அறையில் வைத்து குமுருவாள். ஆக மொத்தம் அம்மா மனைவி இருவரின் கோபத்தையும் அஷ்வினே தாங்கும் படி ஆனது. அவன் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு....

என்பது தெரியாமல் மாமியாரும் மருமகளும் அவனை ஆட்டி வைத்துக்கொண்டு இருந்தனர்.

பகுதி – 21

அஷ்வினுக்கும் வினோதாவுக்கும் திருமணம் முடிந்து ஆறு மாதங்கள் சென்றிருக்கும் ரங்கநாயகி அருணின் திருமணப் பேச்சை ஆரம்பித்தார்.

“அம்மா எனக்கு இருபத்தஞ்சு வயசு தான் ஆகுது. அதுக்குள்ள எதுக்கு எனக்குக் கல்யாணம்?” அருண் ஆட்சேபிக்க....
“ம்ம்... இப்படித்தான் உங்க அண்ணனும் சொல்லிட்டு இருந்தான். கடைசியில என்ன ஆச்சு? நான் மட்டும் அவனுக்கு நேரத்தோட பொண்ணு பார்த்திருந்தா.... அவன் கல்யாணமும் நல்ல படியா நடந்திருக்கும். உன் விஷயத்தில நான் திரும்ப அந்தத் தப்பை செய்ய விரும்பலை...”

ரங்கநாயகியின் பேச்சை கேட்ட வினோதாவுக்குக் கோபமாக வந்தது. இவங்க பையனுக்குக் கல்யாணம் பண்றதுன்னா பண்ண வேண்டியது தானே... அதுக்கு எதுக்கு ஒரு குத்தல் பேச்சு என்ற கடுப்பில் இருந்தாள்.

ரங்கநாயகிக்கு தன் தம்பி ராகவனின் மகள் சுஷ்மிதாவை அருணுக்குச் செய்ய மிகவும் விருப்பம். ஆனால் அதைப் பற்றி அவர் வெளிப்படையாகப் பேசியது இல்லை. இப்போது தன் தம்பியிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க.... இரண்டு தினங்கள் சென்று தன் சகோதரியிடம் வந்த ராகவன் “சுஷ்மிதா அருணை நான் அப்படி நினைக்கவே இல்லை.... எனக்கு வெளிய மாப்பிள்ளை பாருங்கன்னு சொல்றா...” என்ற போது ரங்கநாயகியால் அந்த ஏமாற்றத்தை தாங்கவே முடியவில்லை.

அவருக்குச் சுஷ்மிதா அப்படிச் சொல்லி இருப்பாள் என்ற நம்பிக்கை இல்லை.... அஷ்வின் வினோதாவை திருமணம் செய்து கொண்டதால்.... ராகவனுக்குத் தன் மகளை இங்கே செய்ய விருப்பம்

இல்லை. அதனால் தான் தன் மகளைக் காரணம் சொல்லி, இந்தத் திருமணத்தை மறுக்கிறார் என்று அவராகவே நினைத்து, இன்னும் வினோதாவின் மீது வன்மம் வளர்த்துக்கொண்டார்.

அருணுக்கு சுஷ்மிதாவை திருமணம் செய்ய மிகவும் விருப்பம். அதனால் அவளைத் தனியாகச் சந்தித்துப் பேசினான்.
“ஏன் ஷுஷ்மி உனக்கு என்னைப் பிடிக்கலையா?”

“பிடிக்குது பிடிக்கலைன்னு இல்லை அருண். கல்யாணம் ஆகி வந்த நாள்ல இருந்து எங்க அம்மா சுதந்திரமா எந்த முடிவும் எடுத்தது இல்லை... எங்க அப்பா எதுனாலும் அவங்க அக்கா பேச்சை தான் கேட்பார். இதுல நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணா... எங்க அம்மாக்குன்னு ஒரு முக்கியத்துவமே இல்லாம போய்டும். எனக்கு அது பிடிக்கலை....”

“எப்பவும் எங்க அப்பா அக்கா அக்கான்னு இருக்கிறது எனக்குச் சுத்தமா பிடிக்கலை... அத்தை எங்க அம்மாவை டாமினேட் பண்ணுவாங்க. இதுல நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணா கேட்கவே வேண்டாம். அதனால ப்ளீஸ் இதை இதோட விட்டுடுங்க.”

“எனக்கு உங்களை ரொம்பப் பிடிக்கும். ஆனா ரங்கநாயகி அத்தை பையனா பிடிக்காது.”
சுஷ்மிதா சொன்னதைக் கேட்ட அருண் திகைத்து போய் நின்று விட்டான். அவள் மனதில் தன் அம்மா மீது இவ்வளவு ஆதங்கம் இருக்கும் என அவன் நினைக்கவே இல்லை. இப்படி ஒரு எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு இவள் எப்படித் தன் அம்மாவிடம் சிரித்துப் பேசுகிறாள்? என அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது.

இப்போது அருணுக்கு தெளிவாகப் புரிந்துவிட்டது. தானும் ஷுஸ்மிதாவும் திருமணம் செய்து கொண்டால்... சந்தோஷமாகவே வாழ முடியாது

என்று. அதனால் தன் அம்மாவிடம் தனக்கு வேறு பெண் பார்க்க சொன்னான்.

ரங்கநாயகியும் அருணுக்கு வெளியில் பெண் தேடினார். அவனுக்கு நிறைய இடங்களில் இருந்து வரன்கள் வந்தது. தினமும் அவரும் ராதிகாவும் உட்கார்ந்து அலசி ஆராய்வார்கள். இப்போது முன்பு போல் சுபத்ரா அவர்கள் வீட்டிற்குத் தினமும் வருவது இல்லை. ஷுச்மிதாவை அருணுக்கு தரவில்லை என்ற கோபத்தில் ரங்கநாயகி அவரிடம் முகம் கொடுத்து பேசாததே காரணம்.

ராகவனுக்குக் கூட இதனால் தன் சகோதரியின் மீது வருத்தம் தான். தங்கள் மகள் வேண்டாம் என்று சொல்லும் போது... தாங்கள் என்ன செய்ய முடியும்? விருப்பம் இல்லாதவளை வற்புறுத்தி திருமணம் செய்து வைக்க முடியுமா... என அவர் நினைத்தார்.

மாலையில் வினோதா அலுவலகத்தில் இருந்து வந்து வீட்டு வேலைகள் செய்யும் போது தான் வேண்டுமென்றே ரங்கநாயகியும் ராதிகாவும் அருணின் திருமணப் பேச்சை ஆரம்பிப்பார்கள்.

பெண்ணின் அழகு, படிப்பு, குடும்பம், முக்கியமாக அவர்கள் வீட்டில் கொடுக்கும் சீர் என்று அதைப் பற்றியே பேச்சு இருக்கும். வினோதாவின் காதில் விழ வேண்டும் என்று ஹாலில் அமர்ந்து தான் பேசுவார்கள்.

அன்றும் அது போல் வினோதா அலுவலகத்தில் இருந்து வந்ததும், பூஜை சாமான்களைத் தேய்த்து கழுவியவள், பூஜை அறையில் உட்கார்ந்து விளக்குகளுக்கு மஞ்சள் குங்குமம் வைக்கும் போது... வேண்டுமென்றே ராதிகா ரங்கநாயகியிடம் அருணின் திருமணப் பேச்சை ஆரம்பித்தாள்.

“அம்மா, இந்த இடம் மட்டும் அருணுக்கு அமைஞ்சதுன்னு வைங்க... ஆயுசுக்கும் அவன் ராஜா மாதிரி இருப்பான். காவ்யா அவங்க வீட்டுக்கு ஒரே பொண்ணு. ஏகப்பட்ட சொத்து, அடையார்ல அவங்க இருக்கிற வீடே பல கோடிகள் போகும். ஆளும் நல்ல

உயரமா அருணுக்கு ஏத்த மாதிரி இருக்கா....” என வரிசையாக அவள் அடுக்க... கேட்ட ரங்கநாயகியின் முகத்தில் அவ்வளவு பூரிப்பு.

இதெல்லாம் காதில் விழுந்தும் விழாதது போல் இருந்த வினோதா... வாசலில் இருந்த மா கோலத்தைத் துணி கொண்டு துடைத்து விட்டுப் புதிதாக வரைய.... அதோடு விடாமல் ராதிகா மேலும் வம்பிழுத்தாள்.

“அருணை விட நம்ம அஷ்வின் தான் படிப்பு அழகு எல்லாத்துலையும் உசத்தி. ஆனா அவனுக்கு இப்படி அமையலையே...அது தான் எனக்கு வருத்தம்.” ராதிகா பொய்யாக வருந்த.... அதைக் கேட்ட வினோதா கட்டுபடுத்த முடியாமல் வாயை விட்டாள்.

“பார்த்து அக்கா, இப்படித்தான் உங்க முதல் தம்பிக்கும் வரன் பார்த்தீங்க கடைசியல என்ன ஆச்சு? எதுக்கும் இந்த வரனை பத்தி நல்லா விசாரீச்சுகோங்க... முன்ன மாதிரி ஆகிடப்போகுது.” என வினோதாவும் போலியாக அனுதாபப்பட.... அதைக் கேட்ட ராதிகா பொங்கி விட்டாள்.

“ஏன் ஐஷ்வர்யா ஒருத்தி தான் பொண்ணா.... என் தம்பிக்கு அதை விட நல்ல வரனே வந்திருக்கும். அதுக்குள்ள தான் அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிகிறேன்னு சொல்லிட்டான். நீ என்ன மயக்கு மயக்கினியோ யாருக்கு தெரியும்.”

ராதிகா சொன்னதைக் கேட்டு வினோதாவின் முகம் கருக்க... மேலும் இங்கு நின்றால் எதாவது பேசிவிடுவோமோ என்ற அச்சத்தில்... அங்கிருந்து அவளது அறைக்கு வேகமாகச் சென்றாள். ஆமாம் இவங்க தம்பி ஒன்னும் தெரியாத பச்சை புள்ளை... அவரை மயகிட்டாலும் என உள்ளுக்குள் குமுறிக்கொண்டே சென்றாள்.

ரங்கநாயகிக்கு வினோதா பேசியது சுத்தமாகப் பிடிக்கவில்லை. அஷ்வின் வந்ததும் அவனைப் பிடித்துக் கொண்டார்.

“ராதிகா அருணுக்கு வந்த வரன் பத்தி பேசினா... உன் பொண்டாட்டிக்கு எதுக்குக் கோபம் வருது? அவ சாதாரணமா தான் சொன்னா.... அவளுக்குத் தன் தம்பிக்கு இப்படி அமையளையேன்னு வருத்தம். அந்த ஆதங்கத்தில எதோ சொன்னா. அதுவும் நேரா ஒன்னும் சொல்லலையே.... அதுக்குப் போய் உன் பொண்டாட்டி என்னனமோ பேசிட்டு போறா....”

“நாங்க இந்த வரனை பத்தி நல்லா விசரிக்கனுமாம். இல்லைன்னா இவளும் ஐஸ்வர்யா மாதிரி ஓடிப்போய்ட போறான்னு சொல்றா.... உன் பொண்டாட்டி. அப்படித்தான் நடக்கணும்ன்னு நினைக்கிறா போல...”

ரங்கநாயகி முடித்ததும் அடுத்து ராதிகா ஆரம்பித்தாள். “அம்மா, அவளுக்குப் பொறாமை மா.... அதனால தான் இப்படிப் பேசுறா..” என்றாள்.

அஷ்வினுக்கு வினோதா மீது தான் கோபம். இவர்களிடம் எதற்கு வாய் கொடுக்கிறாள் என்று. அவர்கள் அறைக்கு வந்ததும், அஷ்வின் அதை வினோதாவிடம் சொன்ன போது... இருவருக்கும் இடையல் சண்டை வந்தது.

“அதுக்குள்ள உங்க அம்மாவும் அக்காவும் மூட்டி கொடுத்துட்டாங்களா.... ஏன் நான் சொன்னது மட்டும் தான் சொன்னாங்களா? அவங்க சொன்னதையும் சொல்லி இருக்க வேண்டியது தான....” வினோதா சத்தமாகப் பேச....

“எதுக்கு இப்படிக் கத்துற?... நான் பக்கத்தில தான இருக்கேன். அவங்க பேசினதையும் தான் சொன்னாங்க.”

“நானும் இந்த ஆறு மாசமா பார்கிறேன். உங்க அம்மாவும் அக்காவும் கொஞ்சம் கூட மாறலை.... எப்பவும் குத்தி காட்டி பேசுறாங்க. அன்னைக்கு இப்படித்தான் உங்க அக்கா சொல்றாங்க, நான் இந்த வீட்ல இருக்கிற வசதிக்காகத் தான் இங்க இருக்கேனாம். இல்லைன்னா எப்பவோ உங்களை

அழைச்சிட்டுத் தனிக் குடித்தனம் போயிருப்பேனாம்.”

“ஜாடையா சொன்னங்க தான், நான் எதாவது உன்கிட்ட வந்து சொன்னேனா.... இல்லையே.... இன்னைக்கு உங்க பேர் சொல்லி, எதோ என்னால தான் உங்க வாழ்க்கை போச்சுன்னு பேசினா கோபம் வராதா.... நானும் எவ்வளவு பொறுத்து போறது?”

“ஆபீஸ் போயிட்டு வந்து வீட்ல வேலையும் பார்க்கிறேன். இதுல இங்க வந்து சும்மா உட்கார்ந்து சாப்டிட்டு, பார்சலும் எடுத்திட்டு போற உங்க அக்கா என்னைக் குறை சொல்றாங்க...”

“இதையெல்லாம் இனியும் என்னால கேட்டுட்டு இருக்க முடியாது. பேசாம வாங்க நாம தனிக்குடித்தனம் போகலாம்.” என்றாள் வினோதா எளிதாக.

அவள் சொன்னதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அஷ்வினுக்கு, அவள் கடைசியில் சொன்ன தனிக்குடித்தனம் போவோம் என்ற வார்த்தையைக் கேட்டதும், கோபம் வந்துவிட்டது.

“தனிக் குடித்தனம் போகணும்னு நினைச்சிருந்தா நம்ம கல்யாணம் ஆனதும் போய் இருக்க மாட்டேனா... குடும்பத்தில இருந்து பிரிஞ்சு போறதுக்கா வினு நாம கல்யாணம் பண்ணிகிட்டோம். அப்படியே நாம தனிக்குடித்தனம் போனாலும், என்னை இந்தக் குடும்பத்தில இருந்து பிரிச்சு கூடிட்டு போயிட்டேன்னு, உனக்குத் தான் கெட்ட பேர் வரும். இது உனக்குத் தேவையா...”

அஷ்வின் பொறுமையாக எடுத்து சொல்லியும் வினோதா அதைக் கேட்கும் நிலையில் இல்லை. “இப்ப மட்டும் என்னை நல்லவன்னா சொல்றாங்க. இல்லையே.... உங்களை நான் மயக்கி கல்யாணம்

பண்ணிகிட்டேன்னு தான் சொல்றாங்க. அதோட சேர்த்து இதையும் சொல்லிக்கட்டும் எனக்கு ஒன்னும் பிரச்சனை இல்லை.”

இன்னும் வினோதா தனிக்குடித்தனம் செல்வதில் உறுதியாகத்தான் இருந்தாள். தனிக்குடித்தனம் செல்லும் அளவுக்குப் பெரிய பிரச்சனை இல்லை என அஷ்வின் நினைத்தான். அதனால் இருவருக்கும் இடையில் கடுமையாக வாக்குவாதம் நடந்தது. வாக்குவாதத்தின் முடிவில்,

“தனிக்குடித்தனம் போகணும்னா நீ தனியாத்தான் போகணும். நான் வர மாட்டேன்.” என அஷ்வினும் சொல்லிவிட்டான். அதைக் கேட்ட வினோதா மனம் உடைந்து போனாள்.

“எனக்குத் தெரியும் அஷ்வின், நீங்க வர மாட்டீங்கன்னு. ஆரம்பத்தில இருந்தே நீங்க என்கிட்டே இருந்து விலகத்தான் பார்த்தீங்க. நானா தான் உங்ககிட்ட காதலை சொன்னேன். அப்பவும் நீங்க உங்க குடும்பத்தை நினைச்சு யோசிச்சீங்க. வேற பெண்ணைக் கல்யணம் பண்ணிக்கவும் தயாரா இருந்தீங்க.”

“என் மேல பிரியம் இல்லைன்னு சொல்ல மாட்டேன். அப்படி நான் சொன்னா எனக்கு மனசாட்சி இல்லைன்னு அர்த்தம். ஆனா நான்னா உங்க குடும்பமான்னு பார்த்தா உங்களுக்கு உங்க குடும்பம் தான் முதல்ல... எனக்கு அது எப்பவோ தெரியும்.”

“சரி அதெல்லாம் விடுங்க. இப்ப நீங்க என்ன சொல்லவரீங்க? என்னை உங்களை விட்டுப் போகச் சொல்றீங்களா.... நான் போய்ட்டா நீங்க திரும்ப உங்க குடும்பத்தோட சந்தோஷமா இருப்பீங்கன்னா நான் போய்டுறேன்.”

வினோதா சொன்னதைக் கேட்டு அஷ்வின் மனம் வெறுத்துப் போனான். நாம ஒரு அர்த்தத்தில சொன்னா... இவ ஒரு அர்த்தத்தில புரிஞ்சிக்கிறா என வேதனைப்பட்டவன். “அம்மா தாயே நான்

அப்படி எதுவும் நினைச்சு பேசலை... ஒரு கோபத்தில சொல்லிட்டேன். எனக்கு உன்னைப் போல எல்லாம் பேச தெரியாது. ஆளா விடு...” என்றவன் வெளியில் கிளம்ப...
இரவு நேரத்தில் அவன் வெளியே கிளம்புவதைப் பார்த்து “எங்க டா போற?” என்றார் ரங்கநாயகி.

“என்னை நிம்மதியா இருக்க விடக் கூடாதுன்னு தான் எல்லோரும் கங்கணம் கட்டிட்டு திரியிறீங்களா.... அதுதான் வெளிய போய்யாவது நிம்மதியா இருக்கலாம்ன்னு பார்க்கிறேன்.”

“இப்ப உன் நிம்மதிக்கு என்ன குறை?”

ரங்கநாயகி கேட்டதும் “ஒரு குறையும் இல்லை... ரொம்பச் சந்தோஷமா இருக்கேன். உங்க பொண்ணு கிட்ட சொல்லி வைங்க. வந்தா... அவ வேலைய மட்டும் பார்த்திட்டு போகணும், சும்மா தேவை இல்லாத பிரச்சனையை எல்லாம் இழுக்கக் கூடாது.” அஷ்வின் கத்திவிட்டு வெளியே சென்றான்.

அவன் சொன்னதை மாடியில் நின்று கேட்ட வினோவுக்கு ஐயோ என்று இருந்தது. இனி இதற்கும் சேர்த்து அவள் தான் பேச்சு வாங்க வேண்டியது வரும்.

அஷ்வின் சென்றதும் அறைக்குள் வந்த வினோதாவிற்கு மனதில் நிறையக் குழப்பங்கள். நம்மால் அவனுக்கு நிறையக் கஷ்ட்டமோ... தன்னைத் திருமணம் செய்யவில்லை என்றால் சந்தோஷமாக இருந்திருப்பானோ.... தன்னால் தான் அவனுக்கு நிம்மதி இல்லை என்று தன்னையே வருத்திக்கொண்டு இருந்தால்.

இரவு பதினோரு மணிக்கு மேல் ஆகியும் அஷ்வின் வீட்டிற்குத் திரும்பவில்லை என்றதும், ஒருவேளை வந்து கீழே இருக்கிறானோ என நினைத்து மாடியில் இருந்தே கீழே எட்டிப்பார்த்தாள்.

“இந்த வீட்ல பொம்பளைங்க ராஜியமா போய்டுச்சு. ஆம்பிளைங்கள மத்திகிறதே இல்லை. எப்ப பாரு

எதாவது ஒரு பிரச்சனையைக் கிளப்புறதே வேலையா போய்டுச்சு. ராதிகாவுக்கு இங்க என்ன வேலை? இனி அவளை அங்கயே இருக்கச் சொல்லு....எப்ப பாரு எதாவது ஒன்னு இழுத்து வைக்கிறது." வரதராஜன் ரங்கநாயகியிடம் கத்திக்கொண்டு இருந்தார்.

"அவன் வெளியே போய் எவ்வளவு நேரம் ஆகுது? இன்னும் திரும்பலை.... கோபத்தில வேற போனான். ரோட்ல எவ்வளவு வண்டி வருது." வரதராஜன் கவலையாக வாசலை பார்க்க... அதைக் கேட்ட வினோதாவிற்கும் பதட்டம் தொற்றிக்கொண்டது.

எல்லாம் நான் பண்ணது தான். தேவையில்லாதது.... கடவுளே அஷ்வின் நல்லபடியா வந்திடனும் என்று பிராத்தனை செய்தபடி வினோ இருந்தாள். இரவு பன்னிரென்று மணிக்கு மேல் ஆகியும் அஷ்வின் வரவில்லை என்றதும், அவனைத் திரும்ப நல்லபடியாகப் பார்ப்போமா... என வினோதா பயந்து போய் விட்டாள்.

அஷ்வினிடம் செல் இல்லை... வீட்டிலேயே விட்டுவிட்டுச் சென்றிருந்தான். அதனால் அவனைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. அருண் அவனைத் தேடிக்கொண்டு புறப்பட்டான்.

வினோதா மாடி பால்கனியில் அழுதபடியே நின்று தெருவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அஷ்வின் மட்டும் நல்லபடியா வந்திட்டா போதும், எனக்கு வேற எதுவுமே வேண்டாம். இனி தனிக் குடித்தனம் போகணும்ன்னு சொல்லவே மாட்டேன் என நினைத்துக்கொண்டாள்.

சிறிது நேரத்தில் அஷ்வினும் அருணும் வந்தனர். அவனைப் பார்த்ததும் தான் வினோதாவுக்கு மூச்சே வந்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு பால்கனி கதவை சாற்றிக்கொண்டு அவர்கள் அறைக்குச் சென்றாள்.

வீட்டிற்கு வந்த அஷ்வினுக்குக் கீழே வரதராஜனிடம் நன்றாக அர்ச்சனை கிடைத்தது. போதாதா

குறைக்கு ரங்கநாயகி வேறு அவனை வருத்தெடுத்தர். இனி வினோதா வேறு ஆரம்பிப்பாளே என நினைத்து பயந்து கொண்டே மேலே வந்தான்.

ஆனால் வினோதா அப்படி எதுவும் செய்யவில்லை. சாரி அஷ்வின் என்று மட்டும் தான் சொன்னாள். அழுததில் அவள் கண்ணெல்லாம் சிவந்து வீங்கி இருந்தது. அதோடு சென்று படுத்தும் விட்டாள்.

அஷ்வின் உடை மாற்றிக் கைகால் கழுவிக்கொண்டு அவள் அருகில் சென்று படுத்தவன், வினோதாவை மெல்ல தன் பக்கம் திருப்பினான்.

“சாரி வினு, ரொம்பப் பயந்துட்டியா.... நீ பேசுனது கேட்டதும் எனக்கு ரொம்பக் கோபம் வந்துடுச்சு. இப்படி எல்லாம் பிரச்சனை வரும்ன்னு தெரிஞ்சு தான் நான் வீட்ல பார்க்கிற பொண்ணையே கல்யாணம் பண்ணிப்போம்ன்னு நினைச்சேன்னே தவிர... உன்னைப் பிடிக்காம இல்லைடா....”

“எனக்குப் புரியுது அஷ்வின், தூங்குங்க.” வினோதா கண்ணை மூடிக்கொள்ள.... “எனக்கு வரலையே...” என்றவன், முத்தமிட்டு அவள் தூக்கத்தையும் கலைக்க ஆரம்பித்தான். வினோவும் அவனுடன் ஒன்றிப்போனாள்.

மறுநாள் அலுவலகம் சென்ற வினோ அமைதியாக இருப்பதைப் பார்த்த ஹேமா விசாரிக்க... வினோவும் அவளிடம் நேற்று வீட்டில் நடந்ததைச் சொன்னாள். அதைக் கேட்ட ஹேமாவுக்கு வருத்தமாகப் போய்விட்டது.
“வினு, நீயும் என்னை மாதிரி ஆகிடாத... உனக்கு அஷ்வின் தான் முக்கியம். உன் மாமியாரோ நாத்தனாரோ இல்லை. அவங்க பேசுறதை காதில் வாங்காத. உன் கணவர் உன்னை நல்லா தான பார்த்துகிறார். நீ அனாவசியமா மத்தவங்களுக்காக அஷ்வினை நோகடிக்காத... அப்புறம் அவருக்கே உன் மேல வெறுப்பு வந்திடும்.”

“நான் அவசரப்படதுனால அனுஷ்கா தான் கஷ்ட்டப்படுற... உனக்கும் அந்த நிலைமை வேண்டாம்.”

ஹேமா தன் அனுபவத்தில் இருந்து சொல்வது வினுவுக்குப் புரியாமல் இல்லை..... அதோடு அவளாலையே அஷ்வினை பிரிந்து வாழ்வது எல்லாம் முடியாது. அவள் மற்ற திருமணமான பெண்களிடம் எல்லாம் சென்று, உங்களுக்கு உங்க வீட்டுகாருக்கும் சண்டை வருமா.... என்றவுடன் ஆளாளுக்கு அவர்கள் கதையைச் சொல்ல ஆரம்பித்துவிட்டனர்.

அவர்கள் சொன்னதிலிருந்து எல்லோர் வீட்டிலும் சண்டை நடப்பது சகஜம். அதே போல் நிறையப் பேருக்கு மாமியார் நாத்தனார் பிரச்சனை இருப்பதும் தெரிந்தது.

நீங்கள் எல்லாம் எப்படி அவங்களைச் சமாளிப்பீங்க? வினோதா கேட்க... இது ஒரு பெரிய விஷயமா... இந்தக் காதுல வாங்கி அந்தக் காதுல விட்டுடனும். அதை எல்லாம் மனசுக்குக் கொண்டு போனா... நாம தான் மெண்டல் ஆகணும். அதனால டோன்ட் கேர் தான் என்றனர் இலகுவாக.

அவர்களுடன் பேசியவுடன் வினோதாவுக்கும் நம்பிக்கை வந்தது. இவங்களால எல்லாம் சமாளிக்க முடியும் போது... நம்மால முடியாதா.... என நினைத்து தன்னையே தேற்றிக்கொண்டாள்.

அங்கே அஷ்வின் விக்னேஷிடம் நேற்று வீட்டில் நடந்ததைச் சொல்லிப் புலம்ப... “நான் வினோவுக்குத் தான் சப்போர்ட் பண்ணுவேன். சேர்ந்து இருந்து ஒருத்தரை ஒருத்தர் பிச்சிகிறதுக்கு.... தனியா போறது ஒன்னும் தப்பு இல்லை... சில நேரம் விலகி இருக்கிறது கூட உறவுகளை வலுப்படுத்தும்.” என்றான்.

ஆனால் அதில் அஷ்வினுக்கு இஷ்ட்டம் இல்லை.... அவனே ஒருநாள் தனியாகப் போவதே நல்லது

என்று நினைப்பான் என அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

பகுதி – 22

அந்த நாளுக்குப் பிறகு வினோதா அஷ்வினிடம் தன் மாமியார் நாத்தனார் பற்றிக் குறை சொல்வதை நிறுத்தி விட்டாள். ரங்கநாயகியும் ராதிகாவும் திருந்தி விட்டார்கள் என்று இல்லை... அவர்கள் எப்போதும் போல் தான் இருந்தனர். வினோதா எது செய்தாலும் அதில் குறை கண்டுபிடிப்பதும், அவளைக் குத்தி காட்டி ஜாடை பேசுவதும் என்று. ஆனால் வினோதா அதை அஷ்வினின் காதுக்குக் கொண்டு செல்வது இல்லை. அதனால் அவன் நிம்மதியாக இருந்தான்.

வினோதா அவனிடம் எதுவும் சொல்லாததை வைத்து... தான் அன்று கத்திவிட்டு சென்றதால்.... தன் அம்மாவும் ராதிகாவும் வினோதாவை இப்போது வம்பு இழுப்பது இல்லை என அஷ்வின் நினைத்துக்கொண்டான்.

சில நாட்களுக்குப் பிறகு உடல்நலம் சரியில்லாமல் இருந்த வரதராஜனின் தந்தை மறைந்தார். எல்லோரும் அதற்குச் சென்று விட்டு வந்தனர். காரியம் எல்லாம் முடிந்த பிறகு தன் தந்தையிடம் வந்த அஷ்வின் “தாத்தாவோட வீடு ரொம்ப மோசமான நிலமையில இருக்குப்பா... அவங்களால அதை இடிச்சிட்டுக் கட்டவெல்லாம் முடியாது. எதாவது அப்பார்ட்மெண்ட் கட்டுறவங்ககிட்ட குடுக்கலாம்.” என்றான்.

“ஆமாம் நீ சொல்றதும் சரிதான்.” என்றார் வரதராஜன்.

“அப்பா, ரெண்டு சித்தப்பாகளுக்குமே அவ்வளவு வசதி இல்லை. அந்த வீட்ல நீங்க உங்க பங்கை அவங்களுக்கு விட்டு கொடுங்கப்பா....”

அஷிவ்ன் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகி பொங்கி விட்டார். “அது தான உனக்கு என்ன

இவ்வளவு அக்கறைன்னு பார்த்தேன்? இங்க இருக்கிறதை பிடிங்கி அங்க குடுக்கணும்ன்னு பார்கிறியா... அது என்ன ஆயிரமா ரெண்டாயிரமா விட்டுக்கொடுக்க.... அந்த இடம் மட்டும் கோடிக்கு மேல போகும்.”

“அம்மா நீங்க எந்தக் காலத்தில இருக்கீங்க? இந்தக் காலத்தில கோடி எல்லாம் எந்த மூலைக்கு..... அம்பது லட்சத்துக்கு ரெண்டு பெட்ரூம் ப்ளாட் தான் வரும். இதுல அப்பா வேற பங்கு வாங்கினா அவங்களுக்கு ஆளுக்கொரு பிளாட் கூட வராது. அவங்க பாவம் இல்லையாம்மா....”

“உங்க அப்பாவும் அந்த வீட்டு வாரிசு தான். அவருக்குச் சொத்துல பங்கு வாங்குற உரிமை இருக்கு... இதுல யாரும் தப்பு சொல்ல முடியாது.”

“உரிமை இருக்கு இல்லைங்கிறது இல்ல பிரச்சனை... நமக்குத் தேவைக்கு அதிகமாவே சொத்து இருக்கு. நாம விட்டு கொடுக்கிறதுனால குறைஞ்சிட மாட்டோம்.”

“ஆனா இங்க இருக்கிறது எல்லாம் உங்க அப்பா சம்பாதிச்சு வாங்கின சொத்து இல்லை.... என் மூலமா வந்த சொத்து. இதை நீ எப்படி உங்க அப்பா கணக்குல சேர்க்கலாம்.”

ரங்கநாயகி சொன்னதைக் கேட்ட வரதராஜனும் அஷ்வினும் திடுக்கிட்டனர். “அம்மா, நமக்குச் சட்டப்படி வேணா அந்தச் சொத்தில உரிமை இருக்கலாம். ஆனா நியாயப்படி பார்த்தா இல்லை.... நாம அந்தக் குடும்பத்துக்காக என்ன செய்தோம்? இல்லை தாத்தா பாட்டியை தான் கூட வச்சு பார்த்துகிட்டோமா அதுவும் இல்லை... நம்ம கடமைய நாம செய்யாம வெறும் சொத்தை மட்டும் கேட்கிறது நியாயம் இல்லை.”
அஷ்வின் சொல்வதை ரங்கநாயகி கேட்பதாகவே இல்லை. இனி என்ன சொன்னாலும் தன் அம்மா ஒத்துக்கொள்ள மாட்டார்கள் என்று புரிந்த அஷ்வின், தாத்தாவின் சொத்தில் பேரன்

பேத்திகளுக்கும் உரிமை இருப்பதால்... எல்லோருக்கும் சேர்த்துச் சொத்தில் பங்கை பிரிக்க ஏற்பாடு செய்தான். அதில் பாட்டியும் உண்டு.

எல்லோருமே பத்திரம் பதிவு செய்யும் அன்று சென்று இருந்தனர். அந்த இடம் மட்டுமே ஒன்னரை கோடி ரூபாய்க்கு போனதால்.... ஆளுக்குப் பன்னிரண்டு லட்சங்கள் வந்தது.

அஷ்வினும் அருணும் தங்களின் பங்கை தங்கள் சிறிய தந்தைமாருக்கு விட்டு கொடுத்தனர். இப்போது ரங்கநாயகியால் எதுவும் சொல்ல முடியவில்லை.... பாதியாவது வந்ததே என்று மனதை தேற்றிக்கொண்டார்.

இரண்டு சித்தப்பாகளும் ஆளுக்கு ஒரு பிளாட் அங்கேயே வாங்கிக் கொண்டனர். அஷ்வின் பில்டரிடம் பேசி இருவருக்கும் மூன்று படுக்கை அறைகள் கட்டிக்கொடுக்கும் படி ஏற்பாடு செய்தான்.

பாட்டியின் பங்கையும் வங்கியில் போட்டு அவருக்கு வட்டி வர அஷ்வின் ஏற்பாடு செய்தான். அவர் காலத்திற்கு வேறு யாரையும் பணத்திற்குச் சார்ந்து இருக்கக் கூடாது என்று நினைத்தான். பாட்டி அந்தப் பணம் தன் காலத்திற்குப் பிறகு தன் பேரன் பேத்திகளுக்குச் சேர வேண்டும் என்று எழுதி கொடுத்தார்.

வீட்டிற்கு வந்த அஷ்வினை அணைத்துக்கொண்ட பாட்டி “என் காலத்துக்குப் பிறகு உன் சித்தப்பாக்கள் எப்படி இருப்பாங்களோன்னு கவலையில இருந்தேன். நீ அந்தக் கவலையைத் தீர்த்து வச்சிட்ட... நான் உயிரோட இருக்கும் போதே அவங்க நல்லா வாழுவதைப் பார்க்கும் சந்தோஷத்தை நீ எனக்குக் குடுத்திட்ட.” என்றார் கண் கலங்கி.

“நம்ம குடும்பத்துக்காகத் தானே நான் செய்தது. இதில என்ன பெரிய விஷயம் பாட்டி.” அஷ்வின் அவரை இலகுவாகவே சமாதானம் செய்தான்.

ராதிகாவை சொத்தில் விட்டுக்கொடுக்கும் படி அஷ்வின் கேட்கவே இல்லை. அவனுக்குத் தெரியும் அவள் கண்டிப்பாகக் கொடுக்க மாட்டாள் என்று.... எதற்குக் கேட்டு அசிங்கப்பட வேண்டும் என்று... அவன் அவளைக் கேட்கவே இல்லை. ராதிகாவுக்கு அஷ்வினும் அருணும் விட்டுக்கொடுத்தது தெரியும். இருந்தும், அவள் வாயை திறக்கவில்லை... எதாவது சொல்லப்போய்த் தன்னுடைய பங்கையும் கேட்டுவிட்டால்.... அதனால் கமுக்கமாக இருந்து கொண்டாள்.

ராதிகா அவளுக்கு வந்த பங்கில், விலை உயர்ந்த ரகத்தில் கார் வாங்கித் தன் கணவனுக்குப் பரிசளித்தாள். மகேஷ் அதை எதற்கு எல்லாம் உபயோக்கிறான் எனத் தெரியாமலே.... அவன் அதில் அலுவலகம் சென்று வருவதைப் பெருமையுடன் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அருணுக்கு காவ்யாவையே நிச்சயம் செய்தனர். நிச்சயமே கல்யாணம் போல் ஆடம்பரமாக நடந்தது. ரங்கநாயகியும் ராதிகாவும் வைரத்தில் ஜொலித்தனர். வினோதா தன்னிடம் இருப்பதையே நிறைவாக அணிந்து கொண்டாள். அருணை விடக் காவ்யா இரண்டு வருடமே இளையவள் என்பதால்... வினோதாவும் அவளும் ஒரே வயது. அதனாலோ என்னவோ காவ்யாவால் வினோதாவோடு இயல்பாகப் பழக முடிந்தது. அல்லது ஒருவேளை முன்பே அருண் அஷ்வினையும் வினோதாவையும் பற்றி உயர்வாகச் சொல்லி இருந்ததும் காரணமாக இருக்கலாம்.

ஏற்கனவே வீட்டில் கல்யாணக்களைக் கட்டி இருக்க.... இந்த நேரத்தில் வினோதாவும் தாய்மை அடைந்தாள். அவள் தாய்மை அடைந்ததால் வீட்டில் அவள் நிலை எந்த வகையிலும் மாறிவிடவே இல்லை... அவளின் நிலை எப்போதும் போலவே இருந்தது.

அப்போதும் ரங்கநாயகி மருமகளைத் தாங்கவோ... இல்லை வாய்வார்த்தையாக உபசரிக்கவோ கூட

இல்லை.... அவர் எப்போதும் போலவே இருந்தார். அதைக் கவனித்த அஷ்வினுக்கு எமற்றமாகத்தான் இருந்தது. ஆனால் அதற்கு எல்லாம் ஈடு செய்யும் வகையில் அவன் வினோதாவை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக்கொண்டான்.

வினோதா தாய்மை அடைந்திருப்பதை அறிந்து அவளின் பெற்றோரும் அண்ணன் விமலும் அண்ணி மாலதியும் வந்து பார்த்துவிட்டு சென்றனர். வினோதாவின் திருமணத்திற்குப் பிறகு அவர்கள் இன்று தான் அந்த வீட்டிற்கு மீண்டும் வந்தனர்.

அவர்களிடமும் ரங்கநாயகி முன்பு எப்படி நடந்து கொண்டாரோ இப்போதும் அப்படித்தான் இருந்தார். இவ்வளவு நாட்கள் ஆகி இருந்தும் எந்த மாற்றமும் இல்லை. மஞ்சுவிற்கே அதைப் பார்த்து ஆச்சர்யமாக இருந்தது. இப்படியும் ஒரு மனுஷி இருப்பாங்களா என வேதனைப்பட்டார்.

ரங்கநாயகியிடம் அனுமதி கேட்டுக்கொண்டு, வினோதாவை தங்கள் வீட்டிற்குச் சிறிது நாட்கள் அழைத்துச் சென்று வாய்க்கு ருசியாக ஆக்கிப்போட்டு, அவள் மசக்கையில் இருந்து தேறியதும் தான், அவளைத் திரும்ப அவர்கள் வீட்டிற்கு அனுப்பினார்.

அருண் காவ்யா திருமணமும் கோலாகலமாக நடந்தது. மூன்று நாட்கள் திருமண வைபவங்கள் வெகு ஜோராக நடந்தது. ஒரு சடங்கு சம்ப்ரதாயங்கள் கூட விடாமல் செய்தனர். ரங்கநாயகி வினோதாவின் முகத்தையே அடிக்கடி பார்த்துக்கொண்டார். அவர்கள் திருமணம் இப்படியெல்லாம் நடக்கவில்லையே... அந்த வருத்தம் வினோதாவிற்கு இருக்கிறதா என்பதைப் போல.... ஆனால் வினோதா மகிழ்ச்சியாக நடமாடிக்கொண்டு இருந்தாள்.

அவருக்கு இன்னும் ஒரு விஷயம் புரியவில்லை... திருமணம் எப்படி நடக்கிறது என்பதைவிட....

யாரோடு என்பது தான் மிக முக்கியம். அந்த வகையில் விரும்பியவனையே திருமணச் செய்த அவள் கொடுத்துவைத்தவள் அல்லவா.... அந்த எண்ணம் தான் வினோதாவுக்கு இருந்தது. அதனால் இதனால் எல்லாம் அவள் மனம் பாதிக்கவில்லை. அதுவும் அஷ்வினின் குழந்தையை வயிற்றில் சுமந்திருக்கும் இந்த வேளையில்... அவள் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தாள்.

அதோடு என்ன வேலையாக இருந்தாலும், சிறிது நேரத்திற்கு ஒரு தடவை வந்து அஷ்வின் அவளை விசாரித்து விட்டு செல்வான். பசிக்குதா.... எதாவது சாப்பிடுறியா? கால் வலிக்கப் போகுது.... கொஞ்ச நேரம் உட்காரு.... இப்படி எதாவது.

பார்த்துப் பார்த்துச் செய்யக் கணவன் இருக்கும் போது... அவள் மற்றவற்றைப் பெரிதாக நினைப்பாளா என்ன .... எனவே உறவினரை கவனிப்பதில் ஈடுபட்டு இருந்தாள்.

ரங்கநாயகியும் ராதிகாவும் அவர்களுக்குச் சமமானவர்களிடம் தான் விழுந்து விழுந்து பழகுவார்கள். மற்றவர்களைக் கண்டு கொள்ள மாட்டார்கள். ஆனால் வினோதா எல்லோரோடும் இனிமையாகப் பழகியதால்.... அவர்கள் உறவினர்கள் மத்தியில் அவளுக்கு நல்ல பேர் கிடைத்தது.

வரவேற்பு முடிந்து அஷ்வினும் வினோதாவும் மட்டும் வீட்டிற்குக் கிளம்பினர். அன்று இரவு அருணுக்கும் காவ்யாவுக்கும் மண்டபத்திலேயே முதல் இரவு. மறுநாள் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு தான் மற்றவர்கள் வருவதாக இருந்தது.
குளித்து நைட்டி மாற்றிவிட்டு வந்த வினோதா, பசிப்பதாகச் சொன்னதும், அஷ்வின் அவளை அழைத்துக்கொண்டு கீழே சென்றான்.
இருவருக்கும் தேவையான நொறுக்குத் தீனிகளுடன் ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டே சாப்பிட்டனர்.

சாப்பிட்டதும் வினோதா ஹால் சோபாவிலேயே கால் நீட்டி படுத்துக்கொள்ள... அஷ்வின் அவளின் கால் இரண்டையும் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டு மெதுவாகப் பிடித்து விட.... அவளுக்குச் சுகமாக இருந்தது.

வீட்டில் வேறு யாரும் இல்லாததால்.... சுதந்திரமாக இருந்தனர். இதே மற்றவர்கள் வீட்டில் இருக்கும் போது அஷ்வின் அவள் அருகில் உட்கார கூடத் தயங்குவான். சிறிது நேரம் சென்று அஷ்வின் தூங்க அழைத்ததற்கு வினோதா மறுத்துவிட்டு டிவி பார்த்தாள்.

சிறிது நேரம் சென்று வினோதா பால் வேண்டுமா என அஷ்வினிடம் கேட்க... அவன் வேண்டாம் என்றான். வினோ அவளுக்கு மட்டும் ஒரு பெரிய டம்ளர் நிறையப் பால் எடுத்துக் கொண்டு வந்து குடித்தாள்.

“ஹே வினு... என்ன இவ்வளவு சாப்பிடுற? இன்னைக்கு ரொம்பப் பசியா....”

“ம்ம்.... தினமுமே பசிக்கத்தான் செய்யும், ஆனா கீழ இரங்கி வந்து சாப்பிட சோம்பேறியா இருக்கும் அது தான்.”

வினோதா மாற்றிச் சொல்கிறாள் என அஷ்வினுக்குப் புரிந்து தான் இருந்தது. கீழே ரங்கநாயகி இருப்பதால்.... வர சங்கடப்பட்டுக் கொண்டு வருவது இல்லை... அது தான் உண்மை. இவ என்கிட்டயாவது சொல்லி இருக்கலாம். நானாவது எடுத்து வந்து தந்திருப்பேன் என நினைத்தவன், இனி அவர்கள் அறையில் அவளுக்கு எதாவது சாப்பிட வாங்கி வைக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டான்.

அன்று இரவு கீழே இருந்த விருந்தினர் அறையிலேயே படுத்துக்கொண்டனர். காலை வந்த மங்கலத்திற்குக் கதவு திறந்து விட்டவள், மண்டபத்தில் இருந்து அவர்கள் எல்லோரும் காலை

உணவுக்குப் பிறகு தான் வருவார்கள் என்பதால்..... திரும்பப் போய்ப் படுத்து விட்டாள்.

ஏழு மணிவாக்கில் மெதுவாக எழுந்து குளித்துவிட்டு வந்து பார்த்த போது.... வெளி வேலை செய்யும் பெண் அவள் வேலைகளை முடித்து விட்டு சென்று இருந்தாள். வினோதா மங்கலத்தைச் சட்னி அரைக்கச் சொல்லிவிட்டு அவர்கள் அறைக்கு வந்து குளித்து உடை மாற்றியவள், கீழே வந்து கோலம் போடுவது சாமி அறையில் விளக்கு ஏற்றுவது எல்லாம் முடிக்க... அதற்குள் அஷ்வினும் அவர்கள் அறையைச் சுத்தம் செய்துவிட்டுக் குளித்துத் தயாராகி வந்தான்.

மங்களம் தோசை ஊற்ற இருவரும் உட்கார்ந்து சாப்பிட்டனர். இன்றுதான் தான் அந்த வீட்டின் மருமகள், இது தன்னுடைய வீடு என்பது போலவே வினோதா உணர்ந்தாள்.... இல்லையென்றால் எதோ மிலிட்டரி கேம்பில் இருப்பது போலவே இருக்கும். அதோடு அவளுக்குத் தானும் இன்னொரு மங்கலமோ என்று தான் நினைக்கத் தோன்றும். விடுதலை... விடுதலை.....விடுதலை.... என வாய்விட்டு பாட வேண்டும் போல் இருந்தது.

இதை அஷ்வினிடம் சொல்வோமா என நினைத்தவள், வேண்டாம் டென்ஷன் ஆகிடுவான் என்று நினைத்து அமைதியாக இருந்தாள். அவளுக்குத் தன்னை நினைத்தே சிரிப்பாக வந்தது.

அவர்கள் எந்த நேரத்திலும் வரலாம் என்பதால்... அறைகள் எல்லாம் சுத்தமாக இருக்கிறதா... என்று பார்த்தவள், அருனின் அறையை மட்டும் தானே மீண்டும் ஒருமுறை சுத்தம் செய்தாள்.

வேறு வேலை எதுவும் இல்லாததால் ஹாலில் அமர்ந்து ஹாயாக டிவி பார்த்துக்கொண்டு இருந்தாள். அப்போது கார் வந்து நிற்கும் சத்தத்தில் வினோதா எழுந்து கொள்ளும் முன்பே ரங்கநாயகி பரபரப்புடன் உள்ளே வந்தார். அவரோடு ராதிகாவும்.

வந்தவர் ஏற்கனவே தயாராக எடுத்து வைத்துவிட்டு சென்றதை கொண்டு வேகமாக ஆலம் தயாரித்தார். சமையல் அறையில் சென்று பார்த்தவர், “பால் கூடக் காய்சாம காலையில் இருந்து என்ன பண்ணீங்க?” என மங்கலத்தைப் பார்த்து கடிந்தவர், சீக்கிரம் அவங்க வர்ற டைம் ஆச்சு. அஞ்சு லிட்டர் பால் எடுத்து காய்ச்சு காபி போடணும் என்றதும், மங்கலம் வேகமாக அந்த வேலையைப் பார்க்க... காபி என்றதால்... வினு டிகாஷன் தயார் செய்தாள்.

சிறிது நேரத்திலேயே வாயிலில் வண்டிகள் வந்து நிற்கும் சத்தத்தில் அவர்கள் வந்துவிட்டதை உணர்ந்து, வீட்டு மருமகளாக அவர்களை வரவேற்க வேண்டும் என்று வெளியில் வந்தவள், அஷ்வினோடு நின்று அவர்களை இன்முகத்தோடு வரவேற்றாள்.

ராதிகா வாயெல்லாம் பல்லாகத் தன் தம்பி மனைவிக்கு ஆலம் சுற்றி வரவேற்றாள். காவ்யவோடு அவள் பக்க உறவினர்கள் இருபது பேராவது வந்திருப்பார்கள். அதோடு வீடு நிறையச் சீர் வரிசை பொருட்களும் வந்தது.

ஆள் உயரத்திற்கு வெள்ளி குத்துவிளக்கு, வெள்ளியில் இரண்டு பெரிய தட்டுகள், அனைத்து பூஜை சாமான்கள் என்று இன்னும் நிறைய நிறைய... அதோடு பெரியப் பெரிய பாத்திரங்கள் நிறைய இனிப்பும் காரமும் இதெல்லாம் போதாது என்று கட்டில், பீரோ, டிவி, பிரிட்ஜ், வாஷிங் மெஷின் வேறு.... காவ்யாவுடைய பெட்டி பைகளே பத்துக்கும் மேல் இருக்கும்.... அப்படி என்ன தான் கொண்டு வந்தாளோ.....

இப்படித் தானே மருமகள் வரவேண்டும் என்று ரங்கநாயகி எதிர்ப்பார்த்தார். அவர் முகத்தில் அத்தனை பெருமை பூரிப்பு.... எல்லோரையும் வரவேற்று உட்கார வைத்தார். வெள்ளி சாமான்கள் ரங்கநாயகியின் அறைக்கும், காவ்யாவின் பொருட்கள் மாடிக்கும் எடுத்துச் செல்லப்பட்டது.

வினோதா காபி கலக்க.... ராதிகாவும் ரங்கநாயகியும் வந்தவர்களுக்குக் கொடுக்க இனிப்பும் காரமும் எடுத்து வைத்தனர். இவ்வளவு சீர் வரிசையைப் பார்த்ததும் வினோதா முகம் கொஞ்சமாவது மாறி இருக்காது என நினைத்து ரங்கநாயகி அவளை நோட்டம் விட்டால்..... அங்கே வினோதா முகத்தில் எந்த மாற்றமும் இல்லை... அவள் சுபத்ராவோடு சிரித்துப் பேசியபடி காபியை டம்ளரில் ஊற்றிக்கொண்டிருந்தாள்.

அதைப் பார்த்ததும் ரங்கநாயகிக்கு கடுப்பாக இருந்தது. காவ்யா கொண்டு வந்த சீர்வரிசையைப் பார்த்து கொஞ்சமாவது குற்ற உணர்வு இருக்கா பாரு.... நாம வெறுங்கைய வீசிட்டு வந்தோமே... அதே வீட்டுக்கு இன்னொரு மருமகள் கொண்டு வந்த சீரை பார்த்தாவது எதாவது வருத்தம் இருக்கா... என மனதிற்குள் நொடித்தவர், அதை ராதிகாவுக்கு மட்டும் கேட்கும் படி சொல்ல....

“மனசுக்குள்ள இருக்கும்மா....ஆனா வெளிய காட்டிக்காம இருக்கா....எவ்வளவு கேடி இவ... நம்ம அஷ்வினையே கைக்குள்ள போட்டவள் ஆச்சே....” என்றாள் அவள்.

டிபன் காபி முடிந்ததும், காவ்யாவின் உறவினர்கள் கிளம்பி விட்டனர். ரங்கநாயகி அருணையும், காவ்யாவையும் மாடியில் சென்று ஓய்வு எடுக்கச் சொன்னார். ரங்கநாயகியின் பக்க உறவினர்கள் மட்டும் சில பேர் இருந்தனர். அவர்களுக்கும் சேர்த்து மதிய விருந்து தயாராகியது.

வேலை பரபரப்பில் காலை எடுக்க வேண்டிய மாத்திரைகளை வினோதா மறந்திருந்தாள். அஷ்வினுக்குத் தெரிந்தால் திட்டுவானே என்ற பயத்தில் வேகமாக மாடிக்கு செல்ல படியேறியவளை ராதிகாவின் குரல் தடுத்தது.

“ஹே... எங்கப் போற?”

அவளின் அதட்டலான குரலில் வினோதா திகைத்து அப்படியே நிற்க... அங்கே ரங்கநாயகியும்

வந்துவிட்டார்.

“இல்ல மாத்திரை எடுக்கணும்.” வினோதா தயக்கமாகச் சொல்ல....

“அதெல்லாம் அப்புறம் எடுத்திக்கலாம். வெறும் சத்து மாத்திரை தான ஒருநாள் போடலைன்னா ஒன்னும் ஆகாது. மேல அருணும் காவியாவும் இருக்காங்க உனக்குத் தெரியாது.” ராதிகா சொன்ன விதத்தில் வினோதா கீழே இறங்கிவிட்டாள்.

அவங்க ரூம்ல தானே அவங்க இருப்பாங்க. நான் என் ரூமுக்கு போனா இவங்களுக்கு என்ன? என்ற நினைத்த வினோதா தன் மாமியாரை பார்க்க... அவருக்குத் தப்பு தன் பெண்ணின் மீது என்று நன்றாகத் தெரிந்த போதிலும், ராதிகாவை விட்டுக்கொடுக்க முடியாமல் “ஆமாம் காவ்யாவோட சாமான்கள் வேற நிறைய இருந்தது. அது எல்லாம் அவ ரூம்ல எடுத்து வைக்கட்டும் அப்புறம் போகலாம்.” என்றார்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த உறவுப் பெண் ஒருவர் “ஆமாம் அப்புறம் அதை இதைக் காணலைன்னா வம்பு.” என்றதும், அவர்கள் பேசியதின் அர்த்தமே மாறிவிட்டது. மாடியில் புதுமண ஜோடிகளுக்கு இடைஞ்சலாகச் செல்ல வேண்டாம் என்று தான் ராதிகா சொன்னது, ஆனால் ரங்கநாயகி சொன்ன விதத்தில் அதன் அர்த்தமே மாறிவிட்டது.

அந்த அர்த்தம் வினோதாவை தவறாகக் குறிக்கிறது என்று புரிந்த போதிலும், ரங்கநாயகியோ ராதிகாவோ அதைத் திருத்த முயலவில்லை.... இவங்க என்ன என்னைத் திருடின்னு சொல்றாங்களா என மனம் கொதித்த வினோதா, தன் மாமியாரையும் நாத்தனாரையும் பார்த்து முறைத்து விட்டு சென்றாள்.

அந்தப் பார்வை உண்மையாகவே இருவரையும் நடுங்க செய்தது. இதுவரை வினோதா

அப்படியெல்லாம் செய்தது இல்லை.... இன்று தான் அவள் கோபத்தை அவள் வெளிப்படையாகக் காமித்தது.

வினோதா கீழே இருந்த விருந்தினர் அறைக்குச் சென்றாள். அவளைப் பார்த்ததும் அங்கிருந்த உறவினர் “வாம்மா வந்து உட்காரு.... எவ்வளவு வேலை பார்ப்ப மாசமா வேற இருக்க.” என்றதும், இது தான் சாக்கு என்று வினோதாவும் அங்கேயே தங்கிவிட்டாள்.

எத்தனை மாசம் ஆகுது என்று கேட்டவருக்கு நாலு மாசம் என்றாள்.
இவங்களுக்கு என்ன? நான் வேலைக்காரியா.... பணம் வந்ததும் இவங்க தான வாயப் பிளக்குறாங்க. அப்ப அவங்களே வேலை பார்க்கட்டும் என்று நினைத்தவள், அங்கேயே அவர்களோடு உட்கார்ந்து பேச ஆரம்பித்தாள்.

வினோதா சிறிது நேரத்தில் எப்படியும் சமையல் அறைக்கு வருவாள் என்று எதிர்பார்த்த ராதிகாவும் ரங்கநாயகியும் அவள் வரவில்லை என்றதும், இருவருக்கும் பயம் பிடித்துக்கொண்டது. அவள் அஷ்வினிடம் எதாவது சொன்னால்.... அவன் அவர்கள் இருவரையும் கிழி கிழியென்று கிழித்து விடுவான் என்று தெரியும். ஆனால் இப்போது வினோதா எதுவும் அஷ்வினிடம் சொல்வது இல்லை என்று தெரிந்தும் இருந்ததால்... கொஞ்சம் அலட்சியமாகவே இருந்தனர்.

வரதராஜனும், அஷ்வினும் அப்போது வீட்டில் இல்லை வெளிவேளையாகச் சென்றிருந்தனர்.

“உன் வாயை வச்சிட்டு சும்மா இருக்க மாட்டியா.... நீ எதோ சொல்லப்போய்ப் பதிலுக்கு நான் எதோ சொல்லப்போய்... அவ கோவிச்சிட்டு போய் உட்கார்ந்திட்டா....” ரங்கநாயகி தன் மகளைக் கடிந்து கொள்ள.... கொஞ்சம் அதிகம் தான் பேசிட்டோம் என்று ராதிகாவுக்கே புரிந்தது.

மதியம் சமையல் முடியும் வரை வினோதா எழுந்து வரவே இல்லை.... அதன் பிறகும் அவள் பரிமாறக் கூட வரவில்லை. தினமும் வேலை பார்த்தால் ஒன்றும் தெரியாது.... இப்படித் திடிரென்று வேலை பார்க்க ராதிகா தான் திணறிவிட்டாள்.

அருணும் காவ்யாவும் வந்த போது... அவர்களை ரங்கநாயகி உட்கார்ந்து சாப்பிட சொல்ல... அவன் அஷ்வின் வந்ததும் சாப்பிடுவதாகச் சொல்லி அவனுக்காகக் காத்திருந்தான்.

அஷ்வின் வந்ததும் அருண் சாப்பிட அமர... காவ்யா சென்று வினோதாவை சாப்பிட அழைத்து வந்தாள். அவர்களோடு ராதிகாவும் சாப்பிட அமர்ந்தாள்.

அன்று ரங்கநாயகி செய்தது போல்... இன்று குழம்பு காய் எதுவும் எடுத்துக்கொள்ளாமல்... வினோதா நேராகத் தயிர் ஊத்தி சாப்பிட.... ஏன்னென்று கேட்ட அஷ்வினிடம், வயிறு சரியில்லை என்று ரங்கநாயகி சொன்ன காரணத்தையே அவளும் சொன்னாள்.

ரங்கநாயகியும் ராதிகாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். இன்று வினோதா கண்டிப்பாக அஷ்வினிடம் சொல்லி பிரச்சனை செய்யப் போகிறாள் என்றே இருவரும் நினைத்தனர்.

அஷ்வினுக்கு உணவின் சுவையிலேயே இன்று வினோதா சமைக்கவில்லை என்று புரிந்து கொண்டவன் “நீ சமைக்கலையா வினு, உனக்கு உடம்பு முடியலையா....” அவன் கரிசனையாகக் கேட்க.... “கொஞ்சம் டயர்டா இருந்தது.” என்று சமாளித்தாள் வினோதா.

அருண் காவ்யாவிடம் வினோதாவின் முதல் நாள் சமையலை சொல்லி கேலி செய்ய....
“பரவயில்லையே வந்த முதல் நாளே சமையல் செஞ்சீங்களா....” என்றாள் காவ்யா பாராட்டாக....

“இன்னைக்கு உங்க ரெண்டாவது மருமகளைச் சமைக்கச் சொல்லலியா....” அஷ்வின் சிரிப்பை

வாய்க்குள் அடக்கியபடி கேட்க....

“ஏன் அத்திம்பேர் உங்களுக்கு இந்தக் கொலை வெறி.... எனக்குச் சமைக்கவெல்லாம் தெரியாது. வெறும் சுடு தண்ணி தான் வைக்கத் தெரியும்.” காவ்யா பதற....

“அதுக்கு என்ன அவசரம் மெல்ல கத்துக்கலாம்.” என்ற ரங்கநாயகியை பார்த்து அஷ்வின் கேலியாகச் சிரித்தான். இப்படி என் பொண்டாட்டி கிட்ட சொல்லக் காணமே என்று அவன் பார்வையே கேட்டது.

காவ்யா அவர்களோடு கலகலப்பாகப் பழகினாள். அதுவும் வினோதா அவளுக்குச் சகோதரி என்ற முறையில் மற்றவர்களை விட அவளிடம் தான் சற்று அதிக ஒட்டுதலோடு இருந்தாள். தங்கள் மனைவிமார் இருவரும் பேசிக்கொள்வதைப் பார்த்து அஷ்வினும் அருணும் மிகவும் சந்தோஷப்பட்டனர்.

ஒரு குடும்பம் சேர்ந்திருப்பது அந்த வீட்டின் மருமகள்களின் ஒற்றுமையில் தானே இருக்கிறது. இவர்கள் இருவருக்கும் இடையில் ஒத்து போய் விட்டால்... அவர்கள் அண்ணன் தம்பி பிரிய வேண்டாமே என்று நினைத்தனர். ஆனால் நடக்கப்போவது வேறு என்று அறியாமல்.

பகுதி – 23

மதிய உணவு முடிந்ததும், அருணுக்கு உதவியாக அஷ்வினும் ரகுவும் அவன் அறையில் பொருட்களை அடுக்குவதில் உதவி புரிந்தனர். பழைய கட்டிலை எடுத்து அங்கிருந்த இன்னொரு அறையில் போட்டவர்கள், புதுக் கட்டிலை மாட்டினார்கள்.

பீரோ, ப்ரிட்ஜ், டிவி, வாஷிங் மெஷின் எல்லாம் அதற்குரிய இடங்களில் வைக்கப்பட்டது. காவ்யா தன்னுடைய பெட்டிகளைப் பிரித்து அடுக்கிக்கொண்டு இருந்தாள்.

வினோதா மாடிக்கு வருவாள் என்று அஷ்வின் எதிர்பார்க்க அவள் வரவேயில்லை.... இவ என்ன பண்றா? கொஞ்ச நேரமாவது படுக்கக் கூடாது என நினைத்தவன், அவளைத் தேடிக்கொண்டு கீழே வந்த போது... அவள் கீழே இருந்த விருந்தினர் அறையில் தரையில் ஒரு ஓரமாகப் போர்வை விரித்துப் படுத்திருந்தாள்.

யாரும் இடித்து விடக் கூடாது என்ற கவனத்தில் வயிற்றின் மீது ஒரு தலையணை வேறு வைத்திருந்தாள். அவள் அசந்து உறங்குவதைப் பார்த்தவன், வேறு சிலரும் அந்த அறையில் இருந்ததால் அவளை எழுப்பாமலே சென்றான்.

ரங்கநாயகியின் அத்தை மாடிக்கு சென்று காவ்யாவின் அறையைப் பார்வையிட்டவர், அங்கிருந்த ப்ரிட்ஜை திறந்து பார்க்க.... அதில் பல்வேறு பழங்களும், பழரசங்களும் காவ்யாவின் மேக்கப் சாமான்களும் இருந்தது.

“நான் கூட எதுக்குத் தனி ப்ரிட்ஜ்ன்னு நினைச்சேன். ஆனா தேவை தான் போல....” அவர் சொல்ல.... “ஆமாம் பாட்டி. நான் ரொம்பப் பழங்கள் தான் சாப்பிடுவேன். ஒவ்வொரு தடவையும் கீழ போகவேண்டியது இல்லை...இல்லையா....” என்றாள் காவ்யா.

“சரி தான்...” என்றவர், அடுத்திருந்த அஷ்வினின் அறைக்குச் செல்ல... அங்கே அஷ்வின் மட்டுமே இருந்தான்.

“வாங்க பாட்டி...” என அஷ்வின் அவரை வரவேற்க.... அங்கிருந்த கட்டிலில் அமர்ந்தவர், அந்த அறையைச் சாவகாசமாகச் சுற்றிப்பார்த்துவிட்டு “ரங்கநாயகியும் ராதிகாவும் இன்னும் மாறவே இல்லை... அப்படியேத்தான் இருக்காங்க.” என்றார்.

அவர் சொன்னதற்கு அஷ்வின் பதில் சொல்லவில்லை.... என்னவென்று கேட்கவும் இல்லை.... அமைதியாக இருந்தான். ஆனாலும் ரங்கநாயகியின் அத்தை விடுவதாக இல்லை....

தான் காலையில் பார்ததை அஷ்வினிடம் சொல்லிவிட்டே அங்கிருந்து சென்றார். கேட்ட அஷ்வினுக்கு ரத்தம் கொதித்தது. ஓ... அதுதான் படுக்கக் கூட மாடிக்கு வரலையா.... பாவம் எவ்வளவு மனம் வருந்தி இருப்பாள் என நினைத்தவன், அவளைத்தேடி கீழே சென்றான்.

மாலை தூங்கி எழுந்ததும் மனம் சிறிது சமாதானம் ஆகி இருந்ததால்... வினோதா சென்று அனைவருக்குக் காபி கலந்து கொண்டிருந்தாள். அப்போது அங்கே வந்த அஷ்வின் அவளைப் பற்றித் தன் பக்கம் திருப்பியவன் “ஏன் என்கிட்டே சொல்லலை....” என்றான்.

என்னது சொல்லலை வினோதா புரியாமல் அவனைப் பார்க்க... அங்கிருந்த ராதிகாவுக்கு அவன் என்ன கேட்கிறான் என்று உடனே புரிந்துவிட்டது. ரங்கநாயகியின் அத்தை மாடிக்கு செல்வதை அவள் பார்த்துக்கொண்டு தான் இருந்தாள். அந்தக் கிழவி தான் வத்தி வச்சிருக்கும் என்று நினைத்தவளுக்கு, போச்சு அஷ்வின் இப்ப நம்மைத் தான் பிடிப்பான். வீட்ல வேற விருந்தாளிங்க எல்லாம் இருக்காங்களே.... அவங்க முன்னாடி கேவலமாகப் போகுது எனப் பயந்து கொண்டு இருந்தாள்.

“காலையில நான் வீட்ல இல்லாத போது என்ன நடந்துச்சு? நீ ஏன் நான் வந்ததும் சொல்லலை....” அஷ்வின் கேட்க.... வினோதா அவன் பேசியதை கண்டுகொள்ளாமல் காபி போடுவதிலேயே தீவிரமாக இருந்தாள்.

“நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லு....” அஷ்வின் அவளை மீண்டும் தன் பக்கம் திருப்ப....

“எதுக்குச் சொல்லணும்? அன்னைக்கு மாதிரி நீங்க எங்கையாவது போகவா.... அன்னைக்கு நீங்க திரும்பி வர்ற வரை நான் தவிச்ச தவிப்பு எனக்குத் தான் தெரியும். திரும்ப அப்படி நடந்தா அதைத் தாங்கிற ஷக்தி எனக்கு இல்லை....”

வினோதா சொன்னதைக் கேட்ட அஷ்வின் அடிபட்ட பார்வை பார்க்க.... “உங்களுக்கு என்னைப் பத்தி தெரியும். மத்தவங்க என்னைப் பத்தி என்ன நினைச்சா என்ன? விடுங்க” என்றவள், மீண்டும் காபி கலக்க.... அஷ்வின் அங்கிருந்து வெளியே சென்றான்.

வினோதா காபி கோப்பைகளோடு வெளியே செல்ல.... ரங்கநாயகி வந்து ராதிகாவிடம் என்ன நடந்தது? என்று விசாரித்தார். ராதிகா சொன்னதைக் கேட்டவர் அங்கிருந்து அமைதியாகச் சென்றார்.

விருந்தினர்களுக்குக் காபி கொடுத்துக்கொண்டு இருந்த வினோதாவிடம் வந்த அஷ்வின் “முகம் கழுவிட்டுக் கிளம்பு, உங்க வீட்டுக்கு போகலாம்.” என்றதும், வினோதா கலங்கிப் போய் அவனைப் பார்க்க...

“கல்யாண வேலையில ரொம்ப அலுப்பா தெரியிற... நாலு நாள் அங்க ரெஸ்ட் எடுத்திட்டு வா....” அஷ்வின் சொன்னது வினோதாவுக்கும் சரி என்றே தோன்றியது. இந்தக் கல்யாண கலாட்டாவெல்லாம் ஓயட்டுமே என நினைத்தாள்.

வினோதா அப்போதும் மாடிக்கு செல்லவில்லை.... கீழேயே தலை வாரி முகம் கழுவிக்கொண்டாள். “டிரஸ் எதுவும் எடுத்துக்கலையா....” கேட்ட அஷ்வினிடம் “எங்க வீட்ல என்னோட டிரஸ் இருக்கு அதே போதும். மாத்திரை மட்டும் எடுத்திட்டு வரீங்களா...” என்றதும், அவளை ஒரு பார்வை பார்த்த அஷ்வின் எதுவும் சொல்லாமல் மேலே சென்றான்.

அவன் சென்றதும் ராதிகாவிடம் வந்த வினோதா “பார்த்துக்கோங்க நான் எதுவும் எடுத்திட்டு போகலை.... அப்புறம் அதைக் காணோம் இதைக் காணோம்ன்னு சொல்லக்கூடாது.” என்றுவிட்டு வந்தாள்.

“போச்சு இவ போனதும் அஷ்வின் நம்மகிட்ட தான் பாய்வான்.” என நினைத்தவள், அப்போதும் வினோதாவை சமாதானம் செய்ய முயலவில்லை.

மாத்திரை எடுத்துக்கொண்டு வந்த அஷ்வின் அருணை பார்த்ததும் “வினுவை அவங்க வீட்ல கொண்டு விட்டுட்டு வரேன். நாளைக்குத் தான் வருவேன்.” என்று சொல்லிவிட்டு செல்ல.... அருணும் காவ்யாவும் அவன் பின்னே கீழே இரங்கி வந்தனர்.

“உங்க அம்மா வீட்டுக்கு போறீங்களா.... ஏன்?” காவ்யா வினோதாவிடம் கேட்க.... அவள் அஷ்வினை பார்த்தாள்.

“கல்யாண வேலை செஞ்சு கொஞ்சம் டயர்டா இருக்கா.... அது தான் ரெஸ்ட் எடுக்க...” என்றான் அஷ்வின்.

“ஓ.... நீங்க ப்ரெக்னன்ட் இல்ல... மறந்தே போயிட்டேன். சரி போயிட்டு வாங்க. நாங்களும் இன்னும் ரெண்டு நாள்ல ஹனிமூன் போறோம். போயிட்டு வந்து பார்க்கலாம்.” காவ்யா அவளுக்கு விடை தர.... வினோதா தன் மாமனார் மாமியாரிடம் சென்று போயிட்டு வரேன்.” என்று சொல்லிக்கொள்ள... அஷ்வின் யாரிடமும் ஒன்றும் சொல்லாமல் சென்றான்.

வீட்டில் இருந்த கார்களில் கூட ஒன்றை எடுத்துக்கொள்ளவில்லை.... ஏற்கனவே இரண்டு கார்கள் இருக்க.... இப்போது அருணுக்கு வேறு அவன் மாமனார் கார் வாங்கிக் கொடுத்திருந்தார். வரதராஜனுக்கு நடந்த எதுவும் தெரியாததால்.... குழம்பி போய்ப் பார்த்துக்கொண்டு இருந்தார். வீட்டில் உறவினர்கள் வேறு இருந்ததால்... யாரையும் எதவும் கேட்க முடியவில்லை. சிறிது நேரம் சென்று அவர் அருணை தனியாக அழைத்துக் கேட்ட போது தான்.... அருணுக்கே அஷ்வின் எதோ கோபத்தில் சென்று இருக்கிறான் என்று புரிந்தது.

தெருமுனை வரை வினோதாவுடன் நடந்து சென்ற அஷ்வின் அங்கிருத்த டாக்ஸியில் அவளுடன்

ஏறிக்கொண்டான். திடிரென்று போய் நின்றால்.... நன்றாக இருக்காது என்பதால் வினோதாவை அவள் அம்மாவுக்கு அழைத்துத் தாங்கள் வருவதைப் பற்றிச் சொல்லச் சொன்னான். அப்படியே தாங்கள் இரவு உணவு முடித்துவிட்டு வருவதாகவும் சொல்ல... அவன் சொன்னபடியே வினோதா பேசிவிட்டு வைத்தாள். அவளுக்கு அஷ்வினின் நடவடிக்கையைப் பார்த்துக் கலக்கமாக இருந்தது. அவனிடம் எது கேட்கவும் பயமாக இருந்தது.

வழியில் ஒரு ஹோட்டலில் இரங்கி இரவு உணவை முடித்துக்கொண்டனர். அஷ்வின் அவளிடம் சாதாரணமாகப் பேசி அவளை நன்றாகச் சாப்பிட வைத்து அவள் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அவர்களை வாயார வரவேற்ற போதிலும் “இன்னைக்கு ! அதுவும் இந்த நேரத்தில ஏன் வந்தாங்க? வீட்ல எதுவும் பிரச்சனையா....” என்று மஞ்சுவின் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது.

அஷ்வின் சீக்கிரமே படுக்கச் சென்றுவிட்டான். விமலும் மாலதியும் மாடியில் அவர்கள் அறைக்குச் சென்றதும், பார்த்திபனும் பக்கத்து அறையில் சென்று படுத்ததும், ஹாலில் அமர்ந்து இருந்த மஞ்சுவின் மடியில் வினோதா தலைவைத்து படுத்துக்கொண்டாள்.

மடியில் ஈரத்தை உணர்ந்ததும் தான் மஞ்சுவுக்கு வினோதா அழுகிறாள் என்றே புரிந்தது. மகளின் கண்ணீரை பார்த்ததும் அவருக்குச் சர்வமும் நடுங்கியது. எவ்வளவு கேட்டு பார்த்தும் வினோதா அழுவதற்கான காரணத்தைச் சொல்லவே இல்லை.

“வினோ.... இனிமே நம்ம வீட்லயே இருந்திடுறியா.... நான் நாலு வீட்ல பத்துப் பாத்திரம் தேச்சாவது உன்னைக் காப்பாத்துறேன். நிம்மதி இல்லாம அங்க இருக்காத....”

மஞ்சு சொன்னதைக் கேட்டதும் வினோதா திடுக்கிட்டுப் போய்த் தன் தாயின் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள். இதற்கு முன்பெல்லாம்

பொறுமையா போ.... கோபப்பட்டு வந்துடாத.... என்று பலமுறை சொன்ன தன் தாய்யா இப்படிச் சொல்வது என்று அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவளுக்கு மட்டும் இல்லை.... உள்ளே அறையில் இருந்து கேட்டுக்கொண்டிருந்த அஷ்வினுக்கும் தான் அதிர்ச்சி. அவனுக்கும் மஞ்சுவை பற்றித் தெரியும் தானே.....

“இல்லமா ஒன்னும் பெரிய பிரச்சனை இல்லை.... எப்பவும் போலத்தான். எனக்குத் தான் அழுகை வந்துடுச்சு..... என்னால அஷ்வினை விட்டுட்டு இருக்கவெல்லாம் முடியாது.” என்றபடி கண்ணீரை துடைத்துக்கொண்டு எழுந்தவள் “எனக்குத் தூக்கம் வருது... நான் தூங்கப் போறேன்.” என்றபடி உள்ளே சென்றுவிட்டாள்.

தான் அவசரப்பட்டுப் பேசி விட்டோம் என்று மஞ்சுவுக்கு நன்றாகவே புரிந்தது. இனி வினோதா தன்னிடம் எதையும் காட்டிக் கொள்ளப்போவதில்லை என்றும் புரிந்தது. தனக்குள்ளேயே வைத்து மனம் வருந்துவாளோ என்று அது வேறு அவருக்குக் கவலையாக இருந்தது. அறைக்குள் வந்த வினோதா அஷ்வினை அணைத்தபடி படுத்துக்கொண்டாள். விழித்திருந்தாலும் அஷ்வின் அவளிடம் எதுவும் பேசவில்லை.

மறுநாள் காலை சீக்கிரமே எழுந்து அஷ்வின் கிளம்ப.... மஞ்சு அவனுக்கு வேக வேகமாகக் காபி தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தார்.

“நானும் உங்களோட வரட்டுமா...” வினோதா கேட்க....

“வேண்டாம், நீ நல்லா ரெஸ்ட் எடு..... நானே வந்து கூடிட்டு போறேன்.” என்றுவிட்டு அஷ்வின் கிளம்பினான்.

வாசல்வரை அவனுடன் வந்தவள் “அஷ்வின் என்னை வந்து கூடிட்டு போவீங்க தானே....” என்று கேட்டே விட்டாள்.

அவள் கேட்டதற்குப் பதில் சொல்லாமல் அவளையே பார்த்த அஷ்வின் குனிந்து அவளின் கன்னத்தில் முத்தமிட.... “நானும்.... நானும்...” என வினோதா அவனைப் பதிலுக்கு முத்தமிட பார்க்க... அவளுக்கு அவனின் கன்னம் எட்டவேயில்லை.... அஷ்வின் வேண்டுமென்றே குனியாமல் நிமிர்ந்து நின்றான்.

அவனை இழுத்து பார்த்தும் முடியாமல்.... வினோதா முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்ள.... அது பொறுக்காமல் அஷ்வின் அவளை மெதுவாகத் தூக்க.... அவனின் நெற்றியிலும் கன்னத்திலும் அழுத்தமாக முத்தமிட்டதும், அவளை மெதுவாக இறக்கிவிட்டான்.

வினோதாவிற்கு அவ்வளவு மகிழ்ச்சி. அவள் புன்னகையுடன் விடை தர... அஷ்வினும் புன்னகையுடன் விடைபெற்றுச் சென்றான். வீட்டிற்கு வந்த அஷ்வின் வேகமாகக் கிளம்பி அலுவலகம் வந்துவிட்டான். அவன் காலை உணவை கூட எடுத்துக்கொள்ளவில்லை.

ராதிகா அன்று பயந்து கொண்டே வந்தவள், அஷ்வின் அலுவலகம் சென்றுவிட்டான் என்று தெரிந்ததும் தான் நிம்மதியாக இருந்தாள். இரவும் அஷ்வின் தாமதமாகத்தான் வந்தான், வெளியேவே உணவை முடித்துக்கொண்டேன் என்றதோடு தன் அறைக்கும் சென்றுவிட்டான்.

அவனின் இறுகிய தோற்றத்தை பார்த்தே யாருக்கும் அவனிடம் கேள்வி கேட்க துணிச்சல் இல்லை.... அதோடு அவன் நடவடிக்கையில் இருந்து அவன் எதோ முடிவும் எடுத்து விட்டான் என்று நன்றாகவே புரிந்தது. அது என்னவென்று கேட்கத்தான் யாருக்கும் தைரியம் இல்லை.

“வீட்ல சாப்பிடுறதே இல்லை.... எதோ லாட்ஜ்ல தங்கிறது மாதிரி வறான் போறான்....” ரங்கநாயகி புலம்ப.... வரதராஜன் கண்டுகொள்ளவே இல்லை.

மறுவாரம் அலுவலகம் வந்த வினோதா முதலில் சென்று அஷ்வினைத்தான் பார்த்தாள்.

“ஏன் என்னைப் பார்க்க வரலை? எப்ப என்னை வீட்டுக்கு கூடிட்டு போவீங்க?”

அவளின் கேள்விகளுக்கு அஷ்வின் பதில் சொல்லவே இல்லை. பிறகு சிறிது நேரம் சென்று அவனாகவே “உனக்கு என் மேல நம்பிக்கை இருக்கு தான...” என அவன் கேட்டதற்கு, ஆமாம் என்பதாக வினோதா தலையசைக்க “அப்ப கொஞ்சம் பொறுமையா இரு.... எல்லாம் நம்ம நல்லதுக்குத் தான்.” என்று அதோடு முடித்துக்கொண்டான். அவனின் ஓய்ந்த தோற்றம் வேறு எந்தக் கேள்விகளையும் கேட்க விடாமல் தடுக்க... வினோதாவும் மேலும் அவனைக் குடையாமல் விட்டுவிட்டாள்.

அஷ்வினும் வினோதாவும் தினமும் அலுவலகத்தில் சந்தித்துக் கொள்வார்கள். வினோதா அவனுக்கும் சேர்த்து தன் வீட்டில் இருந்து மதிய உணவு கொண்டு வந்தாள்.

வினோதா M.sc., முடித்துவிட்டதால்... அஷ்வின் அவனின் அலுவலகத்திலும் அவளுக்கு வேலைக்குப் பதிந்து வைத்தவன், அவளை நேர்முகத்தேர்வுக்கும் தயாராகச் சொன்னான்.

இப்படியே ஒரு மாதம் சென்ற பிறகு... ஒரு ஞாயிற்றுக் கிழமை காலையில் வெளியே சென்றுவிட்டு மதியம் வந்த அஷ்வின் ஹால் சோபாவில் அமர்ந்து இருந்தான். அவன் உட்கார்ந்திருந்த தோரணையே அவன் எதோ பேசப் போகிறான் என்று நன்றாகவே புரிந்தது. அன்று அருண் காவ்யாவோடு அவள் வீட்டிற்குச் சென்றிருந்தான். அதனால் அவனைத்தவிர மற்றவர்கள் இருந்தனர்.

“நான் புதுசா ஒரு அபார்ட்மென்ட் வாங்கி இருக்கேன். அதுக்கு நானும் வினுவும் தனிக்குடித்தனம் போறோம்.” எந்தவித தயக்கமும் இல்லாமல்... எதோ செய்தி வசிப்பது போல்

அஷ்வின் சொல்ல... அதைக் கேட்ட மற்றவர்கள் திடுக்கிட்டனர்.

அஷ்வின் கோபமாக இருக்கிறான் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இந்த அளவிற்கு எதிர்பார்க்கவில்லை.

“ஏன்பா இவ்வளவு பெரிய முடிவு?” வரதராஜன் கேட்க.... சிறிது நேரம் எதோ தொண்டையில் அடைத்தது போல் பேசாமல் இருந்தவன், பின் மெல்ல செருமிக்கொண்டு பேச ஆரம்பித்தான்.

“நான் முன்னாலையே இந்த முடிவு எடுத்திருக்கணும். இனியும் தாமதிச்சா... நாம ஒருத்தரை ஒருத்தர் பார்க்க முடியாம போய்டுமோன்னு... எனக்குப் பயமா இருக்கு.”

அஷ்வின் சொன்னதைக் கேட்ட ரங்கநாயகி “உன் பொண்டாட்டி தனிக்குடித்தனம் போகணும்ன்னு சொன்னாளா....” எனக் கேட்க...

“இப்ப ஏன் அவளை வம்புக்கு இழுக்குறீங்க. இது நான் எடுத்த முடிவு. இன்னும் நான் அவளுக்கு இதைப் பத்தி சொல்லவே இல்லை. ஒரு கணவனுடைய முதல் கடமை அவன் மனைவிக்குத் தான். அப்புறம் தான் மத்தவங்களுக்கு. என் பொண்டாட்டி கண்ணீர் விடுவதைப் வேடிக்கை பார்த்திட்டு இருந்தா நான் ஆம்பளையே இல்லை....இப்ப அருணுக்கும் கல்யாணம் ஆகிடுச்சு? உங்களோட அவன் இருப்பான்.”

“அவன் இருந்தா நீ இருக்க மாட்டியா.... என்னால எப்படி உன்னை விட்டுட்டு இருக்க முடியும்? எனக்கு நீங்க ரெண்டு பேரும் முக்கியம் தான்.”

ரங்கநாயகி சொன்னதைக் கேட்ட அஷ்வின் வேதனையுடன் சிரித்தான். “நாங்க ரெண்டு பேரும் உங்களுக்கு முக்கியமா... அருண் கல்யாணம் போலவா எனக்குப் பண்ணீங்க? வினோதா வீட்ல தான் வசதி இல்லை.... ஆனா நீங்க நினைச்சிருந்தா செஞ்சிருக்கலாம். செஞ்சீங்களா....”

“என்னைக் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிட்டு வந்த ஒரே காரணத்துக்காக வினுவோட இதுவரை நீங்க முகம் குடுத்து பேசினது இல்லை... நான் முக்கியம்ன்னு நினைச்சா எனக்காகவாவது அவளை ஏத்துகிட்டு இருந்திருப்பீங்க இல்லையா....”

“அதைக் கூட விட்டுடலாம். ஆனா அவ இப்ப கர்ப்பமா இருக்காளே.... இந்த வீட்டு வாரிசை தான சுமந்திட்டு இருக்கா.... உங்க மகனோட குழந்தைய.... அப்பவாவது அவகிட்ட நீங்க பாசமோ இல்லை அக்கரையோ காட்டினீங்களா.... இல்லையே.... இதுல இருந்து என்ன தெரியுது? உங்களுக்கு நான் முக்கியம் இல்லை....”

அஷ்வின் சொன்னது எல்லாம் உண்மை என்பதால் ரங்கநாயகியால் மறுத்து பேச முடியவில்லை... அதனால் பேச்சை மாற்றினார்.

“உன் பொண்டாட்டிக்காக இவ்வளவு பரிஞ்சு பேசுறியே..... எனக்காக நீ என்ன செஞ்ச?”

“நான் கல்யாணம் ஆனதுமே தனிக்குடித்தனம் போய் இருக்கலாம். ஆனா நாம ஒரே குடும்பமா சேர்ந்து இருக்கனும்ன்னு ஆசைப்பட்டுத் தான் அப்படிப் போகலை....”

“உங்களுக்கு வினோதாவை பிடிக்லைன்னு தெரிஞ்சும், நீங்களும் ராதிகாவும் அவளைச் சீண்டுவது தெரிஞ்சும்... நம்ம அம்மா அக்கா தானேன்னு பொறுத்து தான் போனேன்.” இதைச் சொல்லும் போது அஷ்வின் ராதிகாவை பார்க்க... அவள் தலை குனிந்தாள்.

“உங்க மகன் கல்யாணம் சிறப்பா செய்யலைன்னு உங்களுக்கு மன குறை வரக்கூடாதுன்னு தான் வினோதா வீட்ல அவங்க சக்திக்கு மீறி செய்யும் போதும் பார்த்திட்டு சும்மா இருந்தேன். பிறகு உங்களுக்குத் தெரியாம லோன் போட்டு நானும் கொஞ்ச பணம் கொடுத்தேன். இதெல்லாம் எதுக்கு? உங்களைத் திருப்தி படுத்தத்தான். இல்லைன்னா... எனக்கு வினு மட்டுமே போதும்.”

“நான் என்ன தப்பு செஞ்சேன். விரும்பின பொண்ணையே கல்யாணம் பண்ணேன். அதுவும் உங்க கிட்ட எல்லாம் சொல்லி சம்மதம் வாங்கித்தான் பண்ணேன். அப்புறமும் உங்களுக்கு எங்க மேல என்ன கோபம்? அவ சரியில்லாத பொண்ணா சொல்லுங்க... அதுவும் இல்லை.... அவ மேல ஏன் உங்களுக்கும் ராதிகாவுக்கும் அவ்வளவு வெறுப்பு.”

“உங்களுக்கு உங்க மகனை விடப் பணம் பெரிசா போய்டுச்சு இல்லை... என்னோட ஆசை விருப்பம் இதெல்லாம் விட உங்களுக்கு உங்க அந்தஸ்த்து தான் முக்கியம். அப்ப அதோடவே இருங்க.... என்னை விட்டுடுங்க. இதுக்கு மேலையும் நீங்க பண்றதை பார்த்திட்டு நான் சும்மா இருந்தா.... அது பெரிய பிரச்சனையில போய் முடியும்.”

“நீ வேற நான் வேறன்னு போறதுக்கு.... கொஞ்சம் தள்ளி இருந்தா பரவாயில்லை.... நீங்க எங்க வீட்டுக்கு வாங்க, நாங்க உங்க வீட்டுக்கு வரோம். நாம விலகி இருந்தாலும் நம்மளோட உறவு கெடாம இருக்கும்.”

“அடுத்த வாரம் வீடு பால் காயச்சுறேன். அதுக்கு எல்லோரும் வந்து கலந்துக்கோங்க.” என்று நல்லவிதமாகவே அஷ்வின் முடித்தான்.

“திடிர்ன்னு அவ்வளவு பணத்துக்கு என்ன அஷ்வின் பண்ண?” வரதராஜன் மகனிடம் கேட்க....

“முன்னாடி பிரண்ட்ஸ்சோட சேர்ந்து ஒரு இடம் வாங்கிப் போட்டிருந்தேனே அதை வித்துட்டேன். அதுல நிறையப் பணம் வந்தது. அப்புறம் இந்த ஒருவருஷமா சேர்த்த பணம் கொஞ்சம் இருந்தது. மிச்சத்துக்கு லோன் போட்டிருக்கேன். அது தான் ரெண்டு பேரும் வேலை பார்கிறோமே.... அதானால சமாளிச்சிடுவேன் கவலைப்படாதீங்க.” என்றவன்

“எல்லோருக்கும் துணி எடுக்கப் பட்ஜெட் இடிக்குது. அதனால ராதிகாவுக்கு அவ பசங்க அப்புறம் அத்திம்பேருக்கு மட்டும் தான் எடுத்தேன்.

கல்யாணம் ஆன பொண்ணுக்கு கண்டிப்பா எடுத்து கொடுக்கணும் இல்லையா....” என்றபடி அவன் ஒரு கவரை ராதிகாவிடம் கொடுத்து “உங்க அளவுக்கு இருக்காது.... எதோ என்னால முடிஞ்சது.” என்று கொடுக்க... அவள் அழுதே விட்டாள்.

“சாரி அஷ்வின், நான் இப்படி எல்லாம் நடக்குன்னு நினைக்கலை.... நீ வீட்டை விட்டு போகாதடா....இனி நான் பிரச்சனை பண்ண மாட்டேன்.”

“அம்மா வினோதா மேல காட்டுற கோபத்தை கூட என்னால புரிஞ்சிக்க முடியும். ஆனா வினு உன்னை என்ன செஞ்சா? நான் அவளை கல்யாணம் பண்ணதுனால உனக்கு என்ன பிரச்சனை?” அஷ்வின் கேட்க ராதிகாவிடம் பதில் இருந்தாள் தானே சொல்லுவாள். சும்மா ஒரு வீம்புக்காக செய்தது. இன்று குடும்பத்தையே பிரித்துவிட்டது.

“எதோ தெரியாம பண்ணிட்டேன் விடுடா....”

“நான் வீட்டை விட்டுப் போறேன்னதும் தான் நீ இப்படிப் பேசுற இல்லைன்னா.... இப்படிப் பேசுவியா.... விடு என் முடிவு மாறாது.” என்றவன், எழுந்து சென்றான்.

ரங்கநாயகியின் அழுகை புலம்பல் எதுவும் அஷ்வினின் முடிவை மாற்றவில்லை. “முன்னாடியே ஒழுங்கா இருந்திருக்கலாம். இனி அவனை நிறுத்த முடியும்ன்னு தோணலை....அவன் இஷ்ட்டத்துக்கு விட்டுட்டு....” என்றார் வரதராஜன்.

அன்று மாலை வினோதா வீட்டிற்குச் சென்றவன், அவளை அழைத்துக் கொண்டு சென்று தங்கள் புது வீட்டை காட்ட.... மகிழ்ச்சி அடைவதற்குப் பதில் வினோதா வருத்தமே பட்டாள்.

“என்னால தான அஷ்வின். உங்களை நான் உங்க குடும்பத்தில இருந்து பிரிச்சிட்டேனா.....” அவள் கண்ணீருடன் சொல்ல....

“யாரும் பிரியலை... கொஞ்சம் தள்ளி இருக்க போறோம் அவ்வளவு தான். எனக்கே நீ சுதந்திரமா சந்தோஷமா இருக்கிறதை பார்க்கணும் போல

இருந்தது. அதோட உன்னைக் காவ்யா முன்னாடி அம்மாவும் ராதிகாவும் முன்ன மாதிரியே நடத்தினா.... நான் ரொம்பப் பொல்லாதவனா ஆகிடுவேன். வீணா எதுக்குப் பிரச்சனை? கொஞ்சம் விலகியே இருப்போம்." என்றவன் "உனக்கு இன்னும் ஒரு குட் நியூஸ். உனக்கு என்னோட ஆபீஸ்ல வேலை கிடைச்சிருக்கு." என்றான்.

வினோதாவுக்கு உண்மையிலேயே இப்போது மகிழ்ச்சியாக இருந்தது. இனி தனக்கும் அதிகச் சம்பளம் வரும், தானும் அஷ்வினுக்கு உதவலாமே என்று நினைத்தாள்.

"என் பொண்ணோட ராசி தான் நமக்குப் புது வீடு.... வேலை எல்லாம் கிடைச்சிருக்கு...." அஷ்வின் மண்டியிட்டு வினோதாவின் வயிற்றில் முத்தமிட...

"நான் கஷ்டப்பட்டுப் படிச்சா.... பேரு மட்டும் உங்க பொண்ணுக்கா...." வினோதா பொய் கோபம் கொள்ள... அஷ்வின் அவளையும் கொஞ்சி சமாளித்தான்.

அஷ்வின் தனியாகச் செல்வதை அறிந்ததும், அருண் மிகவும் வருத்தபட்டான். அவன் சொல்லிக்கூட அஷ்வின் தன் முடிவை மாற்றிக்கொள்ளவில்லை. காவ்யா வேறு "ஏன் தனியா போறாங்க?" என்று அவனைக் கேள்வி கேட்டு துளைத்து விட்டாள்.

அஷ்வின் வீட்டினர் மற்றும் வினோதா வீட்டினரை மட்டுமே புதுமனை புகுவிழாவுக்கு அழைத்திருந்தனர். விழா எளிமையாக நடந்தது. மூன்று படுக்கை அறைகள் கொண்ட வீடு என்றாலும்... அவர்கள் வீட்டை ஒப்பிடும் போது.... இந்த வீடு மிகச் சிறியதாகவே ரங்கநாயகிக்கு தோன்றியது. அவ்வளவு பெரிய வீட்டில் வளர்ந்த தன் மகன் இதில் எப்படி இருப்பான் என்று மனதிற்குள் வேதனைப்பட்டார்.

மாமியார் தன் மீது கோபமாக இருப்பார் என்று நினைத்ததற்கு மாறாக... அவர் அமைதியாக

இருப்பது வினோதாவிற்கு வியப்பளித்தது. ராதிகாவும் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்தாள்.

விழா நல்லபடியாக முடிந்து ஆசிர்வாதம் வாங்கும் போது.... வரதராஜன் அஷ்வினிடம் புதுக் காரின் சாவியைக் கொடுக்க.... அவன் வாங்க மறுத்தான். “உன் கல்யாணத்துக்குத் தான் நாங்க ஒன்னும் செய்யலை..... இதையாவது வாங்கிக்கக் கூடாதா....” அவர் சொல்ல....

“நான் என்னப்பா வெளி ஆளா.... எதுக்கு இந்தப் பார்மாலிடீஸ்?” என்று அஷ்வின் அப்போதும் மறுத்தான். வரதராஜனிடம் இருந்து சாவியை வாங்கிய ரங்கநாயகி “அவன் அப்படித் தான் சொல்வான். நீ வாங்கிக்கோ.... உங்களுக்குச் செய்யாம நாங்க யாருக்கு செய்யப்போறோம்.” என்று வினோதாவிடம் கொடுக்க... ... அதைப் பார்த்து எல்லோருமே ஆச்சர்யப்பட்டனர்.

மாமியார் தன்னிடம் உரிமையாகப் பேசி கொடுக்கும் போது எப்படி மறுப்பது என நினைத்தவள், அஷ்வினை பாவமாகப் பார்க்க... அவன் வாங்கிக்கோ என்று ஜாடை செய்ய... வினோதாவும் மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொண்டாள். ராதிகா அவள் பங்குக்குச் சோபா செட் வாங்கிக் கொடுத்தாள். அஷ்வின் வீட்டை விட்டுச் சென்றது ரங்கநாயகி ராதிகா இருவரையும் ரொம்பவே பாதித்திருந்தது. ஆனால் அதை வெளிப்படையாகச் சொல்ல... அவர்கள் கவுரவம் இடம் கொடுக்கவில்லை.

இறுதிப்பகுதி

புது வீட்டில் அஷ்வின் வினோதா தனிக்குடித்தனம் நன்றாகவே சென்றது. இருவரும் காலையில் எழுந்து ஒருவருக்கொருவர் உதவியபடி வீட்டு வேலைகள் முடித்து ஒன்றாகவே அலுவலகம் சென்று திரும்புவார்கள்.

ரங்கநாயகிக்கு அஷ்வினும் வினோதாவும் இல்லாத வீடு ரொம்பவே வெறுமையாக இருந்தது. காவ்யா அவள் பெற்றோருக்கு ஒரே பெண் என்பதால் அவர்கள் வீட்டிற்கு அடிக்கடி சென்று விடுவாள். அவளோடு அருணையும் அழைத்துச் சென்றுவிடுவாள். அருண் அங்கிருந்தே அலுவலகம் சென்று வருவான். அதனால் வீடு வெறிச்சென்று இருந்தது.

அப்போது ஒருநாள் திடிரென்று அஷ்வினை செல்லில் அழைத்த ராதிகா “அஷ்வின் என்னோட வாழ்க்கையே போச்சு டா... நான் உன் அத்திம்பேரை நம்பி மோசம் போயிட்டேன் டா...” என்று அழுதாள். அவள் சொல்வது ஒன்றும் அஷ்வினுக்குப் புரியவில்லை.... விவரமா சொல் என்றால்.... ராதிகாவுக்கு அழுகையில் பேசவே வரவில்லை... வினோதாவிடம் சொல்லிக்கொண்டு அஷ்வின் உடனே அவளை நேரில் பார்க்க கிளம்பிவிட்டான்.

அவன் சென்றபோது ராதிகா அவள் அம்மாவின் அறையில் கட்டிலில் படுத்து அழுது கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் உட்கார்ந்து ரங்கநாயகி அவளைச் சமாதானம் செய்து கொண்டு இருந்தார். அவள் அழுவதைப் பார்த்து குழந்தைகளும் அழுது கொண்டிருந்தனர்.

“என்ன மா ஆச்சு?” அஷ்வின் கேட்டதும்,

“என்னத்த சொல்ல.... உன் அத்திம்பேர் யாரோ அவர் கூட வேலை பார்க்கிற பொண்ணோட சேர்ந்து சுத்திட்டு இருக்காறாம். ராதிகாவோட ப்ரண்ட் சுவாதி போன் செஞ்சு சொன்னா... அதைக் கேட்டதுல இருந்து இவ அழுது தவிக்கிறா....” என்ற ரங்கநாயகி “அந்த நாய் வரட்டும் அதை ரெண்டுல ஒன்னு பார்க்கிறேன். இனி அந்த ஆளோட என் பொண்ணு வாழ மாட்டா....” என அவர் கொதிக்க...

பிள்ளைகள் முன்னாடி பேசும் விஷயம் இல்லை என்பதால் அஷ்வின் அவர்களைச் சமாதானம் செய்து வெளியே அழைத்து வந்தவன், அங்கே

இருந்த காவ்யாவிடம் அவர்களை அழைத்துக்கொண்டு மாடிக்கு செல்ல சொன்னான்.

பிறகு மீண்டும் அறைக்குள் வந்தவன், முழு விவரத்தையும் கேட்டு அறிந்தான். “நாங்க எல்லாம் இருக்கோமே விட்டுடுவோமா.... சரி பண்ணிடலாம்.” அஷ்வின் ராதிகாவை சமாதானம் செய்ய....

“சரி பண்ண முடியும்ன்னு தோணலை... அவர் ரொம்ப நாளாவே லேட்டாத்தான் வீட்டுக்கு வரார். எவ்வளவு நாள் பழக்கமோ? விடுவறான்னு தெரியலையே.... இப்ப நான் என்னடா செய்வேன்? நான் வேலைக்குக் கூடப் போகலையே இப்போ என் பசங்களை நான் எப்படிக் காப்பாத்துவேன். அவர் மேல எவ்வளவு நம்பிக்கை வச்சிருந்தேன்....” ராதிகா அழுது புலம்ப.... தன் செல்ல மகள் வருந்துவதைப் பொறுக்க முடியாமல் ரங்கநாயகி கண்ணீருடன் அங்கிருந்து எழுந்து சென்றார். வரதராஜனுக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அருணும் கோபத்தில் கொந்தளித்துப் போய் இருந்தான். அஷ்வின் வினோதாவுக்கு அழைத்து இங்கே வருகிறாளா என்று கேட்க..... தான் வந்தால் ராதிகாவுக்குச் சங்கடமாக இருக்கும் என்பதால்.... தான் அங்கேயே இருந்து கொள்வதாகச் சொன்னவள், அஷ்வினை இருந்து பிரச்சனையைச் சரிசெய்து விட்டே வர சொன்னாள்.

அன்று இரவு வீட்டிற்கு வந்த மகேஷ் ராதிகாவும் குழந்தைகளும் இல்லாததைப் பார்த்துச் செல்லில் அழைக்க.... அவள் எடுக்கவில்லை என்றதும், அவளைத் தேடிக்கொண்டு நேரிலேயே வந்தான்.

அவனுக்காக எல்லோரும் ஹாலில் காத்திருந்தனர். காவ்யா மட்டும் குழந்தைகளோடு மாடிக்கு சென்று விட்டாள். ராதிகாவின் அழுது சிவந்த முகமும் மற்றவர்களின் பார்வையில் இருந்தும் மகேஷுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அவனுக்குப் பயத்தில் வேர்த்துகொட்ட.... திருத் திருவென முழித்துக்கொண்டு இருந்தான்.

ரங்கநாயகி அவன் மீது செம கடுப்பில் இருந்தவர் “இதுக்குத்தான் உங்களுக்கு என் பொண்ணைக் கட்டி கொடுத்தேனா... எவ்வளவு நகை, சீர் எல்லாம் செஞ்சிருப்பேன். எதுக்கு என் பொண்ணை நல்லா பார்த்துப்பீங்கன்னு தானே.... இப்படி மோசம் பண்ணிட்டீங்களே....” அவர் சொல்ல... மகேஷ் மௌனம் சாதித்தான்.

“உங்க மேல நான் ரொம்ப மரியாதை வச்சிருந்தேன் மாப்பிள்ளை.... நீங்களா இப்படி...” வரதராஜன் தன் ஆதங்கத்தை வெளியிட.... அஷ்வின் அமைதியாக அவர்கள் பேசுவதைப் பார்த்துக்கொண்டு இருந்தவன் “சொல்லுங்க அத்திம்பேர். என்னது இதெல்லாம்? உங்களுக்கு என்ன பிரச்சனை?” என்று கேட்டது தான் தாமதம் மகேஷ் ராதிகாவை பற்றிப் புகர் சொல்ல ஆரம்பித்தான்.

“வீட்லயே இருக்கிறது இல்ல.... எப்பவும் இங்கயே இருக்கா.... ஒழுங்கா சமைக்கிறது இல்ல.... என்னைக் கவனிக்கிறது இல்ல... எனக்கு மனசுல ரொம்பத் தனிமையா இருந்தது. அதனால எனக்குன்னு ஒரு ப்ரண்ட் கிடைச்சதும், அவங்களோட டைம் ஸ்பென்ட் பண்ணேன். இது ஒன்னும் எனக்குத் தப்பா தெரியலை....”

அவன் பேசி முடித்ததும் “ஆம்பிளை ப்ரண்ட் கிடைக்கலையாமா? பொம்பள ப்ரண்ட் தான் கிடைச்சுதோ.... அதுவும் பேசுறதுக்கு எதுக்கு லாட்ஜுக்கு போகணும்.” ராதிகா கேட்க.... அவளுக்கு எல்லாம் தெரிந்து விட்டது என்று மகேஷுக்குப் புரிந்தது.

“இதே தப்பை எங்க அக்கா செஞ்சிருந்தா நீங்க என்ன செஞ்சிருப்பீங்க? அவளைச் சும்மா விட்டுடுவீங்களா....” அருண் கேட்டதற்கு மகேஷால் பதில் சொல்ல முடியவில்லை....

“அவ எங்க வீட்டுக்கு தானே வந்தா.... உங்களுக்குப் பிடிக்கலைன்னா கண்டிச்சு வச்சிருக்கணும். அப்பவெல்லாம் எதுவும் சொல்லாம இருந்திட்டு

இப்ப நீங்க பண்ண தப்புக்கு அவளைக் குத்தம் சொல்றீங்க.”

“அது இல்ல அஷ்வின் காரணம். நான் இப்ப குண்டா இருக்கேன் இல்ல... அது தான் அவருக்கு என்னைப் பிடிக்கலை.... அந்தப் பொண்ணு ரொம்ப அழகாம்... எனக்குத் தான் உடம்பையும் கச்சிதமா வச்சுக்கத் தெரியலை... புருஷனையும் கைக்குள்ள போட்டுக்கத் தெரியலை.... ஆனாப் பாரு நான் உன் பொண்டாட்டியை எல்லாம் பேசிட்டு இருந்தேன்... அதுக்குத் தான் கடவுள் எனக்கு இந்தத் தண்டனை குடுத்திட்டார் போல.....” ராதிகாவின் விழிகள் மீண்டும் உடைப்பெடுக்க....

“நான் மத்தவங்க குறையக் கண்டுபிடிகிறேன்னு என்னோட வீட்டை கோட்டை விட்டுட்டேன். எனக்கு இது வேணும் தான்.” என்று அழுதாள்.
ராதிகா பேசப்பேச எல்லோருக்கும் வருத்தமாகப் போய் விட்டது. நல்லவேளை வினோதா வரவில்லை... அவளைப்பார்த்தாள் ராதிகா குற்ற உணர்வில் இன்னும் குறுகியே போய் இருப்பாள் என அஷ்வின் நினைத்தான்.

இப்படியே பேசிக்கொண்டு சென்றால் பிரச்சனை பெரிசாகுமே தவிர முடியாது என்பதை உணர்ந்த அஷ்வின் மகேஷை அழைத்துக்கொண்டு தனியே சென்று பேசினான்.

இதெல்லாம் குடும்பத்துக்கு ஒத்து வராது. மனகஷ்டமும் வருத்தமும் தான் மிஞ்சும் என்று அஷ்வின் எடுத்து சொன்ன பிறகும் மகேஷ் அதைக் காதில் வாங்கவே இல்லை....

“நான் உங்க அக்காவை டைவர்ஸ் பண்ணப்போறேன். எனக்கு அவ தான் வேணும்.” என்றவன், அஷ்வின் அதிர்ந்து நிற்கும் போதே.... அங்கிருந்து சென்றும் விட்டான்.

மகேஷ் சொன்னதில் இருந்து வெளிவரவே அஷ்வினுக்குச் சிறிது நேரம் தேவைப்பட்டது, பிறகு என்ன செய்யவேண்டும் என்று யோசித்து முடிவு

செய்தவன், வீட்டிற்குள் வந்த போது எல்லோரும் அவனையே ஆர்வமாகப் பார்க்க “பேசி இருக்கேன் பார்க்கலாம்.” என்றவன், பசிப்பதாகச் சொன்னதும், ரங்கநாயகி தன் பிள்ளைகளின் வயிற்றை நிரப்பும் வேலையைப் பார்த்தார்.

“இப்படிச் சாப்பிட்டு சாப்பிட்டு தான் உடம்பு பெருத்து போச்சு.... என் புருஷனுக்கும் என்னைப் பிடிக்கலை.... இனி சாப்பிட்டு என்ன செய்யப்போறேன்?” ராதிகா இப்படி ஒவ்வொன்றுக்கும் தன்னையே நொந்து கொள்ள.... அவளைச் சமாதானம் செய்து சாப்பிட வைக்கவே பெரும் பாடாக இருந்தது.

ராதிகா குழந்தைகளோடு கீழே இருந்த அறையில் படுக்க... “கதவை சாத்தாத...” என்ற அஷ்வின் அவள் அறைக்கு வெளியில் சோபாவில் படுத்துக்கொண்டான்.

“நான் எதுவும் செஞ்சுப்பேன்னு பயப்படுறியா.... அவருக்குத் தான் குழந்தைங்க மேல அக்கறை இல்லைனாலும் எனக்கு இருக்கே... நானும் போய்ட்டா இவங்களை யாரு பார்ப்பா?... அதனால எதுவும் பண்ணிக்க மாட்டேன். நீ வீட்டுக்கு போ... வினோதா தனியா இருப்பா....அதுவும் மாசமா வேற இருக்கா....”

நேற்று வரை எப்படி இருந்த அக்கா... இன்று எப்படி மாறிவிட்டாள். ஒரு துன்பம் வரும் போது தான் நாம் மற்றவர்களைப் பற்றி நினைக்கிறோம் என நினைத்தவன் “அவ தான் என்னை இங்க இருக்கச் சொன்னா....” அஷ்வின் சொன்னதும்,

“பரவாயில்லை நீ போ... நாளைக்கு அவளையும் இங்க கூடிட்டு வா....” என்றாள்.

“அவ வந்தா உனக்குச் சங்கடமா இருக்காதா...” அஷ்வின் கேட்க “ஏன் காவ்யா இல்ல? அவ மட்டும் என்ன வெளி ஆளா....நம்ம குடும்பம் தானே...” என்றாள். ரங்கநாயகியும் அருணும் வேறு தாங்கள்

பார்த்துக் கொள்வதாகச் சொன்னதும், அஷ்வினும் கிளம்பிவிட்டான்.

வினோதாவிற்கு இப்போது எழு மாதம் அவளைத் தனியாக விடப் பயமாக இருந்தது. மகேஷ் சொன்னதை அவன் யாரிடமும் சொல்லவில்லை... வீட்டிற்கு வந்ததும் அதை வினோதாவிடம் சொன்னவன், இதைத் தன் அக்கா எப்படித் தாங்குவாள் எனச் சொல்லி வருந்த... வினோதா அவனைச் சமாதானம் செய்தாள்.

இருவரும் நெடுநேரம் அடுத்து என்ன செய்வது என்பதைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தனர். விடிந்ததும் கிளம்பி இங்கே வந்துவிட்டனர். ராதிகா வினோதாவை பார்த்ததும், அவளிடம் எல்லாவற்றையும் சொல்லி “உன்னை நான் படுத்தினதுக்குத் தான் எனக்கு இப்படியெல்லாம் நடக்குது.” என்று மீண்டும் அழுகையை ஆரம்பிக்க....

“நீங்க என்ன என்னைக் கொடுமையா பண்ணீங்க... குடும்பத்தில சின்னச் சின்னச் சண்டை வர்றது சகஜம் தான் அதனால விடுங்க.” அவள் என்ன சமாதானம் சொன்ன போதிலும் ராதிகா கேட்காமல் புலம்ப....

“அவளைச் செத்த விடு.... மாசமா வேற இருக்கா... எதாவது சாப்பிடட்டும்.” ரங்கநாயகி தன் மருமகளுக்குப் பரிந்து கொண்டு வர.... “நீ போய்ச் சாப்பிடு.” என ராதிகாவும் அவளை அனுப்ப முயல “நீங்களும் வாங்க...” என்ற வினோதா காவ்யாவையும் அழைத்துக்கொண்டு சாப்பிட சென்றாள்.

தாய்க்குலம் எல்லாம் ஒன்று சேர்ந்துவிட்டாலே அந்தக் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அமைதியும் வந்துவிடும். காலை உணவிற்குப் பிறகு அஷ்வின் கிளம்பி மகேஷின் பெற்றோரை சந்திக்கச் சென்றான். வினோதா போய் மகேஷை பார்த்து நறுக்கென்று நாலு வாரத்தைக் கேட்டுவிட்டு வந்தாள்.

“நீங்க செஞ்சிருக்கும் முடிவால பாதிக்கப் படப்போறது உங்க பசங்கத்தான். நாளைக்கு உங்க பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிற மாப்பிள்ளை இப்படிப் பண்ணா நீங்க சும்மா விடுவீங்களா.... உங்க குழந்தைங்க முதல்ல உங்களை மன்னிக்குமா....” அவள் பேசியது மகேஷை யோசிக்க வைத்தது.

அஷ்வின் சென்று மகேஷின் பெற்றோரிடம் நியாயம் கேட்க... தங்களை மதிக்காத மருமகள் என்ற போதிலும் அவளை விட்டுக்கொடுக்காமல் மகனை அழைத்துக் கண்டித்தனர். ஏன் சிறிது மிரட்டவே செய்தனர்.

அவன் செய்யும் செயலால் தங்கள் மானம் போகும் என்பதால்... உயிரை விடுவதாக மிரட்டினர். அவர்கள் மகேஷிடம் பேசியபோது அஷ்வினும் வினோதாவும் மகேஷ் தொடர்பு வைத்திருந்த பெண்ணைச் சென்று சந்தித்து அவர்கள் குடும்ப நிலவரத்தை எடுத்து சொல்ல... அந்தப் பெண்ணுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தை வேறு இருப்பதால்... தன் கணவனுக்குத் தெரிந்தால்.... தன் குடும்ப வாழ்வு போய் விடும் என்ற அச்சத்தில் அந்தப் பெண் ஒதுங்கி கொள்வதாகச் சொன்னதும், அஷ்வினும் வினோதாவும் நிம்மதியாக வீடு திரும்பினர்.

ராதிகா தான் மகேஷோடு திரும்பச் சேருவதா... இல்லை பிரிந்து விடுவதா என்று குழப்பிக்கொண்டு இருந்தாள். “வாழ்க்கை இன்னும் நாற்பது அம்பது வருஷம் இருக்கு.... தனியா இருந்து சமாளிப்பியா.... உன் குழந்தைகளுக்கு அப்பா வேண்டாமா....” அஷ்வின் கேட்க....

“தெரியலை.... பயமாத்தான் இருக்கு.... ஆனா அவரைப் பார்த்தா கோபமா வருமே.....அவருக்கு என் மேல காதலே இல்லை.... இருந்திருந்தா நான் எப்படி இருந்தாலும் என்னை விட்டு இன்னொரு பொண்ணுகிட்ட போகணும்ன்னு நினைச்சிருக்க மாட்டார் இல்லையா....” ராதிகா கண்களில் நீருடன்

சொல்ல....
“உனக்கு அவர் மேல காதல் இருக்கா.... இருந்தா நீ அவரை மன்னிப்ப....” அஷ்வின் சொன்னதும், ஒத்துக்கொண்டு ஆமாம் என்று தலையசைத்த ராதிகா “வினோதா ரொம்ப லக்கிடா....நீ அவளுக்காக நம்ம வீட்டை விட்டு கூடப் போன...”

அவள் சொன்னதைக் கேட்டு புன்னகைத்த அஷ்வின் “அவளை அழகான பொண்ணு அப்படின்னு ஒரு ஆர்வத்தில தான் பார்த்தேன். எனக்குப் பார்த்ததும் காதல் எல்லாம் வரலை.... ஆனா என்னை அவ காதலிக்க வச்சா..... எனக்குக் காதல்னா என்னன்னு புரிய வச்சா... நீயும் மகேஷுக்கு புரியவை.... காதல்னா எதோ மந்திரம் இல்லைக்கா... அன்பு தான். நாம ஒருத்தருக்கு அன்பு கொடுத்தா... அது நமக்குத் திரும்பக் கிடைக்கும் அவ்வளவு தான்.”

எல்லாவற்றிருக்கும் அடிப்படை அன்பு தான். அது புரியாமல் நாம் தான் குழப்பிக்கொள்கிறோம். அதன் பிறகு மகேஷிடம் சென்று யாரும் பேசவில்லை... அவனே வரட்டும் என்று நினைத்தனர். எல்லோரோடும் சேர்ந்திருக்கும் போது தைரியமாக இருக்கும் ராதிகா... தனியாக இருக்கும் போது அழுதே கரைவாள். அதற்காக அவளை யாரும் தனியே விடுவதில்லை....

உடம்பை குறைக்க வேண்டும் என்று அவள் சரியாகச் சாப்பிடாமல் இருக்க.... “சாப்பிடாம இருந்தா இன்னும் வெயிட் போடும். அதுக்குப் பதில் கொஞ்ச கொஞ்சமா சத்தா சாப்பிடுங்க. நல்லா வாக்கிங் போய் வீட்டு வேலை செஞ்சாலே உடம்பு போடாது....” காவ்யா சொல்ல.... அதன்படி முன்று பெண்களும் சேர்ந்து வாக்கிங் செல்வது, வீட்டில் வேலை பார்ப்பது என்று வீடு எப்போது கலகலவென்று இருந்தது.

மகேஷும் அவனாகவே வந்து ராதிகாவிடம் மன்னிப்பு கேட்டு அவளை அழைத்துக்கொண்டு தங்கள் வீட்டிற்குச் சென்றான். ராதிகா அவளுடைய மாமனார் மாமியாரை அழைத்துத் தங்களுடன்

வைத்துக்கொண்டாள். அவள் மகேஷிடம் பழைய விஷயங்களைப் பற்றிக் குத்திக்காட்டி பேசுவது இல்லை. மாற வேண்டும் என்ற எண்ணம் மகேஷுக்கும் இருந்ததால்... அவன் வேறு கிளைக்குத் தன் வேலையை மாற்றிக்கொண்டான்.

ரங்கநாயகி நிறைய மாறி இருந்தார். ராதிகா அழைத்ததும் எதையும் யோசிக்காமல் உடனே வந்த அஷ்வினின் செயல் அவரை யோசிக்க வைத்தது. அதோடு வினோதா அதைப் பற்றி ஒருவார்த்தை கூடக் குத்திக்காட்டி பேசவில்லை... மாறாக அனுசரணையாக நடந்து கொண்டது மட்டுமில்லாமல் ராதிகாவை பெரிதும் தேற்றியது அவள் தான். ஒரு சின்னப் பெண்ணுக்கு இருக்கும் அறிவு முதிர்ச்சி கூடத் தனக்கு இல்லையே.... இனியாவது பெரியமனித தன்மையோடு நடந்து கொள்ளவேண்டும் என்று நினைத்தார். பணத்தால் சந்தோஷத்தை அனுபவிக்க முடியும். ஆனால் எவ்வளவு பணம் இருந்தாலும் நிம்மதியை மட்டும் வாங்க முடியாது என்பதை இந்தச் சில நாட்களில் அவர் நன்றாகவே புரிந்து கொண்டு இருந்தார். எவ்வளவு பணம் இருந்த போதிலும் ராதிகாவின் துன்பத்தை அந்த பணத்தால் சரி செய்ய முடியவில்லை.... ஒருவகையில் ராதிகாவின் வாழ்க்கை இப்படி ஆக அவரும் ஒரு காரணம்.

அவளுக்கு அதிகம் செல்லம் கொடுத்து அவளை தன்னிடம் இழுத்து வைத்துக்கொண்டதால் தான் அவர்கள் கணவன் மனைவிக்கு இடையில் பிரச்சனை வந்தது. ராதிகாவின் வாழ்க்கை என்னாகுமோ என்ற பயம் ஒருபுறம். ஆயிரம் உறவு இருந்தாலும் கணவன் போல் வருமா.... என்ன தான் தம்பிகள் அவளுக்கு ஆதரவாக இருந்தாலும் அவர்கள் தங்கள் குடும்பத்தை பார்ப்பார்களா இல்லை இவளை பார்ப்பார்களா என்று பலவாறு தவித்தவர், மகள் மருமகனுடன் சேர்ந்ததும் தான் நிம்மதியாக இருந்தார்.

அதன் பலனாக தன் கணவருக்கு வந்த சொத்தின் பங்கை அவரே சென்று தன் மாமியாரிடம் திருப்பி

கொடுத்தவர், அவரைத் தங்களோடு வந்து இருக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

வினோதா தங்களுக்கு என்று ஒரு வீடு இருப்பதையே மறந்து விட்டாள்.

“மேடம், என்ன இங்கயே டேரா போட்டுடீங்க? நம்ம வீட்டுக்கு போவோமா....”

“வேண்டாம் அஷ்வின், இங்கயே இருக்கலாம். இங்க எல்லோரோட சேர்ந்து இருப்பது தான் பிடிச்சிருக்கு.”

“சரி ஆபீஸ்க்கு வரலையா....”

“வரலை.... எனக்கு வேலை செய்யவே பிடிக்கலை....” வினோதா சோம்பல் முறிக்க....

“நல்லா சாப்பிட்டு சாப்பிட்டு வெயிட் போடுற.... பார்த்துக்கோ நானும் யாரையாவது செட் பண்ணிடுவேன்.” என அஷ்வின் கண்சிமிட்ட...

“எனக்குத் தெரியும் என் புருஷனை பத்தி. பக்கத்தில ஐஸ்வர்யாராய் இருந்தா கூட நீங்க பார்க்க மாட்டீங்க.” வினோதா நம்பிக்கையாகப் பேச... .

“எதுக்கு டி வயசானவங்களை நான் பார்க்க போறேன்.... வேற சூப்பர் பிகர் ஒன்னு புதுசா நம்ம ஆபீஸ்க்கு வந்திருக்கு.... விக்னேஷ் கூட இப்ப ஒரு நாள் விடாம ஆபீஸ் வரான். பார்த்து இருந்துக்கோ அப்புறம் பீல் பண்ணாத....”

“ஒன்னு வச்சுக் குப்பை கொட்டவே துப்புக் கிடையாது..... இதுல இன்னொன்னு வேற.... அதெல்லாம் நீங்க அதுக்குச் சரி பட மாட்டீங்க. போயிட்டு வாங்க.” வினோதா அவனைச் சட்டையே பண்ணாமல் சென்றுவிட....

“கொழுப்பு டி உனக்கு... குள்ள வாத்து.” என முனங்கியபடி அலுவலகம் சென்றான்.

அஷ்வின் அதன்பிறகும் பலமுறை வினோதாவை அவர்கள் வீட்டிற்கு அழைக்க... அவள் பிடி

கொடுத்தே பேசமாட்டாள். அதைக் கவனித்த ரங்கநாயகி “அவளை எதுக்குடா அங்க கூப்பிடுற? உனக்கு இங்க இருக்கப் பிடிக்கலையா...நீ இன்னும் பழசை மறக்கலையா...” என்றதும் “இல்லமா... அங்க வீடு....” என்று அவன் இழுக்க... “அந்த வீட்டை வாடகைக்கு விட்டுடு....” என்றார் இலகுவாக....

“சரி மா... ஆனா வேலைக்கு வரலாம் இல்ல....”

“ரங்கநாயகியோட மருமகள் யார்கிட்டயும் வேலை பார்க்க வேண்டாம். நீ போய்ப் பாரு...” என்று அவன் மூக்கை உடைத்து அனுப்பி விட...
அஷ்வினுக்குத்தான் வினோ இல்லாத அலுவலகம் செல்ல மனமே இல்லை.

இதுங்க சண்டை போட்டாலும் நம்மைத் தான் காய விடுதுங்க. சேர்ந்தாலும் நாம தான் காயனும் போலிருக்கு... என அவனால் புலம்பத்தான் முடிந்தது.

ராதிகா இப்போது எல்லாம் மதிய உணவிற்குப் பிறகு சிறிது நேரம் வந்துவிட்டு மாலை விளகேற்றும் முன் அவள் வீட்டிற்குச் சென்றுவிடுவாள். காவ்யாவின் பெற்றோர் இவர்கள் வீட்டிற்கு அருகேயே வீடு வாங்கிக்கொண்டு வந்ததால்.... அவளும் சிறிது நேரம் சென்றுவிட்டு வந்துவிடுவாள். ராகவன் வீட்டோடும் மீண்டும் ஒட்டுதலாக இருந்தனர்.

என்ன தான் உறவுகளோடு ஒட்டுதலாக இருந்தாலும் கணவனுக்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை கொடுக்க வேண்டும் என்பதை மகேஷின் மூலம் உணர்ந்ததால்... அலுவலகத்தில் இருந்து வந்ததும், வினோதாவும் காவ்யாவும் அவர்கள் கணவர்மாருடன் தான் நேரம் செலவழிப்பார்கள். அதில் எல்லாம் ரங்கநாயகி தலையிடவே மாட்டார்.

இரவு உணவுக்கு பிறகு அஷ்வின் வினோதாவை அழைத்துக் கொண்டு வாக்கிங் செல்லும் போது...சில நேரம் எதிரில் மகேஷும் ராதிகாவும் வருவார்கள். முன்பெல்லாம் அஷ்வினும்

வினோதாவும் இப்படி செல்லும் போது... ராதிகா அவர்களை கேலி செய்தது உண்டு.... ஆனால் தம்பதிகளுக்குள் மனம் விட்டு பேசிக்கொள்வது எவ்வளவு முக்கியம் என்பது இப்போது தான் அவளுக்கு புரிந்தது.

ரங்கநாயகி வினோதாவின் வளைக்காப்பை திருமணம் போல் சிறப்பாகச் செய்தார். அவளுக்காகக் குழந்தை கிருஷ்ணனின் உருவம் பொறித்த புடவை நெய்து வாங்கப்பட்டது. அவளுக்கு நிறைய நகைகளும் வாங்கினார். பெரிய மண்டபத்தில் அனைத்து உறவினர்களையும் அழைத்து விசேஷமாகச் செய்தார். பார்த்த மஞ்சுவிற்கு மனம் கொள்ளாத பெருமிதம்.

மாமியார் மருமகள் ரொம்பவும் ராசி ஆனதால்... அவளைப் பிரசவத்திற்குக் கூட அவர்கள் வீட்டிற்கு அனுப்பவில்லை.... வினோதாவுக்கும் போக விருப்பம் இல்லை... அதை நினைத்து மஞ்சுவுக்கு வருத்தம் தான். ஆனால் பேத்தி பிறந்ததும் அவர்கள் வீட்டிற்கு ரங்கநாயகியே இரண்டு வாரங்கள் அனுப்பி வைத்தவர், அவரே சென்று திரும்ப அழைத்தும் வந்தார்.

வினோதாவின் மகள் ரங்கநாயகியை உரித்து வைத்துப் பிறந்திருக்க... “ஆனாலும் உனக்கு உன் மாமியார் மேல இவ்வளவு பாசம் ஆகாது டி...” என்று மஞ்சுவே அவளைக் கிண்டல் செய்து ஓட்டுவார்.

“பாப்பா என்னை மாதிரி குள்ளமா இல்லாம உங்க அம்மா மாதிரி வளர்த்தியா இருப்பாள் இல்லங்க.” மடியில் இருந்த மகளை வருடியபடி வினோதா அஷ்வினிடம் கேட்க....

“அம்மா மாதிரி உயரமா இருக்கா... ஆனா கண்ணு கன்னம் எல்லாம் உன்னை மாதிரி தான். பெரிசானதும் உன்னை மாதிரி ரொம்ப அழகா இருப்பா பாரு....” என்றான் அஷ்வின் மனைவியையும் விட்டுக்கொடுக்காமல்.

அஷ்வின் தன் அம்மாவின் பெயர் வரும்படி தன் மகளுக்கு ராகவி என்று பெயர் வைக்க.... அவள்

உருவத்தில் மட்டும் இல்லை குணத்திலும் ரங்கநாயகி போலத்தான் இருந்தாள். அவள் நினைத்ததை சாதிப்பாள்.

ஒருவரோடு ஒருவர் பாசமழை பொழிந்தாலும் சில நேரம் முட்டிக்கொள்வதும் உண்டு.... அப்போது எல்லாம் வினோதா அஷ்வினிடம் “இவளும் உங்க அம்மாவோட சேர்ந்து ஆடுறா.... எனக்கு மட்டும் ரெண்டு மாமியாரு....” எனத் தூங்கும் மகளின் கன்னத்தில் இடிக்க.... அஷ்வினுக்குச் சிரிப்பாக இருக்கும்.

எவ்வளவு நாள் ஆனாலும் இவங்க மாமியார் மருமகள் சண்டை தீராது. நாம என்னைக்கும் மத்தளம் தான் என நினைத்துக்கொள்வான். அன்பு, பாசம், சந்தோஷம் மட்டும் இல்லை... சில நேரம் சண்டை, சச்சரவும் இருந்தால் தான் குடும்பம்.